பாவாணர்

தமிழ்க்களஞ்சியம்-45

தலைமைத் தமிழ்

தமிழ்மண் அறக்கட்டளை

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

45

அண்டிப் பிழைக்க வந்து; ஆதரித்து வாழ்வளித்த
முன்னைத் தமிழொளியை மூடி மறைத்திருந்து
பின்னைத் தலைமுறைக் கெல்லாம் பிழைசெய்து
என்னவும் கெடுத்துவைத்த ஆரியக் காரிருளை
கண்ணறத் தொலைத்த கடும்பேராண் மைத்தலைவன்
மண்ணறிந்த மொழிக்கெலாம் மாத்தமிழே உள்நிறைந்த
தன்னிகர்த்த மூலமுதல் தாய்மொழி என்றுநாட்டி
முன்னிருந்த முட்டறுத்தோன், முச்சுட்டில் மூச்செடுத்து
தன்னைத் திறந்தறியும் தாழாத் தனித்தமிழால்
இன்னுமோர் ஊழிக்கு இடஞ்செய்த வித்தகன்
நின்றஊழிக் கும்நிலைக்கும் ஈடில் மொழிஞாயிறு
அன்னோன் ஒளிசார்ந்தார் ஆவதறிந்து ஆள்வரே!

– இர.திருச்செல்வம்
மலேசியா

‘பெரியார் குடில்’
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

பாவாணர்
தமிழ்க் களஞ்சியம்

45

தலைமைத் தமிழ்

ஆசிரியர்

மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

தமிழ்மண் அறக்கட்டளை

சென்னை - 600 017

நூற் குறிப்பு

நூற்பெயர்	: **பாவாணர்** **தமிழ்க் களஞ்சியம் - 45**
ஆசிரியர்	: மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்
பதிப்பாளர்	: *கோ. இளவழகன்*
முதல் பதிப்பு	: *2001*
மறு பதிப்பு	: *2009*
தாள்	: *16 கி வெள்ளைத்தாள்*
அளவு	: *1/8 தெம்மி*
எழுத்து	: *11 புள்ளி*
பக்கம்	: *8 + 192 = 200*
நூல் கட்டமைப்பு	: *இயல்பு (சாதாரணம்)*
விலை	: *உருபா.* **185/-**
படிகள்	: *1000*
நூலாக்கம்	: *பாவாணர் கணினி தி.நகர், சென்னை - 17.*
அட்டை வடிவமைப்பு	: *வ. மலர்*
அச்சிட்டோர்	: *ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14.*

வெளியீடு

தமிழ்மண் அறக்கட்டளை

“பெரியார் குடில்”

பி.11 குல்மொகர் குடியிருப்பு,

35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,

சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in

இணையதளம் : www.tamilmann.in

பதிப்புரை

தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் **தமிழ்மண் பதிப்பகம்** தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** அவர்களும், மருத்துவர் **கு.பூங்காவனம்** அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.

“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று **மறைமலையடிகளும்,** நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று **பாவேந்தரும்,** தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று **பேரறிஞர் அண்ணா** அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர் **இராசமாணிக்கனாரும்,** தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர் **தமிழ்குடிமகன்** அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர் **இளவரசு** அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி” பாவாணர் என்று முதுமுனைவர் **இளங்குமரனார்** அவர்களும்

குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம் இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

கோ. இளவழகன்,
பதிப்பாளர்.

குறுக்க விளக்கம்

AF	-	Anglo – French
AS	-	Anglo – Saxon
Arab	-	Arabic
Arms	-	Armenian
Alb	-	Albanian
Bret	-	Breton
Bulg	-	Bulgarian
Cat	-	Catalan
Cf	-	Confer
Co	-	Cornish
Cogn	-	Cognates
Com,cp	-	Compare
Celt	-	Cornish
Da,Dan	-	Danish
Dor	-	Doric
Du	-	Dutch
E	-	English
E.fris	-	Eat Frision
F	-	Frech
F, fr	-	From
G	-	German
Gael	-	Gaelic
Goth	-	Gothic
GK	-	Greek
Icel	-	Icelandic
I.E	-	Indo – Europan
It	-	Irish
It	-	Italian
L	-	Latin
LL	-	Low Latin
Lett	-	Lettich
Lith	-	Lithuanian
LG	-	Low German
MDu	-	Middle Dutch
M.E.	-	Middle English
M.Goth	-	Middle gothic
MHG	-	Middle High German
MLG German	-	Middle Low
M.Sw	-	Middle Swedish
N. Fris	-	North Frision
Norw	-	Norwegian
OCo	-	Old Cornish
OE	-	Old English
OF	-	Old French
O.Fris	-	Old Frision
OHG	-	Old High German
OI	-	Old Indian

OIr	-	Old Irish
OL	-	Old Latin
OLG	-	Old Low German
ON	-	Old Norse
ONF	-	Old Northern French
O.S.O. sax	-	OlD saxon
O.Slav	-	Old Slavic
Pers	-	Persian
Pg	-	Portuguese
Pol	-	Polish
Ruman	-	Rumanian
Russ	-	Russian
Sc	-	Scottish
Skt	-	Sanskrit
Sp	-	Spanish
Swed	-	Swedish
Teut	-	Teutonic
Toch	-	Tocharian
W	-	Welsh
W.fris	-	West Frision
எ.டு	-	எடுத்துக்காட்டு
ஒ.நோ	-	ஒப்புநோக்குக
க.	-	கன்னடம்
த.	-	தமிழ்
து.	-	துளுவம்
தெ.	-	தெலுங்கு
ம.	-	மலையாளம்
வ.	-	வடமொழி (சமற்கிருதம்)

உள்ளடக்கம்

			பக்கம்
	பதிப்புரை	...	iii
	குறுக்கவிளக்கம்	...	v
	நூல்		
1.	உம்பர்	...	1
2.	உய்	...	11
3.	உருளை	...	19
4.	அரத்தம்	...	29
5.	கண்	...	40
6.	காந்து	...	50
7.	காலம்	...	59
8.	கும்மல்	...	69
9.	அந்தி	...	78
10.	எல்லா	...	89
11.	கலித்தல்	...	97
12.	மகன்	...	106
13.	மன்	...	118
14.	தெய்வம்	...	125
15.	புகா (உணா)	...	132
16.	பள்ளி	...	137
17.	பாதம்	...	142
18.	புரி (வரை)	...	147
19.	பொறு	...	153
20.	பகு	...	159
21.	பேசு	...	168
22.	திரும்பு	...	173
	2. தொகுதிச் சொற்கள்		
1.	பூனைப் பெயர்கள்	...	178
2.	நெருப்புப் பற்றி 'சுள்' அடிச் சொற்கள்	...	185

தலைமைத் தமிழ்

(தமிழின் தலைமையை நிலைநாட்டும் சொற்கள்)

1

தனிச்சொற்கள்

1. உம்பர்

தமிழ் உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி என்னும் உண்மை மேன்மேலும் உறுதிப்பட்டு வருகின்றது. வரலாற் றடிப்படையில் தமிழை நடுநிலையாய் ஆய்ந்தார்க்கு, இவ் வுண்மை வெள்ளிடை மலையாய் விளங்கித் தோன்றும்.

தமிழ்நாட்டு மேனாள் ஆள்நர் மாண்புமிகு கே.கே.சா. குசராத்தியரா யிருந்தும், தமிழை நடுநிலையாய் ஆய்ந்ததனால், அது சமற்கிருதத்திற்கு மூலமென்னும் உண்மையைத் தெள்ளத் தெளியக் கண்டு, உலகறிய வெளிப்படையாய் உரைத்ததுமன்றி, கட்டுரையாக வரைந்து வெளியிட்டும் உள்ளார்.

இந்தியரு மல்லாத நெடுஞ்சேண் வெளிநாட்டாரான கால்டுவெலார், தொல்காப்பியமும் கடைக்கழகப் பனுவல்களும் தமிழ்ப் பெரும்புலவர்க்குந் தெரியாது மறைந்தும், தமிழன் பிறந்தகம் குமரிநாடென்னுங் கருத்து ஒருவருள்ளத்திலும் தோன்ற வழியில்லாதும், இருந்த காலத்தில், மறைமலையடிகள் போலும் வழிகாட்டியார் ஒருவருமின்றித் தாமே தமியராய்த் தமிழைக் கற்றாய்ந்தாரேனும், நடுநிலையாக ஆய்ந்ததனால், தமிழின் உலக முதன்மையைக் கண்டு, ''திரவிடச் சுட்டுகள் சமற்கிருதத்தினின்று கடன் கொள்ளப்பட்டவை யல்ல. அதற்கு மாறாக, அவை, சமற்கிருதச் சுட்டுகட்கும் அதனொடு சேர்ந்த வேறுபல இந்திய - ஐரோப்பியக் குடும்ப மொழிச் சுட்டுகட்கும் மூலமான, யாப்பேத்தியச் (Japhetic) *சுட்டடிகளை ஒத்துள்ளன'' என்று திண்ணமுறக் கூறியுள்ளார். (திரவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், சென்னைப்பதிப்பு, ப. 422)*

சமற்கிருதத்தின் தனியுடைமை யல்லாத நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள், அதற்கும் தமிழுக்கும் பொதுவாக வுள்ளன. அவற்றுட் பெரும்பாலன தமிழ் என்பது, அறிவியற் சொல்லியலால் இன்று வெட்டவெளி யாகின்றது. வடமொழியாளர் குறிக்கோட் சொல்லியல் (Tendentious Etymology) கொண்டே, அவற்றை யெல்லாம் வடசொல்லென்றே இதுவரை ஏமாற்றி வந்திருக் கின்றனர்.

ஆரிய மொழிச் சுட்டுகட்கெல்லாம் தமிழ்ச் சுட்டுகளே அடிப்படையாதலால், வேறு பொருட் சொற்களை வடமொழியாளர் உடனடியாய் ஒப்புக்கொள்ளாவிடினும், சுட்டுப்பொருட் சொற்களைத் தமிழ்ச்சொல்லென்று ஒப்புக்கொள்ளாம லிருக்க முடியாது.

தமிழ்ச் சுட்டுகள், மூவேறிடத்தைத் தப்பாது சுட்டும் மூவேறு தனியெழுத்தொலிகள் அல்லது ஓரெழுத்துச் சொற்கள்; ஆரியச் சுட்டுகளோ பெரும்பாலும் இடமாறிக் குறிப்பனவும், ஈரிடத்திற்குப் பொதுவானவும், அடி திரிந்தனவுமான பலவெழுத்துச் சொற்கள். இஃதொன்றே தமிழ்ச்சுட்டின் முன்மை காட்டச் சாலும்.

ஆரியமொழிகளிற் சென்று வழங்கும் தமிழ்ச் சுட்டுச் சொற்கள் பலவிருப்பினும், இங்கு உம்பர் என்னுஞ் சொல்லே எடுத்துக் கொள்ளப்பட்டது.

''எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை முதலீ றிடைநிலை போலி'' யென்னும் பத்து அகத்திலக்கணத்திற்கும், கிளவி புணர்ச்சி யென்னும் இரு புறத்திலக்கணத்திற்கும், இடமானதும்; உயிர், மெய், உயிர்மெய் என்னும் பாகுபாடும் உயிர்மெய்த் தனிவடிவும் உடையதும், முதன்முதல் மாந்தன் வாயில் தோன்றிய ஆ ஈ ஊ (அ இ உ) என்னும் முச்சுட்டுகளையே முதற்கண் கொண்டதுமான நெடுங்கணக்கு, உலகில் முதன்முதல் தோன்றியது தமிழிலேயே. தமிழ் நெடுங்கணக்கின் வளர்ச்சியே வடமொழி வண்ணமாலை. இதைப் பிறழ வுணர்ந்தார் கால்டுவெலார்.

ஆ ஈ ஊ என்னும் மூன்றும், முறையே, சேய்மைச் சுட்டும் அண்மைச்சுட்டும் இவ் விரண்டிற்கும் இடைப்பட்ட முன்மைச் சுட்டும் ஆகும். இவற்றுள் ஏதேனும் ஒன்றை ஒலிக்கும் நிலையில், ஏனையிரண்டையும் ஒலிக்க வியலாது. ஆதலால், இவை விரல்போற் சுட்டிகள் (pointers) ஆயின. இது தமிழின் அல்லது திரவிடத்தின் சிறப்பியல்பு.

மாந்தன் இயக்கம் அல்லது செலவு நிலத்தின்மேலும் மலையின்மேலும் நிகழ்வதால், முன்மைச்சுட்டு இடம் நோக்கி உயர்ச்சிச் சுட்டுமாகும்.

காலமுன் இடமுன் என முன் இருவகைப்பட்டு ஒன்றோ டொன்று மயங்குவதால், முன்மைச்சுட்டுப் பின்மைச் சுட்டாகவும் இலக்கியத்தில் அருகி வழங்கும்.

ஒ.நோ. : L. sursum deorsum = up and down, backwards and forwards.

ஊ – உ : முன்மைச்சுட்டு

முதற்காலத்தில் நெடிலாகவே யிருந்த சுட்டுகள், பிற்காலத்திற் குறிலாகவுங் குறுகின.

உவன் = முன்னாலிருப்பவன்.

உது = முன்னாலிருப்பது.

உது, உதோ= முன்னே (இடைச்சொல்).

உதோள், உதோளி = முன்னிடத்தில்.

ஊன், ஊம், ஊங்கள்– வழக்கற்ற முன்னிலைப் பெயர்கள்.

உ : உயர்ச்சிச்சுட்டு

உக்கம், உகப்பு, உங்கு, உச்சி, உத்தரம், உம்பல் (யானை), உயர், ஊர்தல் (ஏறுதல்), உவண், உறி, உன்னு என்பன உயர்ச்சி பற்றிய உகரச் சுட்டடிச் சொற்கள்.

உம் – உம்பு – உம்பர் (பெ.) = 1. மேலிடம். ‘‘மாடத் தும்பர்’’ (ஞானா. 9 : 6). 2. உயர்ச்சி (திவா.). 3. மேல்வெளி, வானம், விசும்பு. ‘‘உம்ப ருச்சியிற்......கதிர் பரப்பு கடவுள்’’ (திருவிளை. தண்ணீர். 22). 4. தேவருலகம். ‘‘உம்பர்க் கிடந்துண்ண’’ (நாலடி. 37). 5. தேவர். ‘‘ஒலிகடல்சூ ழுலகா ளும்பர் தாமே’’ (திவ். பெரியதி. 7 : 8 : 10).

(குறிப்பு வினையெச்சம்) 1. அப்பால், ‘‘ஆறைங் காதநம் மகநாட் டும்பர்’’ (சிலப். 10 :42). 2. மேலே. ‘‘யான் வருந்தி யும்ப ரிழைத்த நூல்வலயம்’’ (பெரியபு. கோச்செங். 5).

ம. உம்பர் = தேவர்.

உம்பர் என்னுஞ் சொல் தேவரைக் குறிக்கும்போது, உம்பு + அர் என்று பிரிக்கலாம்.

இந். ஊப்பர் = மேலே. வஹ் கித்தாப் அல்மாரீ கே ஊப்பர் ஹை = அந்தப் பொத்தகம் நிலைப்பேழைக்கு மேலே யிருக்கிறது.

வ. (சமற்.). உப்பரி = மேல். மேலே, மேற்பக்கம், மேனோக்கி மேற்கொண்டு, அப்பால், அப்புறம்.

இச் சொல், வடமொழியில், வேரில்லாததும், வேற்றுமைப் படுக்கப்படாததும், குறிப்பு வினையெச்சமாகவும் (adv.) முன்னொட்டாகவும் (pref.) ஆளப்படுவதும் ஆன தனிச்சொல். ஆதலால், தென்சொற் றிரிபு என்பது தெளிவு.

வேத ஆரியரின் முன்னோர் ஆபுகானித்தானம் என்னும் காந்தார நாட்டிற் பேசிவந்த (கிரேக்கத்திற்கு நெருங்கிய) மொழி, அவர் வடஇந்தியாவிற்குட் புகுந்து அங்கிருந்த பழந்திரவிடப் பேரினத்தொடு கலந்தபின், பிராகிருதம் என்னும் பழந்திரவிட மொழிகளுடன் கலந்து வேதமொழியாயிற்று. பின்னர், வேதமொழி தமிழொடு கலந்து சமற்கிருதம் தோன்றிற்று. வேதமொழியும் சமற்கிருதமும் எழுதப்பட்ட இலக்கிய மொழிகளேயன்றிப் பேசப்பட்ட வழக்குமொழிக ளல்ல.

உலக மாந்தருள் மொழிப்பற்றில் தலைசிறந்தவர், பிற்காலத்திற் பிராமணர் எனப் பெயர் பூண்ட ஆரியப் பூசாரியரே. சமற்கிருதம் வழக்குமொழியா யிருந்திருப்பின் அவர் எப்பாடு பட்டும் அதிற் பேச்சு வழக்கைப் போற்றிக் காத்திருப்பர்.

வேதமொழியும் சமற்கிருதமும் மூவகையில் வேறுபட்டவை.

வேதமொழி	சமற்கிருதம்
1. முந்தியது (கி.மு. 1500 - 1000)	பிந்தியது (கி.மு. 1000 - இக் காலமும் எதிர்காலமும்)
2. வழக்கற்ற சொற்களைக் கொண்டது.	வழக்கற்ற சொற்களை நீக்கியது.
3. சொல்வளங் குன்றியது.	(முதலிரு கழக நூல்களையும் மொழிபெயர்க்குமளவு) சொல்வள மிக்கது.

வேதமொழியை வேத சமற்கிருதம் (Vedic Sanskrit) என்று சொல்வது, முற்காலப் படுத்தம் (Prochronism) என்னுங் குற்றமாகும். வேதமொழியும் சமற்கிருதமும் ஒரு காலத்தில் வழக்கு மொழி யாயிருந்தன என்று மேலை மொழிநூலார் கொள்வது, தமிழின் குமரிநாட்டுத் தோற்றத்தையும் முன்மையையும் அறியாமையால் நேர்ந்த விளைவே.

இந்தியிலுள்ள ஊப்பர் என்னுஞ் சொல், அம் மொழிக்கு நேர் மூலமான சூரசேனிப் பிராகிருதத்திலும், பெரும்பாலும் உப்பர் என்று வழங்கியிருத்தல் வேண்டும். அதிலிருந்து இலத்தீனத்திற்குச் சென்று

சுப்பெர் (super) என்று திரிந்தது. சொற்களின் உயிர்முதல் இங்ஙனம் சகரமெய் யேறுவது இயல்பே.

ஒ.நோ : உதை – சுதை (உதைக்கும் ஆ), உருள் – சுருள், உலவு – சுலவு, உவணம் – சுவணம், உழல் – சுழல்.

super என்னும் இலத்தீனச் சொல், மேலுள்ள, மேற்பட்ட, மேலை, மேனோக்கிய, மேற்செல்லும், மேற்கொள்ளக் கூடிய, மேனோக்கான, மேலான என்னும் குறிப்புப் பெயரெச்சப் பொருள்களிலும்; மீது, மேல், மேலே, மேலாக, மேனோக்காக, மேனோக்கி, மேலும், மேற்பட்டு, மேற்கொண்டு, அதிகமாக, அப்பால், அப்பாற்பட்டு, அப்புறம் என்னும் குறிப்பு வினையெச்சப் பொருள்களிலும்; முன்னொட்டாகவும் அடைசொல்லாகவும் வழங்கும்.

எ - டு :

supera - *supra*, above.

superabilis, It. *superabile*, OF., E. superable.

superaddo, E. superadd.

superbus, E. superb.

supercilious, E. supercilious, with raised eyebrows.

superficies, E. superfice.

superfluus, E. superfluous.

superhumanus, E. superhuman.

superior, It. *superiore*, Sp., Pg., OF., E. superior.

supernus, It., Sp., Pg. *superno*, OF. *superne*, E. supern.

superscribo, E. superscribe.

supremus, E. supreme.

Super என்னும் இலத்தீனச் சொல்லின் பகரம் சில கிளை மொழிகளில் வகரமாக மாறுகின்றது.

L. ***superanus***, It. soprano, sovrano, Sp., Pg. soberano.

MDu. soferein, sov(e)rein, OF. soverain, souverein, Mod. F. souverain, E. *sovereign*.

E. soprano = the highest kind of female voice.

Sp. *sobrecargo*, E. *supercargo* = person in merchantship managing sales etc., of cargo.

Super என்னும்இலத்தீன முன்னொட்டு பிரெஞ்சிலும் அதன் வழியாக ஆங்கிலத்திலும் sur என்று தொக்கும் வழங்கும்.

எ - டு : surplus, surround, surcharge, surveillance.

Sur என்பது sir என்றும் திரியும்.

எ - டு : surloin - sirloin = supperloin.

Sur என்பது su என்றும் குறுகும். எ-டு : su(r)sum, upward.

Super என்னும் இலத்தீனச் சொல் கிரேக்கத்தில் huper என்று திரிந்துள்ளது. சகரமுதற் சொற்கள் கிரேக்கத்தில் ஹகர முதலாகத் திரிதல் இயல்பே.

எ-டு :

இலத்தீனம்	கிரேக்கம்	ஆங்கிலம்
sex	hex	six
septem	hepta	seven
semi	hemi	same (Goth.)
similis	homos	sama (ON.)
somnus	hupnos	(slup)

ஆங்கிலத்தில், huper என்னும் கிரேக்கச் சொல் hyper என்று திரியும்.

எ-டு : hyperbole, hypereritic, hypergamy, hypermetric, hypermetropia hyperphysical, hypertension, hypertrophy.

உம்பர் என்னும் சொல், இலத்தீனத்திற்கும் அப்பாற்பட்ட செருமானியக் குடும்ப மொழிகளில் கிரேக்கத்தினும் மிகத் திரிந்திருப்பினும், சகர மெய்ம்முதல் கொள்ளாது தமிழ்ச்சொல்லை ஒருபுடை யொத்து uber, up என்று இருவேறு வடிவிலும் அவற்றின் மேலுந் திரிந்தும் வழங்குவது, வரலாற்றுத் தொடர்பில் மிகக் கவனிக்கத்தக்கது.

Uber

OHG. uber (adv.), ubiri (prep.), MHG. uber, G. uber, ober, Goth. ufar (prep. & adv.), OS. obar, OMG. obar, MG. ober, OFris. over, MDu., MLG., Du., LG. over, D.over, OE. ofer, Sw. *of*ver, ON, *yfer*.

உகரத்திற்கு ஒகர ஓகாரமும், பகரத்திற்கு வகரமும், வகரத்திற்கு ‘f’ உம் இனவெழுத்துகளாதலால், மேற்குறித்த சொல்லெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையனவே.

Above என்னும், ஆங்கிலச் சொல் a + be + ufan என்னும் முச்சொற் கூட்டு.

அண் (மேல்) – on – an – a.

பூ – Skt. bhu – E. be. *பூத்தல் = தோன்றுதல், உண்டாதல், உண்டாயிருத்தல். ''பூத்தலிற் பூவாமை நன்று'' (நீதிநெறி. 6). புகு– பொகு – பொகில் = அரும்பு. புகு– பூ. இதன் விளக்கம் இன்னொரு கட்டுரையிற் காண்க.*

உம்பு – upa – ufa – uf (ufan).

இங்ஙனம், பல செருமானியக் கூட்டுச் சொற்களின் உறுப்பாகத் தமிழ்ச்சொற்கள் உருத்தெரியாது திரிந்து பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இஃது இனிவருங் கட்டுரைகளால் தெளிவாகும்.

செருமானியம் என்பது தியூத்தானியம் (Teutonic). *வட செருமானியம், கீழைச் செருமானியம், மேலைச் செருமானியம் எனச் செருமானியப் பெருங் குடும்பம் முச்சிறு குடும்பங்களாகப் பிரிக்கப்படும். ஆங்கிலம் மேலைச் செருமானியத்தைச் சேர்ந்தது. கோதியம்* (Gothic) *கீழைச் செருமானியம்; காண்டினேவியம்* (Scandinavian) *வடசெருமானியம். பல செருமானியச் சொற்கள், ஐரோப்பாவின் தெற்கில் வழங்கும் இத்தாலியச் சொற்களினும் கிரேக்கச் சொற்களினும், தமிழுக்கு மிக நெருக்கமாயிருக்கின்றன.*

Up

OE. upp, up, OFris. up, cp, OL., Fr. up, MDu. up, op, OS. *up*, MLG., LG. up, ON. upp, Norw. upp, MSw. up, op, Sw. upp, W.Fris. op, Du. op, Da. op, NFris. ap, Goth. iup, OHG. uf, HG. uf, ouf, G. auf.

உம்பு – உப்பு – உப் – உவ்.

தென்கிழக் கைரோப்பாவை யடுத்த மேலை யாசியாவினின்று வந்ததாகத் தெரிகின்ற கீழையாரியம், ஈரானியம் இந்தியம் என இரு கிளைகளுள்ளது. ஈரானியத்தின் முதுநிலை செந்து (Zend); *புதுநிலை பாரசீகம்* (Persian). *இந்தியத்தின் முதுநிலை வேதமொழி; புதுநிலை சமற்கிருதம்.*

உம்பர்– உப்பைரி (செந்து), உப்பரி (வேதமொழி)

இத்தாலியச் சொற்போல் சகர மெய்ம்முதல் பெறாமலும், கிரேக்கச் சொற்போல் ஹகரமுதலாகத் திரியாதும், உகர முதலதாகவே தமிழ்ச்சொற் போலும் ஒருசார் செருமானியத்தை யொத்தும், கீழையாரியச் சொற்கள் வழங்குவது கவனிக்கத் தக்கது.

ஆரிய வல்லினம் தமிழ் வல்லினத்தை நோக்கக் கடியன வாதலால், upari, upairi *என ஒற்றைப் பகரத்தொடு குறிக்கப்படும்*

ஆரியச்சொற்கள் தமிழ் ஒலியியற்கேற்ப இரட்டைப் பகரத்தொடு குறிப்பட்டன, என அறிக.

குமரிநிலத் தமிழினின்று திரவிடமும், திரவிடத்தினின்று பிராகிருதமும், பிராகிருதத்தினின்று ஆரியமும் திரிந்திருத்தலால், வேதமொழி திரிமொழியேயன்றித் தமிழ்போல் இயன்மொழியன்று.

ஆதலால், உப்பரி என்னும் வேதமொழிச் சொல் உம்பர் என்னும் தென்சொற் றிரிபே யென்பது தெரிதரு தேற்றம்.

upari yā, to go upwards.

upari sailam gam, to go over the mountain.

sahasram satani upari casṭau, 1000 and 800 in addition.

upari payah pibet, he must drink milk afterwards.

upary upari sarvesām. atisthat, he stood at the very head of all.

ātmānam tasya upari ksiptvā, having thrown himself upon him.

mamõpari vikãritatih, changed in feeling with regard to me.

putrasyōpari kruddhah, enraged towards his son.

muhurtād upari, after a minute.

upari kuti, an upper room.

upary upari, higher and higher, repeatedly, continuously (R.V.)

இவ் வெடுத்துக்காட்டுகளினின்று, வடமொழி உப்பரிச் சொல்லாட்சி தென்மொழி உம்பர்ச் சொல்லாட்சியை யொத்திருப்பதைக் காணலாம்.

வடமொழி யென்னுஞ் சொல், பொதுவாகச் சமற்கிருதத்தைக் குறிப்பினும் வடுகு (வடகு), வடநாட்டு மொழி, பிராகிருதம், வேதமொழி, சமற்கிருதம், இந்திய ஆரியம் என்னும் அறுபொருட்கும் பொதுவாகும்.

திரவிடமொழிகள் தமிழுக்கு நெருங்கிய இனமேனும் தொன்மை, தூய்மை, செம்மை, சொல்வளம், தனியிலக்கியம், பொருளிலக்கணம், வரலாற்றுச் சான்றுடைமை முதலிய தனிச் சிறப்புகள்பற்றி, தமிழ் திரவிடத்தினின்று பிரித்தறியப்படும்.

அம்பர், இம்பர், உம்பர், எம்பர் எனச் சுட்டுவினாச் சொற்கள் மட்டுமன்றி, இடக்கர், இடங்கர் எனப் பிறசொற்களும் 'அர்' ஈறு பெற்றிருப்பதால், super, hyper, uber, ufar, over என்பன, up, upper என்னும் பிற்காலச் சொற்போல் உயர்தரச்சொல் (comparative term) அல்ல. உப்பரி, உப்பைரி என்னும் வடிவுகளையும் நோக்குக.

2. உய்

இதழ் குவித்தொலிக்கும் ஊகாரம் அல்லது உகரம் ஆகிய முன்மைச் சுட்டு, முன்னிடத்தையும் முன்னுள்ள பொருள்களையுங் குறிப்பது மட்டுமன்றி, முன்செல்லும் அல்லது முற்செலுத்தும் வினைகளைக் குறிக்குஞ் சொற்களையுந் தோற்றுவித்துள்ளது.

உகைத்தல் = முற்செலுத்துதல், செலுத்துதல்.

உத்துதல் = முன்தள்ளுதல், தள்ளுதல், கழித்தல்.

உதைத்தல் = காலால் முன்னோக்கித் தள்ளுதல், காலால் தள்ளுதல் அல்லது ஓங்கி மிதித்தல்.

உந்துதல் = முன்தள்ளுதல்.

உசுக்காட்டல், உச்சுக்காட்டல் = நாயை முன்னோக்கி ஒன்றன்மேல் ஏவுதல்.

உஞற்றுதல் = தூண்டுதல், உள்ளத்தைத் தூண்டியுழைத்தல்.

உள்ளுதல் = உள்ளத்தை முற்செலுத்துதல், ஊக்கங் கொள்ளுதல்.

ஊங்கு = ஊக்கு.

ஊங்குதல் = முன்னோக்கித் தள்ளும் ஊஞ்சலில் ஆடுதல், ''பூங்க ணாய மூக்க ஊங்காள்'' (நற். 90).

ஒ. நோ : உந்து – உந்தல் – உஞ்சல் – ஊஞ்சல் – ஊசல்.

ஊக்குதல் = ஊஞ்சலை முன்னோக்கித் தள்ளுதல் அல்லது ஆட்டுதல், உள்ளத்தை முற்செலுத்துதல், ஊக்கங் கொள்ளுதல், பிறருக்கு ஊக்கமூட்டுதல், தூண்டுதல்.

ஒ. நோ : L. *urgere*, press, drive, E. *urge*, drive forcibly, impel, *cause,* to proceed with effort, Gk. *orgao*, Goth. *vrika*, Lith, *Verzin*; Skt. *urj – urja* = power, strength, vigour.

இலத்தீன் சொல்லும் சமற்கிருதச் சொல்லும் உகர ஊகார முதலனவா யிருத்தலை நோக்குக.

ஊதுதல் = வாயிலிருந்து காற்றை முன்னோக்கிச் செலுத்துதல்.

இக் கட்டுரையில் எடுத்துக்கொண்ட சொல் உய்.

உய்தல் = 1. முன்செல்லுதல், செல்லுதல். 2. சென்று துன்பத்தினின்று அல்லது கேட்டினின்று தப்புதல். ''இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்'' (குறள். 700). 3. நீங்குதல். ''தாவ லுய்யுமோ'' (பதிற்றுப். 41 ஃ 17). 4. தப்பிப் பிழைத்தல், வாழ்தல். ''உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டி'' (புறம். 181). 5. ஈடேறுதல், வீடு பெறுதல். ''தினைத்தனைப் பொழுது மறந்துய்வேனோ'' (தேவா. 5 ஃ 1).

உய்த்தல் = 1. செலுத்துதல். ''நன்றின்பா லுய்ப்ப தறிவு'' (குறள். 422). 2. படைக்கலம் விடுத்தல். ''அம்புய்க்கும் போர்'' (கம்பரா. மாரீச. 186). 3. நடத்துதல். ''உய்த்திடு மிச்சை செய்தி'' (சி.சி. 1 ஃ 62, நிரம்ப). 4. அனுப்புதல். ''பட்டிமை யோலை யுய்ப்பான்'' (திருவிளை. மெய்க்கா. 13). 5. கொண்டு போதல். ''வேண்டுவ ருய்த்தன ரோவென'' (சீவக. 425). 6. நுகர்தல். ''காதல காத லறியாமை யுய்க்கிற்பின்'' (குறள். 440). 7. ஆட்சி செலுத்துதல். ''ஞாலமுழுது முய்த்திடு மகவு'' (பாரத. சம்பவ. 10). 8. அறிவித்தல். ''அவ்வழி யரசர்க் குய்த்தார்க்கு'' (சீவக. 1407). 9. கொடுத்தல். ''மீளி யாளர்க்கு மிகவுய்த் தன்று'' (பு. வெ. 3 ஃ 9, கொளு). 10. துன்ப நீக்குதல். ''பல் விளக்கிருளின் றுன்னற வுய்க்கும்'' (திருக்கோ. 175). 11. உய்யச் செய்தல். ''உய்த்த வியோம ரூபர்'' (சதாசிவ. 29).

உய்யக் கொண்டான், உய்யவந்த தேவநாயனார் என்னும் பெயர்களில், உய்தல் மீட்புறுதலைக் குறிக்கும்.

உய்யப் பிணக்கம் = வாழ்க்கைப் போராட்டம் (struggle for existence).

உய்த்துணர்தல் = மனத்தைச் செலுத்தி ஆராய்ந்தறிதல்.

உய்த்தலில் பொருண்மை = எளிதாய்ப் பொருள் விளங்குந் தன்மை.

உய்தி = 1. தப்புகை, நீங்குகை (புறம். 34, உரை). 2. கழுவாய் (பரிகாரம்). ''செய்தி கொன்றார்க் குய்தி யில்லென'' (புறம். 34). 3. ஈடேற்றம், வீடுபேறு. ''சார்பறுத் துய்தியும்'' (மணிமே. 25 ஃ 5).

உய்வு = 1. உயிர் தப்புகை. ''எரியாற் சுடப்படினு முய்வுண்டாம்'' (குறள். 896). 2. கழுவாய். ''உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' (குறள். 110). 3. ஈடேற்றம். ''உய்வுபாய மற்றின்மை தேறி'' (திவ். திருவாய், 4 ஃ 3:11).

உய்– உயவு = உயிர் பிழைக்கச் செய்யும் வழி. ''உய்யா வருநோய்க் குயவாகும்'' (கலித். 139).

உயவுநெய் = வண்டிச் சக்கரத்திற்கு இடும் மசகு. ''அஃதா லுயவுநெய் யுட்குளிக்கு மாறு'' (பழ. 385).

மக்களின் கருத்துகளை ஒலிவடிவான சொற்கள் தெரிவிக் கின்றன; மாந்தன் அறிவு வளர வளர, கருத்துகள் ஒன்றிலிருந் தொன்றாகக் கிளைக்கின்றன. மூலக் கருத்தைக் குறிக்குஞ் சொல்லி னின்று கிளைக் கருத்தைக் குறிக்குஞ் சொல்லை வேறுபடுத்திக் காட்ட, பற்பல வகையிற் பல்வேறு முறைகள் கையாளப்பட்டுள. அவற்றுள் ஒன்று எழுத்துத் திரிபு. சொல்லின் முதலிடை கடையென்னும் மூவிடத்திலுமுள்ள உயிர், மெய் என்னும் இருவகை யெழுத்தும், பல்வேறெழுத்தாகத் திரியும். உயிரெழுத்துகளுள் ஒன்றான உகரம் ஏனை நாற்குறிலாகவுந் திரியும்.

எ-டு : உ-அ. உகை– அகை, குடும்பு– கடும்பு.

உ-இ. உவர்தல்– இவர்தல், புரண்டை– பிரண்டை.

உ-எ. உரி– எரி, குழு– கெழு.

உ-ஒ. உல்லி– ஒல்லி, துளை– தொளை.

இங்ஙனமே, உய் என்னுஞ் சொல்லும் திரியும்.

உய்– ஒய். ஒய்தல் = (செ.கு.வி.) 1. விட்டொதுங்குதல். ''ஒய்யெனத் தெழித்தாங்கு'' (சிலப். 15:48, உரை). 2. தப்புதல். ''ஓடியொளித் தொய்யப் போவானிலை காண்மின்'' (பரிபா. 20 : 39).

(செ.குன்றாவி.) 1. செலுத்துதல். ''ஒய்யும் நீர்வழிக் கரும்பினும்'' (பதிற்றுப். 87 : 4). 2. கொண்டு போதல். ''உப்பொ யொழுகை யெண்ணும்'' (புறம். 116). 3. கொண்டுபோய்க் கொடுத்தல். ''வளராப் பார்ப்பிற் கல்கிரை யொய்யும்'' (நற். 356). 4. போக்குதல்; நீக்குதல். ''ஒய்யா வினைப்பய னுண்ணுங் காலை'' (சிலப். 14 : 33). 5. இழுத்தல். ''கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்'' (அகம். 63).

ஒய்– ஒய்யல் = 1. செலுத்துகை (பிங்.). 2. கொடுக்கை.

உய் – உயிர் = தானாக இயங்காத உடம்பை இயக்கும் அல்லது செலுத்தும் ஆவி (திவா.). 2. ஆதன் (ஆன்மா). ''தன்னுயிர் தானறப் பெற்றானை'' (குறள். 268). 3. உயிர்மெய், உயிரி (பிராணி). ''எல்லா வுயிருந் தொழும்'' (குறள். 260). 4. பிறப்போரை (சன்மலக்கினம்). ''உயிர்க்கிரு பாலினும்'' (விதான. சாதக. 19). 5. தனித்தியங்கும் உயிர்போன்று தனித்தொலிக்கும் உயிரெழுத்து. ''உயிரு முடம்புமா

முப்பது முதலே'' (நன். 59). 6. உயிர்வளி (பிராணவாயு). ''வைகரியில்..... உயிரணைந்து வந்தமொழி'' (சிவப்பிர. 2 ஃ 20). 7. காற்று (பிங்.). 8. ஓசை. ''வள்ளுயிர்த் தெள்விளி'' (குறிஞ்சிப். 100). 9. ஒரு கால அளவு. ஒரு நாழிகையில் 4320-ல் ஒரு கூறு. (கணக்கதி. ப. 14).

ம. உயிர், க. உசிர், தெ., து. உசுரு.

உயிர்த்தல் = (செ.கு.வி.) 1. உயிர்பெற்றெழுதல். 2. தொழிற்படுதல். ''அவ் வுடலினின் றுயிர்ப்ப வைம்பொறிகள்'' (சி.போ. 3 ஃ 4). 3. மூச்செறிதல். ''உரைதடு மாறா வுயிர்த்து'' (பாரத. பதினெட். 173). 4. கமழ்தல். ''உயிர்த்த தாமத்தன'' (கம்பரா. நிகும். 114). 5. இறுதி மூச்சு விடுதல், இறத்தல். ''உயிர்ப்பது மோம்பி'' (சீவக. 1989).

(செ. குன்றா வி.) 1. ஈனுதல். ''குழந்தையை யுயிர்த்த மலடிக் குவமை கொண்டாள்'' (கம்பரா. உருக்காட். 65). 2. மோத்தல். ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்'' (குறள். 1101). 3. கூறுதல், பேசுதல், ''விட்டுயிர்த் தழுங்கினும்'' (தொல். களவு. 20). 4. பெருக்குதல். ''அம்மூ வாறு முயிரொடு முயிர்ப்ப'' (நேமிநா. 3, உரை). 5. வெளிப்படுத்துதல். ''கொங்குயிர்த்த பூந்தடத் துலாய்'' (நைடத. நாட்டு. 3).

உயிர்ப்பு = 1. உயிர்த்தெழுகை. 2. சோர்வு நீங்கிப் புது வலிமையடைகை. 3. மூச்சு. ''ஊனி னுயிர்ப்பை யொடுக்கி'' (தேவா. 1173 ஃ 3). 4. தெய்வப் படிமையிலுள்ள தெய்வ ஆற்றலை வருவிக்கை. 5. காற்று. ''ஒல்லென வீழ்வுறு முயிர்ப்பின் காவலன்'' (கந்தபு. திருவவ. 13). 6. நறுமணம். ''உயிர்க்குமெல் லுயிர்ப்பெதி ரோடி'' (பாரத குருகுல. 91). 7. இளைப்பாறுகை. ''நின்னுயவு நோய்க் குயிர்ப்பாகி'' (கலித். 35).

உய் – வ. அய் – அய = செல்கை.

அய – அயந = செல்கை, நடக்கை, சாலை, பாதை (இருக்கு வேதம்)

உத்தர + அயந = உத்தராயந = கதிரவன் வடசெலவு.

தக்ஷிண + அயந = தக்ஷிணாயந = கதிரவன் தென்செலவு.

உய் – இய் – இயல். இயலுதல் = 1. நடத்தல். ''அரிவையொடு மென்மெல வியலி'' (ஐங்குறு. 175). 2. உலாவுதல். 'பீலி மஞ்ஞையி னியலி'' (பெரும்பாண். 31). 3. இயங்குதல், அசைதல். 4. அணுகுதல். ''திருந்தடி நூபுர மார்ப்ப வியலி'' (கலித். 83 ஃ 16). 6. உடன்படுதல்.

''யாதுநீ கருதிற் றன்ன தியன்றனன்'' (ஞானவா. வைராக். 42). 7. பொருந்துதல். ''வெயிலியல் வெஞ்சுரம்'' (W.). 8. தங்குதல். ''மாவியல் கின்ற வீர மகேந்திர புரத்துக்கு'' (கந்தபு. ஏமகூ. 4). 9. நேர்தல். ''இயன்றதென் பொருட்டினா லிவ்விட ருனக்கு'' (கம்பரா. குகப். 40). 10. செய்யப்படுதல். ''சிறியவர்கட் கெற்றா லியன்றதோ நா'' (நாலடி. 353). 11. கூடியதாதல். ''இயல்வது கரவேல்'' (ஆத்திசூடி).

இயல் = 1. செலவு. ''புள்ளியற் கலிமா'' (தொல். பொருள். 194). 2. ஒழுக்கம் (சூடா.). 3. ஒப்பு. ''மின்னி யற்சடை மாதவர்'' (திருவிளை. குண்டோ. 2). 4. தன்மை. ''ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅது'' (புறம். 25:2). 5. இயற்கை. 6. இயற்றமிழ் (பிங்.). 7. நூல். ''இயலோதேல்'' (சைவச. பொது. 346). 8. நூற்பகுதி. அரசியல் (குறள்).

இயல் – இயல்வு = 1. இயற்கை. 2. ஒன்றைப் பெறுவதற்கேற்ற ஆம்புடை (உபாயம்). ''ஏனமாய் நின்றார்க் கியல்வு'' (திவ். இயற். 1:12).

இயல் – இயல்பு = 1. தன்மை. ''இயல்புகாண் டோற்றி மாய்கை'' (சி.சி. 1:3). 2. நற்குணம். ''ஏதிலா ரென்பா ரியல்பில்லார்'' (நான்மணி. 44). 3. ஒழுக்கம். ''சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்'' (குறிஞ்சிப். 15). 4. முறை. ''இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவன்'' (குறள். 47). 5. வரலாறு. ''உலகீன்றா டக்கன் மகளா யுதித்த வியல்பும்'' (கூர்மபு. திருக்கலி. 1).

இயல் – இயற்கை = 1. தன்மை. ''எண்ணாராத் துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை'' (திவ். திருவாய். 4:9:1). 2. இலக்கணம். ''பிரமசாரி யியற்கையைத் தெரித்த வாறும்'' (கூர்மபு. அநுக்கி. 23). 3. நிலைமை. வறுமையான இயற்கை (W.). 4. கொள்கை. ''பெரியவ ரியற்கை'' (கம்பரா. அயோத். மந்திர. 63). 5. வழக்கம். ''உலகத் தியற்கை யறிந்து செயல்'' (குறள். 637). 6. இயல்பான உலக முதல் கருப்பொருள்கள்.

இயல் – இயற்று (பி.வி.) இயற்றுதல் = 1. நடத்துதல். ''நெஞ்சே யியற்றுவா யெம்மொடு'' (திவ். இயற். பெரிய திருவந். 1). 2. செய்தல். ''இசையா தெனினு மியற்றியோ ராற்றால்'' (நாலடி. 194). 3. படைத்தல். ''கெடுக வுலகியற்றி யான்'' (குறள். 1062). 4. நூல்செய்தல். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். 5. தேடுதல். ''ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு'' (குறள். 760).

இயல் – ஏல். ஏலுதல் = 1. நிகழ்தல். 2. பொருந்துதல். 3. செய்ய முடிதல். இது உன்னாற் செய்ய ஏலுமா? ஏன்றதைச் செய்.

இய் – இய – இயவு = 1. செலவு. ''இடைநெறிக் கிடந்த வியவுக்கொண் மருங்கில்'' (சிலப். 11 : 168). 2. வழி. ''இயவிடை வருவோன்'' (மணிமே. 13 : 16).

இய – இயவுள் = 1. வழி (அகம். 29, உரை). 2. நடத்துகை. 3. தலைமை. ''இயவுள் யானை'' (அகம். 29). 4. எப்பொருட்கும் தலைவனான இறைவன். ''பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்'' (திருமுருகு. 274). 5. தெய்வம் (பிங்.).

ம. இயவுள்.

இய – இயவை = வழி (திவா.).

இயவு – இயகு – இயங்கு. இயங்குதல் = 1. அசைதல். 2. செல்லுதல் (திவா.). 3. உலாவுதல் (பிங்.). ம. இயங்ங்ு.

இயங்கு = செல்லுகை. ''இயங்கிடை யறுத்த கங்குல்'' (சீவக. 1360).

இயங்கு – இயக்கு – இயக்கம் = 1. அசைவு. 2. நடமாட்டம். ''நாணகத் தில்லா ரியக்கம்'' (குறள். 1020). 3. செல்கை. 4. வழி. ''எறிநீ ரடைகரை யியக்கந் தன்னில்'' (சிலப். 10 : 90). 4. அசைவுக் குறிப்பு. ''கண்ணிணை யியக்கம்'' (மணிமே. 25 : 8). 5. இசை நடப்பு. மெலிவு சமன் வலிவு என்னும் மூவகை யியக்கம். ''மூவகை யியக்கமு முறையுளிக் கழிப்பி'' (சிலப். 8 : 42). 6. குழலிசைத்தல். ''இன்புற வியக்கி'' (சிலப். 3 : 66). 7. சிறுநீர் மலக்கழிவு. ''ஈரியக்க நடைவழி.......விடுதல்'' (காஞ்சிப்பு. ஒழுக்க. 42). 8. ஒரு புதிய சீர்திருத்தப் போராட்டம் அல்லது பரப்புரை. மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம்.

இய் – எய் – எய்து. எய்துதல் = (செ. குன்றா வி.). 1. அணுகுதல். ''நெடியோ யெய்த வந்தனம்'' (புறம். 10). 2. சென்றடைதல், சேர்தல். ''தூநிறக் கங்கையான் சூழ வெய்தினான்'' (பாரத. குருகுல. 34). 3. அடைதல், பெறுதல். ''ஏமம் வைக லெய்தின்றா லுலகே'' (குறுந். கடவுள் வாழ்த்து.) – (செ. கு. வி.) 1. நிகழ்தல். ''எட்டி குமர னெய்திய துரைப்போன்'' (மணிமே. 4 : 64). 2. வந்துசேர்தல். ''மாசெனக் கெய்தவும்'' (கம்பரா. சிறப். 6). 3. பொருந்துதல். ''காலத்தோ டெய்த வுணர்ந்து செயல்'' (குறள். 516). 4. போதியதாதல். ''சுனைவாய்ச் சிறுநீரை யெய்தா தென்றெண்ணி'' (ஐந். ஐம். 38).

ம. எய்து, தெ. எயிது.

ஏய் – ஏய். ஏய்தல் = (செ. கு. வி.) 1. பொருந்துதல். ''ஏய்ந்த பேழ்வாய்'' (திவ். பெரியதி. 1 ஃ 7 ஃ 3). 2. தகுதல். ''தில்லை யூரனுக்கின் றேயாப் பழி'' (திருக்கோ. 374). 3. ஒத்தல். ''சேலேய் கண்ணியரும்'' (திவ். திருவாய். 5ஃ1ஃ8)– (செ. குன்றா வி.) எதிர்ப்படுதல். ''புனத்து மறையினா லேயினா ரின்றி யினிது'' (ஐந். ஐம். 11).

ஏய்த்தல் = 1. ஒத்தல். ''அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்ப'' (புறம். 33). 2. பொருந்தச் சொல்லுதல். ''பொய்குறளை யேய்ப்பார்'' (பழ. 77). 3. வஞ்சித்தல், ஏமாற்றுதல் (உ.வ.).

ஏய்– ஏ– யா– யாத்திரை = வழிச்செலவு. தகடூர் யாத்திரை.

யாத்திரை– வ. யாத்ரா.

ஏ– ஏகு. ஏகுதல் = செல்லுதல், போதல். ''தாய்தாய்க் கொண் டேகு மளித்திவ் வுலகு'' (நாலடி. 15). 2. நடத்தல் (பிங்.). 3. கழலுதல். ''நல்வளை யேக'' (பு. வெ. 11, பெண்பாற். 12).

ஒ.நோ ஃ போ– போகு.

யா– ஜா. (இந்தி.). ஜா– கா (gā). கயா (gayā) = போனான்.

கா (gā) – கம் (gam), கமந (gamana) = செலவு.

OE., OS. gān, OHG. gān, gen. E. go.

யகரம் ஜகரமாவது இந்தி ஆரியமொழி யியல்பு.

எ-டு ஃ இந்தி. யுவன் (வ.) – ஜவான், யாத்ரா – ஜாத்ரா, யோகி– ஜோகி.

வ. யௌவன– L. juvenilis, E. juvenile.

வ. யுக (g.) – E. yoke, L. *jugo*, *conjugo*, to yoke together. E. conjugate.

இய்– வ. இ (I.), to go, walk; to flow; to blow; to advance, spread, get about; to go to or towards (with acc.), come, RV., AV., S.Br., M. Bh., R., Hit; Ragh. & C., to go away, escape, pass, retire, RV., AV., SBr, to arise from, come from, RV., Ch Up., to return (in this sense only fut). *M* Bh., R., (with *punar*) to come back again, return, MBh., R., Pañcat. & C., to succeed, Mn. iii, 127; to arrive at, reach, obtain, RV., AV., SBr., Sak., Hit. & C., to fall into, come to., to approach with prayers, gain by asking (of. *ita*); to undertake anything (with acc.); to be employed in, go on with, continue in any condition or relation (with a part, or instr., e.g. *asura rakshasāni mridyanānāni yanti*, ''the Asuras and Rakshasas are being continually crushed,'' SBr. i, 1, 4, 14.

(மானியர் உவில்லியம்சு சமற்கிருத – ஆங்கில, அகரமுதலி ப. 163)

ஏ– வ. ஏ (a) to go, come near or towards, go near, approach, RV.; AV.; SBr. etc.; to reach, attain, enter, come into (a state or position), Mn. XII, 125.

ēta, come near, approached, RV.

iti, arrival, approach, RV. X, 91:4 *(ஷை 227)*

3. உருளை

உல்– உலம் = 1. உருட்சி. 2. திரட்சி. ''உலங்கொள் சங்கத் தார்கலி'' (தேவா. 112 : 8). 3. திரண்ட கல். ''உலஞ்செய்த வைரக் குன்ற மோரிரண் டனைய தோளான்'' (சீவக. 2915).

உலம் வருதல் = 1. சுழலுதல். 2. நெஞ்சு உழலுதல். ''உயிர்க்கு முசாஅ முலம்வரும்'' (கலித். 145 : 4).

உலம் வருதல்– உலமருதல் = மனஞ் சுழலுதல், கலங்கி வருந்துதல், துன்புறுதல். ''புலம்பியா முலமர'' (கலித். 83 : 2).

உலம்வரல் – உலமரல் = துன்பம் (சூடா.).

உலமரல்– அலமரல் = சுழற்சி. ''அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி'' (தொல். உரி. 13).

உலம்– அலம் = 1. சுழற்சி. 2. துன்பம். ''அலமகன் முத்தியுண்டாம்'' (சூத. எக்கிய. பூ. 2 : 8).

உல் – உல – உலப்பு – அலப்பு = மனக்கலக்கம். ''அலப்பா யாகாசத்தை நோக்கி'' (திவ். திருவாய். 5 : 8 : 4).

உல– உலக்கை = 1. உருண்டு நீண்ட உரற்குற்றுக் கருவி. ''மிளகெறி யுலக்கையின்'' (பதிற்றுப். 41). 2. உலக்கை போன்ற போர்ப் படைக்கலம். ''உலக்கை சூலம் வேல்'' (கந்தபு. சதமுகன். 15). 4. உலக்கை வடிவான ஓண நாண்மீன் (பிங்.). 5. வெருகன்கிழங்கு (தைலவ. தைல. 84).

ம. உலக்க, க. ஒலக்கெ.

உலத்தல் = சுற்றுதல். உல– உலவு. உலவுதல் = அலைதல், திரிதல். ''ஒருங்குதிரை யுலவுசடை'' (திருவாச. 38 : 1). 2. வீசுதல், பரத்தல்.

உலவு– உலவை = 1. காற்று (திவா.). 2. ஊதை நோய் (வாதரோகம்). ''வழுத்துலவைக் குலமுழுதும்'' (தைலவ. தைல. 88).

உலவையான் = காற்றுத்தேவன் (கந்தபு. அரசு. 7).

உல– உலா = 1. அரசன் தலைநகரைச் சுற்றிவரும் பவனி. ''போந்தா னுலா'' (சங்கர. உலா.). 2. அரசனுலாவைப் பற்றிய பனுவல் (பிரபந்தம்). ''கலிவெண்பா வுலாவாம்'' (வெண்பாப். செய். 27). 3. மக்கள் காற்றாடச் சுற்றிவரல்.

உலா– உலாவு. உலாவுதல் = 1. சூழ்தல். ''தூசுலாய்க் கிடந்த'' (சீவக. 550). 2. சுற்றித் திரிதல். 3. பவனி வருதல் (W.). *4. இயங்குதல், வீசுதல். ''வந்துலாய்த் துயர்செய்யும் வாடை'' (பு. வெ. 8:16, கொளு). 5. பரவுதல் (வெள்ளம்) ''உயிரென வுலாய தன்றே'' (கம்பரா. ஆற்றுப். 20).*

உலா– உலாங்கு = காவட்டம் புல்.

உலாங்கு – உலாஞ்சு. உலாஞ்சுதல் = 1. தலை சுற்றுதல், கிறுகிறுத்தல். 2. அசைந்தாடுதல். கப்பல் உலாஞ்சுகிறது.

உலா – உலாத்து. உலாத்துதல் = (செ. கு. வி.) உலாவுதல், ஊர்வலத்திற் செல்லுதல் (காளத். உலா. 223).

(செ. குன்றா வி.) 1. உலாவச் செய்தல். குதிரையை உலாத்திவா. (உ.வ.). 2. பரவச் செய்தல். 3. அசைத்தாட்டுதல். வேட்டியை உலாத்திக் கொண்டு போகிறான் (உ.வ.). கொண்டையுலாத்தி = கொண்டையை ஆட்டும் பறவை.

ம. உலாத்து. உலாத்து = உலாவுகை.

உலாத்துக்கட்டை = கதவு நின்றாடுஞ் சுழியாணி.

உலாத்துக் கதவு = பிணையற் கதவு, மடக்குக் கதவு.

உலவு– உலகு = 1. சுற்றிவருங் கோள். 2. உலகப் பொது. 3. ஞாலம். 4. ஞாலமும் அதிலுள்ள இருதிணைப் பொருள்களும். 5. உலக மக்கள், மன்பதை. 6. நன்மக்கள். 7. ஞாலப் பகுதி.

உலகு – உலகம் = 1. ஞாலம் (பிங்.). 2. உலகத்தொகுதி. ''உலக முண்ட பெருவாயா'' (திவ். திருவாய். 6:10:1). 2. நிலப்பகுதி. ''மாயோன் மேய காடுறை யுலகமும்'' (தொல். அகத். 5). 3. உயிரினங்கள். ''உலக முவப்ப வலனேர்பு திரிதரு'' (திருமுருகு. 1). 4. மக்கட்டொகுதி. ''கால முலக முயிரே யுடம்பே'' (தொல். சொல். 57). 5. பொதுமக்கள். உலக வறவி. 6. ஊர் மக்கள். உலக விடைகழி. 7. நன் மக்கள். ''உலகத்தோ டொட்ட வொழுகல்'' (குறள். 140). 8. வழக்கம். ''ஒழுக்க நடையே யுலகம தாகும்'' (மாறன. 320).

உலகம் என்னுஞ் சொல்லிலுள்ள அம்மீறு பெருமைப்பொருட் பின்னொட்டு (Aug. suf.). *ஒ. நோ: கம்பு* (stick) – *கம்பம்* (pillar), *நிலை*

(stand) – *நிலையம்* (station), *மதி* (moon) – *மதியம்* (fullmoon), *விளக்கு* (lamp) – *விளக்கம்* (light house).

அரங்கு – அரங்கம், கடுகு – கடுகம், குண்டு – குண்டம், குன்று – குன்றம், சங்கு – சங்கம், துண்டு – துண்டம், நகர் – நகரம், முத்து – முத்தம் முதலிய பல சொற்களில் அம்மீறு தன் பெருமைப்பொருளை யிழந்துள்ளது. இங்ஙனமே உலகம் என்பதும்.

குடும்பு – குடும்பம் என்பதிலோ, அம்மீறு தன் சிறப்புப் பொருளை யிழந்ததுமன்றி, அதற்கு நேர்மாறான சிறுமைப் பொருளையுந் தருகின்றது. குடும்பம் என்பது, சிறிதும் பெரிதுமான ஒரு தனிக் குடும்பத்தையே குறிக்கும்போது, குடும்பு என்பது பல குடும்பஞ் சேர்ந்த சேரியை அல்லது ஊர்ப் பகுதியைக் குறிக்கின்றது. (உத்தரமேரூர்க் கல்வெட்டைப் பார்க்க.) பாண்டியராட்சியும் பண்டைப் பைந்தமிழ்க் கழகமும் இன்மையே, இத்தகைய வழுவழக்கிற்குக் கரணியம்.

மொழி வரலாற்றையும் சொல்லமைப்பையும் அறியாத அல்லது பிறழவுணர்ந்த தமிழ்ப்புலவர் சிலர், உலகம் என்னுஞ் சொல்லின் கடைக்குறையே உலகு என்னும் வடிவென்று கொள்வர்.

''பகவன் முதற்றே யுலகு'' (குறள்.1)

''நீரின் றமையா துலகெனின்'' (ஷை 20)

''வகைதெரிவான் கட்டே யுலகு'' (ஷை 27)

''பெருமை பிறங்கிற் றுலகு'' (ஷை 23)

''உலகவாம் பேரறி வாளன் றிரு'' (ஷை 215)

''என்னாற்றுங் கொல்லோ வுலகு'' (ஷை 211)

எனச் செய்யுள் வழக்கிலும்; உலகளவு, உலகியல், உலகாளி, உலகழிவு என உலக வழக்கிலும்; உலகு என்னுஞ் சொல் உலகம் என்னும் வடிவு போன்றே பெருவழக்காய் வழங்குதலையும், சொல்லமைதி யொன்றுங் குறையாதிருத்தலையும், நோக்குக. உலகு என்பதன் விரித்தலே 'உலகம்'.

உலகம் என்னும் சொல்வடிவு, வடமொழியில் 'லோக' என்றும், சூரசேனிப் பிராகிருத வழிவந்த இந்தியில் 'லோக்' என்றும், திரியும். உலக சவை – லோக்ஸபா.

தமிழுக்கு அடுத்து வடபால் வழங்குவதால் வடகு (வடுகு) என்று பெயர்பெற்ற தெலுங்கில், உலகம் என்னும் தமிழ்ச்சொல் லோகமு என்று திரிந்துள்ளது. இது தெலுங்கியல் பென்பது, உரல் – தெ. ரோலு என்னும் திரிபால் அறியப்படும்.

பிற்காலச் சேண் வடமொழியாகிய சமற்கிருதத்தில், லோகமு என்னுந் தெலுங்க வடிவு ஈறுகெட்டு 'லோக' என்றாயிற்று. இங்ஙனம் ஈறு கெடுவது சமற்கிருத வியல்பே.

ஒ.நோ : அம்பலம் – அம்பர, அரங்கம் – ரங்க, கடுகம் – கடுக (ṭ), காலம் – கால, குடும்பம் – குடும்ப (ṭ), சகடம் – சகட (ṭ), சங்கம் (சங்கு) – சங்க (nkh), தண்டம் – தண்ட (d –), தானம் – தான (d –), திடம் – த்ருட (drḍha), நகரம் – நகர (g), நாகரிகம் – நாகரிக (– g –), நாகம் – நாக (g), நாடகம் – நாடக (ṭ), நீலம் – நீல, நீரம் – நீர, பக்கம் – பக்ஷ, பாகம் – பாக (bhāga), பூதம் (பெரும்பேய்) – பூத (bh), மங்கலம் – மங்கல, மண்டபம் – மண்டப (p), மண்டலம் – மண்டல, மீனம் – மீன, முகம் – முக (kh), மாதம் – மாஸ, வாலம் – வால.

இவையும் இவைபோன்ற பிறவும் வடமொழி யென்னும் சமற்கிருதத்திற்கு இன்றியமையாதனவா யிருப்பதால், வடமொழி யாளர் தமிழரின் பேதைமையைப் பெரிதும் பயன்படுத்தி, சமற்கிருதம் தேவமொழியாதலால், அதிலுள்ள சொற்களெல்லாம் அதற்குரியனவே யென்றும், தமிழே சமற்கிருதத்தினின்று தனக்கின்றி யமையாத அடிப்படைச் சொற்களையெல்லாம் கடன் கொண்டுள்ள தென்றும், தொன்றுதொட்டுத் துணிச்சலுடன் ஏமாற்றி வந்திருக் கின்றனர்.

சமற்கிருதம் தேவமொழியென்பது, பிராமணன் நிலத்தேவன் (பூசுரன்) என்பதையே முற்றுந் தழுவிய தென்றும், சமற்கிருதச் சொற்களில் ஐந்தி லிருபகுதி தூய தமிழென்றும், அறிதல் வேண்டும்.

கடன்கொண்ட தமிழ்ச்சொற்களை யெல்லாம் சமற்கிருதச் சொல்லென்று காட்டற்கு, பொருந்தப் பொய்த்தலாகவும் பொருந்தாப் பொய்த்தலாகவும் குறிக்கோட் சொற்பிறப்பியலையே (Tendentious Etymology) வடமொழியாளர் கையாண்டு வந்திருக் கின்றனர்.

லோக என்னும் சொல்லிற்கு அவர் கூறும் பொருட் கரணியம், 'பார்க்கப்படுவது' என்பதே. லோக் என்னும் ஆரியச் சொல்லிற்குப் 'பார்' (look) என்பது பொருள். ஆதலால், அதை மூலமாகக் கொண்டு அங்ஙனங் கூறினர். அச் சொல் look என்னும் ஆங்கிலச் சொல்லொடு தொடர்புடையது. OE. locian, OS. locon, OHG. luogen, WG. lok.

லோக் என்னும் ஆரியச் சொல் நோக்கு என்னும் தென்சொல்லின் திரிபே. நகர (னகர) லகரங்கள் ஒன்றோடொன்று மயங்கும். நோக்கு என்பது இந்தியில் தேக் என்று திரிந்துள்ளது.

உலகு (உலகம்) என்னுஞ் சொல்லிற்கு, உருண்டையானது அல்லது சுற்றிவருவது என்னும் பொருள் பொருந்துமா, அல்லது

பார்க்கப்படுவது என்னும் பொருள் பொருந்துமா, என்று அறிஞர் கண்டுகொள்க.

உலகம் என்னும் சொல் பொதுமக்களைக் குறிப்பது பெருவழக்கு. எ - டு : உலகம் என்ன சொல்லும்?

ஒ.நோ : L. **vulgus** *(volgus)*, the people, common people, the great multitude, the public.

L. ***vulgaris*** – E. *vulgar*, characteristic of the common people.

உலவு – அலவு – அலவன் = வளைந்த குறடு போன்ற முன் கால்களையுடைய நண்டு.

அலவு – அலகு = 1. குறடு. 2. குறடுபோன்ற தாடை. அலகைப் பேர்த்துவிட்டான். 3. தாடை போன்ற அரணைக் கொடிறு. ''அரணை அலகு திறக்கிற தில்லை'' (பழ.).

அலகு – அலக்கு = துறடு, துறட்டி.

உல் – உள் – உழல், உழலுதல் = 1. சுழலுதல் (பிங்.). 2. அலைதல், திரிதல், ''ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையால்'' (நாலடி. 20). 3. இயங்குதல், வீசுதல். ''சிறுகாற் றுழலும்'' (கல்லா. கண.). 4. நிலைகெடுதல். அந்தக் குடி உழன்றுபோயிற்று.

உழல் – உழலை = 1. சுற்றிவரும் செக்குலக்கை. 2. சுழலும் குறுக்குமரம். ''உழலை மரத்தைப்போற் றொட்டன'' (கலித். 106). 3. கணைய மரம். ''வேழம்......உழலையும் பாய்ந்திறுத்து'' (பு. வெ. 12, வென்றிப். 8). 4. மாட்டின் கழுத்திற் கட்டும் உழலைக் கழுந்து.

உழற்சி = 1. சுழற்சி. 2. அலைகை.

உழற்றல் = (செ. குன்றா வி.) 1. சுழற்றுதல். 2. அலையச் செய்தல். ''என்னை யவமே யுழற்றி'' (திருக்கோ. 100, உரை, அவ.). (செ. கு. வி.) கைகால் நோவாற் புரளுதல்.

உழன்றி = மாட்டின் கழுத்திற் கட்டும் உழலைக் கழுந்து.

உழிதல் = அலைதல். ''உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே'' (தேவா. 553 : 10).

உழிதருதல் = அலைதல். ''உன்மத்த மேற்கொண் டுழிதருமே'' (திருவாச. 5 : 7).

உல் – உர் – உருள். உருள்தல் = 1. தொடர்ந்து புரளுதல். ' 'திண்வரை யுருள்கிலேன்'' (திருவாச. 5 : 39). 2. உருண்டு திரளுதல். சிலந்திக் கட்டி உருண்டு வருகிறது. 3. புரண்டழிதல். ''உலகெலா முருளு மின்றென'' (சீவக. 2452). 4. செல்லுதல். ''நூல்வழி யுருள்விலா

மனத்தவர்க்கு'' (சூளா. முத்தி. 13). 5. (சக்கரம்) உருண்டு செல்லுதல். ''உருள் பெருந்தேர்க் கச்சாணி யன்னா ருடைத்து'' (குறள். 667).

ம., க. உருள், தெ. உரலு.

உருள் = 1. சக்கரம். 2. வண்டி, தேர். 3. சகட நாண்மீன்.

உருளரிசி = உருண்டையான கொத்துமல்லி (திவா.).

உருள் – உருளி = 1. வட்டம். ''உருளி மாமதி'' (சீவக. 532). 2. சக்கரம். 3. திரிகையின் மேற்கல். 4. (க. உருளி.) உருளை. ''வல்வா யுருளி கதுமென மண்ட'' (பதிற்றுப். 27 ፡11).

உருள்– உருளை = 1. சக்கரம். ''சகடிரு சக்கர வுருளைக ளுய்க்கவே'' (பாரத. வேத்திர. 50). 2. உருண்டை. 3. உருளைக் கிழங்கு.

உருள் – உருண்டை = 1. கோளவடிவம். 2. கோளம், குண்டு, உருண்டையான பொருள். 3. கவளம். 4. திரட்சி.

உருண்டை – உண்டை = 1. உருண்டையானது, 2. உருண்டையான பொருள்கள் ፡ பொரியுண்டை, சோற்றுண்டை, வெல்லவுண்டை, மண்ணுண்டை, வில்லுண்டை, கஞ்சாவுண்டை முதலியன. 3. கோள், உலகம், ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'' (திருவாச. திருவண்ட. 1) 4. கவளம். 5. கும்பு, கூட்டம். ''கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்'' (பரிபா. 6 ፡ 36, உரை).

உண்டை – உட்டை = உருண்டையான விளையாட்டுக்காய். ''உட்டையென வைத்து விளையாடு பைங்கழற்காய்'' (திருப்போ. சந். பிள்ளைத். அம்புலி. 6).

உருளை– உருடை = 1. சக்கரம். 2. வண்டி. ''உருடையூடு திரியும்'' (சேதுபு. முத்தீர். 42).

உருடை – ரோடை – ரோதை – L *rota*, a wheel.

L. ***roto***, to cause to turn round like a wheel, to whirl round, swing round.

L. ***rotula***, a little wheel.

L. ***rotunde***, roundly.

L. ***rotunditos***, roundness. *rotundity* (Plin.)

L. ***rotundo***, to round, make round.

L. ***rotundus***, round, circular, spherical.

இவற்றினின்று, பின்வருமாறு ஆங்கிலச் சொற்கள் தோன்றியுந் திரிந்துமுள்ளன.

E. ***rota***, list of persons acting, or duties to be done, in rotation.

E. ***rotary***, acting by rotation.

E. ***rotate***, v. move round axis or centre, revolve. adj. wheel - shaped.

E. ***rotation***, rotating, recurrence, recurrent series or period, regular succession in office, in, by, rotation.

E. ***rotator***, muscle that rotates a limb etc.

E. ***rotifer***, wheel - animalcule, member of class *Rotifera* with rotatory organs used in swimming.

E. ***rotograph***, print of MS. page etc. got by sensitized roll.

E. ***rotor***, rotary part of machine.

E. ***rotund***, a. circular, round, *rotundate*.

E. ***rotunda***, building of circular ground - plan, esp. one with dome.

Roll என்னும் ஆங்கிலச் சொல் 'உருள்' என்பதை ஒத்திருக் கின்றது. ஆயின், அதை rotula அல்லது rotilla என்னும் இலத்தீன் குறுமைப்பொருட் சொல்லினின்று (dim. n.) திரிக்கின்றனர் மேலையறிஞர். இது வட்டவழித் திரிப்பு. L. rotulus.

தமிழில் 'இல்' என்பது ஒரு குறுமைப்பொருட் பின் னொட்டென்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

எ-டு : குடி (வீடு) – குடில் (குடிசை), தொட்டி – தொட்டில் (சிறு தொட்டி), விட்டி – விட்டில். 'தொட்டில்' (சிறு ஆடுகட்டில்) இன்று ஏணையென்று தவறாக வழங்குகின்றது.

E. ***roll***, n. cylinder formed by turning flexible fabric such as paper or cloth over and over upon itself without folding. v. move or send or go in some direction by turning over and over on axis often with aid of gravitation. ME. & OF. *rolle, role*.

E. ***roller***, cylinder of wood, stone, metal, etc.

E. ***role***, actor's part, one's function, F. *role* = roll.

E. ***roly*** - poly, pudding made of sheet of paste covered with jam etc., formed into roll, and boiled.

Round என்னும் ஆங்கிலச் சொல்லும் 'உருண்டை' என்பதை ஒத்திருக்கின்றது. ஆயின், அதை rotundus என்னும் இலத்தீன்

சொல்லினின்று திரிப்பர் மேலையறிஞர். இதுவும் வட்டவழித் திரிப்பு.

E. ***round***, n. round object.

v. invest with, assume, round shape.

a. spherical or circular or cylindrical or approaching these forms.

adv. with more or less circular motion ME. &. OF. *rund, round.*

E. ***roundel***, small disc.

E. ***roundelay***, short simple song with refrain.

E. ***rounder***, one complete run of player through all the bases arranged in a round.

E. ***roundly***, adv. in through - going manner.

E. ***rondeau***, F. *rondel*, a poem with opening words used twice as refrain.

E. ***rondel***, special from of *rondeau*. ME. &. OF. *rond*, round.

E. ***rondo,*** It. & F. *rondeau.*

E. ***rondure***, round outline or object. F. *rondeur*, round.

தமிழில், உகரமுதல் மூல வேர்ச்சொல், க ச த ந ப ம என்னும் ஆறு சொன்முதல் மெய்யெழுத்துகளொடுங் கூடி, ஆறு வழி வேர்களை அல்லது வழியடிகளைப் பிறப்பிக்கின்றது. இங்ஙனமே 'உருள்' என்ற சொல்லும்.

உருள் ஒ.நோ: E. *whirl*, swing round and round, revolve. ON. *hvirfla*, rotate. E. *whorl*, ring of leaves, one turn of a spiral, disc on spindle. ME. wharwy,l whorail.

குருள் – குருளுதல் = சுருளுதல், சுருளாதல் ''குருண்ட வார்குழல்'' (திருவிசை. திருவாலி. 1:3). ஒ.நோ: MDu. *krul,* G. *krollen,* LG.*S D*u., EFris. *krullen,* to curl E. *curl.*

சுருள் – ஒ.நோ : E. *swirl*, eddy. Se., Norw. svirla, Du. *zwirrelen*, to whirl, G. *schwirrlen*, to totter.

துருள் – (துரள்) – (துரடு) – துறடு – துறட்டி – தோட்டி = வளைந்த அலகு. ஒ.நோ : E. *twirl*, to revolve, spin, whirl.

நுருள்– நெருள்– நெருடு. நெருடுதல் = நூலை உருட்டித் திரித்தல். ''இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனோ'' (தமிழ்நா.).

புருள்– புருளை– புருடை – பிருடை = யாழின் அல்லது நரப்புக் கருவியின் முறுக்காணி.

தெ. பிரட, க.பிரடெ.

முருள்– முருடு = உருண்ட முண்டு அல்லது முடிச்சுக் கட்டை.

உருள் – உருட்டு. உருட்டுதல் = 1. உருண்டையாகச் செய்தல். ''முருடீர்ந்துருட்டற்கு'' (கம்பரா. மாரீசன். 139) 2. உருளச் செய்தல். ''அறக்கதிராழி திறப்பட வுருட்டி'' (மணிமே. 5 : 76). 3. மருட்டுதல். ''கடபட வென்றுருட்டு தற்கோ'' (தாயு. நின்ற. 3).

க., ம. உருட்டு.

உருட்டு = 1. சரிவு. 2. வளைவு. 3. சக்கரம். ''உருட்டோட வோடிய தேர்'' (குலோத். கோ. 212). 4. மோதிரவகை. 5. உருண்டையான பொருள். 6. திரட்சி. 7. உருட்டுகை. 8. ஏமாற்றுகை. 9. வெருட்டு.

உர்– உறு– இறு– இற. இறத்தல் = சாய்தல், சரிதல்.

இற – இறப்பு = இறவாணம். இறவாரம். ''இறப்பிற் றுயின்று'' (திருக்கோ. 328).

இற – இறவு = 1. (வளைந்த) இறா. ''கடலிறவின் சூடு தின்றும்'' (பட்டினப். 63). 2. (வட்டமான) தேன்கூடு. (ஞானவா. தாசூர. 69).

இற – இறா = இறால். ''கயலொடு பச்சிறாப் பிறழும்'' (பெரும்பாண். 270)

இறா– இறால் = 1. இறா. 2. தேன்கூடு (நள. கலிநீங். 14). 3. நளி (கார்த்திகை) (திவா.).

இறா– இறாட்டு = 1. இறால். 2. தேன்கூடு. 3. கையிறாட்டை.

இறாட்டு– இறாட்டை = நூல் நூற்கும் சக்கரம்.

இறாட்டு– இறாட்டினம் = 1. நூற்கும் சக்கரம். 2 நீரிறைக்கும் உருளி. 3. விளையாட்டுச் சுழல் தேர் அல்லது குடை. 4. பஞ்சரைக்கும் பொறி.

இறவு– இறகு– சிறகு– சிறகர். இறகு– இறகர்.

இறகு– இறக்கை. தெ. ரெக்க.

இற– இறை = 1. இறவாணம். ‘‘குறியிறைக் குரம்பை’’ (புறம். 129). 2. மூலை. ‘‘முடங்கிறை’’ (முல்லைப். 87). 3. வளைந்த (பெண்டிர்) முன்கை. ‘‘எல்வளை யிறையூ ரும்மே’’ (கலித்.). 4. இறகு (பிங்.). 5. சிறகு.

இறைதல் = வணங்குதல். ‘‘இணையடி யிறைமின்’’ (பதினோ. ஆளு. திருக்கலம். 48).

இறை – இறைஞ்சு. இறைஞ்சுதல் = 1. வணங்குதல். ‘‘எழிலார் கழலிறைஞ்சி’’ (திருவாச. 1 : 21). 2. தாழ்தல். ‘‘குலையிறைஞ்சிய கோட்டாழை’’ (புறம். 17). 3. வீழ்ந்து கிடத்தல். ‘‘புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி’’ (கலித். 3 : 13).

4. அரத்தம்

நிறப் பெயர்கள் பொதுவாகப் பொருள் பண்பு வினை என்னும் மூவடிப்படையில் தோன்றியுள்ளன. அவற்றுள் முதலதே பெரும் பான்மை.

எ-டு : ash, gold, lead, olive, orange, slate, snuff.

அரத்தம், களிப்பாக்கு, சாம்பல், பவழம், பால், பொன், மயில்.

நெருப்பு, எரியும் பொதுநிலையிற் சிவப்பாகவும், ஒளிரும் சுடர்நிலையில் வெள்ளையாகவும், தோன்றுவதால், நெருப்புக் கருத்தினின்று செம்மைக் கருத்தும் வெண்மைக் கருத்தும் தோன்றியுள்ளன. கதிரவன், இளவெயில் வீசும் விடிகாலையிற் பவளம்போற் சிவந்தும், முதிர்வெயி லெறிக்கும் நண்பகலில் வெள்ளிபோல் வெளுத்தும் தோன்றுதல் காண்க.

அழல்வண்ணன் என்பது சிவனையும், எரிமலர் என்பது செந்தாமரை மலரையும் முண்முருங்கை மலரையும், செந்நிறம் பற்றிக் குறிக்கின்றன. இந் நிறக்கருத்து நெருப்புக் கருத்தினின்றே தோன்றுவதால், அழல், எரி என்னும் பெயர்களின் மூலச் சொற்களும் இக் கருத்தைத் தெரிவிக்கின்றன.

உல் – உல – உலவை = காய்ந்த மரக்கிளை. ‘‘இலைதீந்த வுலவையால்’’ (கலித். 11)

உல்– உலர். உலர்தல் = 1. காய்தல். 2. வாடுதல். ‘‘உலர்ந்து போனே னுடையானே’’ (திருவாச. 32 : 1). ம. உலர்.

உலர்ச்சி – ம. உலர்ச்ச.

உலத்தல் = அழிதல், சாதல், முடிவுபெறுதல், கழிதல், நீங்குதல்.

உல் – உலை = 1. கொல்லன் எரிக்கும் அடுப்பு. ‘‘கொல்ல னுலையூதுந் தீயேபோல்’’ (நாலடி. 298). 2. உணவு சமைக்கும் பொருட்டுக் கொதிக்க வைக்கும் நீர். ‘‘உலைப்பெய் தடுவது போலுந் துயர்’’ (நாலடி. 114).

உல்– உர்– உரி = நெருப்பு. க. உரி.

உர்– உரு. உருத்தல் (செ. கு. வி.) = 1. எரிதல், அழலுதல். ''ஆக முருப்ப நூறி'' (புறம். 23 : 10). 2. வெகுளுதல், பெருஞ்சினங் கொள்ளுதல். ''ஒருபக லெல்லா முருத்தெழுந்து'' (கலித். 39 : 23) – (செ. குன்றாவி.) வெகுளுதல். ''ஒள்வாட் டானை யுருத்தெழுந் தன்று'' (பு. வெ. 3 : 2).

சினத்தல் எரிதல் போன்றது.

உரு – உருத்திரம் = சினம். உருத்திரம் – வ. ருத்ர (rudra). OE. *wreth*, OS. wreth, OHG. reid, ON. reithr, E. wrath, wroth.

உருத்திரம் – உருத்திரன் = கடுஞ்சினத்தன்.

உருத்திரன் – வ. ருத்ர (rudra).

தமிழரின் முத்தொழிலோனான சிவன் ஆரியரின் முத்திரு மேனியருள் (திரிமூர்த்திகளுள்) ஒருவனான அழிப்புத் தொழிலோனாக்கப்பட்டபின், ஆரியக் கடுங்காற்றுத் தெய்வ (storm god) *மாகிய ருத்ர (உருத்திரன்) அழிப்புத் தொழிலொப்புமைபற்றிச் சிவனோடு இணைக்கப்பட்டான். ருத்ர ஆரியத் தெய்வமாயினும், வடமொழி தமிழின் திரிமொழி யாதலின், தமிழ்த் திரிசொல்லாலேயே குறிக்கப்பட்டான் என அறிக.*

உரு – உரும் – உருமி – உருமித்தல் = வெப்பமாதல்.

உரும் – உருமம் = 1. வெப்பம் (பிங்.). 2. உருமிக்கும் நண்பகல். ''உருமத்திற் கதிரே'' (சேதுபு. இராமனருச். 218).

உருமவிடுதி (யாழ்ப்.) = நண்பகல் வேலைநிறுத்தம்.

உருமகாலம் = கோடைக்காலம்.

உருமத்துக்கு விடுதல் = நண்பகலில் வேலை நிறுத்துதல். உரும் – உரும்பு = கொதிப்பு. ''உரும்பில் கூற்றத் தன்னநின்'' (பதிற்றுப். 26 : 13).

உரும்பு – உருப்பு = 1. வெப்பம். ''கன்மிசை யுருப்பிறக் கனைதுனி சிதறென'' (கலித். 16 : 7). 2. சினத்தீ. ''உருப்பற நிரப்பினை யாதலின்'' (பதிற்றுப். 50 : 16). 3. கொடுமை. ''உருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி'' (பெரும்பாண். 417).

உருப்பு – உருப்பம் = 1. வெப்பம். ''கனலும்..... வந்து குடிகொண் டவணுறைந்தன வுருப்பமெழ'' (அரிச். பு. விவா. 104). 2. சினம். (W.).

உரும்பு – உரும்பரம் = 1. செம்பு. 2. பெருங்காயம்.

உரும்பரம் – வ. உதும்பர = செம்பு.

உரு – உருகு. உருகுதல் = 1. வெப்பத்தால் இளகுதல். 2. மனநெகிழ்தல். ''பூண்முலையார் மனமுருக'' (பு. வெ. 9 : 11, கொளு). 3. மெலிதல். தாயிறந்தபின் உருகிப் போனாள். ம. உருகு.

உருகு – உருக்கு. உருக்குதல் = 1. மாழையிளகச் செய்தல். ''தீயிடை யுருக்குதல் முயன்றான்'' (கந்தபு. மார்க்க. 131). 2. மன நெகிழச் செய்தல். ''எம்பிரா னாமஞ் சொல்லி யுருக்கினன்'' (கம்பரா. உருக்காட். 27). 3. மெலியச் செய்தல். அவனை நோய் உருக்கிவிட்டது. 4. அழித்தல். 5. வருத்துதல். ம. உருக்கு.

உருக்கு = 1. எஃகு (சூடா.). 2. உருக்கின பொருள். ''செப்புருக் கனைய'' (கம்பரா. கார்கா. 91).

ம. உருக்கு, க. உர்க்கு, தெ. உக்கு.

உருக்கு – உருக்கம் = 1. மனநெகிழ்ச்சி, இளக்கம். 2. இரக்கம். ''உருக்கமி லவ்வசுரக் குலம்'' (இரகு. மாலையி. 113). 3. தெய்வப் பத்தி. ''உருக்கத்திற் கரத்தேந்தி'' (விநாயகபு. 75 : 121). ம. உருக்கம்.

உருக்கு – உருக்கன் = மேனியை வாட்டும் நோய் (யாழ்ப்.).

உல் – உள் – ஒள் = 1. ஒளியுள்ள. 2. அழகான. 3. நல்ல. 4. அறிவுள்ள.

ஒண்மை = 1. விளக்கம். ''ஒப்பின் மாநக ரொண்மை'' (சீவக. 535). 2.இயற்கை யழகு. ''ஒண்மையு நிறையு மோங்கிய வொளியும்'' (பெருங். உஞ்சைக். 31 : 151). 3. நன்மை (பிங்.). 4. நல்லறிவு. ''ஒண்மை யுடையம்யாம்'' (குறள். 844). 5. மிகுதி (திவா.). 6. ஒழுங்கு (சூடா.).

ஒள் – ஒள்ளியன் = 1. அறிவுடையோன். ''ஒளியார் முன் ஒள்ளிய ராதல்'' (குறள். 714). 2. நல்லவன். ''நடக்கையில் ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல்'' (பழ. 255). க. ஒள்ளித.

ஒள்– ஒளி = 1. நெருப்பு. 2. எரிக்குந் தன்மை. 3. விளக்கு. 4. காந்தி. 5. கதிரவன். 6. வெயில். 7. திங்கள். 8. நாண்மீன். 9. மின்னல். 10. கட்புலன். 11. கண்மணி. 12. பெருமை. 13. புகழ். 14. அரசனது கடவுட் டன்மை. 15. அறிவு. 16. நன்மை. 17. செயற்கை யழகு.

ம. ஒளி, க. ஒள.

ஒளி – ஒளிர். ஒளிர்தல் = விளங்குதல். ''உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே'' (திருவாச. 37 : 5).

உள்– உண்– உண்ணம் = நெருப்பு, வெப்பம். ''உண்ண வண்ணத் தொளிர்நஞ்ச முண்டு'' (தேவா. 510 ፡ 6).

உண்ணம்– வ. உஷ்ண. மரா. ஊன்பாணி = வெந்நீர்.

உண்– உண. உணத்தல் = காய்தல், புலர்தல்.

உண– உணத்து (பி.வி.) உணத்துதல் = 1. காயவைத்தல். நெல்லை யுணத்தினாள். 2. ஈரம் புலர்த்துதல், தலையை யுணத்து. 3. வற்றலாக்குதல், வற்றுவித்தல். ''மெய் யுணத்தலும்'' (தைலவ. தைல. 140).

உண– உணங்கு. உணங்குதல் = 1. உலர்தல். ''தினை விளைத்தார் முற்றந் தினையுணங்கும்'' (தமிழ்நா. 154). 2. மெலிதல். ''ஊட லுணங்க விடுவாரோடு'' (குறள். 1310). 3. மனம் வாடுதல். ''உணங்கிய சிந்தையீர்'' (கந்தபு. மோன. 21). 4. சுருங்குதல். ''உணங்கரும் புகழ்'' (காஞ்சிப்பு. நாட்டுப். 1). 5. செயலறுதல். ''உணங்கிடுங் கரண மென்னில்'' (சி.சி. 4 ፡ 7).

க. ஒணகு.

உணங்கு – உணக்கு (பி.வி.). உணக்குதல் = 1. உலர்த்துதல். ''தொடிப்புழுதி கஃசா வுணக்கின்'' (குறள். 1037). 2. கெடுதல். ''உணக்கினான்.... என் வாழ்க்கை'' (விநாயகபு. 80 ፡120).

ம. உணக்கு.

உணங்கு – உணங்கல் = 1. உலர்த்திய தவசம். ''உணங்கல் கெடக்கழுதை யுதட்டாட்டங் கண்டென் பயன்'' (திவ். திருவாய். 4 ፡ 6 ፡ 7). 2. வற்றல். ''வெள்ளென் புணங்கலும்'' (மணிமே. 16 ፡ 67). 3. சமைத்த வுணவு. ''ஓடுகை யேந்தி..... உணங்கல் கவர்வார்'' (தேவா. 1030 ፡ 3). 4. உலர்ந்த பூ (பிங்.).

உணக்கு– உணக்கம் = வாட்டம் (W.).

ம. உணக்கம், க. ஒணகிலு (g), *து. ஒணகெலு.*

உள் – அள் – அழு – அழல் = 1. நெருப்பு. 2. வெப்பம். 3. ஒளிவிளக்கம். 4. துளங்கொளி (கேட்டை). 5. செவ்வாய். 6. நரகம். 7. காந்தல், உடம்பெரிவு. 8. எருக்கு. 9. நஞ்சு. 10. உறைப்பு. 11. சினம்.

ம. அழல்.

அழல்தல் = 1. எரிதல். 2. விளங்குதல், திகழ்தல். 3. காந்துதல். 4. உறைப்பாதல். 5. சினத்தல். 6. பொறாமைப்படுதல்.

அழல் வண்ணன் = சிவன் (தேவா. 1055 ፡ 5).

அழல்விதை = நேர்வாள வித்து (மலை.).

அழல் விரியன் = எரிவிரியன் (W.).

அழல் விழித்தல் = சினத்தல் (திருவாலவா. 14 : 5).

அழலவன் = 1. நெருப்புத் தேவன். 2. கதிரவன். 3. செவ்வாய்.

அழல் – அழலி = நெருப்பு (பிங்.).

அழலி – அழலிக்கை = எரிச்சல்.

அழல் – அழலை = தொண்டை யெரிச்சல்.

அழலோன் = 1. நெருப்புத்தேவன். 2. கதிரவன். 3. செவ்வாய்.

அழற்காய் = மிளகு.

அழற்குட்டம் = நளி (கார்த்திகை).

அழற்குத்துதல் = மணம் உறைத்தல்.

அழல் – அழற்சி = 1. எரிவு. 2. கால்நடைச் சுரநோய். 3. உறைப்பு. 4. சினம். 5. அழுக்காறு.

அழல் – அழற்று (பி. வி.). அழற்றுதல் = 1. எரியச் செய்தல். 2. வெம்மை செய்தல்.

அழற்று – அழற்றி – அழற்றியன் – அழத்தியன் = பெருங்காயம் (மூ. அக.).

அழல் – அழன் – அழனம் = 1. தீ (பிங்.). 2. வெம்மை (பிங்.).

அழு – அகு – அகுட்டம் = எரியும் மிளகு (W.).

ழ – க, போலித்திரிபு.

ஒ.நோ : மழவு – மகவு, தொழுதி – தொகுதி, முழை – முகை.

அகு – அகை. அகைதல் = எரிதல். ''அகையெரி யானாது'' (கலித். 139 : 26).

அகு – அக்கு – அக்கி = 1. நெருப்பு, தீ. ''அக்கிவாய் மடுத்த வேடு'' (திருவிளை. சமண. 38). 2. நெருப்புத்தேவன். ''அக்கியுங் கரமிழந்து'' (சிவதரு. சனன. 51). 3. சூட்டினா லுண்டாகுந் தோல்நோய் (herpes). ம., தெ. அக்கி.

பிரா. அக்கி (aggi).

அக்கு – இ. ஆக் (āg) = தீ.

அகி – அவி. ஒ.நோ : குழை – குகை – குவை.

வ – க திரிபின் தலைமாற்று க – வ.

அவிதல் = புழுங்குதல், வேதல், சமைதல், அழிதல், அணைதல், ஒடுங்குதல், ஓய்தல், பணிதல்.

அவி– அவிர். அவிர்தல் = விளங்குதல்.

அழு – அழுங்கு. அழுங்குதல் = வேதல், புழுங்குதல், வருந்துதல், பொறாமைப்படுதல்.

அழுங்கு – அழுக்கு – அழுக்குறு. அழுக்குறுதல் = பொறாமைப் படுதல்.

அழுக்குறு – அழுக்கறு – அழுக்காறு.

ஒ.நோ : நாசமுற்றுப் போவான்– நாசமற்றுப் போவான் (ஒரு வசைச்சொல்).

அழலி– அழனி– அகனி– வ. அக்நி.

(agni) – L. ignis, Lith. ugnis, Russ. ogone, Slav. ognj.

"From what root is Agni derived? He is the foremost leader, he is led foremost in sacrifices, he makes every thing, to which it inclines, a part of himself. 'He is a drying agent' says Sthaulāṣṭhīvi, 'it does not make wet, it does not moisten. 'It is derived from three verbs', says Sākapūṇi, 'from going from shining or burning, and from leading'. He, indeed, takes the letter *a* from the root *i* (to go), the letter *g* from the root *anj* (to shine), or *dah* (to burn) with the root *ni* (to lead) as the last member." என்று லக்ஷ்மண் சரூப் எழுதிய The Nighantu & the Nirukta என்னும் நூலின் 120ஆம் பக்கத்திற் கூறப்பட்டுள்ளது. அறிஞர் இதன் பொருத்தத்தைக் கண்டுகொள்க.

இனி, அக்நி என்னும் வடசொற்கு, *agra*, foremost என்பது மூலமென்றும், *ago*, to lead என்பது மூலமென்றும், *ag*, to go என்பது மூலமென்றும் உரைப்பர்.

அக்கினியைத் தேவருள் முந்தினவனென்று வேத ஆரியர் கொண்டாலும், அக்கினியென்னுஞ் சொல்லிற்கு அக்கிரம் என்னுஞ் சொல்லொடு தொடர்பில்லை. அக்கு (ak) = கூர்மை, நுனி. அக்கு– அக்கிரம் (Gk. acros) = நுனி, உச்சி. அக்கிரம் (Skt. agra) = நுனி, முதன்மை, தலைமை. அகை (ago) என்னும் சொல் உகை என்பதன் திரிபு. செல்லுதலைக் குறிக்கும் ag என்னும் சொல் பொருளளவில் ஒரு சிறிதும் பொருந்தாது.

உல்– அல்– அன்– அன்று. அன்றுதல் = சினத்தல்.

அன்– அனல் = 1. தீ. 2. வெப்பம். 3. இடி.

அனல்தல் = அழலுதல்.

அனல்– அனலம் = நெருப்பு. அனலம்– வ. அனல.

இது சென்னைப் ப. க. த. அகரமுதலியில் தலைகீழாகக் காட்டப் பட்டுள்ளது.

அனல்– அனலி = 1. நெருப்பு. 2. கதிரவன்.

அனல் = அனலன் = நெருப்புத் தேவன்.

அனல் – அனற்று (பி. வி.). அனற்றுதல் = (செ. கு. வி.) நோய்நிலையில் முனங்குதல். (செ. குன்றா வி.). 1. எரித்தல். 2. வெப்பமாக்குதல். 3. வயிறுளையச் செய்தல். 4. சினத்தல்.

அல்– அலத்து– அலத்தி = மின்மினி (சது.).

அலத்து– அலத்தம் = செம்பருத்தி (மலை.).

அலத்தம்– வ. அலக்த.

அலத்தம்– அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.

அலத்தகம்– வ. அலக்தக.

அலத்து– அலத்தல்– அலந்தல் = செங்கத்தரி.

அல்– அர்– அரம் = சிவப்பு. அரன் = சிவன்– வ. ஹர.

ஆரியர் சிவனை அழிப்புத் திருமேனியாக்கினதினால், ஹர என்னும் வடசொல்லிற்கு அழிப்பவன் என்று பொருள் கூறுவர்.

அர்– அரக்கு = 1. சிவப்பு (திவா.). 2. ஒரு செஞ்சரக்கு (சாதிலிங்கம்). 3. செம்மெழுகு.

ம. அரக்கு, க., து. அரகு (g). வ. ராக்ஷா (செம்மெழுகு).

அரக்காம்பல் = செவ்வாம்பல் (பிங்.).

அரக்கு– அரக்கம் = 1. அரத்தம். 2. அவலரக்கு.

அரக்கம் (அரத்தம்)– வ. ரக்த.

அரக்கம் (அவலரக்கு)– வ. ராக்ஷா.

அர்– அரத்து– அரத்தம் = 1. சிவப்பு. "அரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇ" (சிலப். 14 : 86). 2. அரத்தம். 3. அரக்கு. 4. பவளம். 5. செம்பரத்தை. 6. செங்கழுநீர். 7. செம்பருத்தி. 8. செங்கடம்பு. 9. செந்துணி (துகில்). 10. செம்மெழுகு.

அரத்தம் (குருதி)– வ. ரக்த. ஒ.நோ : முத்தம்– வ. முக்த.

அலத்தகம் – அரத்தகம் = செம்பஞ்சுக்குழம்பு (சீவக. 2459).

அரத்தம் – அரத்தன் = செவ்வாய்.

அலத்தி – அரத்தி = செவ்வல்லி (சிந்தா. நி.).

அரத்தம் – அத்தம் = சிவப்பு. அத்தம் – அத்தி = செங்கனி மரம்.

அரத்து – அத்து = 1. சிவப்பு. ''ஆய்ந்தளந் தியற்றிய வரத்து ணாடையர்'' (சீவக. 1848). 2. துவர். ''ஆடுநீரனவத்து மண்களும்'' (சீவக. 2418).

உல் – இல் – இல – இலகு. இலகுதல் = விளங்குதல். ''வெண்ப லிலகுசுடர் இலகு விலகுமகர குண்டலத்தன்'' (திவ். திருவாய். 8:8:1). ம. இலகு.

இலகு – இலங்கு. இலங்குதல் = திகழ்தல் (பிங்.).

இலங்கு – இலக்கு. இலக்குதல் = சொலிப்பித்தல். ''எரியத்திரத் திலக்கியே'' (சைவச. பொது. 294).

இலக்கு – இலக்கம் = ஒளிவிளக்கம். ''எல்லே யிலக்கம்'' (தொல். இடை. 21). ஒ. நோ: L. luc, lux, Gk. luke.

இல் – இலக்கு = 1. சிவந்த அரக்கு. 2. அரக்குக் குறி. 3. அடையாளம். அங்கே போக உனக்கு இலக்குச் சொல்கிறேன். 4. குறிப்பொருள். இலக்கு வைத்து எய்து பழக வேண்டும். 5. குறித்த இடம். அந்த இலக்கிலே உன்னைப் பார்த்தேன். 6. நாடிய பொருள். இலக்கை நோக்கித் தொடருகிறேன். (விவிலி. பிலிப். 3 : 14). 7. வெல்ல வேண்டிய போட்டி அல்லது எதிரி. இவனே உனக்கு இலக்கு.

இலக்கு (அரக்கு) – E. lac.

இலக்கு (குறி) – இ. லக் (lakh), வ. லக்ஷ்.

இலக்கு – இலக்கம் = 1. குறி. 2. எண்குறி. ''குறியிலக்க மெழுதே'' (தைலவ. பாயி. 15). 3. குறிப்பொருள். ''இலக்க முடம்பிடும்பைக்கு'' (குறள். 627). 4. நூறாயிரம். ''இலக்கத் தொன்பதின்மர்'' (கந்தபு. திருவவதார. 127).

இலக்கம் – வ. லக்ஷ.

இலக்கம் – இலங்கம் = குறி. இலங்கம் – வ. லிங்க. சிவவிலங்கம் (சிவலிங்கம்), மாவிலங்கம் (மாவிலிங்கம்) என்பன தமிழ்ச்சொற்களே.

இல் – இலத்து – இலத்தை – இலந்தை = செம்பழம், செம்பழ முட்செடி.

இலத்து– இலத்தி– இரத்தி = இலந்தை. ''இரத்தி நீடிய வகன்றலை மன்றத்து'' (புறம். 34 : 12).

இல்– இர்– இராகி = சிவந்த கேழ்வரகு. ம., க., தெ., து. ராகி (g).

இல் – எல் = 1. ஒளி. ''எல்லே யிலக்கம்'' (தொல். இடை. 21). 2. கதிரவன். ''எற்படக் கண்போல் மலர்ந்த'' (திருமுருகு. 74). 3. வெயில் (பிங்.). 4. பகல். ''எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி'' (புறம். 170). 5. நாள் (பிங்.). 6. வெண்மை.

எல் – எல்லி = 1. கதிரவன் (பிங்.). 2. பகல். ''இரவொ டெல்லியு மேத்துவார்'' (தேவா. 344 : 8).

எல்– எல்லோன் = கதிரவன் (பிங்.).

எல் – எல்பு – என்பு = 1. வெள்ளையான எலும்பு. ''என்பிலதனை வெயில்போலக் காயுமே'' (குறள். 77). 2. எலும்போடு கூடிய உடம்பு. ''என்பு முரியர் பிறர்க்கு'' (குறள். 72).

ஒ.நோ : அல் + பு = அன்பு. அல்லுதல் = பொருந்துதல்.

நல்– (நல்பு)– நன்பு, வல்– (வல்பு)– வன்பு.

எல்பு– எலுபு– எலும்பு = வெள்ளையான உறுப்பு.

ம. எலும்பு, க., து. எலு, தெ. எம்மு.

எல்பு – L. ***albus***, white, LL. *alba,* white.

E. ***alb***, white vestment reaching to feet, worn by priests.

OE., ME. *albe*.

E. ***albata***, white metal. L. *albata*, whitened.

Port. *albino*, white Negro.

E. ***albite***, white or soda fieldspar.

E. ***album***, book of white sheets for insertion of autographs, photographs, etc.

E. ***albumen***, white of egg.

E. ***albuminuria***, presence of albumen in the urine.

E. ***alburnum***, recently formed white wood in exogamous trees.

எல் – எர் – எரி. எரிதல் = 1. வேதல். 2. விளங்குதல், திகழ்தல். 3. காந்துதல். 4. எரிச்சலுண்டாதல். 5. சினத்தல். 6. வருந்துதல், பொறாமை கொள்ளுதல்.

ம., து. எரி, தெ. எரியு, க. உரி.

எரி = 1. நெருப்பு. 2. நெருப்புத் தேவன். 3. நரகம். 4. விளக்கம். 5. கந்தகம்.

எரிச்சல் = 1. வேகை. 2. அழற்சி. 3. காந்தல். 4. உறைப்பு. 5. சினம். 6. பொறாமை. 7. சிவப்பு.

எரிமலர் = 1. செந்தாமரை மலர். 2. முண்முருக்கம்பூ.

எர்– எரு = காய்ந்த சாணம்.

தெ. எருவு, க. எருபு (b).

எரு– எருக்கு = எரிக்கும் வேகமுள்ள செடி.

ம. எரிக்கு. வ. அர்க்க (arka).

தெ. எருப்பு = சிவப்பு.

எருவை = 1. அரத்தம் (திவா.). 2. செம்பு. ''எருவை யுருக்கினா லன்ன குருதி'' (கம்பரா. கும்பக். 248). 3. செம்பருந்து. ''விசும்பா டெருவை பசுந்தடி தடுப்ப'' (புறம். 64 : 4). 4. கழுகு. ''எருவை குருதி பிணங்கவருந் தோற்றம்'' (களவழி. 20).

எருவங்காடு – எரங்காடு = செங்களிமண் நிலம்.

அரத்தம் = சிவப்பு. அரத்த = சிவப்பான. அரத்த – ரத்த – Com.

Teut. OE. *read,* OF. *ris. rad,* OS. (MI. Du., MLG) *rōd*, (Du., LG. *rood*), OHG., MHG. *rōt* (Mod. G. *roth*, *rot*, ON. *raudr*, (Sw., Da., *rōd*), Goth. *rauths*, E. *red*.

L. rufus, OIr. raud(h), Lith. rauda - *s*.

Gk. ***ereuthein***, to redden, OE. *reod*, ON. *rjodr*, red, ruddy, L. *ruber*, Gk. ***eruthros,*** OSI. *rudru*, Skt. *rudhira*, red.

L. ***rubeus***, red, Fr. *rubis*. ME. *rubi*, E. *ruby* = precious stone of colour varying from deep crimson or purple to pale rose.

E. ***rudd***, freshwater fish, red-eye; *rud*, read.

E. ***ruddle***, red ochre.

E. ***ruddy***, healthily red. OE. *rudig* f. *rud*, red.

E. ***rufous***, reddish brown. L. *rufus*.

வேதமொழி மேலையாரியத்தினின்று ருதிர (அரத்தம்) என்னும் சொல்லையும், தமிழினின்று நேரடியாக ரக்த என்னுஞ் சொல்லையும் பெற்றுள்ளது. இவை இரட்டையன்கள் (Doublets).

பிற்சேர்க்கை

அள் – அடு. ஒ.நோ : சுள் – சுடு, விள் – விடு.

அடுதல் = 1. சுடுதல். 2. காய்ச்சுதல். 3. உருக்குதல். 4. சமைத்தல். 5. கொல்லுதல். 6. அழித்தல். 7. வருந்துதல். 8. வெல்லுதல். 9. போர் செய்தல். ம.அடுக, க. அடு.

அடு – அடுப்பு = நெருப்பு எரிக்கும் முக்கல் அல்லது சுடுமண் கலம்.

அடு – அடுதல் – அடுசல் – அடுசில் – அடிசில் = சமைத்த உணவு.

சுடு – சுடலை = 1. சுடுதல். 2. சமைத்தல். 3. கொல்லுதல். 4. அழித்தல். 5. போர் செய்தல்.

அடு – அடல் – அடலை = 1. எரித்த சாம்பல். 2. நீற்றின நீறு, சுண்ணம். 3. துன்பம். 4. போர்.

அடுகளம் – அடுக்களை = மடைப்பள்ளி. ம. அடுக்கள.

5. கண்

கள்1 ஃ கள்ளுதல் = கலத்தல், பொருந்துதல், கூடுதல்.

கள்– களம் = 1. கூட்டம், அவை. களம் – களன். ''காலங் களனே காரண மென்று'' (நன். 48). 2. கூடுமிடம். ஏர்க்களம், போர்க்களம், அவைக்களம். 3. உடம்பையும் தலையையும் கட்டும் உறுப்பாகிய கழுத்து, தொண்டை. ''பாடுகள மகளிரும்'' (சிலப். 6 ஃ 157). களம் – வ. கல (g). 'கள்' பன்மை யுருபு, பல பொருள்கள் கூடியதை யுணர்த்துவது.

களம் – களர் = 1. கூட்டம். 2. கழுத்து (சூடா.)

கள்– கண்– கணு = பொருத்து, மரக்கணு.

கள்2 ஃ கள்– கள்வன் = 1. கரியவன் (பிங்.). 2. யானை (பிங்.). 3. கருநண்டு. ''புள்ளிக் கள்வன்'' (ஐங்குறு. 21). 4. நண்டு வடிவான கடகவோரை (திவா.).

கள்– கள = கரிய களாப்பழம். கள– களா. களவு – களவம்.

கள்– களம் = 1. கருமை (திவா.). 2. முகில். ''கனைக் களமென'' (அரிசமய. பரகா. 44). 3. களா (சூடா.).

களம் – களர் = கருப்பு (சூடா.). களம் – காளம் – வ. கால.

காளம் – காளி (கருப்பி) – வ. காலீ.

கள்3 ஃ கள் – கள – கண – கணப்பு = 1. குளிர்காயுந் தீ. 2. உடம்புக் காங்கை.

கணத்தல் = 1. எரிதல். 2. சுடுதல்.

கள் – காள் – காளம் = சுடுகை, சூடு. காளவனம் = சுடுகாடு. காளவாய் = சுண்ணாம்புச் சுள்ளை.

காள்– காய். காய்தல் = எரிதல், ஒளிர்தல், சூடாதல், உலர்தல்.

கள்4 ஃ கள் = முள். கள்– கள்ளி = முட்செடி வகை.

ஒ.நோ ஃ முள்– முள்ளி.

கள்– கண்டு = முள், கண்டங்கத்தரி.

கண்டு– கண்டம் = முட்கத்தரி. கள்– கடு = முள்.

கடு– கடி = கூர்மை (திவா.).

கண் எல்லாப் பொருள்களொடும் பார்வையாற் கலப்பத னாலும், கருமையா யிருப்பதனாலும், உடம்பிற்கு விளக்காயிருப்பத னாலும், இரு கடையும் கூர்மையா யிருப்பதனாலும், மேற்கூறிய நாற்பொருளும் அதன் பெயருக்குப் பொருந்துமேனும், ஒருவர் பார்த்தமட்டில் தெளிவாகப் புலனாவது கண்ணின் கருவிழியே யாதலாலும், சில சிற்றுயிர்கட்கும் பறவைகட்கும் கருவிழியே யன்றி வெள்விழியின்மையாலும், கருமைக் கருத்தே கண் என்னுஞ் சொல்லின் பொருட்கரணியமாகும். பெண்களின் கண்ணிற் குவமையாகக் கருங்குவளை மலரைச் சிறப்பாகக் குறித்தலையும் நோக்குக.

கள்– கண் = கருமணி கொண்ட பார்வை யுறுப்பு.

ஒ.நோ : உள்– உண், நள்– நண், பெள்– பெண்.

கண் = 1. விழி. ''கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை'' (தொல். எழுத்து. 7). 2. கண்ணோட்டம். ''கண்ணின்று பெயர்ப்பினும்'' (தொல். பொருள். 130). 3. பீலிக்கண். ''ஆயிரங் கண்ணுடையாய்க்கு'' (கம்பரா. பம்பை. 27). 4. தேங்காய் பனங்காய்களின் கண். 5. முலைக்கண். 6. புண்ணின் கண். 7. துளை. கால்வாய்த் தலையின் கண்கள் (பாரத. முதற். 72). சல்லடைக்கண், வலைக்கண். 8. தோலிசைக் கருவிகளின் அடிக்கும் பக்கம். ''கண்மகிழ்ந்து துடி விம்ம'' (பு. வெ. 2 : 8, கொளு). 9. நல்லறிவு (ஞானம்). ''கள்ளொற்றிக் கண்சாய் பவர்'' (குறள். 927). 10. உணர்த்துவது. ''சொன்ன சிவன் கண்ணா'' (சி. போ. 5 : 2 : 1). 11. முன்பு. ''கண்ணின் றிரப்பவர்'' (குறள். 1056).

ம. கண், கண்ணு = விழி, பீலிக்கண், முலைக்கண், அரும்பு.

க. கண் = விழி, சிறுதுளை, திறப்பு.

து. கண்ணு = விழி, பீலிக்கண், முலைக்கண், பிளவு, கிழிவு.

தெ. கனு, கன்னு = விழி, பீலிக்கண், சிறுதுளை, வலைக்கண், திறப்பு.

துடவம் : கொண் = விழி, கண்ணி (loop).

கோத்தம் : கண் = விழி.

கோலாமி : கன் = விழி, சிறுகுழி, குகை.

நாய்க்கி : கன் = விழி, பீலிக்கண்.

பர்சி : கன் = விழி.

கடபா : (ஒல்) கண், (சாலூர்) கனு = விழி.

கோண்டி : கன் = விழி.

கொண்டா : கண் = விழி.

குய் : கனு = விழி.

குவீ : கன்னு, கன்னூ = விழி.

குருக்கு : கன்ன (khann) *= கிழங்குக் கண்.*

மாலத்தோ : கனு = விழி.

பிராகுவீ : கன் (khan) *= விழி, கரணை, அரும்பு.*

கண் – கண்ணு. கண்ணுதல் = அகக்கண்ணாற் காணுதல். கருதுதல். ''கண்ணிய துணர்தலும்'' (மணிமே. 2 : 25).

கண் – கணி. கணித்தல் = கண்ணாற் பார்த்தல்.

கடைக்கண் – கடைக்கணி. கடைக்கணித்தல் = 1. கடைக் கண்ணாற் பார்த்தல். ''கருமலர்க் கூந்த லொருத்தி தன்னைக் கடைக்கணித்து'' (திவ். பெருமாள் 6 : 3). 2. அருள்நோக்கு நோக்குதல். ''கருவெந்து வீழக் கடைக்கணித்து'' (திருவாச. 11 : 5).

சிறங்கணித்தல் = 1. கண்ணைச் சுருக்கிப் பார்த்தல். ''குவளை மாலைப்போது சிறங்கணிப்பப் போவார்'' (சிலப். கானல்வரி, 1 : 7). 2. அவமதித்தல் (W.).

சிறங்கணி – சிறக்கணி. சிறக்கணித்தல் = 1. கண்ணைச் சுருக்கிப் பார்த்தல். ''சிறக்கணித்தாள் போல நகும்'' (குறள். 1095). 2. கடைக்கண்ணாற் பார்த்தல் (சூடா.).

புறக்கணித்தல் = 1. கவனியாதிருத்தல், பொருட்படுத்தா திருத்தல். ''உருகா மனத்தார்களைப் புறக்கணித்திடும்'' (தேவா. 612 : 2). 2. அவமதித்தல். ''புறக்கணித்திடப் பட்டீர்க்கும்'' (சீவக. 2376). அளவிடுதலைக் குறிக்கும் கணித்தற் சொல்லும், கண்ணாற் காணுதலைக் குறிக்கும் கணித்தற் சொல்லும், வெவ்வேறெனஅறிக.

கண் – காண். காணுதல் = (செ. குன்றா வி.). 1. பார்த்தல். ''காணிற் குடிப்பழியாம்'' (நாலடி. 84). 2. தெய்வத்தை அல்லது பெரியோரைக் காண்பு காணல். ''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்'' (திவ்.

இயற். 3 : 1). 3. கண்டறிதல். ''காணாதாற் காட்டுவான் தான்காணான்'' (குறள். 849). 4. அறிதல். ''யாவருங் கண்ட நெறி'' (ஆசாரக். 17). 5. அறிந்தியற்றுதல். ''முனைவன் கண்டது முதனூ லாகும்'' (தொல். பொருள். 649). 6. பொறியாலறிதல். ''அவன் பேச்சைக் கண்டு'' (திருவாலவா. 16 : 28). 7. பட்டறிவா லறிதல். 8. ஆராய்தல். ''அறம்பொருள் கண்டார்க ணில்'' (குறள். 141). 9. மதித்தல். ''தானெனக் கண்டும்'' (கல்லா. 51 : 7). 10. பெறுதல். ''முற்றுமிடங் கண்டபின்'' (குறள். 491). 11. ஒத்திருத்தல். ''மழை காணு மணிநிறத்தோய்'' (கம்பரா. குகப். 26).

(செ. கு. வி.) 1. நிகராதல். என்ன இருந்தாலும் அவருக்குக் காணுமா? 2. பொருந்துதல். ''மற்காணுந் திரடிண்டோள்'' (கம்பரா. குகப். 26). 3. கண்ணிற்குத் தெரிதல். ''காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்'' (திவ். திருவாய். 5 : 6 : 3). 4. சேர்தல். இவ்வாண்டு சாகுபடி எவ்வளவு காணும்? 5. போதியதாதல். இவ் வரிசி எத்தனை நாளைக்குக் காணும்?

காண் = (பெ.) 1. காட்சி. ''காண்பிறந் தமைந்த காதல்'' (கம்பரா. திருவடிதொழு. 80). 2. அழகு. ''காண்டக முந்துநீ கண்டுழி முகனமர்ந்து'' (திருமுருகு. 250 : 1).

(இடை.) முன்னிலை யுரையசை. ''துவ்வாய் காண்'' (குறள். 1294).

காண்கை = அறிவு. ''பொய்யா மாக்கள் தொழுதுகாண் கையர்'' (முல்லைப். 56).

காட்சி = அறிவு. ''மருடீர்ந்த மாசறு காட்சி'' (குறள். 199). காண் – காணம்.

கண் காணம் = மேற்பார்வை, அறுவடை மேற்பார்வை, ஒப்படி மேற்பார்வைச் சம்பளம்.

கண்காணி = 1. மேற்பார்வலன். 2. ஒப்படியலுவலர். 3. கூலியாள்களை மேற்பார்ப்பவன். 4. குளம்பி, கொழுந்து (காப்பி தேயிலை)த் தோட்டங்கட்குக் கூலியாள்களைச் சேர்ப்பவன்.

கண்காணியார் = கிறித்தவ சவையை மேற்பார்க்குங் குரவர்.

கண்காணித்தல் = 1. மேற்பார்த்தல். 2. மேற்பார்த்துப் பாதுகாத்தல்.

கண்காணிப்பு = மேற்பார்வை. கண்காணிப்பாளர் = மேற் பார்க்கும் அதிகாரி. கண்காணிக்கை = கண்காணிப்பு.

காணி – காணிக்கை = தெய்வத்திற்கும் திருவடியார்க்கும் படைக்கும் பொருள். ''வேதாள நாதன் மகிழுங் காணிக்கை யாகி'' (சேதுபு. வேதாள. 34).

ம. காணிக்க, க., து. காணிகெ, தெ. காணுக.

காண் என்னுஞ் சொல் ஆங்கிலத்திலும் அதன் இனமொழி களிலும் கன் (cun), *கான்* (con), *கென்* (ken), *கெஅன்* (can) *என்று திரிந்துள்ளது. கீன்* (keen) *என்று திரிந்துள்ளதாகவும் கீற்று* (Skeat) *கூற்றினின்று தெரிகின்றது.*

காணுதல் என்னுஞ் சொல், தமிழில், புறக்கண்ணாற் காணுதலையும் அகக்கண்ணாற் காணுதலையும் குறிக்கும். முன்னது பார்த்தல்; பின்னது அறிதல். தியூத்தானிய மொழிகளிற் காண் என்பதன் திரிசொற்களெல்லாம் பின்னதையே உணர்த்துகின்றன.

Cun *:* **AS.** *cunnan*, to know, **ME.** *cunnen*, to know, **ON.** *cunna*, to know, **Ice**. *kunna*, to know, **Sw.** *kunna*, to know, **Dan.** *kunde*, to know, **M Goth**. *kunnan*, to know.

செய்வான் (செய்ய) என்னும் எதிர்கால வினையெச்சத்தின் (முற்றெச்சத்தின்) 'வான்' ஈறு மலையாளத்தில் 'ஆன்' ஈறாகத் திரியும். அதுவே 'அன்' என்று குறுகியும் பின்னர் 'என்' என்று திரிந்தும் பழைய ஆங்கிலத்தில் நிகழ்கால வினையெச்ச (Infinitive) *ஆறாக வழங்கினதாகத் தெரிகின்றது. ஆங்கில இன மொழிகளில் அவ் விரண்டும் 'அ', 'எ' எனக் கடைக்குறைந்துள்ளன.*

E. ***cunning***, 1. knowing, skilful, ME. *cunning*, *conning*, Northern form *cunnand*, Ice. *kunnandi*.

2. knowledge, skill. ME. *conninge*, Ice. *cunnandi*, AS. *cunnung*, temptation, trial.

E. ***con***, A secondary verb, formed from AS *cunnan*, to know; it signifies accordingly 'to try to know' and may be regarded as the desiderative of 'to know' – Skeat's Etymological Dictionary of the English Language, p. 126.

con, 1. to learn, learn to know, study. 2. to commit to memory – The Random House Dictionary, p. 303.

To con (the passage) (Shakespeare) = to learn by heart.

E. ***ken***, to know. Every man kens (knows) best where his own shoe pinches. (prov). ME. *kennen*, to make known, see, know, discern. OE. *cennen* to make known, declare, Ice. *kenna*, to know, Sw. *kanna*, Dan. *kjende*, Du. *kennen*, G. *kennen*.

E. *can*, to know, to know how to, to be able.

G., Ice., Goth. *kann*.

Cf. **AS.** *cunnan*, to know, to know how to do, to be able.

Ice. *kunna*, to know, to be able.

Sw. *kunna* to know, to be able.

Dan. *kunde* to know, to be able

முதற்கண், 'கான்' (con, kon) *என்னும் தியூத்தானியச் சொல் முதலெழுத்துயிர் முன் பின்னாக முறைமாறி 'க்னா'* (cna, kna) *என்றும் 'க்னோ' என்றும் திரிந்தது.*

AS *cnāwan*, **Ice**. *knā*, **ON.** kna, **ME.** *knowen*, **E.** *know*, **OHG.** *chnaan*, *cnahan*.

ககரம் சில மொழிகளில் 'ga' *என்னும் எடுப்பொலியாக* (voiced sound) *மாறுகின்றது.*

L. *gna*; *gnarus*, knowing, having knowledge of, acquainted with; OIrish *gnāth*, known, accustomed, **W.** *gnawd*, a custom.

கிரேக்கத்தில் இவ் வெடுப்பொலிக் ககரம் (ga) *இரட்டிக்கின்றது.*

Gk. gignnōskō.

சமற்கிருதத்தில் எடுப்பொலிக் ககரம் (ga) *ஜகரமாகத் திரிகின்றது.*
Skt. jn*ā (ஜ்ஞா)*. g – j, *ந – ஞ, போலித்திரிபு.*

வ. ஜ்ஞான– இந். ஜான்.

ஜகரம் சில மொழிகளில் ஸகர எடுப்பொலியாக (za) *மெலிந்து விடுகின்றது.*

Russ. *znate*, to know; **Pers**. *far - zān*, knowledge.

இவ் வெல்லாத் திரிபுகட்கும் மூல வேர் GEN *(கென்) எனக் குறிக்கின்றார் கீற்று* (Skeat).

மேலையர் இன்னும் மொழிகளைச் சரியாய் ஆராயவில்லை. இற்றை அறிவியல்களெல்லாம் மேலையர் கண்டவையே. ஆயின், மொழிகள் வரலாற்றிற்கு முந்திய பண்டைக் காலத்தன வாதலால், அவர்களின் ஆராய்ச்சிக் குட்பட்ட தன்று. பொறிக்கருவிகள் எத்துணைச் சிறந்தனவாயினும் மாந்தன் கையாளாவிடின் இயங்கா; இயக்கிய பின்பும் இறுதிவரை மாந்தன் உடனிருத்தல் வேண்டும். துலையுங் கணிப்பானும் கெட்டிருப்பின் தவறான நிறையுங் கணக்குங்

காட்டும். தவறான வழியைக் கையாளின் எவ் வினையும் வெற்றியாய் முடியாது.

கால்டுவெல் தமிழ்நாட்டின் இருண்ட காலத்தில் வந்ததனால், தமிழர் வெளிநாட்டினின்று வந்தேறிகள் என்றும், திரவிட மொழி சித்தியத்திற்கு இனமென்றும், தவறாக முடிபு செய்துவிட்டார். இந்தைரோப்பிய மொழிகளின் அடிப்படை தமிழே. அவற்றின் கொடுமுடியே சமற்கிருதம். ஆகவே, ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப்புதைந்து கிடக்கின்றது. இதைக் கண்டுபிடிக்கும்வரை, மேலையர் மொழியாராய்ச்சி யெல்லாம் விழலுக்கு நீரிறைத்தலும் வானத்து மீனுக்கு வன்றூண்டி லிடுதலுமே யாகும்.

தமிழரின் முன்னோர் மாந்தன் பிறந்தகமாகிய குமரிநாட்டில் தோன்றியவர். தமிழ் வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்தது. திரவிடம் வடமேற்கிற் சென்று ஆரியமாக மாறிற்று. அவ் வாரியம் ஐரோப்பாவின் வடமேற் கோடியை முட்டித் தென்கிழக்காகத் திரும்பி இந்தியா என்னும் நாவலந்தேயம் வந்து சேர்ந்தது.

ஆதலால், பல அடிப்படைத் தமிழ்ச்சொற்கள் தியூத்தானி யத்தில் தமிழுக்கு நெருங்கியும், இலத்தீனில் சற்றுத் திரிந்தும், கிரேக்கத்தில் அதினும் மிகத் திரிந்தும், வேதமொழியிலும் சமற்கிருதத்திலும் மிகமிகத் திரிந்தும், உள்ளன.

எ-டு :

தமிழ்	ஆங்கிலம்	இலத்தீன கிரேக்கம்	வேதமொழி அல்லது சமற்கிருதம்
அகரம்	**OSax**. *akkar*	**L.** *ager*	
(மருதநிலம்,	**ME.** *aker*	**Gk.** *agros*	*ajras* (field)
மருத	**E.** *acker*		
நிலத்தூர்)			
உகை - அகை (செலுத்து)		**G**.*ago*	aj (to drive)
கும் (கூடு)		**L.** *cum*	
		Gk. *sum*	*sam*
மன்	man		
முழுகு		**L.** mergo	majj
வலி (வலம்)	-	**L.** *valeo*	*bala*

வல்லின மெய்யெழுத்துகளுள், எடுப்பிலா(voiceless) *வொலிகளே எடுப்பொலிகளினும் முந்தியவை. தமிழில் தனி அல்லது இயற்கை யெடுப்பொலிகள் இல்லை; மெல்லின மெய்யொடு கூடிய செயற்கை யெடுப்பொலிகளே யுள. தமிழ் எடுப்பிலா வொலிகள் திரவிடத்திலேயே எடுப்பொலிகளாகத் திரிந்து விடுகின்றன.*

எ-டு:

தமிழ்	*தெலுங்கு*
குடி (வீடு, கோயில்)	gudi
கும்பு (கூடு)	gumpu

ஆதலால், ஆரியத் திரிபைப்பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை.

காண் என்பதன் திரிசொற்கள், இலத்தீன கிரேக்கத்தில் எடுப்பொலியோடும் தியூத்தானியத்தில் எடுப்பிலா வொலியொடும் இருத்தல், முன்னவற்றினும் பின்னவை தமிழுக்கு நெருக்கமா யிருத்தலை யுணர்த்துதல் காண்க.

கால்டுவெலார், தொல்காப்பியமும் பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளும் தமிழர்க்கும் தெரியாது மறைந்து கிடந்த காலத்தில், வழிகாட்டியுமின்றித் தன்னந் தனிமையாய் ஆராய்ந்த போதும், தமிழின் தொன்மை முன்மைகளையும் மூலத் தன்மையை யும் உணர்ந்து, தம் திரவிட ஒப்பியலிலக்கண நூலின் இறுதியில், சொல்லியல் உறவுகள் (Glossarial Affinities) *என்னும் பகுதியில், கீழ் வருமாறு வரைந்துள்ளார்:*

"*kaṇ*, the eye; *kāṇ* (in the preterite *kaṇḍu*), to see; also secondarily, to mark, to consider, to think. In the latter sense it comes kaṇṇu in Tamil, but the base remains unchanged. In (*kanu*, *kannu*) Telugu, the ordinary n, the nasal of the dental row, is used instead of ṇ. the cerebral nasal. Comp. the Welsh *ceniaw*, to see; English *ken*, view, power of reach of vision, to ken, to know by sight. In "Webster's English - Dictionary" *kanna* was said to be 'an eye' in Sanskrit; whereas it is exclusively a Dravidian word. This error may be compared with Klaproth's representing *kuruta*, blind, as a Sanskrit word, instead of referring it to the Dravidian languages, to which alone it belongs. There is a curious word in Sanskrit *kāṇa*, one-eyed, which seems to have some Dravidian relationship. It becomes in Bengali *kāṇā*, blind which, in form at least, is identical with the Dravidian negative k*āṇā*, that sees not. Possibly the Dravidian *kāṇ*, to see, *kaṇṇu*, to consider, may have some ulterior connection with the Gothic *kunn-an*, to know; Greek *gnō-nai*; Sans. *ña*; Latin *gna* (*gnarus*); Old High German *chann*. The different shades of meaning

which are attributed to Greek to *gnō-nai* and *eide-nai*; seem to corroborate this supposition; for the latter is represented as meaning to know by reflection, to know absolutely, whereas the former means to perceive, to mark, and may therefore have an ulterior connection with the Dravidian root.''

- Caldwell's Dravidian Comparative Grammar, University Edition, p. 591.

தமிழ் வளர்ச்சி தடுக்கப்பட்டிருந்த கடந்த மூவாயிரமாண்டுக் காலத்தில், ஆரியப் பூசாரிகளான வடமொழியாளர், ஜ்ஞா என்னுந் திரி சொல்லினின்று பின்வருமாறு ஏராளமான சொற்களை ஆக்கிக் கொண்டனர்.

1) முன்னொட்டுப் பெறாதவை

ஜ்ஞாத்வ, ஜ்ஞாப்தி, ஜ்ஞாதி, ஜ்ஞாத்ரு, ஜ்ஞாதேய, ஜ்ஞாத்ர, ஜ்ஞாந, ஜ்ஞாநி, ஜ்ஞாபக, ஜ்ஞேய முதலியன.

2) முன்னொட்டுப் பெற்றவை

அஜ்ஞா, அஜ்ஞாதி, அஜ்ஞாந, அஜ்ஞாநி, அஜ்ஞேய, அநுஜ்ஞப்தி, அனுஜ்ஞா, அநுஜ்ஞாந, அநுஜ்ஞாபக, அநுஜ்ஞாபந, ஆஜ்ஞா, ஆஜ்ஞாப்தி, ஆஜ்ஞாத்ரு, ஆஜ்ஞாபந, ப்ரஜ்ஞா, ப்ரஜ்ஞு, ப்ரஜ்ஞாத்ரு, ப்ரஜ்ஞாந, ப்ரஜ்ஞாபந, ப்ரதிஜ்ஞா, ப்ரதிஜ்ஞாந, ப்ரதிஜ்ஞேய, விஜ்ஞா, விஜ்ஞாந, விஜ்ஞாநி, விஜ்ஞாபக, விஜ்ஞாபந, விஜ்ஞாப்தி, விஜ்ஞேய, ஸம்ஜ்ஞா, ஸம்ஜ்ஞாபந, ஸம்ஜ்ஞாந, ஸம்ஜ்ஞாநி முதலியன.

இவை ஒரு பருக்கை அல்லது ஓரரிசிப் பதம். இவற்றினின்று ஏனைச் சொற்பெருக்கத்தையும் உய்த்துணர்ந்து கொள்க. இங்ஙனம் வடமொழியை வளர்த்துக்கொள்ளுதற்கு ஊணுடை முதலிய வாழ்க்கைப் பொருள்களெல்லாம் வரையாது வழங்கிய வள்ளல்கள், மேலையாரியத் திரிபாகிய வேதமொழியையும் அதனொடு தமிழைச் சேர்த்து வளர்த்த சமற்கிருதத்தையும் தேவமொழியென்றும், அதனைப் போற்றுவதால் மண்ணுலகமே வீட்டுலகமாய் மாறிவிடு மென்றும், குருட்டுத்தனமாய் நம்பிய பேதை மூவேந்தரே.

தமிழகத்திற்கு வேதமொழியோ சமற்கிருதமோ எள்ளளவுந் தேவையில்லை. ஆயினும் சமற்கிருதத்தை வளர்த்தது, தமிழை வீழ்த்தற்கும் நாளடைவில் அதனை ஒழித்தற்குமே என்பதை அறிதல் வேண்டும். தமிழகம் சிவமதமும் திருமால் மதமும் தோன்றிய நாடாயிருந்தும், இன்றும் திருக்கோயில் வழிபாடு வடமொழியி

லேயே நடைபெறல்வேண்டு மென்றிருப்பது, தமிழரின் மடமையை யும் அடிமைத்தனத்தையுமே வலியுறுத்திக் காட்டும்.

காணம் அல்லது காட்சி யென்னும் மூலச்சொல் சிறவாது, ஞானம் என்னும் அதன் திரிசொல்லே சிறந்து தோன்றுவது, உண்மையான ஒளிக்கல்லினும் போலிக்கல்லே பொலிந்து தோன்றுவது போலும்! எனினும், சமற்கிருதத்திற்கு ஞானத்தைத் தந்தது தமிழே என்னும் புகழ் நிலைத்து நிற்கும்.

6. காந்து

காந்துதல் எரிதல். எரிதல் நெருப்பின் தொழில். சுடுதல், விளங்குதல், ஒளி வீசுதல், சிவத்தல், எரித்தல், எரிவெடுத்தல், உலர்தல், உறைத்தல், சினத்தல் முதலியன எரிதற் கருத்தினின்று கிளைக்குங் கிளைக் கருத்துகளாம்.

உல்– குல்– குல– குலவு, குலவுதல் = விளங்குதல். ''குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்'' (தேவா. 794 ፡ 7).

குல் – கல் – கன் – கனல். கனலுதல் = 1. எரிதல். ''வேமிருந்தை யெனக்கனலும்'' (கம்பரா. சூர்ப்ப. 118). 2. கொதித்தல். ''தீப்போற் கனலுமே'' (நாலடி. 291). 3. சுடுதல். ''வயிற்றகங் கனலுஞ் சூலை'' (பெரியபு. திருநா. 62). 4. சினத்தல். ''மாமுனி கனல மேனாள்'' (கம்பரா. நீர்விளை. 2). 5. சிவத்தல். ''கண் கனன்று.....நோக்குதலும்'' (பு. வெ. 6 ፡ 23).

க. கனல், தெ. கனலு.

கனல் = நெருப்பு. ''உழிதரு காலுங் கனலும்'' (திருவாச. 5 ፡ 8).

ம., க. கனல்.

கன்– கனம் = விளங்கும் பொன். ''கனங்குழாய்'' (கலித். 57).

கனல் – கனலி = 1. நெருப்பு (திவா.). 2. கதிரவன். ''வெங்கதிர்க் கனலி'' (புறம். 41 ፡ 6).

கனன் மரம் = இரவில் ஒளிர்வதாகச் சொல்லப்படும் ஒளிமரம் (சங். அக.).

கனனிறக்கல் = மாணிக்கம் (W.)., செந்நிற ஒளிக்கல்.

கனல்– கானல் = 1. வெப்பம். இங்கே கானலடிக்கிறது. 2. கதிரவன் கதிர் (திவா.). 3. ஒளி. ''தேங்கு கானற் கிளிச்சிறை'' (இரகு. நகர. 67). 4. பேய்த்தேர் (திவா.).

கன் – கன்று. கன்றுதல் = 1. வெயிலாற் கருகுதல். க. கந்து. 2. சினக்குறிப்புக் கொள்ளுதல் (திவா.). 3. மனமுருகுதல். ''கலையின்

பிணை கன்றிடுமென்று'' (சீவக. 1188). 4. வருந்துதல் ''நெஞ்சு கன்றக் கவிபாடுகிற'' (ஈடு. 3 : 9 : 6). 5. வாடுதல். ''தன்னுடம்பு கன்றுங் கால்'' (திரிகடு. 91).

குன் – கும் – கும்மட்டி = நெருப்பு வைக்குஞ் சட்டி (திவ். திருக்குறுந். 5, வியா.). ம. கும்மட்டி.

கும்மாயம் = 1. குழைய வெந்த பருப்பு. ''பயற்றுத் தன்மை கெடாது கும்மாய மியற்றி'' (மணிமே. 27 : 185). 2. நீற்றின சுண்ணாம்பு. ம. கும்மாயம்.

குமஞ்சம் = நறும்புகைச் சரக்கு (W.).

குமஞ்சான் = நறும்புகைச் சரக்கு (W.).

கும் – கும்பு. கும்புதல் = சமைக்கும் உணவு தீய்ந்து போதல். சோறு கும்பிவிட்டது.

கும்பனாற்றம் = தீய்ந்துபோன உணவின் வீச்சம்.

கும்பு – கும்பி = 1. சுடுசாம்பல். தெ. கும்மு. 2. நரகம். ''கும்பி நரகர்கள்'' (திவ். திருவாய். 3 : 7 : 8).

கும்பிடு சட்டி = 1. கணப்புச் சட்டி. 2. தட்டார் நெருப்பு வைக்குஞ் சட்டி (W.).

தெ. கும்பட்டி, க. கும்பட்டெ.

குல் – குள் – கொள் – கொள்ளி = 1. நெருப்பு. ''கைக்கொள் கொள்ளியர்'' (நெடுநல். 8). 2. கொள்ளிக் கட்டை. ''புனவர் கொள்ளியில்'' (ஐங்குறு. 295). 3. பொறாமையும் முன்சினமு முள்ளவன். 4. கலக மூட்டுபவன். 5. கொள்ளிவைக்கும் மகன் (திருநெல்.).

ம., க., து. கொள்ளி.

கொள்ளாக் கொள்ளி = அடங்காப் பசியன், யானைத் தீயன்.

கொள்ளிக் கண் = தீய கண்.

கொள்ளிக்கால் = 1. ஒரு கால் வெளுத்திருக்குங் குதிரைக் குற்றம். ''நஞ்சபாதம் கொள்ளிக்கால் வெள்ளிக்கண்'' (திருவாத. பு. குதிரையிட். 35). 2. ஆக்கங்கெட்ட (துரதிட்டமுள்ள) கால். அவன் கொள்ளிக்காலன்.

கொள்ளித்தேள் = கடுமையாகக் கொட்டுந் தேள்வகை. ''வெங்கொள்ளித் தேள்போன்ற வினை'' (அருட்பா, II, எழுத்தறி. 28).

கொள்ளி வைத்தல் = ஈமக் கட்டையில் எரி மூட்டுதல்.

கொள்– கொளுந்து. கொளுந்துதல் = எரிதல். ''தீக்கொளுந் தினவுந் தெரிகின்றிலர்'' (கம்பரா. இலங்கையெரி. 5).

கொளுந்து – கொளுத்து (பி.வி.). கொளுத்துதல் = எரித்தல். ஊர் முழுவதையுங் கொளுத்திவிட்டார்கள்.

விளக்குக் கொளுத்துதல் = விளக்கை எரிய வைத்தல்.

குள்– குர்– குரு. குருத்தல் = சினத்தல்.

குரு– வ. குருத் (krudh) – *க்ரோத– குரோதம் = சினம்.*

குரு = 1. ஒளி. ''குருமணித் தாலி'' (தொல். சொல். 303, உரை). 2. நிறம். ''குருவுங் கெழுவும் நிறனா கும்மே'' (தொல். உரி. 5). 3. சிவப்பு. 4. மாழைகளை (உலோகங்களை) மாற்றும் சிந்துரம்.

குரு – குருதி = 1. சிவப்பு. ''குருதித் துகிலின் னுறையை'' (சீவக. 926). 2. அரத்தம் (திவா.). 3. செவ்வாய் (திவா.). ம. குருதி.

குருதிக்காந்தள் = செங்காந்தள் (சீவக. 1651, உரை).

குருதிக் கிழமை = செவ்வாய்க் கிழமை. ''புதிய சீலை... குருதிவாரந் தனக்குக் கொஞ்ச நாளிற் கிழியும்'' (அறப். சத. 61).

குரு– குருந்து = குருந்தக்கல் (W.).

குருந்து– குருந்தம் = குருந்தக்கல், மாணிக்க வகையுள் ஒன்று.

குருந்தம்– குருவிந்தம்– வ. குருவிந்த.

குருவெறும்பு = செவ்வெறும்பு, முயிறு.

குள்– குழு– கெழு = நிறம். ''குருவுங் கெழுவும் நிறனா கும்மே'' (தொல். உரி. 5).

ஒ.நோ : குழு (குழுவு)– குழுதகை– கெழுதகை.

கெழு – கேழ் = 1. ஒளி. ''நயங்கேழ் பெருவள நல்குநல் லூர'' (தஞ்சைவா. 392). 2. நிறம். ''ஒண்கேழ் நூற்றித ழலரின்'' (புறம். 27).

கேழ்– கேழ்ப்பை = கேழ்வரகு. கேழ்வரகு = செந்நிற வரகு வகை.

குள்– கள்– காள்– காளம் = சுடுகை.

காளவனம் = சுடுகாடு (சூடா.).

காளவாய் = சுண்ணாம்புக்கல் சுடும் சுள்ளை.

காளவாய்– காளவாயல்– காளவாசல்.

காளவாய்க்கல் = சுள்ளையினின்று வந்த புதுச் செங்கல்.

L. *calor*, heat, E. *caloric*, heat.

காள் – காழ் = 1. ஒளி (திவா.). 2. ஒளிக்கல். ''பருக்காழுஞ் செம்பொன்னும்'' (பு. வெ. 9 : 14). 3. முத்து. ''பரூஉக்கா ழாரம்'' (சிலப். 4 : 41). 4. பளிங்கு (பிங்.). 5. மணிவடம். ''முப்பத்திரு காழ்'' (சிலப். 6 : 87).

காழ் – காசு = 1. பொன் (ஆ. நி.). 2. பொற்காசு. 3. காசுமாலை. ''காசும் பிறப்புங் கலகலப்ப'' (திவ். திருப்பா. 7). 4. ஒரு பழைய பொற்காசு. 5. சிறு செப்புக்காசு. ''நெஞ்சே யுனையோர் காசா மதியேன்'' (தாயு. உடல் பொய். 72). 6. காசுப்பொது. எப்பேர்ப்பட்ட பல காசாயங்களும் (S.I.I. i, 89). 7. மணி. ''நாண்வழிக் காசுபோலவும்'' (இறை. 2, உரை). 8. மேகலை. ''பட்டுடை சூழ்ந்த காசு'' (சீவக. 468). 9. வெண்பாவின் இறுதிச் சீர் வாய்பாடுகளுள் ஒன்று. ''ஓரசைச் சீரும் ஒளிசேர் பிறப்புமொண் காசு மிற்ற சீருடைச் சிந்தடி யே முடிவாம்'' (யாப். காரிகை. 7).

கள்– கண்– கண– கணம் = சூடு, கணைநோய்.

கணமாந்தம் = காய்ச்சலோடு கூடிய மாந்த நோய்.

கண– கணப்பு = 1. குளிர்காயுந் தீ. 2. கணப்புச் சட்டி.

கண– கணத்தி = செங்கடம்பு.

கண கணத்தல் = உடம்பு சூடாயிருத்தல். உடம்பு கணகணக்கிறது.

கண– கணை = 1. சூட்டுநோய். 2. கால்நடை நோய்களுள் ஒன்று.

கள்– கடு. கடுத்தல் = 1. உறைத்தல். 2. வயிற்றுளைச்சலிற் காந்துதல், வயிற்றுக் கடுப்பு. 3. சிறுநீர் துளி துளியாகச் சிறுத்து மிகச் சுடுதல், நீர்க்கடுப்பு. 4. நோவுத்திறம் மிகுதல். தேட்கடுப்பு (புறம். 392).

கடு – கடுப்பு = 1. எரிநோவு. ''கடுப்புடைப் பறவைச் சாதி'' (பெரும்பாண். 229). 2. வெகுளி. ''கடுநவை யணங்குங் கடுப்பும்'' (பரிபா. 4 : 49).

கடு– கடுமை = 1. வெம்மை (கலித். 12 : 5, உரை). 2. சினம் (சிலப். 5 : 55, உரை). 3. கண்டிப்பு. 4. கொடுமை (சூடா.). 5. முரட்டு வெறித்தனம்.

கடு = 1. கார்ப்பு (சூடா.). 2. துவர்ப்பு (மூ.அக.). 3. கடுக்காய். ''கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்'' (மலைபடு. 14). 4. கடுநோவு, கடுத்திற வலி.

கடு – கடுகு = காரமுள்ள விதை. ''கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?'' (பழ.).

கடுகு – கடுகம் = 1. கார்ப்பு (திவா.). 2. சுக்கு மிளகு திப்பிலி யென்னும் காரமுள்ள முச்சரக்குள் ஒன்று. 3. முக்கடுகம் போன்ற மூவறநெறிகளைப் பாட்டுத்தோறுங் கூறும் நூல். ''கடுகங் கோவை பழமொழி மாமூலம்'' (தனிப்பா.). ஒ.நோ : உலகு – உலகம்.

கடுகம் – வ. கடுக. (katuka).

கடுகு – கடுக்கு. கடுக்குதல் = சினக் குறிகாட்டுதல். ''ராம தூத னானென்று கடுக்கி'' (இராமநா. உயுத். 62).

கடுக்கெனல் – கடுமைக் குறிப்பு. ''கடுக்கெனச் சொல் வற்றாம்'' (நாலடி. 348).

கடுகடுத்தல் = 1. சினக்குறிப்புக் காட்டுதல். ''முகங் கடுகடுத் தான்'' (பிரபோத. 11 : 46). 2. மிகவுறைத்தல். 3. விறுவிறுப்போடு வலித்தல்.

கடுமான் = அரிமா (சிங்கம்). ''கடுமான் கிழ்ந்த கடமலை'' (கல்லா. 67 : 16).

கடுவன் = கடுமையான ஆண் விலங்கு. ''குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்'' (தொல். மரபு. 69); கடுவன் பூனை (திவா.); கடுவன் பன்றி (குறவர் வழக்கு).

கடு – காட்டம் = உறைப்பு. தெ. காட்டு (gatu).

கடு – கடி = 1. விளக்கம். ''அருங்கடிப் பெருங்காலை'' (புறம். 166 : 24). 2. சிறப்பு. ''அருங்கடி மாமலை தழீஇ'' (மதுரைக். 301). 3. காவல். ''கடியுடை வியனக ரவ்வே'' (புறம். 95 : 3). ''கடிமரத்தாற் களிறணைத்து'' (பதிற்றுப். 33 : 3). 4. கார்ப்பு. ''கடிமிளகு தின்ற கல்லா மந்தி'' (தொல். சொல். 384, உரை).

கடி – கரி. கரித்தல் = 1. உறுத்தி வலித்தல். எண்ணெய் பட்டுக் கண் கரிக்கிறது. 2. வெறுத்தல். ''கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை'' (திருமந். 2431).

கரி – கரிப்பு = காரம். ''ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே'' (தொல். உரி. 86).

கரி– கார்– காரம் = 1. உறைப்பு (சூடா.). 2. கார்ப்புப்பு (W.). 3. சாம்பலுப்பு. 4. சீலைக்காரம். 5. சாயக்காரம். 6. சீனிக்காரம். 7. வெண்காரம். 8. அக்கர காரம். (தைலவ. தைல. 112). 9. ஒரு செயற்கை நஞ்சு (கோளக பாடாணம்) (சங்.அக.). 10. திருநீறு. ''காரமென் றுரைப்பர்'' (திருக்காளத். பு. 26 : 4). 11. சினம். அவன் என்மீது காரமாயிருக்கிறான்.

காரசாரம் = 1. வேண்டிய அளவாக அமைத்த காரச்சுவை. ''கார சாரஞ்சேர் சாற்றிலே கலந்த சோற்றிலே'' (அருட்பா. VI, அவாவறுப்பு, 2). 2. வினைத்திறமை. அவன் பேச்சில் ஒன்றுங் காரசாரமில்லை.

கார மருந்து = 1. பிள்ளை பெற்ற பெண்களுக்குக் கொடுக்கும் காரமருந்து. 2. தோலை எரித்துத் தின்னும் மருந்து.

கார்– கார்த்தல் = உறைத்தல் (பிங்.).

கார்– கார்ப்பு = உறைப்பு (சூடா.).

காரம்– வ. க்ஷார. இத் திரிவைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி (Lexicon) தலைமாற்றிக் குறிக்கின்றது.

ம. காரம், தெ. காரமு, க., து. கார.

காள்– காய். ஒ.நோ : மாள்– மாய்.

காய்தல் = (செ. கு. வி.) 1. வெயில் எறித்தல். கதிரவன் எரிதல். வெயில் காய்கிறது. 2. நீர் முதலியன காய்ச்சப்படுதல். வெந்நீர் காய்கிறது. 3. சுடுதல். அவனுக்கு உடம்பு காய்கிறது. 4. ஒளி வீசுதல். நிலாக் காய்கிறது. 5. பசித்தீயால் வருந்துதல். காலையிலிருந்து எனக்கு வயிறு காய்கிறது. 6. விடாய்த்தல். ''காய்தலு முண்டக் கள்வெய் யோனே'' (புறம். 2 : 8). 7. பொருள் உலர்தல். புழுங்கல் காய்கிறது. 8. புண் ஆறுதல். புண் காய்ந்து வருகிறது.

(செ. குன்றா வி.) 1. எரித்தல். ''மதவேள் தன்னுடலங் காய்ந்தார்'' (தேவா. 15 :6), ''காமனைக் காய்ந்த கண்ணன்'' 2. அழித்தல். ''கஞ்சனைக் காய்ந்தானை'' (திவ். பெரியதி. 7 : 6 : 5). 3. விலக்குதல். ''கோப முதலிய குற்றங் காய்ந்தார்'' (பெரியபு. அப்பூதி. 2). 4. வெகுளுதல். ''காய்தலு முவத்தலும்'' (தொல். கற்பு. 6). 5. கடிந்து கூறுதல். ''கறுத்தெழுந்து காய்வாரோடு'' (நாலடி. 315). 6. வெறுத்தல். ''காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணாய்தல்'' (அறநெறி. 22). 7. வருத்துதல். ''காய்கின்ற பழவினை போம்'' (குற்றா. தல. நூற்பய. 15).

ம., க. காய், தெ. காயு, து. காயி.

காய் – காய்கை – காகை – காங்கை = வெப்பம், சூடு. திருச்சிராப்பள்ளியைவிட மதுரை காங்கையான இடம்.

தெ. காக (kāka), க. காங்கெ (kāṇke).

காய் – வ. காச் (kāṣ).

ய – ச, போலி. எ-டு : இயை – இசை, நெயவு – நெசவு,

நேயம் – நேசம், வாயில் – வாசல்.

இங்ஙனம் யகர சகரப் போலியால், ஒளி வீசுதலைக் குறிக்கும் காய் என்னும் தென்சொல் வடமொழியில் காச் (kāṣ) என்று திரிந்துள்ளது. வடமொழியில் இச் சொல்லிற்கு வேரில்லாம லிருப்பதுடன், இதிலுள்ள சகரம் தமிழ்ச் சகரமாயிருப்பதும், கவனிக்கத்தக்கது. 'ப்ர' என்னும் முன்னொட்டுப் பெற்று, இச் சொல் 'ப்ரகாச்' என்று பெரிதும் வழங்குகின்றது.

காய் – காய்ச்சல் = 1. வெயில், வெப்பம். 2. சுரநோய். 3. உலர்ச்சி. புதுநெல்லை இரண்டு காய்ச்சல் போட்டுக் குத்த வேண்டும். 4. மனவெரிச்சல், பொறாமை.

காய்ச்சுக் கட்டி = இளநீரிற் பாக்கு நறுமணச் சரக்குகள் முதலியன சேர்த்துக் காய்ச்சிய துவர்க்கட்டி.

காய்ச்சுக் கட்டி – காசுக் கட்டி.

காய் – காயம் = 1. குழம்பில் வெந்த கறித்துண்டு. ''நெய்கனி குறும்பூழ் காய மாக'' (குறுந். 389). 2. உறைப்பு (பிங்.). 3. மிளகு. ''காயத்தின் குழம்பு தீற்றி'' (சீவக. 788). 4. கறிக் கூட்டுச் சரக்கு. ''காயங்களான் இனிய சுவைத்தாக்கி'' (குறள். 233, பரி. உரை). 5. வெள்ளுள்ளி. ''காயமுங் கரும்பும்'' (சிலப். 23 :45). 6. பெருங்காயம். 7. கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம் ஆகிய ஐங்காயம் (தைலவ. தைல. 135). 8. காய மருந்து.

ம. காயம், தெ. காயமு.

காய மருந்து = கருவுயிர்த்தவளுக்குக் கொடுக்கும் காரமருந்து.

காய் – காய்து – காய்ந்து – காந்து. ஒ.நோ : வேய் – வேய்ந்தான் – வேய்ந்தன் – வேந்தன் = முதற் காலத்தில் முடியணியும் உரிமையைச் சிறப்பாகக் கொண்ட பேரரசன். கொன்றை வேய்ந்தான் – கொன்றை வேய்ந்தன் – கொன்றை வேந்தன் = கொன்றைமாலையணிந்த சிவன்.

காந்துதல் = (செ. கு. வி.) 1. திகழ்தல் (பிரகாசித்தல்) ''பரம்பிற் காந்து மினமணி'' (கம்பரா. நாட்டுப். 7). 2. வெப்பங் கொள்ளுதல். 3.

கருகுதல். சோறு காந்திப் போயிற்று. 4. எரிவெடுத்தல். புண் மருந்து காந்துகின்றது. 5. மனங்கொதித்தல். ''புத்திபோய்க் காந்துகின்றது'' (கம்பரா. சடாயுகா. 37). 6. பொறாமை கொள்ளுதல். மூத்த குடியாள் இளைய குடியாளைக் கண்டு காந்துகிறாள் – (செ. குன்றா வி.) 1. சுடவைத்தல் (யாழ்ப்.). 2. சுவறச் செய்தல் (யாழ்ப்.). 3. சினத்தல். ''காந்தி மலைக்குத்து மால்யானை'' (வள்ளுவமாலை, 11).

காந்து – காந்தல் – காந்தள் = 1. விளக்கெரிவது போல் விளங்கித் தோன்றும் கோடற்பூ (கார்த்திகைப் பூ). 2. காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடுதலைக் கூறும் புறத்துறை. ''வேலன் வெறியாட் டயர்ந்த காந்தளும்'' (தொல். புறத். 5). 3. முருகனுக்குச் சிறப்பாக வுரிய காந்தளைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை.

''கருங்கடலுள் மாத்தடிந்தான்
செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று'' *(பு. வெ. 6 : 9)*

காந்து – காந்தாளம் = சினம் (W.).

காந்து – காந்தாளிகம் = சின்னி (Indian shrubby copper leaf).

காந்து – காந்தி = 1. ஒளி (சூடா.). 2. அழகு (பிங்.). 3. ஒளிக்கதிர் (W.). *4. வெப்பம். (மூ. அக.). 5. காவிக்கல்* (W.).

காந்து – காந்துகம் = வெண்காந்தள்.

காந்தள் என்பது முதலிற் செங்காந்தளைக் குறித்துப் பின்னர் இரு காந்தட்கும் பொதுவாகி யிருக்கலாம். சேயோனான முருகனுக்குச் செங்காந்தளே சிறப்பாக ஏற்கும்.

காந்து **– L. *candeo***, to glow with heat, to shine, glitter, to be of a shining white.

இலத்தீன் வினைச்சொற்களைத் தன்மை யொருமையீறாகிய 'o' *அல்லது நிகழ்கால வினையெச்ச வீறாகிய* 're' *சேர்த்துக் குறிப்பது மரபு. இவற்றை நீக்கின், எஞ்சி நிற்பது வினை முதனிலையென அறிக.*

L. ***candela***, a wax or tallow candle, AS. *candel*, OE. *candel*, AN., OF. *candel(l)e,* E. *candle* (f. *candere*, to glow), cylinder of wax, tallow spermaceti, etc., enclosing wick, for giving light.

L. ***candidus***, shining white, white, *candidum*, n. white colour, a. honest, straight forward. E. *candid*, white, fair, sincere, honest, E. *candescent*, glowing with white heat, f. L. *candeseere*, f. *candere*, be white.

L. ***candidatus***, clothed in white; a candidate for office, who among the Romans was always clothed in white, for the consulship. E. *candidate*,

one who offers himself or is put forward to be elected to an office, orig. white-robed.

L. ***candor***, whiteness, sincerity, E. *candour*, open-mindedness, frankness, impartiality.

E. ***chandler***, dealer in candles. ME., AF. *chandeler*, OF. *chandelier* f. L. *candela*.

இலத்தீனில் தகரமுதற் சொல்லாயிருந்தது, பிற்காலத்தில் ஆங்கிலப் பிரெஞ்சு மொழியிலும் இடையாங்கிலத்திலும் சகரமுதற் சொல்லாகத் திரிந்துவிட்டமையை நோக்குக. இச் சகரமுதற் சொல்லே வேத மொழியிலும் சமற்கிருதத்திலும் முதலுயிர் குறுகியும் குறுகாதும் உள்ளது.

Skt. ***cand***, to shine, be bright; to gladden.

canda, the moon, L.

candaka, pleasing, W.; the moon W., moon light, W.

candira, the moon, Bhām, ii, 120.

candra, glittering, shining (as gold), having the brilliancy or hue of light (said of gods, of water (RV. X. 121, 9; TS. VI) & of Soma), RV.; VS., TS. VI; TBr. I; m. the moon.

cāndra, lunar.

scand, to shine.

scandra, shining, radiant.

இங்ஙனம் திகழ்தலையும் திகழும் திங்களையும் குறிக்கும் வடசொற்கள், காந்து என்னும் தென்சொல்லை அடிமூலமாகவும், இலத்தீன் வழியாக வந்த திரிசொல்லை நேர்மூலமாகவும், கொண்டனவா யிருத்தல் காண்க.

ஒ.நோ : திகழ் – திங்கள், தகம் – தங்கம். 'திகள்' என்னும் வடிவம் இறந்துபட்டது. புரள்– பிரள்– பிறழ் என்னும் திரிபில் இடைப்படுசொல் இறந்துபட்டமை காண்க.

தகுதல் = எரிதல், விளங்குதல், தகதக வென்று சொலிக்கிறது என்னும் வழக்கை நோக்குக. ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழம்பாண்டி நாடும் தனித்தமிழிலக்கியமும் முற்றும் மறைந்து போனமையால், பல இணைப்பண்டுச் சொற்களை இன்று காட்ட இயலவில்லை யென்பதை அறிக.

7. காலம்

தமிழுக்கு அடிப்படையானதும் இன்றியமையாததுமான சொற்களுள் ஒன்று காலம். ஆயின், ஆராய்ச்சியில்லாதவர் அனைவரும் நம்புமாறு, இதை வடசொல்லென்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி குறிக்கின்றது. ஆயினும்,

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர் திணை மேன'' (சொல். கிளவி. 58)

என்று தொல்காப்பியங் கூறுகின்றது.

இனி,இதுவுஞ் சான்றாகாவாறு,

''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே'' (சொல்.எச்ச. 1)

என்னுந் தொல்காப்பிய நூற்பாவையே, ஒருவர் எடுத்துக் காட்டலாம்.

ஆதலால், இதைத் தென்சொல்லேயென்று நாட்டற்குத் தொன்றுதொட்ட ஆட்சியொடு அறிவியன் முறைப்பட்ட வேர்ச் சொல்லாராய்ச்சியும் இன்றியமையாததாகின்றது.

தமிழில், குறுங்காலத்தைக் குறிக்க அமையம், ஏல்வை, கால், சமையம், செவ்வி, ஞான்று, நேரம், பொழுது, வேளை முதலிய பல சொற்கள் உள்ளன. ஆயின் நெடுங்காலத்தைக் குறிக்கக் காலம் என்னும் ஒரே சொல் உள்ளது. இதற்கு அடிமூலம் கோல் என்பதே; இதன் அடிப்பொருள் திரட்சி என்பதே. உருட்சி, கூடல் என்னும் இரு கருத்தினின்றும் திரட்சிக் கருத்துப் பிறக்கும். இவ் விரு வழியும் கோற்சொல்லிற் கேற்கும்.

குல் - குல - குலவு. குலவுதல், = கூடுதல், வளைதல்.

குல் - கொல் - கோல் = திரட்சி. ''கோனிற வளையினார்க்கு'' (சீவக. 209)

திரண்ட குச்சையும் (''கோலாடக் குரங்காடும்.''), திரண்ட தடியையும் (''கோற்கண்ண ளாகுங் குனிந்து'' - நாலடி. 17), திரண்ட கம்பையும் (கோல் வலித்தல் = தண்டால் ஓடந்தள்ளுதல்), திரண்ட கழுவையும் (''வேன்மழுக் கடைத்தலைக் கழுக்கோல்'' - திருவாலவா. 39 : 19), கோல் என்னுஞ் சொல் குறிக்கும்.

பந்தலைத் தாங்கும் கால்களாகக் கம்புகளான கோல்களையே நடுவர். தூண்போலத் தாங்கியாகும்போது பொருள் மாறுவதால், அம் மாற்றத்தைக் குறிக்கக் கோல் என்பது கால் என்று திரியும் சொல்லாக்கத்தில் ஆகாரம் ஓகாரமாகத் திரிவது பன்மொழிப் பொதுநெறி. எ -டு : ஓட்டம் (ஒப்பு)- ஆட்டம். கோணம் (வளைந்த காய்ப்பயறு) - காணம், நோடு - நாடு (நோட்டம் - நாட்டம்). E. holy day - holiday, fourteen night - fortnight, co-relation - correlation.

கால் = (பெ.) 1. பந்தல் தாங்குங் கம்பு. ''வந்த வேலையை விட்டுவிட்டுப் பந்தற்காலைப் பிடித்தானாம்'' (பழ.) 2. மண்டபந் தாங்கும் தூண். நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம். 3. விழாத் தொடக்கத்திற்கு அடையாளமாகப் பந்தற்கால் போல் நட்டுங்கோல் (கம்பு). '' கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி'' (சிலப். 5 : 144) 4. இவர்கொடிகள் பற்றும் பற்றுக்கோடு (சூடா.) 5. மண்டபக் கால்போல் உடம்பைத் தாங்கும் உறுப்பு. மாந்தன் இரு காலுயிரி. 6. முழங்கால். 7. உடம்பில் நாலிலொரு பங்கான முழங்கால் போன்ற காற்பகுதி.

ஒ.நோ : அரு - அரை = கழுத்திற்குக் கீழ்ப்பட்ட வுடம்பில் அருகிய (சிறுத்த) இடம், உடம்பில் அரைபோற் பாதியளவு.

இடு - இடை = கழுத்திற்குக் கீழ் இடுகிய (ஒடுங்கிய) இடம், உடம்பில் இடைபோல் நடுவிடம்.

8. பாதம். ''காலிற்குப் போடச் செருப்பில்லை யென்பார்க்கும்'' (தனிப்பா). 9. நெசவுத்தறியின் கான்மிதி. ''காஞ்சிபுரம் போனால் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்'' (பழ.). 10. காலால் நடக்கும் நடை. '' காறுய்மை யில்லாக் கலிமாவும்'' (திரிகடு. 46). 11. நடையால் அமையும் பாதை (பிங்.). 12. கால்போற் கட்டிலைத் தாங்கும் உறுப்பு. கட்டிற் கால்போல நால்வர். 13. வண்டிக்குக் கால்போன்ற சக்கரம். 14. சக்கரமுள்ள வண்டி. ''கலத்தினுங் காலினும்'' (சிலப். 2 : 7). 15. தேர்ச் சக்கரம். '' கடலோடா கால்வ னெடுந்தேர்''(குறள். 495). 16. பூவின் தாள். ''திரள்கால்... அலரி'' (குறள். 199). 17. குடையைத் தாங்கும் பிடி. '' குடைக்கால்போல்'' (நாலடி. 368). 18. கால்போல் தாங்கும் வாசல்நிலை. வாசற்கால். 19. வாசற்கால் போன்ற எழுத்து

வரி. ''புள்ளியை இக் காலத்தார் காலாக எழுதினார்'' (தொல். எழுத்து. 17. உரை). 20. கால்போன்ற அடிப்பாகம். ''களைகால் கழாலின்'' (புறம். 120 ꞉ 5). 21.மூலம், பிறப்பிடம். ''மணிக்கா லறிஞர்'' (கல்லா. முரு.). 22. வில்லின் அடி, குதை, முனை. ''ஒருதனு விருகால் வளைய'' (தேவா.142 ꞉ 14). 23.அடிநிலம். நாற்றங்கால், பள்ளக்கால். 24. இடம். '' புனல்கால் கழீஇய பொழில்'' (பெரும்பாண். 380). 25. இடப்பொருளுருபு ''கண்கால் கடை இடை தலைவாய் திசைவயின்'' (நன். 302) '' ஊர்க்கால் நிவந்த'' (சங். நமச். உரை). 26. கால்போன்ற சடைப்பிரிவு. இரண்டுகாற் பின்னல், இரட்டைக்காற் சடை. பிரிவு. ''தேசிக்குரிய கால்களும்'' (சிலப். 3 ꞉ 16, உரை). 27. இனமுறை, இரண்டாங் கால்முறை. 28. குடும்பம், சரவடி. இனவழி, ''பழைய காலைத் தூர்க்காதே, புதுக்காலை வெட்டாதே'' (பழ.). 29. கால்போல் ஊன்றும் ஆலவிழுது. ''கான்மரம்'' (திவா.). 30. கால்போல் ஊன்றும் மழைப்பெயல். மழைகால் ஊன்றிவிட்டது. 31. கால்போல் நீண்டு விழும் சுடர்க்கதிர் ''நிலாக்கால் விழுந்தனைய'' (மீனாட். பிள்ளைத். ஊசற்.1). 32. கால்போல் நீண்டு செல்லும் நீர்க்கால் ''சரயுவும் பலகாலி னோடியும்'' (கம்பரா. நாட்டுப். 60) வாய்க்கால், கால்வாய், கழிக்கால், ஆற்றுக்கால், வெள்ளக்கால், பள்ளக்கால். 33. நீண்டு வீசுங் காற்று. '' கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு'' (பதிற்றுப். 68.1) 34. ஊதை நோய் (வாதரோகம்) ''காற்கானோய் காட்டி'' (372). 35. ஐம்பூதம். ''காலெனப் பாகென'' (பரிபா. 3꞉77). 36. எல்லையின்றி நீண்டு செல்லும் நேரம் (பிங்.). 37. செவ்வி. ''கான்மலியும் நறுந்தெரியல் '' (பு.வெ.8꞉ 18). 38. தடவை. ''சென்றே யெறிப வொருகால்'' (நாலடி. 24) 39. ஒரு வினையெச்சவீறு. ''பழவினை வந்தடைந்தக்கால்'' (நாலடி. 123).

கால் (leg)- ம., க. கால், தெ., து. காலு. ஒ.நோ ꞉ **Gk.** *skelos*, leg.

கால் (காற்று) - தெ. காலி (g) - **E.** *gale*, very strong wind. **Norw**. *galen*, lead weather.கால் - காற்று.

கால் (நேரம்) - ம. கால்.

கால் (வி.) காலுதல் = 1. (செ. கு.வி.) கால் நீளுதல் அல்லது ஊன்றுதல் போற் சிந்துதல். 2. வெளிப்படுதல். '' உருமு கான்றென்னப் பல்லியங்களு மார்த்தன'' (கந்தபு. முதனாட். 3). 3. பாய்தல். '' விடர்கா லருவி வியன்மலை'' (சிறுபாண். 170) - (செ. குன்றா வி.) 1. கக்குதல் (திவா.). ம. கால்குக. 2. தோற்றுவித்தல் ''பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி'' (பெரும்பாண். 2)

கால் - கான்றல் = 1. கக்குதல். (திவா.). 2. இருமிக் கோழை துப்புதல். ''வெண்ணரை பொரக்கான்று'' (வேதாரணி. வீரசேன. 24).

கால் = 1. வெளிப்படும் அல்லது தோன்றும் முளை(பிங்.) 2. மரக்கன்று (பிங்.) 3. கன்று போன்ற மகன் (பிங்.)4. முளை போன்ற குறுந்தறி (சூடா.).

கன்று என்னும் இளமைப் பெயர் நிலைத்திணைக்கும் விலங்கினத்திற்கும் பொதுவாயிருத்தலையும், சிறு பிள்ளைகளைக் கன்றுகயந்தலை என்னும் உலக வழக்கையும், கன்று குட்டி பிள்ளை யென்னும் மூவிளமைப் பெயர் இரு திணைக்கும் பொதுவாக வழங்குதலையும், நோக்குக.

கான்முளை = குடும்பத்தில் தோன்றும் குழந்தை, மகன். ''பின்னர்க் கான்முளை மன்னுத லிலரே'' (ஞான. 21 ꞉12).

குடைகால் = மரத்திற் குடைந்து செய்யப்பட்ட கலம். ஒ. நோ ꞉ குடைகரி (பொன்னுருக்குங் கரிக்குகை). குடைகால் - கடைகால் = 1. வாளிபோற் பயன்படும் மரக்கலம். 2. பால் கறக்குங் கடைகால் போன்ற மூங்கிற் குழல். 3. கட்டட அடிப்படைக்குத் தோண்டும் நீண்ட குழி அல்லது அகழி.

மரக்கால் = முதற்கண் மரத்தாற் செய்யப்பட்ட முகவைக் கலம்.

மரக்கால் - கால் = 1. மரக்கால். '' கால் பெருத்துப் பொலி சிறுத்தாலும்'', (திருவிருத். 58, வியா. ப. 324.) 2. அளவு (கருவியாகு பெயர்).

கால் (தூண்) - காலம் = பெருந்தூண். ஒ. நோ ꞉ தூண் - தூணம் = பெருந்தூண் . ''பசும்பொற் றூணத்து'' (மணிமே.1꞉ 48).

கால் என்பதினின்று திரிந்த காலம் என்னுஞ் சொல், காலத்தை யுணர்த்துதல் போன்றே தூணத்தையும் உணர்த்துதல் வேண்டும். ஆயின், அப் பொருள் இன்று வழக்கற்றது. பண்டை வழக்கைக் காட்டும் இலக்கியமும் இறந்துபட்டது.

ஒ.நோ. **L.*columna***, pillar **F.** *colompne*, **It.** *Colonna*, **E.** *column*, (1) a pillar, support.

It. *colonnata*, **F.** *colonnade*, **E.** *colonnade*, a row of columns.

E. *column* (2) a vertical cylindrical mass of water, mercury, smoke etc.*அழறற்பிழம்பு என்னும் வழக்கை நோக்குக.*

(3) vertical division of page in newspapers. *செய்தித்தாட் கட்டங்கள் தூண்கள் போல் தோன்றுவதைக் காண்க.*

(4) a body of troops resembling a column.

ஒ. நோ : தண்டு = படை. தண்டு - தண்டம் = படை, படை வகுப்பு வடிவம்.

E. *colonel*, highest regimental officer. **L.** *columna* - **It.** *colonna* - *colonello* - **F.** *colonel,* **E.** *colonel.*

கீற்று (Skeat), கிளேயின் (Klein) முதலிய ஆங்கிலச் சொல்லியல் அதிகாரிகளெல்லாம் column என்னுஞ் சொல்லை உயரத்தையும் மலையையுங் குறிக்கும் columen என்னும் இலத்தீன் சொல்லினின்றும், எழுதல் அல்லது உயர்தல் என்னும் கருத்தை யுணர்த்தக்கூடிய qel என்னும் கருதுகோள் வேர்ச்சொல்லினின்றும், திரிக்கின்றனர். அதுவும் பொருத்தமாகத் தோன்றுகின்றது. ஆயின், தூண்கள் இயற்கையாகத் தோன்றியவை யல்ல. தாங்குதல் என்னும் அடிநிலைக் கருத்தும், நீண்டிருத்தல் என்னும் வழிநிலைக் கருத்தும் தூணியல்பிற்கு மிகப் பொருந்தும்.

கால் - காலை = (பெ.) 1. நேரம். பொழுது (பிங்.). 2. தக்க சமையம். ‘‘ காலைய தறிந்தனை’’ (கந்தபு. திருவவ. 14). 3. தடவை ‘‘முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்’’ (நாலடி. 24). 4. துயிலெழும் அல்லது வேலை தொடங்கும் விடியற் காலம், ‘‘காலையி லெழுந்தவுடன் காகத்தைப் பார்த்தல் கூடாது’’ (பழ.).

‘‘காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.’’ (குறள். 1225)

5. பள்ளியெழுச்சி முரசம். ‘‘ மேல்வந்தான் காலைபோல்... துயிலோ வெழுப்புக’’ (கலித். 70). 6. விடிகாலையெழுங் கதிரவன். ‘‘காலை யன்ன சீர்சால் வாய்மொழி’’ (பதிற்றுப் . 21 : 4). 7. பகல் முதற்பத்து நாழிகை, சிறுபொழுது ஆறனுள் ஒன்று. 8. முற்பகல். காலைப்பள்ளி. 9. பகற்காலம் ‘‘எல்லியிது காலையிது வென்ப தறிகல்லா’’ (சீவக. 1877) 10 வாழ்நாள் ‘‘ நோகோ யானே தேய்கமா காலை’’ (புறம். 234). 11. வாழ்நாட் காலத்தின் முற்பகுதி.

கு.பெ. எ. (adv.) பொழுதில்.‘‘ அடுங்காலை நீர்கொண்ட வெப்பம்போல்’’ (நாலடி. 68)

கால் - காலம் = 1. காலப் பொது. ‘‘கால முலக முயிரே யுடம்பே’’ (தொல். கிளவி. 58). 2. விடியற்காலம். அவர் காலத்தாலே யெழுந்து போய்விட்டார் (ஆம்பூர் உ.வ.), ‘‘காலமே தேவனைத் தேடு’’ (வே. சா.). 3. தக்க சமயம்.

''காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்''. (குறள். 485)

4. நற்காலம். தமிழுக்கு இன்னுங் காலம் வரவில்லை. 5. குறித்த காலம். ''அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது'' (இறை. 1. உரை). 6. தீக்காலம், கேடுகாலம். அவனுக்கும் ஒரு காலம் வரும். 7. இளமைக் காலம் ''சென்றது காலம். சிதைந்த திளமைநலம்'' (திருக்கருவை வெண்.). 8. வாழ்நாள். மறைமலையடிகள் கால முழுதும் தமிழுக்கே பாடுபட்டார், அவர் காலமாகி விட்டார். 9. இறப்புக் காலம். அவனுக்குக் காலம் நெருங்கி விட்டது, 10. இளவேனில், முதுவேனில், கார், கூதல், முன்பனி, பின்பனி என்னும் அறுவகை இயற்கைக் காலம். 11. உழவுத்தொழிற்குச் சிறந்த மழைக்காலம் அல்லது கோடையல்லாக் காலம். காலச் சோளம், காலக் கேழ்ப்பை, காலப்பயிர். இவை முறையே கோடைச்சோளம், கோடைக்கேழ்ப்பை, கோடைப்பயிர் என்பவற்றிற்கு எதிர். 12. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று இலக்கணங்கூறும் மூவகைத் தொடர்ச்சிக் காலம். 13. வெயில், மழை, பனி என்னும் மூவகை இயற்கை வேறுபாட்டுக் காலம். (தொல்.புறத். 20, சோ. சு. பா. உரை) 14. சவுக்கம் (விளம்பம்), முடுக்கம் (துரிதம்), நடுப்பம் (மத்திமம்) என்னும் மூவகைப் பாட்டியக்கக் காலம். 15. ஒரு முரலிற்கு (சுவரத்திற்கு) இரு மாத்திரையும் ஒரு மாத்திரையும் அரை மாத்திரையும் கால் மாத்திரையும் எடுக்கும் முதற்காலம், இரண்டாங்காலம், மூன்றாங் காலம், நாலாங் காலம் என்னும் நால்வகை முரற்பயிற்சிக் காலம். 16. கழகக் காலம் பிற்காலம் என்றும், கற்காலம் இருப்புக்காலம் என்றும், பல்வேறு வகையிற் பகுக்கப்படும் வரலாற்றூழிக் காலம். 17. கால மெய்ப்பொருள் (தத்துவம்).

காலம் - வ. கால.

சமற்கிருத ஆங்கில அகரமுதலி தொகுத்த மானியர் உவில்லியம்சு, தென்சொல்லை வடசொல்லாகக் காட்டும் கலை யிலும், அதற்கேற்றவாறு பொருந்தப் பொய்த்தலிலும் பொருந்தாப் பொயத்தலிலும் வடமொழியாளரை விஞ்சும் வகையில்,

வடமொழித் தாது பாடத்தில் (Dhatupaṭha) உள்ளவாறு *kal.* to sound, to count என்று எடுத்துக் கூறி, cf. **L.** *calculo* என்று இனமொழிச் சொல்லோடு ஒப்புநோக்கச் சொல்கின்றார்.

ஒலித்தலுக்கும் எண்ணுதல் அல்லது கணக்கிடுதலுக்கும் யாதொரு தொடர்புமில்லை.

Calculus என்பது சிறுகல் என்று பொருள்படும் இலத்தீன் சொல். பண்டைக் காலத்திற் சிறு கூழாங்கற்களைக் கொண்டு எண்ணிப் பழகியதனால், calculate என்னும் வினைச்சொல் தோன்றிற்று. **L.** *calx* = கல். - **Gk.** *khalis*, **L.** *culus* என்பது சிறுமைப் பொருளீறு (dim. suf.) இஃது எல்லா ஆங்கில அகரமுதலிகளிலும் கூறப்பட்டுள்ளது. ஆகவே, காலம் என்னும் சொல்லிற்கு calculate என்னுஞ் சொல் மூலமாகாது.

கூழாங்கற்களைக் கொண்டு எண்ணிப் பழகிய காலத்திற் கணிக்கப்பட்டவை, காய்கறிகளும் காசும் போன்ற காட்சிப் பொருள்களேயன்றி, காலமும் நாளும் போன்ற கருத்துப் பொருள்களல்ல.

தமிழிற்போல் கால், காலை என்ற சொற்கள் வடமொழியில் இல்லை. இவ் விருசொற் போன்றே காலம் என்னும் சொல்லும் தமிழில் அடிப்படைச் சொல்லாகத் தொன்றுதொட்டு இருவகை வழக்கிலும் வழங்கி வருகின்றது. கால் - காலம். ஒ.நோ. ஃ வால் – வாலம்.

உலக வழக்கு

காலக் கொடுமை, காலங் கண்டவன், காலங் கடத்தல், காலங் கடத்துதல், காலங்கழிதல், காலங்கழித்தல், காலங்காட்டி, காலங்காலத்தாலே, காலங்கிட்டுதல், காலங்கூடுதல், காலங் கூடி வருதல், காலங் கெடுதல், காலஞ்செய்தல், காலஞ்செல்லுதல், காலஞ்சொல்லி, காலத்தாலே, காலத்தின் கோலம், காலந்தள்ளுதல், காலந்தாழ்தல், காலந்தாழ்த்தல், காலப் பயிர், காலம் பண்ணுதல், காலம் பார்த்தல், காலம் பெற, காலம் போதல், காலம் போக்குதல், காலமல்லாக் காலம், கால மழை, காலமறிதல், காலமாதல், காலம் மாறுதல், கால மெல்லாம், கால வரம்பு, கால வரையறை, கால வழக்கம்;

அந்தக் காலம், இந்தக் காலம், எந்தக் காலம், ஆங்காலம், போங்காலம்,வருங்காலம், ஆயிரங்காலத்துப் பயிர், ஊறுகாலம், நல்ல காலம், கெட்ட காலம், கேடு காலம், நீண்ட காலம், பஞ்சகாலம், பனிக்காலம், பேறுகாலம், போனகாலம், வந்த காலம், மழை காலம், வெயிற்காலம்.

பழமொழிகள்

காலஞ் செய்கிறது ஞாலஞ் செய்யாது.

காலத்திற் கேற்ற கோலம்.

காலத்திற் கேற்றபடி பெருச்சாளி காவடியெடுத் தாடினதாம்.

காலமல்லாக் காலத்திற் காய்த்ததாம் பேய்ச்சுரைக்காய்.

காலமறிந்து ஞாலம் ஒழுகு.

காலமறிந்து பிழையாதவன் வால மறுந்த குரங்காவான்.

காலம்போம் சொல் நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும்.

காலம்போன காலத்தில் மூலம் வந்து குறுக்கிட்டது.

மரபுக்கூற்று

காலமெல்லாம் பாடுபட்டும் கையில் கால்துட்டைக் காணோம்.

செய்யுள் வழக்கு (இலக்கணம்)

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், முக்காலம், காலப் பெயர், காலமயக்கம், காலமலைவு, காலவழு, காலவழுமைதி, கால வாகுபெயர், கால விடைநிலை.

தொல்காப்பிய நூற்பாக்கள்

''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.'' (வினை. 1)

''காலந் தாமே மூன்றென மொழிப.'' (ஷெ 2)

'' இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.'' (ஷெ 3)

''குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொ லெல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.'' (ஷெ 4)

'' மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.'' (ஷெ 10)

'' அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
... .
அப்பால் காலங் குறிப்பொடு தோன்றும்.'' (ஷெ 16)

''அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
... .
என்ன கிளவியுங் குறிப்பே காலம்.'' (ஷை 17)

''...காலக் கிளவி யுயர் திணை மருங்கில்...'' (ஷை 18)

''...காலக் கிளவி யஃறிணை மருங்கில்...'' (ஷை 24)

''அன்ன மரபின் காலங் கண்ணிய...'' (ஷை 32)

''நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
... .
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.'' (ஷை 37)

''செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்.'' (ஷை 42)

''முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்.'' (ஷை 43)

''...செய்வ தில்வழி நிகழுங் காலத்து...'' (ஷை 45)

''வாராக் காலத்து வினைச்சொற் கிளவி...'' (ஷை 48)

''இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்..'' (ஷை 50)

''ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.'' (ஷை 51)

தொல்காப்பியம் கி.மு. 7 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தாயினும் ''மொழிப'', ''என்ப'', ''என்மனார் புலவர்'' ''வரையார்'' என்னும் ஆசிரியர் கூற்றுகளாலும்,

''செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்''

என்னும் பனம்பாரனார் கூற்றாலும், அதில் (தொல்காப்பியத்தில்) கூறப்பட்டுள்ள பண்டை யிலக்கணமெல்லாம் தலைக்கழகக் காலத்தின வென்றும், இந்திய ஆரியரின் முதல் நூலாகிய இருக்கு வேதத்திற்கு முற்பட்டதும், வேத ஆரியரின் முன்னோர் இந்தியா விற்கு வருவதற்கும் முந்தியதுமான, முதுபழந்தொன்மை யன வென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

இதுகாறுங் கூறிய இருவகை வழக்குச் சொற்களே போது மாதலின், இலக்கணமல்லாத செய்யுட் சொற்கள் இங்குக் காட்டப்படவில்லை.

இருபத்தாறு செய்யுளுறுப்புகளைக் கூறும் செய்யுளியல் முதல் நூற்பாவில்,

''கேட்போர் களனே காலவகை எனா அ''

என்று தொல்காப்பியர் கூறியிருப்பதை ஊன்றி நோக்குக.

8. கும்மல்

உம் - கும். கும்முதல் = கூடுதல், மிகுதல், திரள்தல், நிறைதல்.

கூடுதற் கருத்தினின்று குவிதற் கருத்தும்; குவிதற் கருத்தினின்று கூம்புதல், மூடுதல், மறைதல், அடக்கமாதல், அமைதியாதல், குறைதல் முதலிய கருத்துகளும் பிறக்கும்.

இக் கருத்துகளில் தோன்றும் வினைச்சொற்கள், செயப்படு பொருள் குன்றிய வினையாகவும் குன்றா வினையாகவு மிருக்கும்.

கூடுதல் வினை, காட்சிப் பொருளதும் கருத்துப் பொருளது மாகப் பல திறந்தது.

கும் - கும்மல் = 1. அரிசி, உப்பு, காய்கறி முதலிய பொருள் களின் குவியல். சந்தையிற் காய்கறிகளைக் கும்மல் கும்மலாகக் குவித்து வைத்திருப்பார்கள். 2. மக்கட் கூட்டம், கும்பல்.

கும்மல் - கும்மலி = பருத்தவள் (யாழ்ப்.).

கும்மிருட்டு = திணிந்த இருட்டு, காரிருள்.

கும் - கம் - கமம் = நிறைவு. ''கமம்நிறைந் தியலும்'' (தொல். உரி. 57).

கம் - கம. கமத்தல் = நிறைதல். ''கமந்த மாதிரக் காவலர்'' (கம்பரா. மிதிலைக். 132).

கும் - குமு- குமுக்கு = 1. கூட்டம் (இ.வ.) 2. பெருந்தொகை. (W .) 3. மொத்தம். பண்டங்களை யெல்லாம் குமுக்காய் வாங்கினான் (W.)

கும்மெனல் = மணம் வீசுதல்.

''கொண்டைமலரே கும்கும் கும்என்னக்
கோயம்புத்தூர் நாடி நடந்துவா பின்கூடி'' (நாடோடிப்பாட்டு)

குமுகுமெனல் = மணம் வீசுதற் குறிப்பு. ''மணந்தான் குமுகுமென் றடிக்க வில்லை'' (தனிப்பா. 1, 389 : 44)

குமுகுமுத்தல் = மணம் வீசுதல். ''பசுமஞ்சள் குமுகுமுக்க'' (அழகர்கல. 10).

கும் - கம். கம்மெனல் = மணம் வீசுதற் குறிப்பு. ''ஒருங்குபிணி யவிழக் காடே கம்மென் றன்றே'' (அகம். 23) பூக்கடைக்குப் போனால் மணம் கம்கம்மென் றடிக்கும்.

கம் - கம. கமகமத்தல் = மிக மணத்தல்.

கம - கமழ். கமழ்தல் = நறுமணம் வீசுதல். ''தேங்கமழ் நாற்றம்'' (நாலடி. 199). சமையலறையில் தாளிக்கிறது இங்கே கமகமவென்று கமழ்கிறது.

மணம் காற்றொடு அல்லது ஒரு பொருளொடு கலக்குந் தன்மையது. ஆதலால் கலத்தற் சொல்லாற் குறிக்கப்பட்டது.

''பூவொடு சேர்ந்த நாரும் மணம்பெறும்'' (பழ.)

ஒ.நோ. : மணத்தல் = கலத்தல், கமழ்தல். மன்றல் = கலத்தல், கமழ்தல். வெறுத்தல் = செறிதல். வெறு - வெறி = மணம்.

கும் - கும்பு. கும்புதல் = கூடுதல்.

கும்பு = திரள், கூட்டம். அங்கே ஒரு கும்பு கூடியிருக்கிறது.

தெ. கும்பு (gumpu). வ. கும்ப (gumpha).

கும்பு - கும்பல் = கூட்டம். ஆள்கள் கும்பல் கும்பலாகக் கூடி நிற்கிறார்கள்.

கும்பு - கும்பை = குடிசைத் திரள், சேரி, பறைக் கும்பை. (உ.வ.) தெ. கொம்ப (kompa).

கும்பு - குப்பு - குப்பம் = 1. கூட்டம். ''குப்பமந் திரங்க ளெல்லாம்'' (குற்றா. தல. கவுற்சன . 8) 2. குவியல். 3. செம்படவர் குடிசைத் திரள், நெய்தல்நிலச் சிற்றூர். எ-டு : தாழங்குப்பம், மஞ்சக் குப்பம். 4. நாட்டுப்புறச் சிற்றூர். குப்பக்காடு = பட்டிக்காடு. 5. அடவி, காடு (பிங்.). மரா. கும்ப (kumpa).

குப்பம் (கூட்டம்) - தெ. குப்ப, க. குப்பெ.

குப்பம் (சிற்றூர்) - தெ. குப்பமு.

குப்பம் - குப்பல் = 1. கூட்டம் (W.). 2. குவியல். 3. திரண்ட மேடு (திவா.).

குப்பு - குப்பை = 1. குவியல். ''உப்பின் பெருங்குப்பை'' (திரிகடு. 83) 2. நெற்குவியல். ''குன்றெனக் குவைஇய குன்றாக்

குப்பை'' (பொருந. 244). 3. திரள். ''மன்பெரும் பவழக் குப்பை வாலணி கலஞ்செய் குப்பை'' (சீவக. 114) 4. கூட்டம். ''கோட்சுறா வினத்தொடு முதலைக் குப்பைகள்'' (சீவக. 95). 5. உரக்குவியல். 6. வீட்டிலும் தெருவிலும் கூட்டி வார வேண்டிய கழிவுப் பொருள்கள். 7. மலம் (இடக்கரடக்கல்).

ம., தெ. குப்ப, க. குப்பெ.

குப்பை - (குவியல்) - AS. heap, OE. hop, OE.heap, ME. heep, E. heap, Du. hoop, Ice. hopr, Dan. hop Swed. hop, G. haufe, OHG. hufo, Russ. kupa, Lith. kaupas.

கும் - குமி. குமிதல் = குவிதல், திரள்தல்.

ம. குமி, தெ. குமி (g).

குமித்தல் = திரளச் செய்தல்.

குமி - குமிழ் = 1. நீர்க்குமிழி. 2. பாதக்குறட்டின் உருண்டு திரண்ட புடைப்பு அல்லது முளை. 3. எருத்தின் திமில்.

குமிழ் - குமிழி = 1. நீர்க்குமிழி. குமிழிவிட் டுமிழ்குருதி'' (சீவக. 2239). 2. பாதக்குறட்டின் குமிழ்.

குமிழ்த்தல் = குமிழியிடுதல். குமிழித்தல் = குமிழி கொள்ளுதல்.

கும் - குமர் = 1. திரண்ட இளமை. ஒ.நோ: விடைத்தல் = வீறுகொண்டு விறைத்தல். விடை = வலிமையுள்ள இளம்பருவ வுயிரி. 2. கன்னிமை. ''குமரிருக்குஞ் சசிபோல்வாள்'' (குற்றா. தல. தருமசாமி. 47). 3. அழியாத் தன்மை. ''குமருறப் பிணித்த பைம்பொற் கொடி'' (பாரத. இந்திரப். 32.)

குமர் - குமரன் = 1. இளைஞன். ''இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணின் முகத்தழகு பருக நோக்கி'' (கம்பரா. மிதிலைக். 157). 2. இளைஞனான முருகன். ''குன்றுதோ றாடிய குமரற் போற்றுவாம்'' (கந்தபு. கடவுள். 16).

குமர் - குமரி = 1. பூப்படைந்த இளம்பெண், இளைஞை. ''குமரிமணஞ் செய்துகொண்டு'' (திவ். பெரியாழ். 3: 8: 3). 2. பூப்படைந்து மணவாத பெண்டு. 3. அழியாத் தன்மை, அழிவின்மை. ''குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு'' (சிலப். 10 : 123) 4. என்றுங் கன்னியா யிருப்பவளாகக் கருதப்படும் காளித் தெய்வம். ''விழிநுதற் குமரி'' (சிலப். 11. 214). 5. காளி பெயர் கொண்ட (பழம் பாண்டிநாட்டு) மலைத்தொடர். ''குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'' (சிலப். 11: 20). 6. அவள் பெயர் கொண்ட ஆறு. ''வடவேங்கடந் தென்குமரி'' (தொல். பாயி.) 7. குமரிமலையைத்

தென்னெல்லையாகவும் குமரியாற்றை வடவெல்லையாகவும் கொண்ட பழம் பாண்டிநாடு, குமரிக்கண்டம்.

குமரிருட்டு (குமரியிருட்டு), குமரிவாழை என்பன இளமையையும்; குமரிவேட்டம், குமரிப்போர் என்பன முதல் நிகழ்ச்சியையும்; குமரிப்படை, குமரிமதில் என்பன அழியா நிலைமையையும் உணர்த்தும்.

குமர், குமரன், குமரி என்னுஞ் சொற்கட்குத் திரண்ட இளமை என்பதே அடிப்படைப்பொருள். ஒ.நோ ஃ முருகு = இளமை, முருகு - முருகன் = இளைஞன், குமரன், வள்ளிமணாளன், குறிஞ்சி நிலத் தெய்வம்.

வடமொழியாளர், குமர குமரியரை ஆரியத் தெய்வமாகவும், அவர் பெயரை ஆரியச் சொல்லாகவுங் காட்டல் வேண்டி, குமரன் என்பதைக் குமார என்றும் குமரி என்பதைக் குமாரீ என்றும், ஈற்றயலுயிர் நீட்டி, மகன் மகள் என்று முறையே பொருள் குறித்து, குமார என்பதைக் கு + மார என்று சிதைத்து, 'எளிதில் இறப்பது' (easily dying) என்று பொருட் கரணியங் கூறுவர்.

குமரன் குமரி என்னுஞ் சொற்கட்குத் தமிழில் இளைஞன் இளைஞை என்றே யன்றி, மகன் மகள் என்னும் பொருளில்லை. இவ் விரு சொற்கட்கும் கும் என்பதே மூலம் என்றும், ஆரியத் தொன்மக் கதைப்படி முருகன் சிவனுக்கு மகன் எனினும், காளி அவனுக்கு மகளாகாள் என்றும், எளிதிலிறப்பது குழப்பருவத்திலும் கிழப்பருவத்திலுமன்றி மழப்பருவத்தி லில்லையென்றும், அறிதல் வேண்டும்.

'இந்தச் சுமையைத் தூக்கமுடியாத நீ, ஒரு குமரன் என்று இருக்கலாமா' என்று பெண்டிர் வினவுவதையும், ''கோடிச் சேலைக்கு ஒரு வெள்ளை, குமரிப்பெண்ணிற்கு ஒரு பிள்ளை'' என்னும் பழமொழியையும், நோக்குக.

கும் - கும்மை - கொம்மை = இளமை (திவா.).

மணமாகாத இளைஞனையும் இளைஞையையும் செல்வன் செல்வி என்று அடைகொடுத்துப் பெயர் குறிப்பது, குமரன் குமரி என்பன வடசொல்லென்னும் அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. செல்வன் செல்வி என்று மணமக்களைக் குறிப்பதே மரபாதலால், Master, Miss என்னும் அடைகளை இனிக் குமரன், குமரி என்றே தமிழிற் குறிக்க.

கும் - கும்மி = 1. கை குவித்தடித்தல். 2. அங்ஙனம் அடித்தாடும் விளையாட்டு. 3. அவ் விளையாட்டுப் பாட்டு.

ம. கும்மி. தெ. கொப்பி (gobbi).

கும் - கொம் - கொம்மை. கொம்மை கொட்டுதல் = கை தட்டி யழைத்தல், கும்மியடித்தல்.

கும் - கும்பு - கும்பிடு. கும்பிடுதல் = கைகுவித்து வணக்கஞ் செய்தல். ம. கும்பிடு.

கும்பிடு - கும்பீடு= கைகுவிக்கும் வணக்கம்.

கும்பு - கூம்பு. கூம்புதல் = 1. குவிதல். ''செய்ய கமலமலர் கூம்ப'' (நைடத. சந்திரோ. 2.) 2. ஒடுங்குதல். 3. ஊக்கங் குறைதல். ''வடவர் வாடக் குடவர் கூம்ப'' (பட்டினப். 276).

ம. கூம்பு.

கூம்பு = 1. பூமொட்டு. ''தாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ'' (ஐங். ஐம். 49). 2. தேர்மொட்டு (திவா.). 3. கப்பற் பாய்மரம். ''கூம்பு முதன் முறிய வீங்குபிணி யவிழ்ந்து'' (மணிமே. 4 : 30).

ம. கூம்பு, க. கூவே.

கூம்பு - கூப்பு. கூப்புதல் = குவித்தல். ''காலையு மாலையுங் கைகூப்பிக் கால்தொழுதால்'' (தனிப்பா).

கும் - குமுது - குமுதம் = கதிரொளியிற் கூம்புவதாகச் சொல்லப்படும் ஆம்பல். கும்முதல் = கூடுதல், குவிதல்.

குமுதம் - வ. குமுத.

வடமொழியாளர் குமுதம் என்னும் சொல்லை வடசொல் லாகக் காட்டல் வேண்டி, அதைக் கு+முத என்று பிரித்து, ''என்ன மகிழ்ச்சி!'' என்னும் உணர்ச்சி யூட்டுவதாகப் (exciting what joy!) பொருட்கரணியங் கூறுவர். அவர் சொற்பொருள் கொண்ட வகை வருமாறு :

கூ (ஒரு வினாச்சொல்) - கு = எவ்வாறு (how), முத= மகிழ்ச்சி (Joy).

குமுதத்தின் மறுபெயரான ஆம்பல் என்னுஞ் சொல்லும், தமிழ்ப் பொருட்கரணியத்தையே வலியுறுத்தும்.

அம்பல் = பேரரும்பு. அம்பல் - ஆம்பல் = கதிரொளியிற் பேரரும்புபோற் குவியும் மலர்.

கும்முதல் = குவிதல், மூடுதல், அடைத்தல், ஒலிகுறைதல், ஒளிகுறைதல்.

கும் - கம். கம்மெனல் = ஓசையடங்கற் குறிப்பு. ''கானமுங் கம்மென் றன்றே'' (நற். 154). கூடத்திலுள்ள வாசல் பலகணிகளை யெல்லாம் அடைத்துவிட்டால், உள்ளே கம்மென்றிருக்கும் (உ.வ.).

கம்மென் றிரு = பேசாது அமைதியாயிரு.

கம்முதல் = 1. குரல் குன்றுதல். ''மென்குரல் கம்மாமே'' (குமர. பிர. முத்துக். 18) 2. ஒளி குறைதல்.

கம் - கம்மல் = 1. குரலடைப்பு, தொண்டைக்கம்மல். 2. விளைச்சற் குறைவு. பயிர் கம்மலாய்ப் போயிற்று. 3. விலைக் குறைவு. விலை கம்மலாயிருக்கிறது (W.) .

கம் - கம்மி = குறைவு. பத்துரூபா கம்மியா யிருக்கிறது.

கம்மி - உ. கமீ.

மூடுதற் கருத்தினின்று மறைப்பு, அடக்கம், மருமம் ஆகிய கருத்துகள் தோன்றும்.

கும் - குமு - குமுக்கு - கமுக்கு - கமுக்கம் = மரும வடக்கம். ''மூடிக்கொண்டிருந்தால் கமுக்கம், திறந்தால் வெட்டவெளி''(பழ.). அவரை அந்தப் பதவிக்கு அமர்த்தினதைச் செய்தித்தாளில் வெளிவரும் வரை கமுக்கமாய் வைத்திருந்தார்கள்.

கமுக்கக்காரன் = அடக்கமுள்ளவன்.

கும் - கும்பு - கும்பம் = குவிந்து திரண்டிருக்கும் கலம். 2. கும்ப வடிவான மேற்கட்டடம் (dome). 3. கும்பம் போன்ற யானை மண்டை. 4. கும்பவோரை. 5. கும்பமாதம் (மாசி).

கும்பம் - வ. கும்ப (kumpha).

கும்பாபிஷேகம் என்னும் வடசொல்லைக் கும்பமுழுக்கு என்றே சொல்லலாம்; குடமுழுக்கு என்று சொல்லவேண்டிய தில்லை.

கும்பம் - கும்பா = அரைக் கும்பவடிவான மாழை யுண்கலம்.

கும்பக் குடம் = தேரின் முடி.

கூடு என்னும் வினையின் நிகழ்கால வெச்சம் (Infinitive mood) உடன், ஒடு, ஓடு என்னும் கருவி (3ஆம்) வேற்றுமை யுருபுகள்போல் உடனிகழ்ச்சிப் பொருள் தரும்.

எ-டு: நாய்கூட (நாயொடு) நம்பி வந்தான். தந்தைகூட (தந்தையொடு) மகனும் பாடினான்.

*கும் என்னும் வினை கூடு என்பதன் ஒப்பொருட் சொல் (*Synonym*)லாதலால், கும்ம என்னும் நிகழ்கால வினையெச்சம் கூட (*with, together, together with) *என்பதுபோல உடனிகழ்ச்சிப் பொருள் தரல் வேண்டும்.*

கும்மல் (குவியல்) – L. *cumulus*, a heap, pile, mass, L.*cumulo*, to heap up.

ஆங்கிலம் cumulus *என்னும் இலத்தீன் சொல்லினின்று* cumulate *(கும்மலிடு)என்னும் வினைச்சொல்லைத் தோற்றுவிக்கும். அதினின்று* accumulate (ad+ cumulate) *என்னும் வினைச்சொல் எழும்.*

cumulus *என்னுஞ் சொல்லின் அடியான* cum *என்பது, இலத்தீனில் உடனிகழ்ச்சிப் பொருள் முன்னொட்டாகப் (*pref.*) பெருவழக்காய் வழங்குகின்றது.*

எ-டு: cum bona venia = with your kind indulgence.
cum grana salis = with a grain of salt.
cum multis aliis = with many other things.
cum notis variorum = with notes of various (critics).
cum privlleglo = with privilege.

cum *என்னும் இலத்தீன் முன்னொட்டு, முதற்கண்* com *என்று திரிந்து, பின்னர் வருஞ்சொல் முதலெழுத்திற்கேற்ப* con, co, cor *என்றும் வேறுபடுகின்றது.*

எ-டு: combustum, commodus,
communico, compendium;
concretus, condemno, confero, conservus;
collabor, collega; corrector, corruptus.

ஆங்கிலத்தில் நூற்றுமேனி நாற்பான் சொற்கள் இலத்தீனாத லால், com, con, col, cor *என்னும் முன்னொட்டுகளைக் கொண்ட சொற்கள் ஏராளமாய் வழங்குவதைக் காணலாம்.*

எ-டு: combine, commence, compose, communicate;
concord, condole, confuse, console;
collect, college; correspond, corrode

com *என்னும் இலத்தீன் முன்னொட்டு,* co *என்றும் குறுகி, இலத்தீனிற் சில குறிப்பிட்ட எழுத்துகட்கு முன்னும், ஆங்கிலத்தில் எல்லா எழுத்துக்கட்கு முனனும் வழங்கும்.*

"*co* - pref. L. short form of *com* - (*cum* prep. with) used in - L. only before vowels, h, gr, and (in the correct classical form) n, but in E. as living pref. before any letter" *என்று* The Concise Oxford Dictionary *கூறுதல் காண்க.*

எ-டு : இலத்தீன். coarguo, cognosco, cohabitare.

ஆங்கிலம் co - adjust, co - education, co - operate, coheir, copartner, co - religionist, co - tenant, co - worker.

*உடனிகழ்ச்சிப் பொருளுணர்த்தும் கும் (*cum*) என்னும் இலத்தீன் முன்னொட்டு, கிரேக்கத்தில் சும் (*sum*) என்று திரிந்துள்ளது. அதை ஆங்கிலர் சிம் (*sym*) என்று திரித்து வழங்கி வந்திருக்கின்றனர். அத் திரிபும்,* syn, syl *என்று வருஞ்சொன் முதலிற்கேற்ப வேறுபடும்.*

எ -டு : symbol (sumbolon), sympathy (sumpatheia), symphony (sumphonia), symposium (sumposion), symptom (sumpotma);

synagogue (sunagoge), syndic (sundikos), synonym (sunonumon), syntax (suntaxis), synthesis (sunthesis);

syllable (sullabe), syllepsis (sullepsis), syllogism (sullogismos).

*சும் (ஸூம்)என்னும் கிரேக்க உடனிகழ்ச்சிப் பொருள் முன்னொட்டு, கிரேக்க நாட்டிற்குக் கிழக்கில் தோன்றிய கீழை யாரியத்தில் ஸம் (*sam *) என்று திரிந்துள்ளது.*

இங்குக் கீழையாரியம் என்றது, வேத ஆரியரின் முன்னோர், இந்தியாவிற்கு வருமுன் ஈரானுக்கும் காந்தாரத்திற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் வதிந்திருந்தபோது வழங்கிவந்த மொழியாகும்.

உடன் (கூட), உடன் கூடிய, கலந்த, கலந்து, நிறைவாக என்று பொருள்படும் ஸம் என்னும் முன்னொட்டைப் பெற்ற முதன்மை யான சொற்கள், இன்று சமற்கிருதத்தில் நூற்றுக் கணக்காக வுள்ளன.

எ -டு : ஸம்க்யா, ஸம்க்ரக, ஸம்க்ராந்தி, ஸம்க்ருத, ஸம்க, ஸம்கட, ஸம்கதி, ஸம்கம, ஸம்கர, ஸம்கல்ப, ஸம்கீத, ஸம்கீர்த்தந, ஸம்கீரண, ஸம்சர், ஸம்சித,ஸம்ஜீவிந், ஸம்தர்ப, ஸம்தாந, ஸம்தோஷ, ஸம்ந்யாஸ, ஸம்பத், ஸம்பந்த, ஸம்பவ, ஸம்பார, ஸம்பாவந, ஸம்பாஷண, ஸம்ப்ரத, ஸம்ப்ரதாய, ஸம்ப்ரதாந, ஸம்ப்ரோக்ஷண, ஸம்பூர்ண, ஸம்போக,ஸம்போதந, ஸம்மதி, ஸம்மேளந, ஸம்யுக்த, ஸம்யோக, ஸம்ரக்ஷண, ஸம்வத்ஸர, ஸம்வாத, ஸமஷ்டி, ஸமய, ஸமர்ப்பண, ஸமஸ்த, ஸமாஸ, ஸமாச்சார, ஸமுச்சய, ஸமுதாய, ஸமூஹ, ஸமேத, ஸம்ஸ்க்ருத, ஸம்ஸ்கார, ஸம்ஜ்ஞா, ஸம்ஸ்தாந, ஸம்ஸார, ஸம்ஹார ஸம்ஹிதா.

ஸம் என்னும் முன்னொட்டு ஸஹ என்றும் திரியும்.

ஒ.நோ : ஸஹகமந, ஸஹோதர.

ஸம் என்னும் முன்னொட்டு 'ஸ' என்றும் குறுகும்.

எ -டு: ஸகல (சகளன்) = உருவத் திருமேனி.

இங்ஙனம், கும் என்னும் தென்சொல், ஆரிய மொழிகளில் முறையே, கும் - கம், கம் - கன் - கோ, கும் - ஸுஂம், ஸுஂம் - ஸம் - ஸ என்று திரிந்துள்ளது.

ஆங்கிலம் கும் என்பதைக் கம் என்று ஒலி திரித்தும் வரி(எழுத்து) திரிக்காது, இன்றும் இணைப்புச் சொல்லாக (conjunction) வழங்கி வருகின்றது.

எ - டு : pension -cum- provident fund.
agriculture - cum - industry.

ஸம் என்னும் முன்னொட்டு சமற்கிருதத்திற் போன்றே வேதமொழியிலும் பெருவழக்காக வுள்ளது. மேலையாரியமும் பிராகிருதமுங் கலந்தது வேதமொழி யென்றும், வேதமொழியும் தமிழுங் கலந்தது சமற்கிருதமென்றும் வேறுபாடு அறிதல் வேண்டும். இவ் விரு மொழியும் ஒருகாலும் வழங்கியிராத இலக்கிய மொழிகளே.

ஸம் என்னும் முன்னொட்டை நீக்கிவிடின், நூற்றுக்கணக்கான முதன்மைச் சொற்கள் வடமொழியி லிரா. அவை நீங்கின், வேதமொழியும் சமற்கிருத மொழியும் மொழியென்னுந் தகுதி யின்றி, இருபெருஞ் சொற்றொகுதிகளாகவே முடியும்.

ஸம்ஸ்க்ருதம் என்னும் பெயரே, ஸம் என்னும் முன்னொட் டால் ஏற்பட்டதே. வேதமொழியுந் தமிழுங் கலந்து செய்யப்பட்டது என்னும் பொருளில், அம் மொழி அப் பெயர் பெற்றது. ஸம் - உடன், கலந்து. க்ருத = செய்யப்பட்டது தமிழையும் ஒரு பிராகிருதமாகக் கொண்டு அதைக் 'த்ராவிட ப்ராக்ருத்' என்பர் வடமொழியாளர். ப்ரா = முந்தி, முந்திச் செய்யப்பட்டது பிராகிருதம்; பிந்திக் கலந்து செய்யப்பட்டது சமற்கிருதம். ஸம்க்ருத என்றாலே போதும். பிற்காலத்தில் 'ஸ்' என்னும் எழுத்தை இடைச்செருகி ஸம்ஸ்க்ருத என்றனர்.

மேல் வரைந்த கும் என்னுஞ் சொல் வரலாற்றினின்று தென்மொழியின் (தமிழின்) முன்மையையும் வடமொழியின் பின்மையையும் தெற்றெனத் தெரிந்து கொள்க.

9. அந்தி

உம்முதல் = கூடுதல்.

முன்வருதல் (தோன்றுதல்), முன் செல்லுதல் (செல்லுதல்), நெருங்குதல், கூடுதல், பொருந்துதல், வளைதல், துளைத்தல், துருவுதல் ஆகிய எண்பெருங் கருத்துகளிலும், உகரவடி மூலவேர்ச் சொல் சொன்முதன் மெய்களாகிய க ச த ந ப ம என்னும் ஆறொடுங் கூடி, அறு வழிவேர்ச் சொற்களைப் பிறப்பிக்கின்ற தென்னும் உண்மை, முன்னரே பலவிடத்துங் கூறப்பட்டுள்ளது. அதன்படி, கூடுதற் பொருள் கொண்ட உம் என்னும் மூலவேர்ச்சொல்லினின்று, கும் சும் தும் நும் பும் மும் என்னும் அறு வழிவேர்ச்சொற்கள் பிறக்கும்.

1. கும். கும்முதல் கூடுதல், திரள்தல். முந்தின கட்டுரை பார்க்க.

2. சும். சும்மை = தொகுதி. '' சுடரின் சும்மை விசும்புற'' (கம்பரா. இலங்கை காண். 33). சும் - சொம் - சொத்து.

3. தும். தும் - திம் - திம்மை = பருமை,பருமன். திம்மலி (திமிலி) = பருத்தவள். திம்மன் = பருத்த ஆண்குரங்கு. திமி = பெருமீன் (திவா.). திமிறுதல் = நீண்டு பருத்து வளர்தல். திமிலம். = பெருமீன் (பிங்.).

4. நும் - (இறந்துபட்டது).

5. பும். பும் - பொம் - பொம்மல் = 1. கூட்டம். '' பொலிந்தன வுடுவின் பொம்மல்'' (கந்தபு. காசிபன் புல. 28). 2. பருமன். ''பொம்மல் வனமுலை'' (சீவக.2717). 3. மிகுதி. '' புகுந்தவவ் விருளின் பொம்மல்'' (இரகு . இலவாண. 55). 4. பொலிவு. ''பொன்னனைய பொம்மனிறம்''. (கம்பரா. உருக்கா. 68). பொம்முதல் = மிகுதல் ''அதிர்குரல் பொம்ம'' (பாரத. பதினான். 112).

பொம்மெனல் = அடர்ச்சிக் குறிப்பு. '' பொம்மெ னிருள் வாய்'' (திருக்கோ. 395).

6. மும். மும் - மம் - மம்மல் = மயங்கல் - மசங்கல் (அந்தி நேரம்) என்று கொள்ளவும் இடமுண்டு. மம்மல் - மம்மர் = மயக்கம். ''மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகும்'' (நாலடி. 14) மயங்குதல் என்னுஞ் சொல்லின் முதற்பொருள் கூடுதல் (கலத்தல்) என்பதே.

உம் என்னும் சொல் கூடுதல் எனனும் வினைப்பொருளில் வழக்கிறந்தது. அப் பொருளுண்மையாலேயே அது கூட்டிணைப்புச் சொல்லாக (copulative conjunction) கொள்ளப்பட்டது. இணைப் பிடைச் சொல்லாக வரும் உம்மைச் சொல்லை எண்ணும்மை யென்பது இலக்கண மரபு.

''எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம்என்
றப்பா லெட்டே உம்மைச் சொல்லே.'' (தொல். இடை.7)

''எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.'' (நன். 425)

உம்மை யிடைச்சொல், பெயர்ச்சொற்களையும் உரிச்சொற் களையும் வினையெச்சங்களையும் இணைக்கும்.

எ-டு: அறமும் பொருளும் இன்பமும் வீடும் - பெயர்.
'' மழவுங் குழவும் இளமைப் பொருள'' - உரி.
சொல்லியும் எழுதியும் வருகிறான் - வி.எ.

உம் - அம் = நீர். ''அம்தாழ் சடையார்'' (வெங்கைக்கோ. 35.). நீர் தன்னொடும் பிறிதொடும் கலக்குந் தன்மையது.

''செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'' (குறுந். 118)

அம் - அம்பு = நீர் . ஒ.நோ: கும் - கும்பு.

அம்பு - வ. அம்பு.

அம்பு - அப்பு = நீர் (பிங்.). ஒ.நோ: கும்பு - குப்பு.

அப்பு - வ. அப்.

அம் - ஆம் = நீர். ''ஆமிழி யணிமலை'' (கலித். 48).

அம், ஆம் என்னும் இருவடிவும் வடமொழியி லின்மையை நோக்குக.

அம்பு - அம்பல் = 1. கூடுதல். குவிதல். முகிழ்த்தல். 2. பூ அலர்தற்குச் சிறிது முன்னுள்ள நிலை (பேரரும்பு) (இறை.22,உரை). 3. சிலரே யறிந்து புறங்கூறும் மொழி. '' அம்பலும் அலருங் களவு வெளிப்படுத்தலின்'' (தொல். களவு. 48).

அம்பல் - ஆம்பல் = இரவில் மலர்ந்து பகலிற் குவிவதாகச் சொல்லப்படும் அல்லி. அல் (இரவு) - அல்லி.

ஒ.நோ ஃ கும் - குமுது - குமுதம்.

ம., து. ஆம்பல் க. ஆபல்

அம்பு - அம்பலம் = 1. பலர் கூடுமிடம். '' ஆனைத் தீக்கெடுத் தம்பல மடைந்ததும்'' (மணிமே. பதி. 67). 2. ஊர்ச்சவை. 3. கற்றோர் கழகம். ''அரைச்சொல் கொண்டு அம்பல மேறலாமா?'' (பழ.). 4. தில்லைப் பொன்னம்பலம். ''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும்'' (திருக்கோ. 1). 5. நாடகங் காண்போ ரிருக்கை. ''அம்பலமு மரங்கமும்'' (சீவக. 2112). 6. ஊர்த்தலைவன். 7. சிற்றூர் அலுவல் வகை.

ம. அம்பலம், க. அம்பல, து. அம்பில, வ. அம்பர.

சிற்றம்பலம் - வ. சிதம்பர. சிறு +அம்பலம் = சிற்றம்பலம், பேரம்பலம் என்பதற்கு எதிர்.

வடமொழியாளர் சித் + அம்பர என்று பிரித்து, ஞானசபை என்று பொருள் கூறுவர்.

அம்பலக்கல், அம்பலக் கூத்தன், அம்பலகாரன், அம்பலச் சாவடி, அம்பலத்தாடி, அம்பலத்தி (தில்லைமரம்), அம்பலப் படுத்துதல், அம்பல மேறுதல், அம்பலவரி, அம்பலவாணன் முதலிய தூய தமிழ் வழக்குண்மையையும், பேரம்பர என்னும் வழக்கின்மை யையும், அம்பர என்னும் சொல்லிற்கு வடமொழியில் அம்பலம் என்னும் பொருளின்மையையும், நோக்குக.

அம்பலம், தில்லையம்பலம், திருச்சிற்றம்பலம், பொன்னம் பலம், வெள்ளியம்பலம், மணியம்பலம் என வருமிடமெல்லாம் லகரம் ரகரமாகாமையும் காண்க.

அம் - அமல். அமல்தல் = 1. நெருங்குதல். ''வேயம லகலறை'' (கலித். 45) 2. கூடுதல், திரள்தல்.

அமல் = நிறைவு. (ஞானா. 34).

அமல் - அமலை =1. செறிவு. ''அடுசினத் தமலையை'' (ஞானா. 43) 2. பட்ட வேந்தனைச் சூழ்ந்து நின்று மறவர் திரண்டு ஆடும் ஆட்டம். '' பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் '' (தொல். புறத். 17)3. சோற்றுத் திரளை. ''வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை'' (மலைபடு. 441). 4. மிகுதி (திவா.).

அமல் - அமர். அமர்தல் = 1. நெருங்குதல்.''அமரப்புல்லும்'' (திருக்கோ. 372). 2. பொருந்துதல். ''தன்னம ரொள்வாள்'' (பு.வெ.4 ஃ 5).

3. படிதல். 4. அமைதல். வேலையில் அமர்ந்தான். 5. அமர்ந்திருத்தல் (கந்தபு. கடவுள். 12). 6. அமைதியாதல் காற்றமர்ந்தது, அமரிக்கை. 7. இளைப்பாறுதல். 8. ஒத்தல் 'அமர' ஓர் உவமவுருபு (தொல். உவம. 11, உரை). 9. விரும்புதல். ''அகனமர்ந் தீதலி னன்றே'' (குறள். 92). 10. தகுதல், ஏற்றதாதல். குலத்திற் கமர்ந்த தொழில். அமர் - அமர்கை - அமரிக்கை.

அமர்தல் = விரும்புதல், அன்புகூர்தல், நேசித்தல் . '' அமர்தல் மேவல்'' (தொல். உரி. 82). '' ஆத்தி சூடி யமர்ந்த தேவனை'' (ஆத்தி. கடவுள்.). ''அண்ணல் இரலை அமர்பிணை தழீஇ''(அகம்.23). அமர் = விருப்பம்.

த. அம் - அமல் - அமர். அம்முதல் = பொருந்துதல்.

L.*amo*, *amare,* to love, *amor*, love, *amator*, a lover, a friend, *amatrix*, sweet heart, *amicus*, friendly, *amice*, in a friendly manner.

இவ் விலத்தீன் சொற்களினின்று, amateur, amative, amatory, amiable, amicable, amoret, amorist, amoroso, amorous, amour, paramour *முதலிய ஆங்கிலச் சொற்கள் திரிந்துள்ளன.*

அமர்த்தல் = 1. பொருந்திப் பொருதல்.ஒ.நோ : பொருதல் = பொருந்துதல், போர்செய்தல். 2. மாறுபடுதல் . ''பேதைக் கமர்த்தன கண்'' (குறள். 814).

அமர் = 1. போர் (சூடா.). 2. போர்க்களம். ''அஞ்சுவரு தானை யமரென்னும் நீள்வயலுள்'' (பு.வெ.8 :5). 3. கடுமை (W.)*. 4. வலிமை.*

அமர் - சமர் = போர்.

அமரகம் = போர்க்களம். '' அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா'' (குறள். 814).

அமர் - அமரி = போர்த் தெய்வமாகிய கொற்றவை யென்னுங் காளி.

அமரி - சமரி = போர்த் தெய்வமாகிய காளி. '' அமரி குமரி கவுரி சமரி'' (சிலப் . வேட். 67).

*அமர் - அமரம் = 1. போர். 2. ஆயிரங் காலாட் படைத் தலைமை (*W*). 3. பண்டைப் படைமறவர்க்கு விடப்பட்ட ஊழிய மானிய நிலம் (*I.M.P.Ct. 344*). தெ. அமரமு.*

அமரம் - சமரம்- வ. ஸமர.

வடமொழியிற் சமர் என்னுஞ் சொல்லின்மையை நோக்குக.

சமர் - சமர்த்து = போர்த் திறமை. திறமை, ''சமர்த்தாற்று மாற்றால்'' (அரிச். பு. இந்திர. 46)

சமர்த்து - வ. ஸமர்த்த.

சமர்த்து - வ. ஸாமர்த்ய.

அம் -அமை. அமைதல் = 1. நெருங்குதல். ''வழையமை சாரல்'' (மலைபடு. 181). 2. பொருந்துதல். ''பாங்கமை பதலை'' (கந்தபு. திருப்பர. 9.). 3. தங்குதல். '' மறந்தவ ணமையா ராயினும்'' (அகம். 37). 4. தகுதியாதல். 5. உடன்படுதல். '' கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை'' (குறள். 803).6. ஏற்புடையதாதல். ''பொருள் வேறுபட்டு வழீஇயமையுமாறு'' (தொல்.பொருள். 196, உரை). 7. தீர்மானமாதல். அந்த வீடு எனக்கமைந்தது. 8. அடங்குதல். ''அமையா வென்றி'' (கல்லா. முருக. 15). 9. நிறைதல். ''உறுப்பமைந்து'' (குறள். 761) 10. போதியதாதல். ''கற்பனவு மினியமையும்'' (திருவாச. 39 ஃ 3). 11. பொந்திகை (திருப்தி) யாதல். ''அமைய உண்மின்'' (W.). 12. கூடியதாதல். ''காரியம்... அமையு மாயினும்'' (சேதுபு. அவை. 2). 13. முடிவடைதல். '' அமைந்ததினி நின்றொழில்'' (கலித். 82).

அமை - அமைதி = 1. பொருந்துகை. 2. சமையம். '' அன்னதோ ரமைதி தன்னில்'' (கந்தபு. மூன்றா. 210). 3. தன்மை. ''ஆற்றின தமைதி'' (சீவக .1176). 4. செய்கை. ''அமைதி கூறுவாம்'' (கந்தபு. தெய்வ. 185). 5. அடக்கம். . 6. தாழ்மை. . '' தொழுதகை யமைதியின்'' (பரிபா. 4 ஃ 71). 7. அமரிக்கை. 8. சமந்தம் (சாந்தம்). 9. நிறைவு. ''நகரமைதி செப்புவாம்'' (சீவக. 78). 10. பொந்திகை.

அமை - அமைவு. அமை - அமைப்பு - அமைப்பகம்.

அமை - அமையம் = பொருந்திய வேளை. '' ஆனதோ ரமையந் தன்னில்'' (கந்தபு. திருக்கல். 72). ஒ.நோ ஃ நேர் - நேரம்.

அமையம் - சமையம் = தகுந்த வேளை, வேளை.

அமை - சமை. சமைதல் = 1. அமைதல். 2. நிரம்புதல். ''மலர்ந்து சமைந்த தில்லைகாண்'' (திருவிருத். 68, வியா. 357). 3. முடிதல். 4. அரிசி காய்கறி முதலிய உணவுப்பொருள்கள் வெந்து உண்ணத் தகுதியாதல். 5. வேதல். 6. புழுங்குதல். இந்தக் கூட்டத்திற் சமைந்து விடுகிறது. 7. அழிதல். '' ஐவர் தலைவருஞ் சமைந்தார்'' (கம்பரா. பஞ்சசே. 67). 8. பெண்பிள்ளை பூப்படைந்து நுகர்ச்சிக்குத் தகுதியாதல். '' சமைந்தால் தெரியும் சக்கிலியப் பெண்ணும் சாமைக் கதிரும்'' (பழ.). 9. மக்கள் இறைவனை வழிபட்டும் அறநெறியில் ஒழுகியும் அவன் திருவருளைப் பெற அல்லது திருவடிகளை யடையத்

தகுதியாதல். 10. ஏதேனும் ஒரு நிலைமைக்கு அல்லது கருமத்திற்கு அணியமாதல்.

ம. சமை.

சமைத்தல் = 1. உணவுப்பொருளை வேவித்தல். 2. ஒன்றைச் செய்து முடித்தல். 3. அழித்தல் . '' மாதரைத் தங்கழலாற் சிலர் சமைத்தார்'' (கம்பரா. கிங்கர. 42).

ம. சமெ, க. சமை, தெ. சமயு.

சமை - சமையல் = உணவவித்தல்.

சமை - சமையம் - சமயம் = ஆதன் (ஆன்மா) இறைவன் திருவடிகளை யடையச் சமையும் வகைபற்றிய மதம்.

சமயம் - வ. ஸமய.

சமையம் என்பது வேளையையும், சமயம் என்பது மதத்தை யும் குறிக்கும் என வேறுபாடறிக.

அமை = 1. அமைவு. 2. கூட்டம். 3. கெட்டி மூங்கில். ''அமையொடு வேய்கலாம் வெற்ப'' (பழ. 357).

அமை - அவை = 1. மாந்தர் கூட்டம் (பிங்.). 2. அறிஞர் கூட்டம். அவையறிதல் (குறள்). 3. அவை மண்டபம். '' தமனியத் தவைக்கண்'' (கந்தபு. நகரழி. 6). 4. நாடகவரங்கு, கூத்தாட்டவை (குறள். 332).

ஒ.நோ : அம்மை - அவ்வை. செம்மை - செவ்வை.

அவை - சவை = அறிஞர் கூட்டம். '' சவைநடுவே நீட்டோலை வாசியா நின்றான்'' (மூதுரை, 13).

சபை - சபை - வ. ஸபா (sabha).சமர், சமை, சமையம் என்னுஞ் சொற்கள் போன்றே, சவை யென்னுஞ் சொல்லும் சகர மெய்யொடு கூடிய அகரமுதற் சொல்லாகும்.

வடமொழியாளர் ஸபா என்னுஞ் சொல்லை ஸ + பா (bhā) என்று பிரித்து, ஒளியொடு (பிரகாசத்தொடு) கூடியது என்று பொருட் கரணியங் காட்டுவர்

காலஞ்சென்ற சு.கு. சட்டர்சி அதை மறுத்து, sib என்னும் தியூத்தானிய அல்லது செருமானியச் சொல்லினின்று ஸபா என்னும் சொல் திரிந்ததாகக் கூறினார். ஆயின், sib என்பது உடன்பிறந்தாருள் ஒருவரைக் குறிக்குஞ் சொல்லாதலால், அது பொருந்தாது. ஆகவே, அவை என்பதை மூலச் சொல்லாகக் கொள்வதே பொருத்தமாம்.

அமைதல் = நெருங்குதல், கூடுதல். அமை = கூட்டம் (முதனிலைத் தொழிலாகு பெயர்). அமை - அவை - சவை - சபை.

உம் என்னுஞ் சொல் உந்து எனத் திரியுமென்று தொல்காப்பியங் கூறுகின்றது.

''உம்உந் தாகும் இடனுமா ருண்டே'' (தொல். இடை. 44)

புறநானூற்றில் 24, 137, 339, 343, 352, 367, 384, 386, 395, 396 என்ற எண்கொண்ட பாட்டுகளில், செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் செய்யுந்து என்னும் வாய்பாட்டுச் சொல்லாகத் திரிந்துள்ளது.

தொல்காப்பியம் உம் என்னுஞ் சொல்லைப் பெயரெச்ச வீறென்று விதந்து குறியாது பொதுப்படக் கூறியிருப்பதால், உம் என்னும் இணைப்பிடைச் சொல்லும் உந்தெனத் திரியுமென்று கொள்ள இடமுண்டு.

உம் என்னுஞ் சொல் அம் என்று திரிந்தது போன்றே, உந்து என்னுஞ் சொல்லும் அந்து என்று திரிதல் வேண்டும்.

உம் என்னும் கூட்டிணைப்புச் சொல்லை யொத்த and என்னும் ஆங்கிலச் சொல், அந்து என்னுஞ் சொல்லை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

"AND, Copulative Conjunction. (E.) Common from the earliest times. AS. *and*. also written *ond*; by - form, *and*. O. Fris. *ande*. *and*, *an*; *end*, *en*; Du. *en*; Feel. *enda*, O.H.G. *anti*, *enti*, *lnti*, *unti*; Mod. G. *und*'' என்று கீற்று (Skeat)தம் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் வரைந்திருத்தல் காண்க. உந்து என்னும் வடிவும் செருமானியத்தில் வழங்குதலை நோக்குக.

அம் என்பதன் திரிபான அமல், அமர், அமை என்னும் ஏனைச் சொற்கள் போன்றே, அந்து என்னும் சொல்லும் கூடுதற் பொருள் கொள்ளும்.

அந்துதல் = கூடுதல், கலத்தல், மயங்குதல். இப் பொருளில் இச் சொல் வழக்கற்றது. இப் பொருளில் வழங்கிய இலக்கியமும் இறந்துபட்டது.

அந்து - அந்தி = பகலும் இரவும் கலக்கும் (மயங்கும்) வேளை.

பகலும் இரவும் கலத்தல் காலையும் மாலையும் நிகழ்வதால், முதற்காலத்தில் அந்தி யென்னுஞ் சொல் காலை மாலை யிரண்டற்கும் பொதுவாகவே வழங்கிற்று. ''காலை யந்தியும் மாலை யந்தியும்'' என்னும் புறநானூற்றடியையும் (34:8) ''காலையாகிய அந்திப் பொழுதும் மாலையாகிய அந்திப் பொழுதும்'' என்னும்

அதன் உரையையும் நோக்குக. அந்திக்காலை, அந்திமாலை என்னும் வழக்கிருந்தது. ''அந்திமாலைச் சிறப்புச்செய் காதை'' (சிலப். 4)

பின்னர், இம் மயக்கத்தை நீக்க, காலையந்தியை வெள்ளந்தி யென்றும், மாலையந்தியைச் செவ்வந்தியென்றும் அடைகொடுத்து வழங்கினர்.

வேலைக்காரப்பிள்ளை வெள்ளந்தி நேரத்திலேயே எழுந்து வேலை தொடங்கவேண்டும் என்று, இன்றும் பெருமனைக் கிழத்தியர் கூறுதல் காண்க.

செவ்வந்தி நேரத்திற் பூக்கும் பூ செவ்வந்தியென்றே பெயர் பெற்றது. அப் பெயர் கன்னடத்திற் சேவந்தியென்றும், தெலுங்கிற் சேமந்தியென்றும் வடமொழியிற் சேவதீ யென்றும் கொச்சை வழக்கிற் சாமந்தி யென்றும் திரியும். கொச்சை வழக்குச் சொல்லை ஒரு புலவர் சா + மந்தி யென்று பிரித்துச் செத்த குரங்கு என்று பொருள்கொண்டு, ''செத்த குரங்கைத் தலைமேற் சுமந்து திரிந்தனளே'' என்று பாட்டும் பாடிவிட்டார்.

அமர், அமை, அமையம் என்னும் சொற்கள் போன்றே, அந்து என்னுஞ் சொல்லும் சகரம் பெற்றுச் சந்து என்றாயிற்று.

சந்து = 1. பொருத்து; மூட்டு (பிங்.). சந்துசந்தாகப் பிய்த்து விட்டான். 2. இருதொடைச் சந்தான இடுப்பு. 3. பலவழி கூடுமிடம். ''சந்து நீவி'' (மலைபடு. 393). 4. மாறுபட்ட இருவரை ஒன்றுசேர்ப்பு. ''உயிரனையாய் சந்துபட வுரைத்தரு ளென்றான்' (பாரத. கிருட்டிணன் தூ.6.). 5. தக்க (பொருந்திய) சமையம்.

ம., க., து. சந்து.

சந்துக்கட்டு = நெருக்கடி நிலைமை. ம., க., தெ. சந்துக்கட்டு.

சந்துக்காறை = ஒருவகைக் கைவளை.

சந்து செய்தல் = பிணங்கிய இருவரைச் சேர்த்துவைத்தல்.

சந்து சொல்லுதல் = பிணங்கியவரை இணக்கும் தூது சொல்லுதல். 'நடுநின்றா ரிருவருக்குஞ் சந்து சொல்ல'' (சிலப். 8:01, உரை).

சந்து போதல் = பிணங்கியவரை இணைக்குந் தூது போதல்.

சந்து போனவன் = உறுப்புக் கட்டில்லாதவன், முடவன்.

சந்துவாதம் = இடுப்பில் வரும் ஊதைநோய்.

சந்துவாய் = மூட்டுவாய்.

அந்து என்பது சந்து என்றானபின், அந்தியென்பது சந்தி யென்றாகிக் காலையந்தியைச் சிறப்பாகக் குறித்தது. அதனால், அந்தியென்னும் பொதுப்பெயர் மாலையந்திக்கே சிறப்புப் பெயராயிற்று.

அந்தியும் சந்தியும் அவனுக்கு இதே வேலை என்பதில், சந்தியென்பது காலையைக் குறித்தல் காண்க.

அந்திக்கடை, அந்திக்காப்பு, அந்திக்காவலன், அந்திக்கோன், அந்திச் செக்கர், அந்திப்புள்தீங்கு (தோஷம்), அந்திமந்தாரம், அந்திமந்தாரை, அந்திமல்லிகை, அந்திவண்ணன், அந்திவானம் என்னும் சொற்களில், அந்தியென்பது மாலையைக் குறித்தல் வெளிப்படை.

''அந்திமழை அழுதாலும் விடாது''

''அந்தி யீசல் அடைமழைக் கறிகுறி''

என்னும் பழமொழிகளிலும், அந்தியென்பது மாலையையே குறித்தது.

கூடுதல் அல்லது கலத்தல் என்னும் அடிப்படைக் கருத்தில், அந்தி சந்தியென்னுஞ் சொற்கள் பல்வேறு பொருள்களைக் குறிக்கும்.

அந்தித்தல் = 1. சந்தித்தல். '' யமபடையென வந்திக்குங் கட்கடையாலே'' (திருப்பு. 85) 2. கிட்டுதல். ''வேதமந்தித்து மறியான்'' (திருவிளை. நகர. 106). 3. பணமுடிப்பாக முடித்து வைத்தல். ''அந்தித் திருக்கும் பொருளில்லை'' (திருவாலவா. 30 : 14).

சந்தித்தல் = 1. எதிர்தல். ''சந்தித்திடற் கெளிதோ விந்தவாழ்வு'' (திருக்கருவை. கலித். 75). 2. கண்டுகொள்ளுதல். ''மயில்வாகனனைச் சந்திக்கிலேன்'' (கந்தரலங். 60). 3. சேர்த்தல். '' சந்தித்த கோவணத்தர்'' (தேவா. 16 : 9).

சந்தி = 1. கூடுகை. 2. பலதெருக் கூடுமிடம். ''சதுக்கமுஞ் சந்தியும்'' (திருமுருகு. 225). 3. இணைப்பு. 4. பல பொருத்து அல்லது கணுவுள்ள மூங்கில் (பிங்.). 5. எழுத்துப் புணர்ச்சி. 6. நட்பாக்குகை (குறள். 633, உரை). 7. தறுவாய். நல்ல சந்தியில் வந்தான். 8. ஒரு பெரும்பண் (பிங்.). 9. நாடகச்சந்தி. (சிலப். 3 : 13, உரை). 10. வரிக்கூத்து வகை (சிலப். 3 : 13, உரை).

சந்திக்கரை = சாலையும் ஆறும் கூடுமிடம்.

சந்திக் கருப்பன் = தெருச் சந்திகளில் வைத்து வணங்கும் சிறு தெய்வம்.

சந்திக் கிழுத்தல் = தெருச் சந்திக்கு வரச் செய்து குற்றங் குறைகளை வெளிப்படுத்தல்.

சந்திக் கூத்து = தெருச்சந்தியில் ஆடும் ஆட்டம்.

சந்திக்கோணம் = தேருறுப்புகளுள் ஒன்று. ‘‘ சந்திக் கோணமு மந்திர வாணியும்’’ (பெருங். உஞ்சைக். 58 : 51).

சந்திசிரித்தல் = தெருச்சந்தியில் மக்கள் பழித்தல்.

சந்திப்பாடு = தெருச்சந்தியிலுள்ள பேய்களால் ஏற்படும் கோளாறு.

சந்திப்பு = 1. எதிர்கை. 2. ஆறு, தெரு, பாதை முதலியன கூடுமிடம். 3. பெரியோரைச் சென்று காண்கை. 4. பெரியோர்க்குக் கொடுக்குங் காணிக்கை.

சந்திமறித்தல் = கொள்ளைநோய்க் காலத்தில் தெருச்சந்தியிற் கொடை கொடுத்துத் தீய தெய்வங்களின் சினந்தணிக்கை .

சந்திமிதித்தல் = 1. நாலாம் மாதத்தில் நல்ல வேளையில் குழந்தையைத் தெருச்சந்திக்குத் தூக்கிச் செல்லுதல். ‘‘நாலாகு மதியிற் சந்திமிதிப்பது நடத்தி’’ (திருவிளை. உக்கிர. 27) 2. அம்மைநோய் நீங்கியபின் தெருச் சந்தியில் முதன் முதலாக வந்து மிதித்தல்.

சந்தியில் நிற்றல் = களைகணின்றித் தெருச்சந்தியில் நிற்றல்.

சந்தியில் விடுதல் = போக்குப் புகலில்லாதவாறு செய்தல்.

சந்தியிற் கொண்டுவருதல் = குற்றங் குறைகளை வெளிப் படுத்திப் பலர் பழிதூற்றுமாறு செய்தல்.

முச்சந்தி = மூன்று தெருக் கூடுமிடம்.

நாற்சந்தி = நான்கு தெருக் கூடுமிடம்.

சொற்புணர்ச்சியைக் குறிக்கச் சந்தி யென்னுஞ் சொல் பண்டை நூல்களில் ஆளப்படாவிடினும், அப் பொருளையுங் குறிக்கத் தகுதி வாய்ந்த தமிழ்ச்சொல்லே அஃதென்பதை அறிதல் வேண்டும். வடவர் அப் பொருளில் அச் சொல்லை ஆண்டுவிட்டதனால், அது வடசொல்லாகி விடாது.

சந்து - சந்தை (ஒ.நோ : மந்து - மந்தை) =1. பலவூர் வணிகரும் விற்பனையாளரும் கூடுமிடம். ‘‘தந்தைதாய் தமர்தார மகவெனு மிவையெல்லாம் சந்தையிற் கூட்டம்’’ (தாயு. தேசோ. 3). 2. கூட்டம். ‘‘ தண்ணுறு நந்தனம் வண்டின் சந்தையே’’ (பிரபுலிங். கொக்கி. 6). 3. இருபுருவமுங் கூடுமிடம். ‘‘ சந்தையில் வைத்துக் சமாதி செய்’’ (திருமந். 1201).

ம. சந்த, க. சந்தெ, து. சந்தெ.

இச் சொல் வடமொழியில் இல்லை.

சந்தைக்காரன், சந்தைக்கூட்டம், சந்தைகூட்டுதல், சந்தைச் சரக்கு, சந்தைமடம், சந்தைமுதல், சந்தையிரைச்சல், சந்தை யேற்றுதல், சந்தைவிலை, சந்தைவெளி என்பன தொன்றுதொட்டு வழங்கிவருஞ் சொற்கள்.

இந்த மடம் போனாற் சந்தை மடம்.

சந்தைக்கு வந்தவர்கள் என்றைக்குந் துணையா?

சந்தையில் அடிபட்டவனுக்குச் சான்றவன் யார்?

சந்தையில் விலைபோகாதது எந்த வூரிலும் விலைபோகாது.

சரக்கு மலிந்தாற் சந்தைக்கு வரும்.

இவை பழமொழிகள்.

வடமொழியாளர் சந்தி யென்னுஞ் சொல்லை ஸம் + தி (sam + dhi) என்று பிரித்து, ஸம் + தா, (sam + dhā) என்னுங் கூட்டுச் சொல்லினின்று திரிப்பர். ஸம் = உடன், கூட, together. தா (dhā) = இடு, வை, to put. ஸம்தா (samdhā) , to put together, join என்பது அவர் காட்டும் மூலம்.

தமிழில், உம் - உந்து - அந்து - அந்தி, அந்து -சந்து - சந்தி, சந்து - சந்தை என்றிவ்வாறு ஒரே சொல்லினின்று சொற்கள் படிமுறையாய்த் திரிந்துள்ளன.

இவை தொன்றுதொட்டும் தொடக்கந்தொட்டும் வழங்கி வருவன. சந்தை யென்னுஞ் சொல் வடமொழியிலின்மையும், இவை தூய தென்சொல்லே யென்பதை வலியுறுத்தும்.

தமிழ் குமரிநாட்டில் தோன்றிய உலக முதன்மொழி யென்னும் அடிப்படை யுண்மையை உள்ளத் திருத்தின், மேற்கூறியதை உணர்வதில் இடர்ப்பாடேது மிராது.

> ''கைத்தலந் தன்னிற் செம்பொன் வளையல் கலகலெனச்
> சத்தமொ லித்திட நூபுரப் பாதச் சதங்கைகொஞ்சத்
> தத்திமி யென்றே நடஞ்செய் சம்பீசர் சந்நிதிப்பெண்
> செத்த குரங்கைத் தலைமேற் சுமந்து திரிந்தனளே''

என்பது, முன்பு ஈற்றடி மட்டும் வரைந்து விடப்பட்ட பாட்டாகும்.

''பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயும்''

''போமிராச் சூழ்சோலை பொருகொண்டைப் பொம்மி கையில்''

என்னும் தனிப்பாட்டடிகளுங் கவனிக்கத் தக்கன.

10. எல்லா

தனியுயிரான ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் இயற்கை நெடி லைந்தும் விளியசைகளாகப் பயன்படும். ஆதலால் விளியுருபாக அமையும். இவற்றுள் ஈ, ஊ என்னும் இரண்டும் பெரும்பாலும், முறையே இகர வுகரங்களின் நீட்டமாகவே யிருக்கும். எவ் வுயிரா யினும். சேய்மை விளியெல்லாம் நெடிலாகவே யிருத்தல் கூடும்.

விளியசைகள், முன்னசை பின்னசை என இருவகைப்படும். 'ஆ' முன்னசையாக வருவதில்லை. 'ஏ', 'ஓ' இரண்டும் முன்னசை யாகவும் பின்னசையாகவும் வரும்.

எ -டு:

ஏ. ஏ முருகா! ஏ தங்கம் ! (முன்விளி)
ஏ அண்ணே! ஏ அரசே! (இருதலை விளி)
தாயே! கடவுளே! (பின்விளி)

ஓ. ஓ ஐயா! ஓ பெண்ணே! (முன்விளி)
ஓ மாதோ! ஓ மன்னோ ! (இருதலை விளி)
அம்மோ! அண்ணோ ! (பின்விளி)

இனி, பெயரொடு சேர்ந்தன்றித் தனித்தும் ஏயும் ஓவும் யகர மெய்யொடு கூடி விளியசையாக வரும்.

எ-டு: ஏய்! இங்கே வா. (சிறுவரையும் இழிந்தோரையும் நோக்கிக் கூறுவது. இது இருபாற்பொது .)

இது 'ஏ' என்றுங் குறுகும்.

எ- டு: ஏ ! போ.

ஓய் ! எங்கே போகிறீர்? (ஒத்த ஆடவரை நோக்கிச் சற்று மதிப்பாகக் கூறுவது).

இது சொற்றொடர் முன்னன்றிப் பின்னும் வரும்.

எ -டு: இங்கே பாரும் ஓய்!

இது வேய் - வே என்றும் திரியும்.

எ - டு: என்னவே ! இப்படிச் சொல்கிறீர்?

பெயரீற்று ஓகார விளியசை ஏகார விளியொடு இணைந்தும் ஆகார விளியொடு கூடியும் வரும்.

எ - டு: அம்மேயோ, அண்ணாவோ.

'ஆவோ' இணை விளி லகரமெய் யடுப்பது முண்டு.

எ - டு: சாத்தாவோல்.

இதை ஒரு புடை யொத்து, ஏகார முன் விளியும் லகரமெய் யடுத்து ஏல் என நின்று, இரு பாற்கும் பொதுவாகும்.

ஏல் என்பது எல் - எல்ல - எல்லா என்று திரிந்து, அகப்பொருட் செய்யுள்களில் இருபாற் பொதுவிளியாய் வழங்கும்.

''மறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொல்
நிலைக்குரி மரபின் இருவீற்று முரித்தே. (தொல். பொருளி. 20)

''இது, கிழவன் கிழத்தி பாங்கன் பாங்கியென்னு முறைப் பெயராகிய சொல்பற்றிப் பிறந்ததோர் வழு அமைக்கின்றது.

''இதன் பொருள்: முறைப் பெயரிடத்து இரு பாற்கும் பொருந்தின தகுதியை யுடைய எல்லா வென்னுஞ் சொல் புலனெறி வழக்கிற்குரிய முறைமையினானே வழுவாகாது, ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒப்ப உரியதாய் வழங்கும் என்றவாறு.

''கெழுதகை'' என்றதனானே, தலைவியும் தோழியும் தலைவனைக் கூறியதே பெரும்பான்மை யென்றும், தலைவன் தலைவியையும் பாங்கனையுங் கூறுதல் சிறுபான்மை வழுவமைதி யென்றும் கொள்க.

(உ-ம்.)

''அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல்;
இனியெல்லா'' (கலித். 81)

எனத் தலைவியைத் தலைவன் இழித்துக் கூறலின் வழுவா யமைந்தது.

''எல்லா நீ
முன்னத்தா னொன்று குறித்தாய்போற் காட்டினை

நின்னின் விடாஅ நிழல்போற் றிரிதருவா
யென்னீ பெறாதீ தென்'' (கலித். 61)

எனத் தோழி தலைவனை விளித்துக் கூறலின் வழுவாயமைந்தது...

''எல்லா விஃதொத்தன்'' (கலித். 61) என்பது பெண்பால்மேல் வந்தது. ஏனைய வந்துழிக் காண்க. 'பொதுச்சொல் 'என்றதனானே எல்லா, எலா, எல்ல, எலுவ எனவும் கொள்க.

''எலுவ சிறா அர்'' (குறுந். 129) என வந்தது.

''யாரை யெலுவ யாரே'' (நற். 395)

எனத் தலைவனைத் தோழி கூறினாள்.

எலுவி யென்பது பாலுணர்த்தலின் ஆராயப்படா (நச்சினார்க்கினியர் உரை).

இவ் வுரையிற் சில கூற்றுகள் பொருந்தாமை அறிஞர் கண்டு கொள்க.

''பொதுச்சொல்'' என்றும், ''நிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே'' என்றும், தொல்காப்பியர் கூறியுள்ளமையால், எல்லா என்பது தலைவன் தலைவியர் இருவரும் ஒருவரை யொருவர் விளிக்கும் இருபாற் பொதுச்சொல் என்பது தெளிவாகும்.

தெலுங்கில் ஓகார விளிச்சொல் பின்வருமாறு நால்வடிவு கொள்ளும்:

ஓயி - ஒத்தோரை விளிக்கும் முன்விளியசை.

ஓரி - இழிந்தோரை விளிக்கும் முன்விளியசை.

''ஏமிரா ஓரியென்பாள் எந்துண்டி வஸ்தியென்பாள்''
(காளமுகில் தனிப்பா)

ஓஸி - மனைவியையும் இழிந்த பெண்டிரையும் விளிக்கும் முன்விளியசை.

ஓரை - மிக இழிந்தோரை விளிக்கும் முன் விளியசை.

ஏல் என்னும் விளிச்சொற் றிரிபுகள்

ஏல் - எல் - எல்ல.

எல்ல என்னுஞ்சொல் வழக்கிறந்தது; இலக்கியமும் இறந்து பட்டது.

எல்ல - எல்லா. இது மேற்கூறப்பட்டது.

எல்லா தோழீ. ''கடைமணி யின்குரல் காண்பென்காண் எல்லா'' (சிலப்.20 ః 3).

எல்லா - எல்லாவோ = தோழீ. ''எல்லாவோ காதலற் காண்கிலேன்'' (சிலப். 18 ః 11 - 2).

எல் - எல்லே = தோழியை விளிக்குஞ் சொல்.

''கொடிய என்னெஞ்சம் அவனென்றே கிடக்கும் எல்லே''

(திவ். திருவாய். 5ః8ః5)

எல் - எல்லோ = வியப்பும் இரக்கமும் உணர்த்தும் இடைச் சொல் (நெல்லை வழக்கு)

எல் - எல. இது தமிழில் வழக்கற்றது.

எல் - எலா. இதுவும் தமிழில் வழக்கற்றது.

எல, எலா என்னும் இரு சொற்கள், இருபாற் பொது விளிகளாகத் தெலுங்கரிடை வழங்கி வருவதாகச் சொல்லப் படுகின்றது.

எல என்பதையும், அதன் திரிபான சில சொற்களையும் பற்றி, கிற்றல் கன்னட அகரமுதலி பின்வருமாறு கூறுகின்றதுః

க. எல (ela) = உடன்படுதலைக் குறிக்கும் ஓர் இடைச்சொல்.

க. எலகெ (elage) = பெண்டிரை விளிக்குஞ் சொல்.

க. எலவொ, எலவோ = வலிமிக்க வியப்பிடைச் சொற்கள்.

க. எலா = நண்பரை அல்லது நெருங்கிப் பழகியவரை விளிக்குஞ் சொல்

க. எலெ. எலே = எலா.

க. எலெகெ (elage) = பழகிய பெண்டிரை விளிக்குஞ் சொல்.

க. எலொ, எலோ = எலா.

எல் - எலு- எலுவ - எலுவன் = தோழன் (திவா.)

எலுவன் - எலுவல் = தோழன். ''அரவெழுதிய கொடியு முடையவ னெலுவலும்'' (பாரத. பதினாறாம். 28).

எலுவன் - எலுவ (விளிவே.)

எலுவன் - எலுவை = தோழி. ''உனக்கெலுவை யாகுவதெ னெண்ணம்'' (பாரத. நாடுகரந். 33).

எலுவன் - எலுவி = தோழி . (தொல். பொருள். 26, நச். உரை).

ஏல் - ஏல, ஏலே = சிறுவனையும் இழிந்தோனையும் விளிக்குஞ் சொல் (நெ.வ.)

ஏல்- ஏலா = 1. மனைவியை விளிக்குஞ்சொல் (கரூர்.வ.). 2. தோழன் தோழியரை விளிக்குஞ்சொல். '' குறவன் மகளாணை கூறேலா கூறே'' (பரிபா. 8 : 69), ''ஏலாவிது காணாயென (கந்தபு . அசமுகிப். 12).

ஏல - ஏழ.

ஏலா - ஏழா = தாழ்த்தப்பட்டோர் மனைவியை விளிக்குஞ் சொல் (நெ.வ.).

ஏழ - ஏட = தோழனையும் தாழ்ந்தோனையும் விளிக்குஞ் சொல்.

ஏட - ஏடன் = 1. தோழன் (யாழ். அக.) 2. அடியான், தொழும்பன். ''ஏடர்களை யெங்கு மாண்டுகொண்ட வியல்பறி வார்'' (திருவாச. 43 : 4).

ஏட (விளிவே.) - தோழனையும் தாழ்ந்தோனையும் விளிக்குஞ் சொல்.

''ஏடா வழிய லெழுந்திது கொள்ளாய்'' (மணிமே. 14 : 12)

ஏடே - ஏடா!

ஏட - ஏடி = தோழியையும் இழிந்தோளையும் விளிக்குஞ் சொல். (சிலப். 17 : 28, உரை).

ஏடி - ஏடீ (ஏடி யென்பதன் நீட்டல்.)

ஏட - ம. எட, எடா = சிறுவனையும் இழிந்தோனையும் விளிக்குஞ் சொல்.

ம. எட - எடன் = சிறுவன், பையன்.

ம. எடி - எடீ = சிறுமியையும் இழிந்தோளையும் விளிக்குஞ் சொல்

ஏட - எட - அட = 1. சிறுவனையும் இழிந்தோனையும் விளிக்குஞ்சொல். அட பயலே! 2.கழிவிரக்கம் பற்றிய இடைச்சொல். '' அடகெடுவாய் பல தொழிலு மிருக்கக் கல்வி யதிக மென்றே கற்றுவிட்டா யறிவில்லாமல்'' (படிக்காசுப் புலவர் தனிப்பா).

அட - அடா, அடே, அடோ = சிறுவனையும் இழிந்தோனையும் விளிக்கும் விளிகள்.

அடா அடா = அடடா (ஓர் இரக்க வியப்புக்குறிப்பிடைச் சொல்).

அட - அடி = சிறுமியையும் மனைவியையும் தோழியையும் இழிந்தோளையும் விளிக்குஞ் சொல். அடி மூழி ! என்ன செய்தாய்?

''நந்த வனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி'' (சித்தர் பாடல்)

உடைத்தான் + அடி = உடைத்தாண்டி.

''என்னடி நான்பெற்ற மங்கை'' (அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து), எட்டி நில்லடி!

அடி - அடீ = (அடி என்பதன் நீட்டம்).

அடா - டா - ரா (தெ.). ''ஏமிரா ஓரியென்பாள்'' (காளமுகில்).

இக்கடை வாடா = தெ. இக்கட ராரா.

அடோ - அரோ = ஒரு மூவிட அசைச்சொல்.

''குயிலாலு மரோ''

''யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்
... ...
அன்றாம் தாம்தான் கின்றுநின் றசைமொழி'' (நன். 441)

அடே - வ. அரே. அடே - டே - வ. ரே.

வ. அரே அரே - அரேரே -அரரே.

மானியர் வில்லியம்சு சமற்கிருத - ஆங்கில அகரமுதலி அரே, அரரே, அரேரே, ரே என்னுந் திரிசொற்கள்பற்றிப் பின்வருமாறு குறிக்கின்றது:

அரே - ind. interjection of calling (VS).

அரரே - ind. a vocative particle (expressing haste) - L.

அரேரே - ind. (repetition fo *are*) interjection of calling to inferiors or of calling angrily (L.).

ரே- ind. a vocative particle (generally used contemptuosly or to express disrespect. often doubled) - Kāv, kathas etc.

ind - indeclinable.

VS = Vājasneyi Samhitā வாஜஸ் நேயி ஸம்ஹிதா

L = Lexicographars (அகரமுதலியாளர்).

Kāv = Kāvya literatrue (காவிய இலக்கியம்)

ஆங்கிலர் நண்பரைக் காணும்போது மகிழ்ச்சி விளியாக ஆளும் ஹலோ (ஹல்லோ) என்னுஞ் சொல், எல்லா என்னும் தென்சொல் லொடு தொடர்புடையதே.

hallo, halloa, int., n., and v. i. Int. calling attention or expr. surprise; informal greeting; (n. and v.i.) the cry *hallo* var. of earlier hollo.

halloo, int. inciting dogs to the chase. calling attention or expressing surprise ; (n.) the cry. *halloo* (perh.)var. of hollo; (v.i. and t.) cry. *hallooi* esp. to dogs; urge on (dogs etc.) with shouts; shout (t. and i.) to attract attention.

hallow, v.t and i. Chase with shouts; incite with shouts; shout to incite dogs etc. (ME.).

halowen, prok. f. OF. *halloer.*

hello, n., and v.i. hallo

holla, int . calling attention f. F.*hola.*

hollo, int. calling attention; (n.) the cry hollo' (conn.W.) holla.

hollo, hollow, holla, holloa. v. i. and t. shout (i. and t.); call to hounds (as prec).

hullo, hulloa, int. used to call attention, express surprise or answer call esp. on telephone . cf. hallo.

'ஏல்' என்பது முதல் 'ரே' என்பது வரை காட்டப்பட்டுள்ள பல்வேறு சொற்களெல்லாம், ஒரே தொடர்புள்ள கொடிவழிச் சொற்கள் என்பது தெள்ளத் தெளிவாம்.

அவற்றுள், 'ரே' என்னும் இறுதிநிலைத் திரிசொல் மட்டும் வடமொழி யிலக்கியத்தில், அதிலும் பெரும்பாலும் பிற்கால இலக்கியத்திலும் அகர முதலிகளிலும் வழங்குவதும்; முந்துநிலைத் திரிசொல்லான எல்ல (எல்லா) என்பதை யொத்த 'ஹல்லோ' என்னும் விளிச்சொல், ஆறாயிரம் கல் தொலைவிலுள்ள ஆங்கில நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வருவதும் கவனிக்கத்தக்கன.

ஆங்கிலச் சொல் வேட்டை நாயை ஏவும் சொல்லாகப் பயன்படுத்தப்படினும், விளியளவில் ஒன்றே யென்பதை அறிதல் வேண்டும்.

நூற்றுக் கணக்கான அடிப்படை ஆங்கிலச் சொற்கள் தென் சொல்லும் தென்சொற்றிரிபுமா யிருப்பதால், எல்லா என்னும் இருபாற் பொது விளிச்சொல் ஆங்கிலத்தில் வழங்கி வருதல்பற்றி ஐயுறுதற்கு எள்ளளவும் இடமில்லை.

குமரிநாட்டினின்று கங்கைக்கரை சென்ற பண்டைத் தமிழர் திரவிடராகத் திரிந்தபின், ஐரோப்பா வடைந்து ஆரியராக மாறி யிருப்பதாலும், அவ் வாரியருள் ஒரு கூட்டத்தாரே வேத ஆரியரின் முன்னோராக இந்தியாவிற்கு வந்திருப்பதாலும், தென்சொற்களின் முந்து வடிவங்கள் மேலையாரிய மொழிகளிலும் பிந்துவடிவங்கள் கீழையாரியமாகிய வேத மொழியிலும் சமற்கிருதத்திலும் வழங்குவது இயற்கையே.

மேலையர் உலக முதன்மொழியாகிய தமிழை அடிப்படை யாகக் கொள்ளாது அதன் திரிபு கொடுமுடியாகிய சமற்கிருதத்தையே மூலமாகக் கொண்டு ஆராய்ந்து வருவதால், மொழிநூல் பற்றிய அடிப்படை உண்மைகளை அறியாது வழிதப்பிய சகாராப் பாலைநில வழிப்போக்கர்போல் அங்குமிங்கும் சற்றிச் சுற்றி இடர்ப் படுகின்றனர். தமிழ் இயன்மொழியென்றும் ஆரியம் அதன் திரிமொழியென்றும் அறியும்வரை, அவர் தம் குருட்டுக் கொள்கையில் நிலைத்தே நிற்பர். அக் குருட்டாட்டம் நீங்குங் காலமும் அடுத்து வருகின்றது.

11. கலித்தல்

'கலித்தல்' என்பது பிறப்புக் கருத்து வேர்ச்சொல்.

உல் - உல்லரி = தளிர் (அக. நி.).

உல்லரி - வ. வல்லரி.

உல் - குல் - குள்- குள- குளவு- குளகு = இளந்தழை. '' மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி'' (நாலடி. 16).

குளவு - களவு- களவம்- களபம் = யானைக் கன்று. '' மதகரிக் களபமும்'' (சிலப். 25 ః 49).

ஒ.நோ ః **OS.** *calf*, **AS.** *cealf*, **OE.** *coelf*, **ME.** *kalf*, *calf*, **E.** *calf*, **OHG.** *chalb*, **ON.** *kalfr*, **Du**. *kalf*, **Icel.** *kalfr*, **Swed**. *kalf*, **Dan**. *kabr*, **Goth.** *kalbo*, **G.** kalb, **Skt.** *kalabha.*

குள - குழ - குழம் = இளமை.

குழ = இளமையான. ''மழவுங் குழவும் இளமைப் பொருள'' (தொல். உரி. 14) . குழமகன் = இளந்தலைவன். '' குழமகனைக் கலி வெண்பாக் கொண்டு .... விளக்கவுரைத் தாங்கு'' (இலக். வி. 858).

குழ - வ. குட.

குழ - குழவு = இளமை. குழவு - குழகு = 1. குழந்தை. ''குழகென வெடுத்துகந்த வுமை'' (திருப்பு. 106).2. இளமைச் செவ்வி. ''கொம்மைக் குழகாடுங் கோலவரை மார்பர் '' (சீவக. 2790.) 3. அழகு. ''கொன்றை சூடிக் குழகாக... விளையாடும்'' (தேவா. 468 ః 7).

குழகு - குழகன் = 1. இளையோன். ''நின்மணக் குழகன்'' (திருவிளை. திருமண. 44). 2. முருகன் (பிங்.). 3. அழகன். ''கொட்கப் பெயர்க்குங் குழகன்'' (திருவாச . 3 ః 12).

குழகன் - க. ஹுடுக.

குழம் - குழந்து -குழந்தை = கைப்பிள்ளை. ''குழந்தையை யுயிர்த்த மலடிக்கு'' (கம்பரா. உருக்கா. 65). 2 .இளமைப் பருவம். ''குழந்தை வெண்மதி'' (கம்பரா. ஊர்தேடு. 209).

ஒ.நோ : ME. *child*, OE. cild, Goth. *kilthei*, womb (*கருப்பை*).

குழந்து - கொழுந்து =1. இளந்தளிர். 2. இளமையானது. 3. மென்மையானது. 4. மருக்கொழுந்து. 5. படையின் முன்னணி. ''சேனையின் கொழுந்துபோய்க் கொடிமதின் மிதிலையி னெல்லை கூடிற்றே'' (கம்பரா. எழுச்சி.24). 6. எரி நெருப்பின் நாவு. 7. கவரிநுனி. 8. கரும்புநுனி, கொழுந்தாடை. ம. கொழுந்து.

குழவு - ஒ.நோ : L. dim. suf. *culus*, *culum*, *cula*, *cule - cle - cel*, *cillus - cil.*

Ex: fasci*culus*. vas*culum*, auri*cula*, arimal*cule*, parti*cle*, par*cel*, L. codi*cillus*, E. codi*cil*.

குட்டியப்பன், குட்டிக்கிழங்கு, குட்டித் தொல்காப்பியம், குட்டித் தக்காளி, குட்டிப்பல், குட்டிவிரல் முதலிய சொற்களில், குட்டி என்பது சிறுமைப் பொருள் முன்னொட்டாக வழங்குதல் காண்க. குழவித் திங்கள் என்பதையும் நோக்குக.

குழவு - குழவி =1. கைக்குழந்தை. ''ஈன்ற குழவி முகங்கண் டிரங்கி'' (மணிமே. 11 : 114). 2. சில விலங்குகளின் குட்டிப் பெயர் (தொல்.மரபு. 19 - 23). 3. ஓரறிவுயிரின் இளமைப் பெயர் (தொல். மரபு. 24). ''வீழில் தாழைக் குழவி'' (தொல்.மரபு. 24, உரை).

குழம் - குழன் - குழல் - குழலை - குதலை.

ஒ.நோ : மழலை - மதலை.

குதலை = 1. குழந்தை. 2. குழந்தையின் மழலைச் சொல். ''இதழ் குவித்துப் பணித்த குதலையுந் தெரியாது'' (கல்லா. 5). 3. இனிய சொல். '' குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்'' (சிலப். 30 : 114).

குழல் - குதல் - கதல் - கதலி = சிறுவாழை. மொந்தன் என்பது பெருவாழை.

கதலி - கசலி- கசளி = சிறு கெண்டைமீன். கெண்டைக் கசளி என்பது வழக்கு.

கதல் - கசல் -கச்சல் = 1. வாழைப் பிஞ்சு, இளம்பிஞ்சு (க. கச்ச). 2. ஒல்லி. ஆள் கச்சலாயிருப்பான் (உ.வ.).

கதலி - வ. கதலீ = வாழைப் பொது.

சிறு வாழையைக் குறிக்கும் கதலி யென்னும் தென்சொல், வடமொழியில் தன் சிறப்புப் பொருளை யிழந்து, வாழைப் பொதுவைக் குறித்தலை நோக்குக.

*பேரா. பரோ (*Burrow)*இதை அறியாது, தம் 'சமற்கிருத மொழி' (*The Sanskrit Language) *என்னும் நூலின் இறுதியதிகாரத்தில்,*

'Kadalē" `banana' cf. Sakai *telui*, *kelui*, Nicobor *talūi*. Khmer *tut taloi*, Palaong *klog* `plantain' ; Savara *kin - tēn* ` banana' *என்று, கதலி யென்னும் சொல்லிற்கு மூலங்காட்டியுள்ளமை சிறிதேனும் பொருந்துமா வென்று அறிஞர் கண்டுகொள்க.*

குள் - குட்டு - குட்டன் = 1. சிறுவன், சிறுபிள்ளை. ''என்சிறுக் குட்டன்'' (திவ். பெரியாழ். 1:4:2), ''குயிலெனப் பேசுமென் குட்டனெங் குற்றது'' (திருக்கோ. 224). 2. ஆட்டுக்குட்டி (திவா.).

ம. குட்டன். க. குட்ட (gudda).

குட்டு - குட்டி = 1. மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல் ஆகியவற்றின் இளமைப் பெயர் (தொல். மரபு. 6-8). 2. விலங்கின் இளமைப் பொதுப் பெயர். 3. சிறு பெண். அது நல்ல குட்டி. 4. கடைசிப் பிள்ளை. இவன் என் கடைக்குட்டி. 5. சிறுமைப் பெயர். எ - டு: குட்டித் தொல்காப்பியம்.

*ம. குட்டி. க. குட்டி (*guddi*). த. பிள்ளைகுட்டி = பிள்ளைகள்.*

குட்டி - E. *kid*, a young goat. *kid, kiddy* (sl), child; ME. *kid, kidde*. Dan . *kid*, Swed. *kid,* Norw. kid, Icel. *kid,* ON. *kith*, OHG. *kizzi*. *chizzi,* MHG., G. *kitze*.

kid - fox, a young fox.

குள்- குய் - குய்ஞ்சு - குஞ்சு = 1. பறவைக் குஞ்சு. 2. அணில் எலி முதலியவற்றின் குட்டி.

ம. குஞ்ஞு. க. கூசு = குழவி.

குஞ்சு- குஞ்சி = 1. பறவைக்குஞ்சு. 2. சிறியது.

எ-டு: குஞ்சியப்பன், குஞ்சிப்பெட்டி.

குல் - குர் - குரு. குருத்தல் = தோன்றுதல். ''அதினின்று மொரு புருடன் குருத்தான்'' (விநாயகபு. 72:4).

குரு = 1. குழந்தை. 2. தோன்றுங் கொப்புளம், வேர்க்குரு. ''வெப்பு நோயுங் குருவுந் தொடா'' (சிலப். உரைபெறு கட்டுரை). 3. மயிர் சிலிர்ப்பு. 4. கொட்டை, பலாக்குரு. 5. புல்லியது. குருநகை = புன்சிரிப்பு. LG. *gor*, child.

குரு - குருத்து = 1. ஓலைக் கொழுந்து, பனங்குருத்து. 2. கொழுந்தாடை, கரும்பு நுனி. '' குருத்திற் கரும்புதின் றற்றே'' (நாலடி. 211) 3. இளமை. 4. மெல்லிய உட்புறம், காதுகுருத்து. 5. மெல்லிய உட்பொருள். மருப்பு (தந்தம்) மூளை யிவற்றின் குருத்து. ''ஆளி

நன்மான்.... வேழத்து வெண்கோடு வாங்கிக் குருத்தருந்தும்'' (அகம். 381).

ம. குருத்து.

குரு - குருகு = 1. இளமை. குருகுகிழங்கு. 2. விலங்கின் குட்டி. ''சிங்கக் குருகு' (திவ். திருபா. 1. வியா.) 3. குருத்தோலை. ''குருகு பறியா நீளிரும் பனைமிசை'' (பரிபா. 2 : 43).

ம., தெ., து. குரு.

குரு - குரும்பை = தெங்கு பனைகளின் இளங்காய். ''குன்றுங் குரும்பையுங் வெறுத்தநின் னிளமுலை'' (கல்லா. 52).

குரு - குருள் - குருளை = 1. குழந்தை. ''அருட் குருவாங் குருளை'' (சி.சி.பரபக். பாயி. 4). 2. சில விலங்கின் குட்டி (தொல். மரபு. 8, 9). 3. பாம்பின் குட்டி. ''சிறுவெள்ளரவி னவ்வரிக் குருளை'' (குறுந். 119).

Girl, a femal child, young woman, (e.)ME. *girle*, *gyrle* formerly used of either sex and signifying either a boy or girl.... N Fris. *gor,* a girl; Pomeran. *goer*, a child; O Low G. *gro,* a child.... Swiss. *gurre*. *gurrli,* a depreciatory term for a girl ... Norw. *gorre*., a small child'; Swed. dial *garra gurre* (the same). Root uncertain. E.D.E.L. by Skeat, p. 240.

''*girl* n. ME. *gurle gurl*. *gerle, gerl*. boy. girl rel. to LG. *gore*. *gor,* a child; of uncertain origin." - Klein's C.E.D. E.L.p. 312.

சிறுமியைக் குட்டி யென்னும் வழக்குத் தமிழிலுண்மை யாலும், குரு என்னும் மூலத்தினின்றே குருளை யென்னுஞ் சொல் திரிந்திருப்பதனாலும், 'girl' என்னும் ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழ்ச் சொல்லே மூலமென்பது தெள்ளத் தெளிவாம்.

குரு - குருப்பு = தோன்றும் பரு. தெ. குருப்பு.

குருமா - குருமான் - குருமன் = குட்டிவிலங்கு. குட்டி குருமான் என்பது உலக வழக்கு.

குரு- குருவி = 1. சிறு பறவைவகை. 2. சிறுமை.

எ-டு : குருவிக்கண். குருவித்தலை. குருவித் தேங்காய்.

குரு - கரு = 1. பீள். ''மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்'' (புறம். 34). 2. முட்டைக்கரு. ''புறவுக் கருவன்ன புன்புல வரகின்'' (புறம். 34). 3. முட்டை. 4. உடம்பு '' கருவுள் வீற்றிருந்து'' (திவ். திருவாய். 5 : 10 : 8).5. பிறப்பு. ''கருவைத் துடைப்ப'' (பிரபுலிங். கொக்கி. 15). 6. குழந்தை. ''சோரர்தங் கருவைத் தங்கள் கருவெனத் தோளி லேந்தி'' (பாரத. நிரை. 116). 7. குட்டி. ''காசறைக் கருவும்''

(சிலப். 25 : 52). 8. அச்சுக்கரு. ''திருவுருவினைக் கருவினாற் கண்டு'' (திருவிளை. இரச. 9). 9. வினைமுதற் கரணியம். ''கருவா யுலகினுக்கு'' (திருவாச. 10 : 14). 10. நடு. ''உள்ளூர்க் கருவெலா முடல்'' (கம்பரா. கிங்கரர். 44). 11. உட்பொருள். 12. கருப்பொருள். ''தெய்வ முணாவே... கருவென மொழிப'' (தொல். அகத். 18). 13. எண் கருமக்கரு. 14. நுண்ணணு ''கருவளர் வானத்து'' (பரிபா. 2 : 5).

ம. கரு.

கரு - கருந்து = மரக்கன்று (கோடை.வ.).

கரு - கருப்பு - கருப்பம் - வ. கருப்ப (garbha).

குல் - கல் - கலி. கலித்தல். = 1. உண்டாதல். ''களியிடைக் கலித்த தென்ப'' (ஞானா. 11).2. பிறத்தல். இவ் வெள்ளத்தில் மீன் நிறையக் கலிக்கும் (நெ.வ.).

குல் - குன் - குன்னி = மிகச் சிறியது. நன்னியுங் குன்னியும் என்பது எதுகை மரபிணைச் சொல். கூட்டத்திற்கு ஒருவராவது பெரியவர் வரவில்லை ; வந்தவை யெல்லாம் நன்னியுங் குன்னியும் (நெ.வ.). ஒ.நோ : *kin*, a dim. suf. E. *manikin, ken*, a dim. suf, Du. *manneken*, G. *chen*.

குன்னி - கன்னி =1. சிறுமி. 2. குமரி. ''கன்னி தன்னைப் புணர்ந்தாலும்'' (சிலப். 7. மன்னுமாலை) 3. இளமை. ''கன்னிப் புன்னை'' (திருக்கோ. 177), கன்னிக்கோழி (உ.வ.). 4. என்றும் இளமையாயிருக்குங் காளி. ''கன்னி செங்கோட்டம்'' (கல்லா. 58). 5. புதுமை. ''கன்னி நீலக்கட் கன்னி'' (சீவக. 900).6. முதனிகழ்ச்சி. கன்னிவேட்டம். 7. அழிவின்மை. ''கன்னிமா மதில்சூழ் கருவூர்'' (திவ். பெரியதி. 2 : 9: 7). 8. குமரியாறு. ''கன்னியழிந்தனள். கங்கை திறம்பினள்'' (தமிழ்நா. 81). 9. கன்னியோரை (பிங்.).

கன்னி - கன்னிகை = இளங்குமரி. 'கை' சிறுமைப் பொருட் பின்னொட்டு.

ஒ.நோ : குடி (வீடு, கோயில்) - குடிகை (சிறுவீடு சிறு கோயில்).

சிறுமையும் இளமையும் குறிக்கும் வடசொற்கள்

கந = 1. சிறிய. 2. இளமையான.

கதய, to make less, smaller, diminish.

கநா, a girl, maid. R.V. (இருக். வே.).

கநிஷ்ட, the youngest.

கநீ, a girl, maiden.

*கநீந,*young, youthful, R.V.

கநீநக, (k), a boy, youth, R.V.

கநீயஸ், younger, a younger brother or sister, younger son or daughter, R.V.

கநீயஸ, younger.

கந்ய, the smallest, Zd. *kainin*. Hib, *cain*, *chaste* undefiled.

கந்யக, (k) the smallest.

கந்யகா, (k) a girl, maiden, virgin, daughter.

கந்யநா, a maiden, girl, RV.

கந்யஸ, younger.

கந்யா, a girl, virgin, daughter, RV, AV. *(அதர்.வே.)*

கந்யிகா(k) see *கந்யக.*

- மானியர் உவில்லியம்சு ச - ஆ அகரமுதலி, பக். 248 - 9.

கல் - கன் - கன்று = 1. பல விலங்குகளின் இளமைப்பருவம் (தொல். மரபு. 15 - 18). 2. மரத்தின் இளமைப் பெயர். வாழைக்கன்று, வேப்பங்கன்று. 3. சிறியது. 4. அணிவகைச் சொல்லிற் சிறுபிள்ளை. இரண்டு கன்று கயந்தலை யானபின் இந்தச் சம்பளம் எப்படிப் பற்றும் ? (உ.வ.).

ம. கன்னு, க., து. கந்து, க. கன்னெ = மரக்கன்று. க. கந்த = குழந்தை. சிறுபிள்ளை.

*கன் - தெ. கனு = பிள்ளைபெறு (*to bring forth young). *ஆபிரகாமு ஈசாக்குனு கனெனு = ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.*

*பிரா. (பிராகுவீ) கன். (*khan), to give birth to; KG. ad *karr*, to yean: Kur (Kurukh), *kharj,* to be produced, to bear fruit.

LATIN WORDS

தெ. கனு - L. **geno** to beget.

genero, to beget, produce, create, cause to exist, bring to life, generate.

gener, a son - in -law.

generosus, of noble birth.

genesis, the constellation which presides over one's birth.

genetivus, *genativus*, inborn, innate.

genetrix, one who brings forth or bears, a mother.

genitabilis, relating to production or birth.

genitalis, belonging to birth.

genitura, a begetting, genitor, a begetter.

gens, a clan, a number of families connected together by a common discent and the use of the same gentile name,

genus, birth, descent, origin.

GREEK WORDS

Gk. ***genos***. race.

genomai, *gignamal*. I am born.

genea, race.

genes , born of produced by.

gennan, to beget.

TEUTONIC WORDS DERIVED FROM LATIN AND GREEK

E. ***gen***, Gk. suf. forming nn. in Scientific use.

(1) In the sense 'that which produces'. Ex. Oxygen, hydrogen, nitrogen,

(2) In the sense 'growth. Ex. undogen, acrogen, thallogen.

gender, ME.f. OF *gon(d)re*, f. L. *genus*.

gene, modern formation of gen.

geneology, ME. f. OF. (gie)f. LL. f. Gk. *genealogia*.

general, ME,f. OF. f. L. *generalia*.

generate of L. *generare*, to beget.

generic f. F. *generique* or Mod. L. *genericus*.

generous, f.L. *genereux* or L. *generosus*.

genesis, f. L.f. Gk. *gen*. to become.

genetic f.L. *genesis*.

genial,. generative, f.L. *genialis*.

genital, f. OF. *genital* or L. *genitalis*. genitalia (genit beget).

genitive ME. f. OF. *genitif* or L. *genitivus*.

genius f. root of L. *gignere* to beget.

genscide f.Gk. *genos* race (*cide*, killing).

***gens* clan** f. L. *gignere* to beget.

genteel re - adoption of F. *gentil*.

gentile ME. f. L. *gentilis*.

gentle, well - born. ME. f. OF. *gentil* f. L *gentilis*.

gentry, prob. f. obs. *gentrice* f. OF. *genterise*.

genuine, pure - bred, f.L. *genuinus*, innate. authentic.

genus, group of species f. L. *genus* - aris.

geny, suf. forming nn. indicating mode of production f.F. *genie* (gen).

Ex. monogeny, anthropogeny.

gony, suf. signifying creation.

E. *cosmogony* f. Gk. *cosmogonia* (*cosmos*, universe *gonla* f. *gonos*, begetting).

சமற்கிருதச் சொற்கள்

(கன் - gan - *ஜந்)*

ஜந். to be born, RV, AV. ; to grow. AV. to generate, beget , produce, create, cause, RV.AV.; to be grown or produced, come into existence, RV.AV.

ஜந, generating, creature, living being, man, person race, RV.

ஜநக (k), generative, generating, begetting, producing, causing a progenitor, father.

ஜநந, generating begetting. producing, causing, a progenitor, creator; birth.

ஜநநீ, mother.

ஜநயதி (ti), generation.

ஜநி. a woman, wife.

ஜநித (ta), engendered, be getting, produced, occasioned.

ஜநித்ர, a birth place. place of origin, home, origin.

ஜநீ, a daughter - in - law.

ஜந்து, a child, off - spring, a creature, living being, man.person.

ஜந்ம, birth.

ஜந்மந், birth, production.

ஜந்ய, born. produced ; born or arising or produced from, occasioned by.

ஜந் - ஜ.

ஜ, born or descended from, produced or caused by born or produced in or at or upon, growing in, living at.

எ - டு : அக்ரஜ (g)*அண்டஜ, அநுஜ, கிரிஜ(* g),*த்விஜ, நிஜ, பங்கஜ (* nk), *ஸஹஜ.*

ஜா. born , produced. Ex. agraja, adrija.

ஜாத (ta,), born, brought into existence by, engendered by, grown, produced, arisen, caused, appeared, appearing on or in, destined for.

*ஜாதக (*taka), engendered by, born under an asterism a new - born child; nativity, astrological calculation of a nativity, the story of a former birth of Gautama Buddha.

*ஜாதி (*ti), birth, production, re -birth, the form of extistence fixed by birth, position assigned by birth, rank, causte, family, race, lineage, kind, genus, species,the generic properties the character of a spacies.

ஜாந, birth, origin, birth place.

ஆங்கிலச் சொல்லாராய்ச்சியாளர், kind, king *என்னுஞ் சொற்களையும்* kin *என்னுஞ் சொல்லினின்று திரிக்கின்றனர்.*

``*Kind*, n. ME. *kinde, kund, kende,* fr. OE. *cynd, ge - cynd,* kind, nature, quality, manner, origin, generation , offspring, rel. to OE. *cyn,* kind, kin.

“Kindergarten, n.G. *Kindergarten,* lit`. garden of children' ... *kinder* pl. of *kind* . child, and *garten*, garden, kin - kind.

“Kinchin,n. child - corrupted fr. G. *kindchen* ` little child' dimin. of *kind,* child, which is rel. to ON. *kundr,* son. - kleins

சமற்கிருதம் உட்பட்ட ஆரிய மொழிகளையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்த, கீற்று (Skeat),*கிளேன் முதலிய பேரறிஞரெல்லாம், மேற்காட்டிய சொற்கட்கு* GEN (KEN) *என்பதே வேர் என்று திட்ட வட்டமாய்க் குறித்துள்ளனர்.*

க-ச, ga- *ஜ. ஆதலால்,* gan (kan) *என்பது மூலமும்* jan *என்பது அதன் திரிபுமாகும் என்று தெற்றெனத் தெரிந்துகொள்க.*

12. மகன்

மகன், இளமைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட சொல்.

உல் - முல் - மெல்- மென்மை. இந். முலாயம் = மெல்லிய.

பிறப்பு அல்லது தோற்றக் கருத்தினின்று முன்வரல், முன்மை, இளமை, சிறுமை, மென்மை, அழகு முதலிய கருத்துகள் கிளைக்கும்.

மெல் - E. *mellon*, soft, L. *mollis*, soft, E. *mollify,* to make soft.

மெல்லுதல் = கடினமான வுணவைப் பல்லால் அரைத்து மெலிதாக்குதல்.

ஒ.நோ : L. *mol,* to grind; to make soft by grinding. L. *mola*, E. *mill*, building with machinery for grinding corn.

E. *molar*. f.L. *molaris*, mammal's back teeth serving to grind.

E. *muller*, tool used for grinding powders on slab, upper part of the millstone, f. ME. *mulour* f. *mul*, to grind. L. *mola,* millstone.

மெல் - மெலி - மெலிவு.

மெல் - மெல்கு. மெல்குதல் = மெலிதாதல்

மெல் - மெலு -மெலுக்கு = மென்மை.

மெல் - மெது - வ. ம்ருது, E.smooth, OE. smoth, smethe, smeeth. *க. மெது.*

மெது - மெத்து. மெத்தெனல் = மெதுவாயிருத்தல்.

மெத்தெனவு = மென்மையான சொல், குணம், ஊறு, பொருள். ''வெட்டெனவு மெத்தெனவை வெல்லாவாம்'' (மூதுரை, 33).

மெத்து - மெத்தை = மெதுவான இருக்கை, படுக்கை, தலை யணை.

மெலுக்கு - மெதுக்கு. மெதுக்கிடுதல் = மென்மையாதல், மென்மையா யிருத்தல்.

மெது - மெதுவு - மெதுகு. மெது - மெதுப்பு.

மெல் - மெல்ல = மெதுவாக. மெல்ல - மெள்ள =பைய.

மெல் - மெல்லம் - மெள்ளம்.

முல் - முன் - முன்னி = காட்டில் இயற்கையாக விளையும் சிறு பயற்றுவகை.

முல் - முனி- யானைக்கன்று. ''முனியுடைக் கவளம் போல'' (கலித். 360)

முன் - மின் - L.*min*, small.

இவ் வேர்ச்சொல்லினின்று பின்வருமாறு பல சொற்கள் திரிந்துள்ளன.

mince (to cut small), miniature,mincab, minify, minim, minimal, minimalise, minimum, minion, minish (diminish), minister (servant, one who is small), ministerial, ministration, ministarnt, ministrative, ministry, minimize, minor, monority, minus, minuscule, minute, minutia.

முன் - முனகு - முனங்கு. முனகுதல் (முனங்குதல்) = மெதுவாக வாய்க்குட் சொல்லுதல், முணுமுணுத்தல்.

ஒ - நோ : ME., E. *moan*,to make low murmur.

முல் - முள் - முளு.

முளுதல் = அரிசி வெந்து முண்டி வருதல். சோறு முளுந்து வருகிறது.

முள் - முளை. முளைதல் = முளைத்தல். விதை இன்னும் முளைய வில்லை (உ.வ.).

முளைத்தல் = 1. தோன்றுதல். ''ஒன்றாய் முளைத்தெழுந்து'' (திருவாச. 10 : 8). 2. எழுதல். ''காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப'' (மணிமே. 8: 18).

ம. முளை. க. மொளெ. தெ. மொலத்சு.

*முளையன்= சிறுவன். முளையான் = சிறு குழந்தை,இந்த முளையான் பேச்சை யார் கேட்கிறது?(*W.*).*

முளை = 1. வித்தினின்று வெளிப்படுவது. ''வித்திய வெண்முளை'' (ஐங்குறு. 29). 2. இளமை. ''முளையமை திங்கள்'' (கம்பரா. கும்பக. 16.) 3. மரக்கன்று. ''அதன்றாள் வழியே முளை யோங்குபு'' (சீவக. 223). 4. முளையான். 5. மகன் (பிங்.). 6. மூங்கில் முளை. 7. புண்முளை. 8. மூலமுளை. 9. திரிகை முளை. 10. கதவுக்குடுமி. 11. குறுந்தறி.

ம. முள., து. முளெ., க.மொளெ, தெ. மொலக்க.

முள்- முர் -முருகு = 1 இளமை (திவா.). 2. அழகு (பிங்.). 3. எழுச்சி (திவா.). 4. முருகன். ''அருங்கடி வேலன் முருகொடு வளைஇ'' (மதுரைக். 611). 5. தெய்வம். '' முருகு மெய்ப்பட்ட புலத்தி போல'' (புறம். 259). 6. வேலன் வெறியாட்டு. ''முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்'' (குறுந். 362). 7. திருவிழா. ''முருகயர் பாணியும்'' (சூளா. நாட். 7). 8. திருமுருகாற்றுப்படை. ''முருகு பொருநாறு'' (தனிப்பா).

முருகு - முருகன். ம. முருகன். க. முருக (உ).

முரு - முறு - முறி. முறிதல் = துளிர்த்தல். ''முறிந்த கோல முகிழ் முலையார்'' (சீவக. 2358).

முறி = 1. தளிர். ''முறிமேனி'' (குறள்.1113). 2. கொழுந்திலை. ''இலையே முறியே தளிரே தோடே'' (தொல்.மரபு. 88).

முள் - முண்டு. முண்டுதல் = வித்தின் முளை முளுத்தல் அல்லது முட்டுதல்.

முள் - முட்டு = இளம் பிஞ்சு. முட்டுக்காய் = முற்றாத இளநீர்.

முட்டுக் குரும்பை = சிறு குரும்பை.

முட்டு - மொட்டு= 1. அரும்பு. ''மொட்டறா மலர்'' (திருவாச. 29 : 8) . 2. தேரின் கூம்பு. மாமொட் டொடிந்து ... மான்றேர் சிதைய'' (பாரத . நான்கா நாள் .24).

மொட்டு - மொட்டை. மொட்டைப் பயல் = மணமாகாத இளைஞன், இளவட்டம் (பொதுவாக இழிவுக் குறிப்பு).

முள் - முண் - முண. முணமுணத்தல் = மெதுவாக வாய்க்குட் பேசுதல்.

முண் - முணு. முணுமுணுத்தல் = மெதுவாக வாய்க்குட் பேசுதல்.

முணு - முணுக்கு. முணுக்கு முணுக்கெனல் = சிறு குழவி சிறிது சிறிதாகத் தாய்ப்பா லுண்ணுதல்.

முணமுண - மொணமொண. மொணமொண வெனல் = வாய்க்குட் சொல்லுதல். ''சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு மந்திரம் ஏதடா'' (சிவவாக். பா.).

முணுக்கு - முடுக்கு = 1. சிற்றளவான குடிநீர். 2. சிறுதெருச் சந்து.

முடுக்கு - முடுக்கர் = குறுந்தெரு. ‘‘முடுக்கரும் வீதியும் ’’ (சிலப். 5 ஃ 182).

முடுக்கு - விடுக்கு = சிற்றளவான குடிநீர்.

முண் - மண்- மணி = சிறியது. மணிக்கயிறு, மணிக்காக்கை, மணிக்காடை, மணிக்குடல். மணிக்கை, மணிப்புறா முதலிய கூட்டுச் சொற்களை நோக்குக. மண் - மண்ணை = இளமை (பிங்.).

மணி - மணி = 1. சிறியது. 2. மாணவன், பள்ளிப்பிள்ளை. 3. மணமாகாதவன். 4. குறளன். ‘‘கருமாணி யாயிரந்த கள்வனே’’ (திவ். இயற். 2 ஃ 61), ‘‘மாணிக் குறளுரு வாய மாயன்’’ (திவ். பெரியாழ். 5 ஃ 2 ஃ 5).

மாணி -மாணவன் - வ. மாணவ.

மாணவன் - வ. மாணவக - த. மாணாக்கன்.

முள் - முழு - முகு. ஒ. நோ ஃ தொள் - தொழு - தொகு.

முகு - முகுள் - முகுளம் = 1. அரும்பு. ‘‘பங்கய முகுளந் தன்னைக் கொங்கையாப் படைத்த’’ (திருவாலவா. 4 ஃ 14). 2. ஐந்து விரலுந் தம்மில் தலைகுவிந்து உயர்ந்து நிற்கும் இணையா வினைக்கை வகை (சிலப். 3 ஃ 8, உரை). 3. (ஓகம்) இருகாலும் ஒக்கவைத்து மண்டலமாக இருக்கும் இருக்கை வகை (தத்துவப். 109, உரை). 4. மூளையின் பின்பகுதியான முள்ளந்தண்டுக் கொடியின் குவடு (சிகரம்), (இங்.வை. ப. 27) .

முகுளம் - வ. முகுல.

முகுள் - முகுளி. முகுளித்தல் = குவிதல். ‘‘முகுளிக்கும். ... அரவிந்த நூறாயிரம்’’ (தண்டி. 62).

முகுள் - முகுளம் - முகுடம் = முடிக்கலம். ‘‘முகுடமும் பெருஞ்சேனையும்’’ (பாரத. குரு. 14). 2. முடியுறுப்பு ஐந்தனுள் ஒன்று (திவா.).

முகுட - வ. முகுட்ட.

முகுளம் - முகுரம் = தளிர் (சங். அக.).

முகுரம் - வ. முகுர.

முகுடம் - மகுடம் = 1. மணிமுடி. ‘‘அரக்கன்றன் மகுடம்’’ (கம்பரா. முதற்போ. 246). 2. தலைப்பாகை வகை. 3. கோவில் தேரின் கும்பம். 4. ஓலைச் சுவடியின் மணிமுடிச்சுக் கொண்டை. 5. மாதர் காதணி வகை. 6. மத்தளம் முதலியவற்றின் விளிம்பு. 7. பறைவகை.

8. பதிகம், பதின் பதிகம் (சதகம்) முதலியவற்றின் பாட்டுத்தோறும் ஈற்றில் வரும் பொதுச் சொற்றொடர். 9. கட்டுரைத் தலைப்பு.

மகுடம் - வ. மக்குட்ட.

பேரா. பரோவும் (Burrow) மகுடம் என்பது தென்சொல் லென்று குறித்திருத்தல் காண்க.

முகிள் - முகிழ். முகிழ்த்தல் = 1. அரும்புதல் '' அருமணி முகிழ்த்தவேபோ லிளங்கதிர் முலையும்... பரந்த'' (சீவக. 551). 2. தோன்றுதல். ''மூவகை யுலகு முகிழ்த்தன முறையே'' (ஐங்குறு. கடவுள்). 3. குவிதல். ''மகவுகண் முகிழ்ப்ப'' (கல்லா. 7) - (செ. குன்றா வி.) 1. ஈனுதல். ''அமர ராதியரை முகிழ்த்து'' (விநாயகபு. 81 ः 154). 2. தோற்றுவித்தல். ''அற்புத முகிழ்த்தார்'' (காஞ்சிப்பு. பன்னிரு. 163).

முகிழ்தல் = குவிதல். ''முகிழ்ந்துவீங் கிளமுலை'' (சீவக. 1004).

முகிழ் = 1. அரும்பு. ''குறுமுகிழ வாயினுங் கள்ளிமேற் கைந்நீட்டார்'' (நாலடி. 262). 2. பூவின் காம்படி. 3. மொக்குள். ''பெயறுளி முகிழென'' (கலித். 56). 4. தேங்காய் மடல். 5. தயிர் முதலியவற்றின் கட்டி. 6. ஐந்து விரலுந் தம்மில் தலைகுவிந்து உயர்ந்து நிற்கும் இணையா வினைக்கை வகை (W.).

முகிழ் - முகிழம் = பேரரும்பு (சது.).

முகிழ் - முகிழி. முகிழித்தல் = குவிதல்.

முகு -முகை. முகைதல் = அரும்புதல். ''பொய்கை முகைந்த தாமரை '' (ஐங்குறு. 6) .

முகைத்தல் = அரும்புதல். முகை = அரும்பு. ''முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல்'' (குறள். 1274).

முகு - முகம் = 1. தலையின் முன்புறம். ''முகத்தா னமர்ந்தினிது நோக்கி'' (குறள். 93). 2. தோற்றம். ''களிமுகக் களிறன்னான்'' (சீவக. 298). 3. முன்பு. ''ஈன்றாள் முகத்தேயு மின்னாதால்'' (குறள். 923). 4. நோக்கு. ''புகுமுகம் புரிதல்'' (தொல். மெய்ப். 13). 5. தொடக்கம் (W.). 6. நாடகச் சந்தி ஐந்தனுள் முதலது (சிலப். 3 ः 13, உரை). 7. நடிகர் அரங்கத்திற்கு வருமுன் நிகழுங் கூத்து (சிலப். 3 ः 147, உரை). 8. கட்டியின் முனை. 9. நுனி. ''அயின்முகக் கணை'' (கம்பரா. ஆற்றுப். 14).10. முகமன். '' முகம்பல பேசி யறியேன்'' (தேவா. 742 ः 2). 11.ஊழ்கம் (தியானம்). ''செல்வன்... இரண்டுருவ மோதி நேர்முக நோக்கினானே'' (சீவக. 1289). 12. முதன்மை (W.). 13. மூலம். 14. வாய். ''மொழிகின்ற முகத்தான்'' (கம்பரா. மாலிவ. 74). 15. வாயில் (சங்.

அக.). 16. கழி (பிங்.). 17. மேலிடம் (W.). 18. இடம் (திருக்கோ. 356, உரை). 19. வடிவம். 20. காரணம். 21. ஏழாம் வேற்றுமை யுருபு ''இனிய செய்திநின் னார்வலர் முகத்தே'' (புறம். 12).

முகம் - வ. முக (mukha).

முகஞ்செய்தல் = (செ.கு.வி.) 1. தோன்றுதல். ''முகஞ்செய் காரிகை'' (பெருங். உஞ்சைக். 35 : 49) 2. முன்னாதல். ''தோற்றினான் முகஞ்செய் கோலம்'' (சீவக. 6275.) - (செ.குன்றா வி.) நோக்குதல் ''முன்னினான் வடதிசை முகஞ்செய்து'' (சீவக. 1408).

முகம் என்பது, நிலைச்சொல்லாகவும் வருஞ்சொல்லாகவும் எத்துணையோ கூட்டுச் சொற்களில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது.

எ-டு : முகவுரை, முகக்களை, முகச்சாடை, முகதலை, முக நட்பு, முகப்பழக்கம், முகமண்டபம், முகவாய்க் கட்டை.

அறிமுகம், கழிமுகம், சுரிமுகம், திருமுகம், துறைமுகம், நூன்முகம், போர்முகம், மறைமுகம், முனைமுகம்.

முகம் என்னுஞ் சொல்லிற்குத் தோற்றம் அல்லது முன் பக்கம் என்பதே அடிப்படைப் பொருள். வடமொழியாளர் அதற்கு வாய் என்பதை அடிப்படைப் பொருளாகக் கொண்டு, அதற்கேற்பப் பொருந்தாப் பொய்த்தலாக ஒரு கரணியங் காட்டுவர்.

முகம் - முகடு= 1. உச்சி. ''முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவின் '' (பெரும்பாண். 246). 2. உயர்வு. ''முனிமை முகடாய மூவா முதல்வன்'' (சீவக. 1609). 3. தலை. ''முகடூர் மயிர்கடிந்த செய்கை யாரும்'' (தேவா. 936 : 10). 4. முதுகுபுறம். ''சொல்லத் தகுமுகட் டொட்டகம்'' (கனா.15) . 5. வீட்டின் மேற்கூரை (W.). 6. முகட்டுவளை. ''இகழ்ந்தார் முகட்டுவழி கட்டிற்பாடு'' (ஆசாரக். 23). 7. வான் முகடு. ''வானெடு முகட்டை யுற்றனன்'' (கம்பரா. மருத்து. 30).

க., தெ. மொகடு (g) .

முகடு - முகடி = முகட்டில் தங்குவதாகக் கருதப்படும் மூதேவி. ''மடியுளாள் மாமுகடி யென்ப'' (குறள். 617).

முகம் = முகத்தில் முன் நீண்டுள்ள மூக்கு.

முகம் - முக. முகத்தல் = மூக்கால் முகர்தல்.

முக - மோ. ‘‘ மோப்பக் குழையு மனிச்சம்’’ (குறள். 90).

மோ - மோப்பு - மோப்பம்.

முகதலை = பெண்டிர் சேலை முகப்பு(முன்றானை).

முக - முகப்பு = 1. முன்னிலை. ‘‘இருந்திடா யெங்கள் கண் முகப்பே’’ 2. முற்பகுதி. 3. வீட்டின் முன் கட்டடம். ‘‘முகத்தணிந்த முகப்பு ’’ (அரிச். பு. இந்திர. 20). 4. அணிகலப் பொருத்துவாய். 5. முகதலை.

முகம் - முகமன் = 1. மதிப்புரவுச் சொல், பாராட்டுரை. ‘‘முன்னையிற் புனைந்து முகமனளித்தும்’’ (கல்லா. 13). 2. வழுத்து. ‘‘புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே’’ (தேவா. 863 : 3). 3. முகத்தெதிர் உயர்வு நவிற்சி.

முகமாதல் = உடன்படுதல் (சீவக. 1120, உரை).

முகமை = முதன்மை, தலைமை. முகமையாயிருந்து எடுத்து நடத்தினான். முகமை - முகாமை.

முகம் - முகர். முகர்தல் = மோத்தல். முகர் - மோர்.

முகர் - முகரி = 1. முன்புறம். 2. தொடக்கம். 3. தலைமை. 4. மூக்கினடி.

முகரி - முகரிமை = 1. தலைமை. ‘‘முகரிமை யடைந்தவன் றோல் முகத்தவன்’’ (கந்தபு. கயமுகனுற். 49). 2. பேரறிவு. ‘‘முகரிமை சானற்றவர்’’ (சேது. பலதீ. 30).

முகர் - முகரை = 1. முகம் (இழிவுக் குறிப்பு). அவன் முகரையைப் பார் (உ.வ.). 2. முகவாய்க்கட்டை. 3. மூக்கினடி. ‘‘முகரையா லுழுத தொய்யில்’’ (திருக்காளத். பு. கண்ணப்ப.3). 4. மூக்கல்லாத முகப்பகுதி. அவன் மூஞ்சி முகரை யெல்லாங் கரி (உ.வ.). தெ. மோர, க. மோரெ, இந். முக்ரா (kh).

முகரைக் கட்டை = 1. முகம். 2. முகவாய்க் கட்டை.

முகவணை = 1. முகப்பு. 2. முகவுரை. 3. வண்டியின் முகப்பில் வண்டிக்காரன் இருக்குமிடம். 4. முகவணைக் கல். ‘‘நிலைகால் அருகணை முகவணை... கட்டினதும்’’ (கோயிலொ. 138.)

முகவணைக்கல் = வாசலின் மேலுள்ள உத்தரப் படிக்கல் (W.).

முகவழி = மூலம். அவன் முகவழியாகப் போகவேண்டும்.

முகவாசல் = தலைவாசல்.

முகவாய் - மோவாய். முகவாய்க் கட்டை - மோவாய்க் கட்டை.

முகவன் = ஒரு குழும்பின் படிநிகராளி (Agent).

முகவியர் = இன்முகமா யுள்ளோர். ''முன்பட்ட தொழிந்து நுங்கண் முகவியர் முனிவு தீர்ந்தார்'' (சீவக. 2045).

முகவு = மாளிகை முகப்பு.

முகவெட்டி = ஓர் அலுவலன் (S.I.I. iii, 118).

முகம் - முகன் - முகனை = 1. முன்புறம். 2. தொடக்கம். 3. முன்னெழுத்து. 4. முன்சினம். ஏன் இவ்வளவு முகனை உனக்கு? (இ. வ.). 5. அதே நேரம் (தக்ஷணம்). நான் வந்த முகனையிலேயே அவன் போய்விட்டான் (W.). 6. தலைமை. அவன் முகனை பண்ணுகிறான் (W.).

முகனை - மோனை = மோனைத் தொடை. ''மோனை யெதுகை முரணே யியைபென'' (தொல். செய்.87). 2. முதன்மை. ''மோனை மங்கலத் தியற்றுவ'' (உபதேசகா. சிவபுண். 63).

முள் - மொள் - மொழு- மொகு- மொக்கு = 1. பூமொட்டு. 2. ஆடைகளில் மொக்குப்போற் செய்யப்படும் வேலைப்பாடு. 3. நிலத்திலிடும் பூக்கோலம். 4. குத்து விளக்கின் தகழி (W.).

மொக்கு - மொக்குள் = 1. மலரும் பருவத் தரும்பு. ''முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல்'' (குறள். 1274). 2. நீர்க்குமிழி. ''படுமழை மொக்குளின்'' (நாலடி. 27). க. முகுள் (g).

மொக்குள் - மொக்குளி. மொக்குளித்தல் = 1. குமிழியுண்டாதல் (W.). 2. திரளுதல் (யாழ். அக.). க. முக்குளிசு.

மொக்குளிப்பான் = கொப்புளிப்பான், அம்மைக் கொப்புளம்.

மொக்கை = முகம்.

முள் - மள் - மள்ளன் = இளைஞன். 'பொருவிறல் மள்ள'' (திருமுருகு. 262).

மள் - மழ = 1. இளமை. ''மழவுங் குழவும் இளமைப் பொருள'' (தொல். உரி. 14). 2. குழந்தை ''அழுமழப் போலும்'' (திருக்கோ. 147)

மழ - மழவு = 1. இளமை. 2. குழந்தை.

மழவு - மழவன் = 1. இளைஞன். ''மழவர்த மனையன மணவொலி'' (கம்பரா. நாட்டுப். 50).

மழ - மழல் - மழலை = 1. இளமை. ''பெருமழலை வெள்ளேற்றினர்'' (தேவா. 579 ః 5). 2. புதுமை. ''மழலைத்தேன்'' (ஈடு, 6 ః 2 ః 5). 3. திருந்தாச் சொல். ''தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்'' (குறள். 66.) 4. மென்மொழி. ''மழலை வாயின் முறுவற் றையலாள் (சீவக.181).

மழலை - மதலை = 1. மழலைமொழி (W.). 2. குழந்தை. 3. மகன் (பிங்.).

மழல் - மழறு. மழறுதல் = மென்மையாதல். ''மழறுதேன் மொழியார்கள்'' (திவ். திருவாய். 6 ః 2ః 5).

மழ - மட - மடம் = 1. இளமை. ''அஞ்சன் மடவனமே'' (நள. சுயம். 27). 2. மென்மை. ''தெளிநடை மடப்பிணை'' (புறம். 23.). 3. அழகு. ''மடக்கணீர் சோரும்'' (சிலப். 17, உரைப்பாட்டு மடை). 4. அறியாமை. ''மடப்பட லின்றிச் சூழு மதிவல்லார்'' (சீவக. 1927). 5. கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை, மகளிர் குணம் நான்கனுள் ஒன்று. ''வாலிழை மடமங்கையர்'' (புறம். 11).

மட - மடப்பு - மடப்பம் = மடம்.

மடம் - மடந்தை =1. பெண்டு. ''இடைக்குல மடந்தை'' (சிலப். 16 ః 2). 2. இளம்பெண் பருவம் ஏழனுள் ஒன்று. 14 - 19 அகவைப்பட்டது (பிங்.).

தெ. மடந்தி, க. மடதி.

மடவரல் (மடம் வரல்) = 1. மடப்பம். ''மடவரலுண்கண் வாணுதல் விறலி'' (புறம். 89). 2. பெண்டு. ''மடவரனோக்கம்'' (குறள். 1085).

மடவன் = அறிவிலான். மடவள் = அறிவிலாள்.

மடவார் = 1. மகளிர். 2. மூடர்.

மழ - மக = 1. இளமை (யாழ். அக.). 2. பிள்ளை, குட்டி. ''மந்திம்மக'' (சீவக. 1897). 3. மகன், மகள். ''மகமுறை தடுப்ப'' (மலைபடு. 185).

மக - மகன் (க. மகம்). = 1. ஆண்குழந்தை. 2. புதல்வன். ''தன்மகன் றாயுயர்வும்'' (தொல். கற்பு. 31). 3. ஆடவன். 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' (குறள்.110). 4. மாந்தன். 5. சிறந்தோன். ''நூல்கற்ற மகன்றுணையா நல்ல கொளல்'' (நாலடி. 36). 6. போர் மறவன். ''வேந்தன் மனம்போல் வந்த மகன்'' (பு.வெ.2 ః 5). 7. கணவன். ''நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம்'' (மணிமே. 21 ః 29). தெ. மகண்டு.

மக - மகள் = 1. பெண்குழந்தை. 2. புதல்வி. ''நல்கூர்ந்தார் செல்வ மகள்'' (கலித். 56). 3.பெண்டு. ''ஆயமகள் நீயாயின்'' (கலித். 107).4.மனைவி. ''மனக்கினி யாற்கு நீமகளாய தூஉம் '' (மணிமே. 21 : 29).

மகள் - மகடு- மகடூஉ. ''மகடூஉ வறிசொல் '' (தொல். சொல்.2).

மக - மகவு = 1. குழந்தை. ''மகவு முலைவருட'' (கம்பரா. தைல. 13.). 2. குரங்கின் குட்டி (தொல். மரபு. 14).

மகன் - (மகர்) - மகார் (பலர்பால்) = 1. புதல்வர். ''அவுணர் கோன் மகார்'' (கந்தபு. மூவாயிர. 58). 2. சிறுபிள்ளைகள். ''இளந்துணை மகாரின்'' (பதிற்றுப். 71 :7).

மகார் - மார். (பலர்பாலீறு). எ-டு: அண்ணன்மார், தாய்மார்.

மகள் - மகளிர் (பலர்பால்) = பெண்டிர். ''வசையில் வாழ்க்கை மகளிர் மலைத்தலல்லது'' (புறம். 10).

மகன் - மான் - மன் (ஆண்பாலீறுகள்).

எ-டு : பணிமகன் , பெருமான் , செறுமன்.

மகள் - மாள் (பெண்பா லீறுகள்).

எ-டு : பணிமகள், வேண்மாள்.

மக + கள் = மக்கள் (மரூஉப் புணர்ச்சி).

மக்கள் - (இருபாற் பொதுப் பலர்பாற் பெயர்) = 1. சிறு பிள்ளைகள்: எ-டு: ஆண்மக்கள், பெண்மக்கள், இருபால் மக்கள். 2. வளர்ச்சியுற்ற மாந்தர். எ-டு: ஆண்மக்கள் (ஆடவர்), பெண்மக்கள் (பெண்டிர்), இருபால் மக்கள் (இருபான் மாந்தர்).

''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' (தொல். மரபு. 33)

''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே'' (தொல். கிளவி. 1)

என்று தொல்காப்பியங் கூறுவதால் இலக்கண நூலிலும் அறநூலிலும் பண்பட்ட மாந்தரே மக்களென்றும், பண்படா மாந்த ரெல்லாம் மாக்களென்றும், குறிக்கப்படுவரென்பது போதரும்.

எ-டு :

''விலங்கொடு மக்க ளனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்.'' (குறள். 410)

''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்.'' (ஷ 420)

*மகன் என்னும் தென்சொல், கோதிய (*Gothic*) மொழியில் மகுஸ் (*magus) *என்றும், கேலிய (*Gaelic*) மொழியில் மக் (*mac*)என்றும், திரிந்து வழங்குகின்றது.*

"Mac (mak) A Gaelic word signifying son, and prefixed to many surnames, as Mac Donald, Mac Grigor, &c. It is synonymous with *son* in names of Teutonic origin.... It is allied to Goth *magus*. a son. fem. *magaths* (G. *magd*. a maid)" I.D. E.L. Vol. III p.91.

Gadhelic (Gaelic), a. Of or pertaining to that branch of the Celtic race which comprises the Erse of Ireland. the Gales of Scotland and the Manx of the Isle of Man.

- The Imperial Dictionary of the English Language, Vol. II, p.352.

Goth, n. One of an ancient Teutonic race of people, first heard of as inhabiting the shores of the Baltic.-Do. p. 413.

Mac *என்னும் கேலியச் சொல்* Mc *என்று குறுகியும் வழங்கும்.*

எ-டு: Mc Adam.

மகன் - மான் - மன் = மாந்தன்.

மன்பது = மக்கட்டொகுதி. ''மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்'' (பரிபா. 15 : 52).

மன்பது - மன்பதை = 1. மக்களினம். ''மன்பதை காக்குநின் புரைமை'' (புறம். 210). 2. படைமக்கட் டொகுதி. ''மன்பதை பெயர'' (பதிற்றுப். 77 : 3).

மன் - Teut. *man*, Skt. *manu*.

"MAN, a human being. (E). ME. man, Chaucer, C.T. I., 43. AS. *mann*, also *mon*; Grein ii, 105 + Du *man*; Icel. *madr* (for *manur*): also *man*; Dan. *mand* (with excrescent d); Goth. *mann*; a, G. *mann*; (the G. *mensch* = *mannich*, i.e. mannish, human). Allied to Skt *manu*. Vedic *manus* a man, B. connected by some with Skt. *man*, to think. See Mind. But it is unlikely that the orig. sense could have been "thinker"

- Skeat's Etymological Dictionary of the English Language, p.358.

மன் - வ. மநு.

மநு, thinking creature, man, manu.

மநுஷ, a man.

மநுஷீ, a woman.

மநுஷ்ய, human, manly; human being, man.

மநுஷ்வத், as a man.

மந்வந்தர (nt), age of a manu.

மாநவ, Descended from or belonging to man or manu.

மாநவஸ்ய, to act like man.

மாநவீய, descended or deirved from manu.

மாநுஷ்ய, human nature or condition.

- Monier William's Sanskrit - English Dictionary

Man *என்னும் ஆங்கிலச் சொலலையும் மநு என்னும் சமற்கிருதச் சொல்லையும் முறையே* mind, *மநஸ் என்னும் சொற்களோடு தொடர்புபடுத்தி* thinking animal, thinking creature *என்று மேலையர் சிலர் பொருள்கூறுவர். அது தவறென்பது அடுத்த கட்டுரையில் விளக்கப்படும்.*

இடைச் சேர்ப்பு:

முகு - முக்கு = இருதெரு கோணம்படக் கூடும் மூக்குப் போன்ற மூலை. முக்குவேறு ; முடுக்கு (சந்து) வேறு.

முக்கு - முக்கை = ஆறு திரும்பும் அல்லது ஈராறு கூடும் இடத்து முக்குப் போன்ற மூலை.

முக்கு - மூக்கு = 1. முகத்தின் முன் நீண்டுள்ள உறுப்பு. 2. பறவை யலகு. 3. யானைத் துதிக்கை. 4. கலங்களின் வாயில் மூக்குப்போல் நீண்டுள்ள உறுப்பு. 5. இலைநுனி. 6. கொண்டைக் கடலைப் பயற்றின் முனை. 7. வித்தின் முளை. 8. வண்டிப்பாரின் மூக்கு வடிவான முனைப்பகுதி.

*ம., தெ., து. மூக்கு., க. மூகு (*g).

மூக்கு - மூக்கன் = 1. எடுப்பான மூக்குள்ளவன். 2. மீன்கொத்தி.

13. மன்

உன் - உன்னல் = (வி.) 1. கருதுதல். ''உன்னலே தியானம்'' (கந்தபு. திருநகர. 81). 2. நினைத்தல். (பெ.) 1. கருதுகை (பிங்.) ''உன்னல் காலே ஊன்றல் அரையே முறுத்தல் முக்கால் விடுத்தல் ஒன்றே.'' (தொல். உரை). 2. மனம் (பிங்.).

ம. உன்னு, க. உன்னிசு.

உன்னலர் = கருதார், பகைவர்.

உன் - உன்னம் = 1. கருத்து (திவா.). 2. ஊழ்கம் (தியானம்). ''அகத்தியான் பள்ளியை யுன்னஞ் செய்த'' (தேவா. 847:2) 3. மனம் (திவா.) 4. கருதுங் குறி, குறியாகக் கொள்ளும் மரம். ''ஓடா உடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும் '' (தொல். புறத். 5).

உன் - உன்னி. உன்னித்தல் = ஊழ்குதல் (தியானித்தல்). ''கண்ணபிரான் கழல் வாழ்த்துமி னுன்னித்தே'' (திவ். திருவாய். 4 : 6 : 9).

உன்னி = ஊழ்குதற்குரிய பொருள். ''ஞால முன்னியைக் காண்டு நாங்கூரிலே'' (திவ். பெரியதி. 10 : 1: 3).

உன்னிப்பு = 1. கவனிப்பு. அவன் உன்னிப்பாய்க் கேட்கிறான். 2. உய்த்துணர்வு (ஊகிப்பு). 3. தப்பாக் குறிப்பு. இருட்டிலும் உன்னிப்பாக எடுத்துவிட்டான் (W.). 4. மதிக் கூர்மை (W.).

உன் - முன் = மனக்குறிப்பு. ''முன்னுற வுணர்தல் '' (தொல். களவு. 36).

க. முன்னு.

முன் - முன்னம் = 1. கருத்து. ''முன்ன முகத்தி னுணர்ந்து'' (புறம்.3). 2. குறிப்பு. ''முன்னத்தா னொன்று குறித்தாய்போற் காட்டினை'' (கலித். 61). 3. குறிப்புப் பொருள். முன்னவிலக்கு (தண்டி. 42). 4. இம் மொழி சொல்லுதற்கு உரியாரும் கேட்டற்கு உரியாரும் இன்னார் எனப் படிப்போர் அறியுமாறு செய்யப்படும் செய்யுளுறுப்பு. ''முன்னம் பொருளே துறைவகை எனாஅ'' (தொல்.செய். 1.) 5. மனம் (திவா.).

முன்னம் - முனம் - மனம் = கருதும் புலம்.

முன் - மன் = சூழும் மந்திரம் (பிங்.).

மன்னுதல் = கருதுதல், சூழ்தல்.

மன் + திரம் = மந்திரம்.

ஒ.நோ : மன் +து = மன்று - மந்து - மந்தை.

மந்திரம் = 1. திண்ணிய எண்ணம் (பிங்.), மனவுறுதி. 2. சூழ்வு (ஆலோசனை) (பிங்.). 3. அரசியல் பற்றிய அரசன் அல்லது அமைச்சன் சூழ்வு. 4. அமைச்சர் குழு, மந்திரிகள் சவை. ''மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன்'' (கம்பரா. உருக்காட். 31). 4. மறைமொழி.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'' (தொல்.செய். 176)

5. திருமூலர் திருமந்திரம் போன்ற நூல். 6. சிவபோற்றி (சிவாயநம) என்பது போன்ற உருப்போடும் திருமொழி. 7. திருவைந்தெழுத்தி லுள்ள உயிர்நாடி யெழுத்து, சி. ''நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்'' (திருமந். 2672.) 8. வசிய மந்திரம். 9. சாவிப்பு மந்திரம். 10. பேய் மந்திரம். 11. மாயம்.

மந்திரம் - வ. மந்த்ர (mantra).

மந்திரக்கலப்பை = மந்திர மன்றாட்டிற்குரிய பண்டங்கள். ''மானுரி மடியு மந்திரக் கலப்பையும்'' (பெருங். உஞ்சைக். 36 : 226).

மந்திரக்காரன் = மந்திரஞ் செய்பவன் (W.).

மந்திரக்கிழவர் = சூழ்வுக்குழுவார். ''மந்திரக் கிழவரை வருகென் றேவினான்'' (கம்பரா. அயோத். மந்திர. 4).

மந்திரக்கூறை = பூசைப்பட்டு (W.).

மந்திரக் கோட்டி = சூழ்வுக்குழு. ''மனமுணக் கிளந்த மந்திரக் கோட்டியுள்'' (பெருங். உஞ்சைக். 36 : 277).

மந்திரக்கோடி = மந்திர வாழ்த்தொடு மணமகள் பெறும் புடைவை. ''மந்திரக் கோடி யுடுத்தி'' (திவ். நாய்ச். 6 : 3).

மந்திரக்கலை = மந்திர நூல்.

மந்திரக்காவி = செங்காவி தோய்த்த துறவியுடை (W.).

மந்திரச் சுற்றம் = மந்திரக் கிழவர். ''மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி'' (மணிமே. 28 : 184).

மந்திரச்சாலை = அரசன் அமைச்சரொடு சூழ்வுசெய்யும் தனிமண்டபம். ''மாடக் கோயில் மந்திர சாலை சேர்ந்தான்'' (சூளா. குமார.41).

மந்திரத்தோழி = தலைவியின் அணுக்கப் பாங்கி. ''யாப்பியா யினியெனு மந்திரத் தோழியொடு'' (பெருங். மகத. 9 ஃ 54).

மந்திரத்தெய்வம் = மந்திரத்திற்குரிய தெய்வம்.

மந்திர நாயகன் = மந்திரத் தெய்வம்.

மந்திரப் படலம் = அரசன் சூழ்வு செய்வதைக் கூறும் பாவியப் (காவியப்) பகுதி.

மந்திரப் பொருத்தம் = மந்திரம் ஓதுபவனுக்கும் மந்திரத்திற்குமுள்ள பொருத்தம்.

மந்திரப் பெருள் = மந்திரச் செய்தி. ''மந்திரப் பொருள்வயின் ஆ அ குநவும்'' (தொல். எச்ச. 53).

மந்திர பதம் = மந்திரிப் பதவி.

மந்திரம் பண்ணுதல் = 1. மந்திரம் ஓதுதல். 2. பேய்மந்திரஞ் செய்தல். 3. மாயஞ் செய்தல்.

மந்திரமாலை = திருமூலர் திருமந்திரம். ''ஞானம் முதல் நான்கு மலர் நற்றிருமந் திரமாலை'' (பெரியபு. திருமூல. 26).

மந்திரமைந்து = ஐந்தெழுத்து மந்திரம். ''மந்திரமைந்து ....அதன் செவிச் செப்புகின்றான்'' (சீவக. 945).

மந்திரர் = அமைச்சர் (சூடா.).

மந்திரவாள் = 1. மந்திர ஆற்றல் வாய்ந்த வாள் (W.). 2. அரசன் வாள் (W.).

மந்திரவாளி = மந்திரக்காரன்.

மந்திரவோலை = அரசன் திருமுகம். ''மந்திர வோலை போக்கிய வண்ணமும்'' (பெருங். மகத. 2 ஃ 39).

மந்திரம் - மந்திரி.

மந்திரித்தல் = (செ. குன்றாவி.) 1. சூழ்தல் (ஆலோசித் தல்). ''மகட்பேசி மந்திரித்து'' (திவ். நாய்ச். 6 ஃ 3). 2. மந்திரத்தால் ஊழ்குதல். ''மந்திரிப்பார் மனத்து ளானை'' (தேவா. 590 ஃ 4). 3. மந்திர வலிமையால் எதிரியை அடக்குதல் அல்லது பிறரைக் கட்டுப்படுத்து தல். 4. மந்திரத்தால் நோய் நீக்குதல். 5. மந்திரம் ஓதிக் குழையடித்தல். 6. மந்திர ஆற்றலுண்டாக்குதல். நீரை மந்திரித்துக் கொடுத்தான்.

(செ.கு.வி.) மந்திரம் ஓதுதல். மந்திரித்தல் என்னும் வினைச் சொல் வடிவம் வடமொழியில் இல்லை.

மந்திரி = (பெ.) 1. அமைச்சன். ''பழுதெண்ணு மந்திரியின்'' (குறள். 639). 2. வருங்காலச் செய்தி சொல்வோன். ''மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்'' (வெற்றிவேற்கை, 8)

மந்திரி = வ. மந்த்ரின் (mantrin).

தொல்காப்பியம் அஷ்டாத்யாயீ என்னும் பாணினீயத்திற்கு முற்பட்ட கி.மு. 7ஆம் நூற்றாண்டு நூல். அது ஆரியர் வருகைக்கு முற்பட்ட குமரிநாட்டு முழுத் தூய தமிழ் நூல்களின் தொகுப்பென்பது பனம்பாரனார் சிறப்புப் பாயிரத்தாலும் தொல்காப்பியரின் கூற்றுகளாலும் அறியப்படும்.

''பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே'', (எச்ச. 59)

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
....
யாப்பின் வழிய தென்மனார் புலவர்'', (செய். 78)

''எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப'', (செய்.162)

''அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான'', (செய். 163)

''நிறைமொழி மாந்தர் ... மந்திரம் என்ப'' (செய். 176)

என்னும் நூற்பாக்களால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழில் மந்திரம் இருந்ததென்பதும், 'வாய்மொழி' என்பது போன்றே 'மந்திரம்' என்பதும் தென்சொல் என்பதும், தெற்றெனத் தெரிந்து கொள்க.

சிலர், வாய்மொழி யென்றொரு சொல் தமிழிலிருப்பதால், 'மந்திரம்' என்பது வடசொல்லெனக் கருதுவர். தமிழ் முன்மொழியும்

இயன்மொழியும் வளமொழியும் வழங்குமொழியு மாகுமென்றும், வடமொழி பின்மொழியும் திரிமொழியும கலவை மொழியும் இலக்கிய நடைமொழியு மாகுமென்றும் வேறுபாடு அவர் அறிதல் வேண்டும்.

ஐம்பெருங் குழுவையும் எண்பேராயத்தையும் துணைக் கொண்ட செங்கோற் கோவரசு குமரிக்கண்டத்திலேயே தோன்றி விட்டதனாலும், அக் காலத்து அரசன் தெய்வத்தோடொப்பக் கருதப் பட்டதனாலும், அரசனது கட்டளையை எழுதுவோர் திருமந்திர வோலை யென்றும், அவரின் தலைவர் திருமந்திர வோலைநாயகம் என்றும், தொன்றுதொட்டுச் சொல்லப்பட்டு வந்தனர். ஆரியர் வருகைக்கு முந்திய தனித் தமிழிலக்கியம் அனைத்தும் அழிக்கப் பட்டுவிட்டதனால், பண்டை வழக்குச் சொற்களை இன்று கல்வெட்டுகளிலேயே காண முடிகின்றது.

மந்திரம் என்னுஞ் சொல்லிற்கு மன் என்பது மூலமாக வடமொழி அகரமுதலிகளிற் காட்டப்பட்டிருப்பதனாலேயே 'மந்திரம்' என்பது வடசொல்லாகிவிடாது. மன் என்பது முன் என்பதன் திரிபென்று மேலே விளக்கப்பட்டுள்ளமை காண்க.

உன் - முன் - முனம் - மனம் - வ. மனஸ் - L. *mens*.மனஸ் - மனசு - மனது என்னும் திரிபு தமிழுக்கு வேண்டியதில்லை. ஆங்கிலத்திலுள்ள mind என்னும் சொல்லிற்கு *men* என்பதே மூலமாகக் காட்டப்பட்டுள்ளது. அது இலத்தீன் சொல்லினின்று அமைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. ஒ.நோ : உரம்- வ. உரஸ்.

கிளேன் (Klein), தம் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகர முதலியில், மனத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லின் இனச் சொற்களையும் மூலத்தையும் தொடர்புள்ள திரிசொற்களையும் பின்வருமாறு காட்டுகின்றார்:

E. *mind*, n. ME. *mind, mynd*, *minde*, *munde*, fr. OE. *gemynd.* 'memory, remembrance,' rel. to OHG. *gimunt*, Goth. *gamunds*, of s.m., OS. *minnea,* OHG. *minna*, OFris., MDu., MHG., G. *mine* (orig. 'memory, loving memory'), ON. *minni*, 'mind', Dan. '*minde*, 'memory, mind', Goth. *muns*. 'thought', ***munan***, 'to remember', fr. I. = E. base ***men***, 'to think, remember, have one's mind aroused, apply oneself 'to, whence also OI. ***matih***, ***matih*** (for ***mantis***), 'thought, opinion', ***manas***, 'sprit, passion', ***manyat***, 'thinks', ***munih***, 'inspired', Toch. ***amna***, 'thought', Arm. ***i-manam***. 'I understand', Gk. ***menos***, 'desire, ardor, spirit, passion', ***memona***, I remember, wish, long, yearn, strive', ***mentor***, 'adviser, ***mnasuai***, to remember, ***mimneskein*** 'to remind, call to mind', ***mnesis***,

'remembrance, memory', ***meesios***, pertaining to memory, ***amnesia***, forgetfulness, ***mneme***. remembrance, memory, ***mnemon***, 'mindful, remembering', ***maemonikos***, 'of memory, having a good memory', ***mainesuai***, 'to be mad', ***mania***, 'madness, frenzy', ***mantis***, 'seer', ***manteia***, 'oracle, divination' ***matos***, in ***automatos***, 'acting of one's own will (compounded of ***autos***, 'self' and ***mntos***, 'thinking'), L. ***mens***, gen. ***mentis*** (for I. = E. ***mntis***), 'mind, understanding, reason', ***menini***, ***meminisse***, 'to remember', ***menere***, ***monere***, 'to remind, warn, advise, instruct', ***monstrun*** an evil omen, portent, mouster (for ***mone strom***, lit. 'that which serves as a warning' fr. ***morere***), ***monstrere***, 'to show, point out, indicate', Lith. ***mintis***, 'thought, idea', ***utmintis***, 'remembrance', OSlav. ***mineti***, to believe, think', ***pameti***, 'remembrance', Russ. ***pamjat***, 'memory', OIr. ***domoiniur***, 'I believe, think'.

இனி அவர் காட்டும் திரிசொற்கள் வருமாறு:

minnesinger, minikin, admonish, amentia, amnesia, amnesty, anamnesis, automatic, clymnestra, comment, dement, dementia, demonstrate, epimethens, eumenies, bentamente, Macnad, man, manas, - mancy, mandarin, mania, mantic, mantis, mantra, mathematic, memento, mental, mention, mentor, mnemonic, mnesie, mnestic, monition, monitor, mostrance, monster, monument, muse, muster, necromaney, promotheus, reminiscence, remonstrance, remonstrate, summont, ardamente, Trichomanes, Zamenis.

கிளேன் மதி, man *என்னுஞ் சொற்களை மன் என்னுஞ் சொல்லொடு தொடர்புபடுத்தியுள்ளார். அஃதொன்று தவிர மற்றவை யெல்லாம் சரியே. அவர் காட்டிய சொற்களினின்று, மனம் என்பது தூய தென்சொல் லென்றும், அதன் மூலமான மன் என்பதே* mind *என்பதற்கும் அதன் இனச்சொற்கட்கும் மூலமென்பதும், தெற்றெனத் தெரிந்துகொள்க.*

மாந்தனைக் குறிக்கும் man *என்னுஞ் சொல் முந்தின கட்டுரையிற் கூறியவாறு மகன் என்பதன் திரிபென்றும், மனத்தைக் குறிக்கும்* mind *என்னுஞ் சொல், முன் என்னும் தென்சொல் வேரின் திரிசொல்லென்றும், வேறுபாடறிந்து கொள்க.*

மதி என்னும் சொல் வரலாறு வேறொரு கட்டுரையிற் கூறப் படும்.

ஓரறிவுயிருக்கு மேம்பட்ட உயிரினங்கட்கெல்லாம் கருத்துப் புலன் இருப்பதால், man = thinking animal *என்பது பொருந்தாது.*

mind *என்னுஞ் சொல் வரலாற்றில்* AS. *gemynd*, memory, mind, thought (where the prefixed *ge* makes no difference); Formed (with the usual

vomel - change of *u* to *y*) from AS. *munan*, to think *என்று கீற்று(*Skeat*) தம் ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியிற் குறிக்கின்றார்.*

munan என்பதில் mun *முதனிலை;* an *நிகழ்கால வினையெச்சவீறு. முன்(னு)வான் - முன்னான்- முனன். 'வான்' . நி.கா. வி. எ. ஈறு. வான் - ஆன்- அன், 'ஆன்' என்பதே மலையாள நி.கா.வி. எ. ஈறாயிருத்தல் காண்க.*

14. தெய்வம்

நன்மை செய்யும் பொருள்களை நன்றியறிவு பற்றியும், தீமைசெய்யும் பொருள்களை அச்சம் பற்றியும், மாந்தன் தொன்று தொட்டு வணங்கி வந்திருக்கின்றான். ஆவும் மரமும் போல்வன நன்மை செய்வன; பாம்பும் பேயும் போல்வன தீமை செய்வன; நீரும் நெருப்பும் போல்வன நன்மையுந் தீமையுஞ் செய்வன. பேயும் ஒரோவழி நன்மை செய்ததாகக் கதைகளுண்டு.

ஐம்பூதச் சேர்க்கையான உடம்பிற்கு ஐம்பூத உதவியும் வேண்டியுள்ளது. ஆயினும், தொட்டமட்டிற் சுடவுங் கொல்லவும் வல்ல தீ வெளியொழிந்த ஏனையவற்றிற் கொடியதாதலால், தீமையைக் குறிக்குஞ் சொல்லே தீப்பெயரின்று தோன்றியுள்ளது.

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்'' *(குறள். 202)*

என்னும் திருவள்ளுவர் வாய்மொழிச் சொற்பின்வருநிலையும் அதைத் தெளிவாய்க் காட்டும்.

இனி, இருளும் ஒரு பொறுக்கொணாத துன்பமாகி, தீயகம் என்னும் எரிநரகிற்கு இருளுலகம் என்றொரு பெயரும் ஏற்பட்டிருப்பதால், கதிரவ வடிவிற் பகலிருளையும் விளக்கு வடிவில் இரவிருளையும் போக்கும் தீயும், கண்ணிற்கு இன்றியமையாத ஒளியைத் தருவதுடன், உடம்பிற்கும் உணவிற்கும் வேண்டிய வெம்மையையும் உதவுகின்றது பற்றி, தெய்வம் எனப் போற்றத்தக்க பூதமுந் தீயேயாகி, தெய்வம் என்னும் பெயரும் தீயின் பெயரினின்றே தோன்றியுள்ளது.

நிலவுலகத்தில் இயற்கையாகவும் செயற்கையாகவும் தோன்றுந் தீ, பெரும்பாலும் பொருள்கள் ஒன்றோடொன்று உரசுவதினாலேயே ஏற்படுகின்றது. அதனால், உரசுதலைக் குறிக்குஞ் சொல்லினின்றே நெருப்பின் பெயர்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று தீ என்பது.

உல் - உர் - உரு. உருத்தல் = அழலுதல்.

உல் - உர் - உரி - எரி = நெருப்பு. உல்- உள் - ஒள் - ஒளி. உல் - துல் - துள்- தொள் - தோள் - தோய் - தேய்.

உரசுதல் என்பது, பொருள்கள் ஒன்றோடொன்று பொருந்தி, முன்னும் பின்னும் அல்லது மேலுங் கீழுமாகத் தொடர்ந்து இயங்குதல்.

உல்லுதல் = பொருந்துதல். உல் - ஒல்.

உல் - உர் - உரை - உரைசு - உரசு. உரை - உராய்.

உர் - உரி- உரிஞ்- உரிஞ்சு.

தேய்தல் = உரைசுதல், உரைசிக் குறைதல், குறைதல், மெலிதல், வலிகுன்றுதல், கழிதல், அழிதல், சாதல்.

ம. தேயுக, க. தே.

தேய்த்தல் = உரைசச் செய்தல், குறைத்தல், அழித்தல், தேய்த்துத் துலக்குதல், தேய்த்துக்துடைத்தல். ம. தேயிக்க.

தேய்ப்புத்தாள் = உப்புத்தாள்.

தேய்ப்புப் பலகை = சாணைக்கல்.

தேய்கல் = உரைகல்.

தேய்மானம் = தேய்வு. தேய்வு - தேய்வடை - தேய்கடை = தேய்ந்த காசு, தேய்ந்த பொருள்.

தேய் - தேய்வை = தேய்த்த சந்தனத் துவை. ‘‘நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை’’ (திருமுருகு. 33).

தேய்ப்புப்பெட்டி = ironing box.

தேய் - தேயு = தீ, நெருப்பு (பிங்.).

தேயு - தேசு = 1. ஒளி. 2. பொன் (சது.). 3. அழகு. ‘‘திருமா மணிவண்ணன் தேசு’’ (திவ். இயற். 3 : 9). 4. புகழ். ‘‘நும்முடைத் திருவுந் தேசும்’’ (சீவக. 771). 5. அறிவை (ஞானம்). ‘‘தேசுறு முண்பார்க் கென்றே தேறு’’ (சைவச. பொது. 561). 6. பெருமை. ‘‘வலிச்சினமு மானமுந் தேசும்’’ (பு.வெ. 2 : 4). 7. வீரியம் (W.).

தேசு - வ. தேஜஸ்.

தேசு - தேசி = அழகி. ‘‘தேசியைச் சிறையில் வைத்தான்’’ (கம்பரா. அங்கத. 4).

தேய் - தேயம் = ஒளி. ‘‘அரனம் பலம்போற் றேயத்ததாய்’’ (திருக்கோ. 39).

தேய் - தேய்வு - தேவு -1. தெய்வம் (பிங்.). ''நரகரைத் தேவு செய் வானும்'' (தேவா. 696 : 2). ''தேவிற் றிருமாலெனச் சிறந்த தென்பவே'' (திரு.வெ.) 2. தெய்வத் தன்மை ''அயன்றிருமால் செல்வமு மொன்றோ வென்னச் செய்யுந் தேவே'' (சி.சி. காப்பு. ஞானப். உரை).

தேவில் = திருக்கோவில். ''கருவுடைத் தேவில்களெல்லாம்'' (திவ். திருவாய். 4 : 4 : 8).

தேவு - தேவன் = 1. கடவுள், ''தேருங்காற் றேவ னொருவனே'' (திவ். இயற். நான்மு. 2). 2. அரசன். ''தேவர் நின்கழல் சேவிக்க வந்தனன்'' (கம்பரா. கங்கை. 39). 3. முக்குலத்தோர் பட்டப்பெயர்.

ம. தேவன், க. தேவ, தெ. தேவுடு, வ. தேவ (d.), இந். தேவ் (d).

தேவன் - தேவி = இறைவி. வ. தேவீ (d).

தேவு - தே = 1. தெய்வம் (பிங்.). ''தேபூசை செய்யுஞ் சித்திரசாலை'' (சிவரக. நைமிச. 20). 2. நாயகன் (இலக். அக.). 3. தெய்வம் போன்ற தலைவன். நாயன்தே - நயிந்தை.

தேய்வு - தெய்வு - தெய்வம் = 1. கடவுள். 2. திணை நிலைத்தெய்வம், சிறுதெய்வம். 'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை'' (தொல். அகத். 18). 3. தெய்வத் தன்மை. ''தெய்வமே கமழு மேனி'' (சீவக. 1718). 4 தெய்வத்தன்மை யுள்ளது. ''தெய்வத் தாற் கூறாயோ'' (திணைமாலை. 90). 5. தெய்வமணம், இயற்கைப் புணர்ச்சி. 6. ஊழ். ''தெய்வத்தா னாகா தெனினும்'' (குறள். 619.)

தெய்வம் என்ற சொல்லிலுள்ள யகரம் அடிப்படை மெய்யெழுத் தென்பதை அறிதல்வேண்டும். இச் சொல் பெருவழக்கான பெருந் தொகைக் கூட்டுச்சொற்களில் நிலை யுறுப்பாக வுள்ளது.

எ-டு: தெய்வமாடுதல், தெய்வாவி (தெய்வ ஆவி), தெய்வவுத்தி (திருமுருகு. 23), தெய்வவுலகம், தெய்வமுறுதல் (சிலப். 19 : 26, அரும்.), தெய்வ ஏற்பாடு, தெய்வமேறுதல், தெய்வமே யென்று, தெய்வக் கண்ணோர் (மணிமே. 27 : 146), தெய்வக் கம்மியன் (திருவாலவா. 26 : 11), தெய்வக்கல் (மணிமே. 26 : 89), தெய்வக்காப்பு (திவா.), தெய்வக்கிளவி (மணிமே. 7 : 97), தெய்வக் குற்றம், தெய்வக்குறை (W.). தெய்வகணம் (மணிமே. 21 : 130), தெய்வக்களை, தெய்வ கற்பனை (கட்டளை), தெய்வங் கொண்டாடி (நாஞ்.), தெய்வங் கொள்கை (நன். பாயி. 26), தெய்வச்சாயல் (W.). தெய்வச்சிலை, தெய்வச்சிலையார், தெய்வச் சிலையான் (திவ். பெரியதி. 9 : 4 : 3), தெய்வச் செயல் (கம்பரா. அதிகாய. 194), தெய்வஞ்

செப்புதல் (பதிற்றுப். 82 : 1), தெய்வத்தச்சன் (கம்பரா. ஊர்தேடு. 18), தெய்வத்தன்மை, தெய்வத் தீர்ப்பு, தெய்வத் தீர்வை, தெய்வப்பகை (சீவக. 364), தெய்வப்படை (கம்பரா. அதிகாயன். 50), தெய்வப்பலகை (திருவாலவா. 15 : 4), தெய்வப் பாடல் (சிலப். 3 : 135, உரை), தெய்வப்பாவை (சீவக. 657), தெய்வப்பிறப்பு, தெய்வப் பிறவி, தெய்வப் புணர்ச்சி (திருக்கோ. 7, கொளு), தெய்வப் புலமை (குறள். சிறப்புப் பாயிரம்), தெய்வப்புள் (திவ். பெரியதி. 3 : 3 : 6), தெய்வப் பெண் (திருவாச. 19 : 6), தெய்வபத்தி, தெய்வமணம், தெய்வமணி (பிங்.) (கம்பரா. உருக்காட்டு. 68.), தெய்வ மயக்கம் (சிலப் 12 : 51, உரை), தெய்வமயக்கு (மணிமே. 21 : 109), தெய்வமரம் (பிங்.) தெய்வமாடம் (பெருங். இலாவாண. 7 : 143), தெய்வமுனி, தெய்வ வணக்கம் (காரிகை. பாயி. 1, உரை), தெய்வ வீடு (கம்பரா. நகரப். 32).

தெய்விகம் = தெய்வத் தன்மை. 'இகம்' பண்புப்பெயரீறு.

தெய்வு - தெய் = தெய்வம் (பிங்.).

தேய் - தீய். தீய்தல் = 1. எரிந்து போதல். 2. சோறு முதலியன பற்றிக் கருகுதல், பயிர் முதலியன வாடிக் காய்தல்.

தீய்த்தல் = தீய் என்பதன் பிறவினை.

தீய் - தீயல் = காய்ச்சும் குழம்புவகை. எ-டு : உப்புத்தீயல்.

தீய்வு - தீவு - தீவம் = விளக்கு. தீவம் - வ. தீப (p).

தீவு - தீவனம் = 1. எரிவு. 2. எரியும் பசி. 3. பசியைத் தணிக்கும் உணவு. 4. கால்நடைக்கு உணவாக இடும் கூளம்.

தீவனம் - வ. தீபந.

தீய் - தீ. தீதல் = 1. எரிந்து போதல். 2. சோறு கறி பற்றிக் கருகுதல். 3. பயிர் வாடிச் சருகாதல். 4. சினத்தல். 5. அழிதல்.

தீத்தல் = தீ என்பதன் பிறவினை.

தீ = 1. நெருப்பு. 2. ஒளிவிளக்கு. 3. செரிமான வெப்பம். 4. கடும்பசி. 5. எரிநரகம். 6. தீமை. 7. சினம்.

தீ - தீங்கு = 1. தீமை. 2. துன்பம். 3. குற்றம்.

தீ - தீமை = நன்மைக்கு எதிரானது.

தீ - தீம்பு = 1. தீமை. 2.கேடு. 3. குறும்பு.

தீய = (பெ.எ.) 1. கெட்ட. 2. கேடு செய்யும்.

தெய்வம் - Gk. ***theos***, L. *deus*, Skt. *dyaus*, god, deity.

E. ***deism***, F. *deisme*, f. L. *deus* + ism.

E. ***deity***, ME. *deite*, f. LL. *deitatem* f. *deus*, god.

E. ***divine***, ME. f. OF. *devin*, f.L. *divinus*, f. *divus*, god like.

E. ***theism***, f. Gk. *theos* + ism.

தேவன் - Skt. ***deva***, a deity, god, R.V., heavenly, divine, R.V.

devaka, divine, celestial; a god, deity.

devakiya, divine, belonging or relating to a divinity.

devata, godhead, divinity, R.V. A.V.

devatya, having as one's deity, sacred to a deity.

devaya, loving or serving the gods, religious.

devala, an attendant upon an idol (who subsists on the offerings made to it.)

devika, appertaining to or deived from a deity.

devila, righteous, virtuous, appertaining to a deity, divine.

devi, a female deity, goddess, R.V.

devya, divine power, godhead, R.V.

daiva, belonging to or coming from the gods, divine, celestial. AV.

div (2) to shine, be bright, Zd, **div**, lit. ***dyvas***.

div (3) heaven, sky, day.

ஒளிதரும் கதிரவனும் திங்களும் வானத்தில் தோன்றுவத னாலும், திங்கள் தோன்றாத வேளையிலும் வெள்ளிகளால் வானம் சற்று விளக்கம் பெறுவதனாலும், வானமும்; பகல் ஒளி வேளையாதலாற் பகலும்; ஒளியைக் குறிக்கும் தேயு என்னும் சொல்லினின்று திரிந்த திவ் என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பட்டன.

பகலும் இரவும் சேர்ந்தே ஒரு நாளாயினும், இரவு தொழில் செய்யாது உணர்ச்சியற்று உறங்கும் வேளை யாதலால், அதைக் கணக்கிற் சேர்க்காது பகலையே நாளென வழங்குவது பெரும் பான்மை உலக வழக்காகும். இருநாள் வேலையென்பது பொதுவாக இருபகல் வேலையையே உணர்த்துதல் காண்க.

divan, a day.

divas, sky, heaven. *divas - pati*, sky - lord.

divasa, daytime, day.

diva, by day. *divā - kara*, day maker, the sun.

divi, heaven - dewelling.

divo, born or descended from heaven.

divya, divine, heavenly, celestial.

dyo, Guna form of *dyu* in comp.

dyo - *kāra*, maker of brightness, builder of splendid edifices.

dyau, Vriddhi form of *dyu* in comp; ***dyau - toka***, the heavenly world.

dyaur, heaven, sky, day, RV, AV.

dyaush - *pitri*, Heaven - Father X *dyāvā - pritivi*, Earth - Mother.

dyut, shining, splendour, ray of light, R.V.

dyuti, splendour, brightness, lusture, majesty, dignity.

dyutita, enlightened, illuminated, shining.

dyota, light, brilliance.

DYAS and PRITHIVI

Dyaus says Max Muller, is one of the oldest gods, not only of the Vedic Aryans, but of the whole Aryan race. He was worshipped before a word of Sanskrit was spoken in India or a word of Greek in Greece, Hibbert Lectures, pp. 276, 288

"IF. I were asked what I consider the most important discovery which has been made during the nineteenth century with respect to the ancient history of mankind. I should answer by the following short line.

'Sanskrit DYAUSH - PITAR-- Greek ZEUS PATER - Latin JUPITER - Old Norse TYR,

'Think what this equation implies! It implies not only that our own ancestors and the ancesstors of Homer and Cicero (the Greeks and Romans) spoke the same language as the people of India - this is a discovery which, however incredible it sounded, at first, has long clased to cause any surprise - but it implies and proves that they all had once the same faith, and worshipped for a time the same supreme Deity under exactly the same name a name which meant Heaven Father." - Nineteenth Century, Oct. 1885.

மாக்கசு முல்லர் இவ்வாறு கூறியது, சமற்கிருதம் ஒரு காலத்தில் வழங்கு மொழியாக இந்திய - ஐரோப்பிய மொழிகட் கெல்லாம் தாயாகவிருந்தது என்னும் தவறான கருத்துக்கொண்ட ஒப்பியன்

மொழிநூல் தொடக்கக் காலமாதலால், ஆராய்ச்சி மிக்க இக் காலத்திற்கு முற்றும் ஒவ்வாது. ஆயின், தீ வணக்கம் முதற்காலத்தில் உலகப் பொதுவாயிருந்த தென்பதும், அதனின்றே தெய்வ வணக்கந் தோன்றிற்றென்பதும், குமரிநாட்டினின்றே மக்கள் உலக முழுதும் பரவியிருப்பதால் தேயு, தேவன், தெய்வம் என்னும் குமரித் தமிழ்ச்சொற்கள் இந்திய - ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் பரவிக் கிடக்கின்றன என்பதும், மறுக்க வொண்ணாத உண்மைகளாகும்.

தேவ என்பதை நிலைச் சொல்லாகக் கொண்ட கூட்டுச் சொற்கள் சமற்கிருதத்தில் நிரம்பவுள.

எ -டு : தேவகணம், தேவகணிகை, தேவகம்மி (கன்மி), தேவ குண்டம், தேவகுரு, தேவகுலம், தேவகோட்டம், தேவகோடி, தேவசபை, தேவடியாள், தேவதாயம், தேவதாளி, தேவதானம், தேவதீபம், தேவதூதன், தேவதேவன், தேவநகர், தேவநாகரம், தேவநாகரி, தேவநாயகன், தேவநிலம், தேவப்புள், தேவபாணி, தேவபூசை, தேவமாசம், தேவமாது, தேவமானம், தேவயாத்திரை, தேவயானை.

15. புகா (உணா)

உண்ணுதல் என்பது உட்கொள்ளுதல்; அதாவது, ஒன்று இன்னொன்றைத் தன்னுள் இழுத்தல் அல்லது சேர்த்தல், வாய்வழி வயிற்றிற்குள் ஒன்றை இடுதலும், நிலம் நீரை உறிஞ்சுதலும், பாதம் செம்பஞ்சுக் குழம்பு நிறத்தைப் பெறுதலும், உண்ணுதலே. இவற்றுள் முதலதே மக்கள் பேச்சிற் பெருவழக்கானது. இறுதியது, சேர்தலின் அல்லது சேர்த்தலின் வகைகளுள் ஒன்றாகும்.

உண்ணுதல் (பெருவழக்கு) = I (முதற்பொருள்) : உணவை உட்கொள்ளுதல். II (வழிப்பொருள்): 1. நுகர்தல் (அனுபவித்தல்). ''தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலனே' (குறுந். 236). 2. கவர்தல். ''அவுண னாருயிரை யுண்ட கூற்றினை'' (திவ். திருக்குறுந். 2). 3. இசைவாதல். ''ஓசை யூட்டினு முண்ணாத வாறும்'' (யாப். வி.ப. 97). 4. ஒரு வினையின் பயனையடைதல். கோவலன் பொற்கொல்லனாற் கொலையுண்டான் (கொல்லுண்டான்.).

உண்ணுதல் என்பது அடிப்படைப் பொருளில் உட்கொள்ளுத லாதலின், பெரும்பாலும் உள்ளிடத்தை அல்லது உட்புகுத்தலைக் குறிக்குஞ் சொற்களினின்றே உண்ணுதல் வினைச்சொற்கள் தோன்றி யுள்ளன.

எ-டு: உள் -உண் - உணா- உண-உணவு.

புகுத்தல் = 1. உட்செல்ல விடுதல். ''வாயில் புகுப்பினும்'' (தொல். பொருள். 149). 2. உட்செலுத்துதல். 3. உண்ணுதல். இப் பொருளில் இச் சொல் வழக்கற்றது.

புகு - புகவு = 1. உட்செல்கை. ''கழூது புகவயர'' (ஐங்குறு. 314). 2. உணவு. ''பழஞ்சோற்றுப் புகவருத்தி'' (புறம். 395).

புகு - புகா = உணவு. ''புகாஅக் காலை'' (தொல். பொருள். 107).

புகா - புவா - புவ்வா = சோறு, உணவு (நாட்டுப்புற வழக்கு).

புக + அட்டு (ஒட்டு) = புகட்டு. புகட்டுதல் = 1. உட்செலுத்து தல். 2. ஊட்டுதல். தாய் குழவிக்குப் பாலுட்டினாள். 3. அறிவுறுத்து

தல். ''அல்லம தேவன் சரிதத் தீம்பால்..... ...புகட்டி னானால்'' (பிரபுலிங். துதி. 11), ''செவிதிறந்து புகட்ட'' (திருவிளை. விடையிலச். 4).

ஒட்டு என்னும் துணைவினையை, தூங்கவொட்டார், வரவொட்டார் என்னும் எதிர்மறை வினைகளிற் காண்க. ஒட்டுதல் = பொருந்துதல். இசைதல். ஒட்டு - அட்டு. எ -டு ஃ வரட்டு (வர + அட்டு) போகட்டு (போக + அட்டு). இவை ஒருமை யேவல். வரட்டும், போகட்டும் என்பன பன்மை யேவல்.

புகட்டு -போட்டு (உ.வ.). குழந்தைக்கு மருந்துபோட்டு.

புக + விடு = புகடு. ஒ.நோ: போகவிடு - போகடு - போடு.புகடுதல் = வீசியெறிதல். இதற்கு ஊட்டுதற் பொருளில்லை.

புகு - Gk.*பகு (*phag*)* ***phagin***, to eat, devour; *phagema*, food; *phagas*, *phagōn*. glutton.

phage *(phag),* combining from meaning 'eater' as in *xylophage*.

phagedena, gangrene, L. *phagedaena* fr. Gk. *phagedaina*, cancer, lit. voracity fr. *phagein*, to eat.

phago, combining form meaning 'eating' as in ***phagocyte.***

phagous, combining form meaning 'eating feeding on' as in *creophagous, xylophagous,* Gk. *phagos*, 'eater of'.

phagus. combining form meaning 'eating', as in *sarco phagas*. L. fr. Gk. *sarkophagos*, orig. flesh - consuming (stone).

phagy, combining form meaning 'eating of' (something specified), as in *anthropophagy*, *geophagy*.

phagia, same as '*phagy*'

*உகரமுதல் அகரமுதலாகத் திரிவது பெரும்பான்மை. தமிழில் மூச்சொலி (*aspirate*) இல்லை. தமிழ் மெய்கள் பிற மொழிகளில் மூச்சொலி மெய்யாகத் திரிவதுண்டு.*

எ -டு: கல் - khal *(பிராகுவீ).*

இங்ஙனம் தமிழ்ச்சொல் தமிழுக்கு அகப்புறமான திரவிடத்திலேயே மூச்சொலி பெறும்போது அதற்குப் புறமான ஆரியத்தில் அதைப் பெறுவது இயற்கைக்கு மாறானதன்று.

ph *என்னும் இணைவரி அல்லது கூட்டெழுத்து, ஆங்கிலத்தில் '*f*' என்றொலிப்பினும், கிரேக்கத்தில் மூச்சொலி கூடிய பகரமே (ப்ஹ) என்பதை அறிதல் வேண்டும்.*

புகு என்னும் தமிழ்ச்சொல், கிரேக்கத்தில் பகு அல்லது பக என்று திரிந்தபின், அதற்கினமான இந்திய ஆரிய முன்னை மொழியில் (pre - Indian East Aryan) புஜ் (bhuj) என்று திரிந்துள்ளது.

ஒ.நோ: பகு - வ. பஜ் (bhaj).

சமற்கிருதத்திற்கு முந்தின வேத மொழியிலேயே இத் திரிபு காணப்படுவதால், இது வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகுமுன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். மிடற்றொலி அண்ணவொலியாகத் திரியும்போது, எடுப்பிலா வொலி (voiceless sound) எடுப் பொலியாகவும், எடுப்பொலி (voice sound) எடுப்பிலா வொலியாகவும் திரிவதே பொதுவியல்பு.

எ-டு: க - ச: குடிகை - குடிசை.

g - j : L. *ago* - Skt. *aj* (to drive).

இம் முறைப்படி, புகு என்பதன் திரிபான பகு (phag) என்னும் மேலையாரியக் கிரேக்கச் சொல் கீழையாரியத்தில் புஜ் (bhuj) என்று திரிந்துள்ளது. எடுப்பிலாவொலி எடுப்பொலியாகத் திரிவதும் இயல்பே.

எ-டு: E. acre, L. ager, Gk. agros.

E. triple - E. treble.

bhuj, to eat, eat and drink, enjoy a meal, consume, enjoy, use, possess, make use of, utilize, exploit, suffer, experience, undergo, R.V., AV., Up., MBh., K*ā*v.

bhukta, enjoyed, eaten, made use of, possessed etc.

bhukti, eating, enjoyment, consuming, frution, possession, usufruct.

bhuktvā, having enjoyed or eaten or possesed.

bhuji, the granting of enjoyment, favour, RV.

bhujishya. granting food, useful, AV.

bhoktru, one who enjoys or eats, Maitr Up.

bhōga, enjoyment, eating, feeding on, R.V.

bhogin, enjoying, eating, having, wealthy; a king, a concubine.

bhōgya, to be enjoyed, to be used.

bhōja, bestowing enjoyment, bountiful, liberal, RV. leading a life of enjoyment, BhP., a king.

bhōjaka, eating, being about to eat, giving to eat, nourishing.

bhōjana, feeding, giving to eat; the act of enjoying, using, R.V., the act of eating; a meal, food.

bhōjaniya, to be eaten, eatable ; to be fed, to be made to eat, Mn.; one to whom enjoyment is to be afforded or service to be done, Nir,; food (esp. what is not masticated, as opp. to *khādaniya*) MBh.

bhōjin, enjoying, eating.

bhōjya, to be enjoyed or eaten, eatable, what is enjoyed or eaten, anything to be enjoyed or eaten, a festive dinner.

bhōktavya, to be enjoyed or eaten, to be used or employed ; to be possessed or governed or ruled, to be utilized or exploited, to be fed.

சென்னைப் ப.க.த. அகரமுதலியைத் தொகுத்தவர்கள், புகு (உண்) என்னும் தென்சொற்கும் புஜ் (bhuj) என்னும் வடசொற்கும் உள்ள தொடர்பை அறிந்தே, புகவு, புகா என்னும இரு சொற்களையும் புஜ் என்னும் வடசொல்லொடு ஒப்புநோக்கக் குறித்திருக்கின்றனர். ஆயின் தென்சொல்லே வடசொல்லின் மூலம் என்று காட்டுவது அவர் கருத்தன்று. வடமொழி தேவமொழி என்னும் அடாவடித்தன ஏமாற்றை அடிப்படையாகக் கொண்டு, வடமொழியிலுள்ள தென்சொல்லெல்லாம் வடசொல்லென்று சொல்லாமற் சொல்வதே, அவ் வொப்புநோக்கக் குறிப்பின் நோக்கம். தமிழை வடமொழித் திரிபாக அல்லது கிளையாகக் காட்ட வேண்டுமென்பதே சென்னைப் ப.க.த. அகரமுதலித் தொகுப்பாளரின் அடிப்படைக் கொள்கை யாதலால், வடமொழிக்கு அடிப்படையான தென்சொற்களை யெல்லாம் வடசொல்லென்று காட்டுவதொடு, உண்மையில் தொடர்பின்றி ஒருமருங்கு ஒலியொத்த போலியொப்புமைச் சொற்களையும் வடசொற்களினின்று திரிப்பதிலும் அவற்றொடு ஒப்புநோக்குவதிலும், கண்ணுங்கருத்துமா யிருந்திருக்கின்றனர். எ-டு: ஆரியன் - ஐயன், ச்யாமா - சாமை. வேந்தன் - ஒ. நோ : தேவேந்திரன், மருந்து - ஒ. நோ : அம்ருத.

இதனால், தென்மொழி வடமொழிக்கு மூலமாயிருக்கலாம் என்னும் ஓர் அச்சம் அவர் உள்ளத்திற் குடிகொண்டிருந்ததென உய்த்துணரக் கிடக்கின்றது.

தமிழருட் பெரும்பாலார் மூவாயிரவாண்டு அடிமைத் தனத்தால் பகுத்தறிவு, தன்மானம், நெஞ்சுரம் ஆகிய முப்பண்பையும் முற்றும் இழந்திருப்பதனாலும், அவருள் மொழியாராய்ச்சியாளர் மிகச் சில்கியும் அவருள்ளும் வடமொழியாராய்ச்சியாளர் மிக அருகியும் இருப்பதனாலும், வடமொழியாளர் கூற்று மறுக்கொணா மறைமொழியாய் இருந்து வந்திருக்கின்றது. இதற்கு மூலக் காரணம் இடைக்கழகத்திற்குப் பிற்பட்ட மூவேந்தர் பேதைமையே.

இன்று அறிவியல் முறைப்பட்ட ஆராய்ச்சிக் காலமாதலால், மூவாயிரவாண்டு மறையுண்டு கிடந்த வுண்மை சிறிதுசிறிதாக வேனும் வெளிப்படத் தொடங்கிவிட்டது.

புகு என்னும் தென்சொல் புஜ் (bhuj) என்னும் வடசொற்கு மூலமாயிருப்பதொடு, தோற்றமும் வழிமுறைத் திரிபுங் கூறும் தெளிவான தன்வரலாறுங் கொண்டுள்ளது. இவ் வியல்பு அதன் திரிவான ஆரியச் சொற்கட்கில்லை.

உல் - உள் - உளு = மரத்தைத் துளைக்கும் புழு.

உளுத்தல் = மரத்தைப் புழு அரித்துத் துளைத்தல்.

உல்- புல் = உட்டுளை, உட்டுளையுள்ள நிலைத்திணை, தாளில் உட்டுளையுள்ள பயிர்வகை, மூங்கில், புறக்காழுள்ள தென்னை பனை முதலியன.

புல் - புள் -(புளு) -புழு = காய்கறி கனிகளைத் துளைக்கும் உளு.

புழுத்தல் = புழு உட்புகுதல் அல்லது அரித்துத் துளைத்தல்.

புழு - புகு. ஒ.நோ : தொழு - தொகு, மழ - மக, குழை - குகை.

புகுதல் = உட்செல்லுதல். எலி வளைக்குட் செல்லுதலும் மக்கள் வீட்டிற்குட் புகுதலும் வினைவகையில் ஒன்றே.

புகுத்தல் = உட்செலுத்துதல், உணவை வாய்வழி வயிற்றிற்குட் செலுத்துதல், உண்ணுதல்.

புகு (உண்) என்னும் சொல்லின் ககரம், கிரேக்கத்தில் ‘g' என எடுப்பொலியாய் மாறினும், மிடற்றொலியாகவே இருத்தலையும், ஏனையாரிய மொழிகளில் ‘j' (ஜ) என்னும் அண்ணவொலியாகத் திரிதலையும், நோக்குதல் வேண்டும். இதனால், கிரேக்கச் சொல்லின் முன்மையும் வேதச்சொல்லின் பின்மையும் அறியப்படும்.

பொதுவாக, மேலையாரியத்திலுள்ள எடுப்பொலிக் ககரம் (g) கீழையாரியத்தில் ஜகரமாகத் திரிகின்றது.

எ-டு:

தமிழ்	மேலையாரியம்	வேதமொழி
கிழம்	Gk. *geron*	ஜரா
தெ.கனு	L. *gonos*	ஜந்
காண்	ON. *kna*, E. *know*	
	L. *gno*, Gk. *gno*	ஜ்ஞா
உகை- அகை	L.*ago*	அஜ்
அகரம்	L. *ager*, Gk. *agros*	அஜ்ர
முழுகு	L.*mergo*	மஜ்ஜ்

16. பள்ளி

புல்லுதல் = துளைத்தல்.

புல் = உட்டுளை, துளை, உட்டுளை நிலைத்திணை வகை.

புல் - புள் - புழு. புழுத்தல் = புழுத்துளைத்தல்.

புல் - பொல். பொல்லுதல் = துளைத்தல்.

பொல்லம் பொத்துதல் = நார்ப் பெட்டியின் ஓட்டை யடைத்தல்.

பொல்லாமணி = துளையில்லா மணி.

பொல்லாப் பிள்ளையார் = உளியிடாப் பிள்ளையார் படிமை.

பொல் - பொள். பொள்ளுதல் = துளைத்தல்.

பொள்ளல் = துளை, ஓட்டை.

''சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு'' (நன்னெறி, 12)

புள் - பள் - பள்கு. பள்குதல் = பதுங்குதல், பள்ளமான இடத்தில் மறைதல். பள்கு - பழ்கு.

பள் - பள்ளம் = 1. தாழ்விடம். 2. தாழ்நிலம் . 3. தாழ்மட்டம், தாழ்வு. 4. குழிவு. 5. கன்னத்தில் விழுங்குழிவு. 6. ஆழம். 7. கிடங்கு. 8. குழி.

துளைத்தல் தோண்டுதல். தோண்டும் நிலம் முதலிற் பள்ள மாகும்; பின்பு கிடங்காகும்; அதன் பின் குழியாகும் ; குழி ஒன்றை ஊடுருவின் துளையாகும். தோண்டத் தோண்ட ஆழம் மிகும்.

பள் - பள்ளி. பள்ளிக் கிருத்தல் = விதைகள் சேற்றிற் பதிந்து கிடத்தல் (நாஞ்சில் நாட்டு வழக்கு).

பள் - பள்ளை = குள்ளம்.

பள்ளையன் = குள்ளன், குறுகிப் பருத்தவன்.

பள்ளையாடு = குள்ளமான ஆட்டுவகை.

குள்ளம் பள்ளம்போல் தாழ்மட்ட மாயிருத்தலால், பள்ளை யெனப்பட்டது.

பள்ளை- பள்ளையம் = தாழ் மட்டமான (தட்டையான) உண்கலம். ம. பள்ளையம்.

பள்ளையம் போடுதல் = சிறு தெய்வத்திற்குக் கீழே படைத்தல்.

பள்ளி = 1. தாழ்வு. 2. தாழ்வான இடம், தாழ்மட்டம். 3. தாழ்வான வீடு அல்லது குடிசை. 4. தாழ்வான வீடுகள் சேர்ந்த சிற்றூர். 5. தாழ்வான இடைச்சேரி. ''காவும் பள்ளியும்'' (மலைபடு. 451). ஒ.நோ : படு - பாடு - பாடி = இடைச்சேரி. படுத்தல் = தாழ்வா யிருத்தல். 6. நெடிதாய் எழுந்து நிற்கும் நிலையும் குறிதாய் அமர்ந்திருக்கும் நிலையும் இன்றித் தாழ்வாய் நில அல்லது அடித்தள மட்டமாய் நீளக்கிடக்கும் நிலை. 7. அங்ஙனங் கிடத்தல், படுத்தல். 8. படுக்கும் இடம், விலங்கு துயிலிடம். 9. படுக்கும் பாயல், பரப்பல், விரிப்பு, மெத்தை. 10. படுத்துத் தூங்குதல், தூக்கம். 11. படுக்கும் அறை. 12. படுத்துத் தங்கும் வீடு, வீடு (மடைப்பள்ளி = சமையல் செய்யும் தனி வீடு). 13. அரசன் வீடாகிய அரண்மனை. 14. தெய்வ வீடாகிய திருக்கோவில். ''கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்'' (குறள். 840) ; சமணக் கோயில், புத்தக்கோயில். 15. துறவியர் தங்கும் மடம். 16. முனிவரிருக்கை. 17. அறச்சாலை. 18. தங்கும் இடம். 19. இடம். ''சொல்லிய பள்ளி நிலையின வாயினும்'' (தொல். எழுத்து. 100). 20. கோவிலில் அல்லது மடத்தில் நடைபெறும் துவக்கக் கல்விச்சாலை. 21. பணிமனை. ''தச்சன் வினைபடு பள்ளி'' (களவழி. 15). 22. பல வீடுகள் சேர்ந்த பேரூர், பல காரை வீடுகள் சேர்ந்த நகர் அல்லது நகரம். 23. ஊர்ப் பெயரீறு. எ-டு : குராப்பள்ளி, திருக்காட்டுப் பள்ளி. தெ. பல்லி (b), மதனபல்லி, பங்கனப்பல்லி. க. ஹள்ளி. மாரண்டஹள்ளி. பழங்கன்னடத்தில் பள்ளி யென்று வழங்கிய ஊர்ப்பெயர் ஈறுகளெல்லாம், புதுக் (ஹொச) கன்னடத்தில் ஹள்ளி என்று மாறிவிட்டன.

பள்ளி - வ. பல்லீ, பல்லி (கதாசரித்சாகர) = சிறு வீடு, சிற்றூர்.

பல்லி என்னும் வடசொல் வேதத்தில் வழங்காது பிற்காலச் சமற்கிருதத்திலேயே வழங்குதலும் பகரமுதல் எடுப்பொலி பெறாமையும், வேர்ச்சொல் இன்மையும், வேறு பொருள் கொள்ளாமையும், அது தமிழ்த் திரிசொல் என்பதைக் தெள்ளத் தெளிவாகக் காட்டும். ஆயினும், அதைத் தமிழ்ச்சொற்கு மூலமென்று

சென்னைப் ப.க. தமிழ் அகரமுதலி தொகுத்தோர் துணிச்சலுடன் காட்டியிருப்பதும், இன்றும் தமிழ்ப் பேராசிரியரும் அதை உணரா திருப்பதும், உணர்த்தினும் சிறிதுஞ் செவிக் கொளா திருப்பதும், இற்றைத் தமிழன் தன் உயர்திணைத் தன்மையை அல்லது நெஞ்சுரத்தை முற்றும் இழந்துவிட்டானோ என்று ஐயுற்று வருந்தச் செய்கின்றன.

பள்ளிக்குறிப்பு, பள்ளிகொண்டான், பள்ளிகொள்ளுதல், பள்ளிமண்டபம், பள்ளிமாடம், பள்ளியந்துலா, பள்ளியம்பலம், பள்ளியயர்தல், பள்ளியறை, பள்ளியெழுச்சி என்பன படுக்கை அல்லது தூக்கம்பற்றிய வழக்குச் சொற்கள்.

பள்ளிபடுத்தல், பள்ளிபடை என்பன அரசரையும் முனி வரையும் அடக்கஞ் செய்தல் பற்றிய வழக்குச் சொற்கள். அடக்கஞ் செய்தல் நிலையாகப் படுக்கைப் படுத்துதல் போன்றது.

பள்ளிகம்பு வைத்தல் என்பது, வரி செலுத்தாதவன் வீட்டின் முன் கம்பு நட்டு மறியல் செய்யும் நாஞ்சில் நாட்டு வழக்குப்பற்றிய சொல். பள்ளியோடம் என்பது சிறு வீடு போன்ற அமைப்புள்ள மரக்கலம்.

பள்ளிக்கட்டில், பள்ளிக்கட்டு, பள்ளித்தேவாரம், பள்ளிப் பீடம், பள்ளிவேட்டை என்பன, அரண்மனை அல்லது அரசன் தொடர்பான வழக்குச் சொற்கள்.

பள்ளிச்சந்தம் என்பது சமண புத்தக்கோவில் மானியமும், பள்ளிவாசல் என்பது மகமதியர் கோவிலும் பற்றிய வழக்குச் சொற்கள்.

பள்ளிக்கணக்கன், பள்ளிக்கணக்கு, பள்ளிக்கு வைத்தல், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தான், பள்ளித்தோழமை, பள்ளிப் பிள்ளை, அரைப்பள்ளி, உச்சிப்பள்ளி என்பன, திண்ணைப் பள்ளிக் கூடம் அல்லது துவக்கக் கல்விச்சாலை பற்றிய வழக்குச் சொற்கள்.

இனி, வேறு சில வழக்குச் சொற்களும் உள.

இத்தகைய வழக்குச் சொற்கள் வடமொழியில் இல்லை.

பள் -படு -படுக்கை, படை.

ஒ.நோ: Goth. *badi*, OE. *bed,* OS. bedi (d), E. bed.

படு - பாடு - பாடி, பாடை. படு -படி. படிதல். ஒ.நோ: OE., OS. *bidan*, Goth. *beidan,* E. *bide*.

பள் - பாள் - பாளம் = 1. பரந்து தட்டையான கட்டி. 2. கனத்த தகடு.

பள்ளி - (பாளி) - பாழி = 1. மக்கள்துயிலிடம். ''பெரும்பாழி சூழ்ந்த விடத்தரவை'' (திவ். இயற். 1 : 80). 2. விலங்கு துயிலிடம் (பிங்.) 3. குகை (திவா.). 4. கோயில் ''ஐயன் பாழியில் ஆனைபோர்க் குரித்தாம் அன்று'' (ஈடு, 1 :1:3). 5. பாசறை (பிங்.). 6. முனிவரிருக்கை. ''பூதந் தம்பாற் பாட்டிக்கொண்டுண்பவர் பாழிதொறும்'' (தேவா. 186 : 5). 7. வதியும் இடம், இடம். ''வானவர் கோன் பாழி'' (திவ். இயற். 2 : 13). 8. மருதநிலத்தூர் (சூடா.). 9. நகரம் (பிங்.). 10. சிறுகுளம் (தொல். சொல். 400, உரை). 11. இறங்குதுறை. ''இவர்தம்மைத் தானுணர்ந்தால் இவர்க்குப் பாழி கிருஷ்ணாவதார மிறே'' (திவ். இயற். திருவிருத். 61). 12. எலிவளை, எலிப்பாழி.

இனி, பாள் - பாளி- பாழி என்றுமாம்.

பாள் - பாளை - பாளையம் =1. பாசறை. 2. போர்க்குச் செல்லும் படை வழியில் தங்கியிருக்கும் இடம். 3. படை நிலையாக இருக்கும் ஊர்.

பாழி = Gk. ***polis***, city.

E. ***acropolis*** (f. Gk. *akropolis*, *akros*, topmost, outer most. *polis*, city), citadel or elevated part of a Greek city, esp. of Athens.

E. ***decapolis*** (f.Gk.*deka*, ten *polis*, city), confederacy of ten cities in the Ist century B. C. in a region in the NE part of ancient Palestine.

E. ***necropolis*** (f. Gk.*nekros*, corpse, dead body, *polis*, city), cemetery.

E. ***cosmopolis*** (f. Gk. *kosmos*, universe, *polis,* city), a cosmopolitan city.

E. ***cosmopolitan***, a. Belonging to all parts of the world; n. person free from national limitations.

E. ***cosmopolite***, n. Citizen of the world; a. free from national prejudices; Gk. *kosmopolites*, *kosmos*, universe, *polites*, citizen.

E. ***cosmopolitical***, a. Belonging to universal polity.

E. ***metropolis***, n. Chief city of a country, capital, metropolitan bishop's see, centre of activity. (LL. f.Gk. *metropolis*, *meter*, mother. *polis*, city.)

E. ***metropolitan***, a. & n. Of a or the metropolis; belonging to, forming part of, mother country as dist. from its colonies; of an ecclesiastical metropolis; metropolitan bishop; bishop having authority over bishops of a province, in the west equivalent to archbishop, in Greek church

ranking above archbishop and below partriarch, whence metropolitanate; inhabitant of a metropolis.

(LL. *metropolitanus* f. Gk. *metropolites* f. *metropolis*.

E. **Metropolitan magistrate,** paid London magistrate.

E. ***Police***, n. Civil administration, department of government concerned with public order. civil force responsible for enforcing law and maintaning public order. [F.f. Md L. *politia*, policy.]

E. ***policlinic***,n. Clinic in private houses; f. G. *poliklinik* f. Gk. *polis*, city + clinic.

E. ***policy***, n. Statecraft, course of action adopted by government, party, etc; political sagacity, prudent conduct. [ME.f. OF. *policie* f. L.f. Gk. *politeia*, citizenship,*polity*, polites citizen f *polis*, city.

E. ***politarch***, n Governor of some Oriental cities, e.g. Thessalonica under Romans. (f. Gk. *politarkhes*, *polites*. citizen *arkhes* ruler]

E. ***politic*** a. & n. (Of persons) sagacious, prudent (of actions etc.) judicious, expedient, scheming; n. (pl.) Science and art of government political affairs or life, political principles [ME, L. OF. *politique*. f. L.f. Gk. *politikos* f. *politea* f. *polites* f *polis* city.

E. ***political*** a. & n., Of the State or its government of public affairs of plitices; f. *politic*.

E. ***politician***, a. One skilled in politics, statesman, one interested or engaged in politics, esp. as profession, one who makes a trade of politics; f. *politic*.

E. ***politicize**, ise*, v. i & t. Act the politician; engage in, talk, polities; give political character to ; f. *politic* + ize (suf).

E. ***politico***- in comb. as politico, economical politico - geographical, politico - social, politico - religious etc; f. *politic*.

E. *polity*, n. (Condition of civil order; from process, of civil government; organized society, [f. obs F. *politic* or L. *politia*, policy.

'ஊர் காவல்' , 'பாடி காவல்' என்பன போன்றே, police *என்னும் காவல் துறைப் பெயரும் நகரப் பெயரினின்று தோன்றி யிருத்தலை நோக்குக.*

17. பாதம்

பள் - படு. படுதல்= தாழ்தல், விழுதல், பொருகளத்தில் விழுந்திறத்தல், இறத்தல்.

பட்டவன் குறி = நடுகல்.

பட்டவன் காணி = களத்திறந்தவனுக்கு விடப்பட்ட மானியம்.

படு = குளம், மடு.

படு - படி. படிதல் = தாழ்தல், பணிதல், பணிவிடை செய்தல்.

படி - பதி. பதிதல் = தாழ்தல், இறங்குதல், ஊன்றுதல், அகழ்தல், அழுந்துதல், உரமாகப் பதிதல், மணி பதித்தல், கற்பாவுதல், எழுதுதல்.

பதி = பதிகை, பதிக்கும் நாற்று, பதிந்திருக்கும் உறைவிடம், வீடு, கோயில், நகர்.

பதி - பதிவு. பதி - பதியம்.

பதி - பதம் = நிலத்திற் பதியும் பாதம், கால் (''எறிபதத்தா னிடங்காட்ட'' (புறம். 4). உடம்பில் முழங்காலளவு போன்ற காற்பகுதி, பதிந்திருக்கும் இடம், பதவி, பாதச் சுவட்டால் ஏற்படும் பாதை வழி.

பதம் - பாதம் = நிலத்திற் பதியுங் காலடி. பாதத்தைக் கொண்ட கால் (''பாதக் காப்பினள் பைந்தொடி'' (சிலப். 14: 23), விளக்குத் தண்டின் பரந்த அடிப்பகுதி, இருக்கை தாங்குங் கால், காற்பங்கு, செய்யுளடி. (''வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி'' (கம்பரா. நாட்டுப். 1).

பாதக்காப்பு, பாதக்குறடு, பாதகடகம், பாதகாணிக்கை, பாதச்சாயை, பாதசக்கரம், பாதசரம், பாதசாயலம், பாத தாமரை, பாததூளி, பாதப்படி, பாதபூசை முதலியன பாதத் தொடர்பான கூட்டுச் சொற்கள். இவை புணர்ச்சியில் வலி மிக்கும் மிகாதும் வழங்கும்.

பாதம்.- பாதை = பாதம் படுவதனால் ஏற்படும் வழி.

வடசொற்கள் (வேதமொழியும் சமற்கிருதமும்)

pat, to fall down, fall or sink.

patha, way, path, road, course.

Daksina patha, Sounthern Way, Deccan.

pathaka, knowing the way, a guide.

pathat, going, travelling, a road.

pathika, knowing the way, going on a road, a traveller, wayfarer, a guide.

pathikāya, to act as a traveller.

pathila, a traveller.

pathya. belonging to the way. suitable, fit, proper, wholesome, salutary, esp. said of diet in a medical sense.

pad ^{2}, to fall, RV.

pad ^{3}, foot.

pada, foot, step, pace, stride, trace, vestigc, mark, RV.

padāji, foot - soldier.

padatika, a foot man.

padika, going on foot, pedestrian.

pād, a strong base of pad^{2}.

pāda, foot, RV.

pādaka, a small foot. R.V.

pādapa, drinking at foot, tree.

pādaka, a foot stool or cushion for the feet.

pādaya, to stretch out at the feet.

pādavika, a traveller.

padāt, a foot soldier. *padata*, infantry.

pādika, lasting for a quarter of the time.

pādin, footed, having feet, having padas, as a stanza.

pāduka, a shoe, slipper, padutin, having shoes, shoed.

pādu, a shoe or slipper.

pādya relating to or belonging to the feet.

ஆங்கில இலத்தின் கிரேக்கச் சொற்கள்

E. ***antipodes***, n. pl. places diametrically opposite to each other esp. region opposite to our own, f.LL. f. Gk. *antipodes*, having the feet opposite, *anti*, against. *podos*, foot.

ஞாலவுருட்சியினால், நாமும் அமெரிக்கரும், ஒரு வகுப்பாரை நோக்கி ஒரு வகுப்பார் கால் நீட்டிக் கொண்டிருத்தல்போல் தோன்றுவதை நோக்குக.

E. ***biped***, two - footed animal. f. L. *bipedis*, *bi*, two. *pedis,* foot.

E. ***cephalopod***. mollusc with distinct tentacled head f. L. *cephalo* f. Gk.*kephalikos* f. *kephale*, head. *podos*, foot.

E. ***cirriped***, marine animal in valved shell attached to other bodies, with legs like curl of hair., f. F. *cirri* f. L. *cirrus*, curl. *pedis*, foot.

E. ***decapad***, ten - footed crustacean, f.F. *decapode*, f. Gk. *deca*, ten. *podos*, foot.

E. ***foot***, termination of leg beginning at ankle, f. OE., OS. *fōt*, OHG. *fuoz*, ON. *fotr*, Goth. *fōtus*.

பாதை என்னும் சொல் ஆங்கிலத்தில் path *என்று பகரமுதற் சொல்லாகவே யிருத்தலால், பாதையை யுண்டுபண்ணும் பாதத்தின் பெயரும், கிரேக்கத்திலும் இலத்தீனிலும்போல் முதற்கண் பகரமுதற் சொல்லாகவே யிருந்து, பின்னர் வல்வகர* (f.) *முதற் சொல்லாக வலித்துத் திரிந்திருத்தல் வேண்டும்.*

E. ***milleped***, ***millipede,*** kinds of myriapods, with numerous legs usu. on each segment in double pairs., f. L. *millepeda*, *mille*, thousand. *pedis*, foot. *ஆயிரங்காற் பூச்சி.*

E. ***myriapod***, animal with many legs, of the class comprising centipedis and millepedes, f. Gk. *murias*, f. *murioi,* 10,000. *podos*, foot.

E. ***Pad*** [1] v.t. & i. to tramp along road on foot, travel on foot, f. LG. *padden*, *pidden*, to tread.

E. ***pad*** [2], road, f. Du., LG. *pad*, path.

E. ***pedal***, each of the wooden keys played upon by the feet, lever for drawing out stops in organ, foot lever in various machines, esp. bicycle, f. F. *pedale*, f. It. *pedale*, f. L. *pedalis*, f. *pedis*, foot.

E. ***pedate***, a. footed, f. L. *pedalus*.

E. ***pedestal***, base supporting column or pillar, base of statue etc., f. F. *piedestal* f. It. *piedestallo* (*pie*, foot.f. L. *pes*, *pedis* + *di*, *of* + *stallo*, stall).

E. ***pedestrian,*** going on foot, one who walks., f. f. *pedestre*, of. L. *pedester*

E. ***pedicel, pedicle,*** small stalk - like structure in plant or animal f. Mod. L. *pedicellus* dim. of. L. pedienlus dim of *pedis* foot, *cule*, *culus*, dim. suf.

E. ***pedicure***, n chiropody; v.t. to cure or treat feet by removing corns etc., f. F. *pedicure* f. L . *pedis*, foot + cura, care.

E.***pedigoree***, geneclogial table., f.AF = OF. *pie de grue*, crane's foot, mark denoting succession in pedigrees.

E. ***pedometer***, instrument for estimating distance travelled on foot by recording number of steps taken. f. F. *pedometre* f.L. *pedis,* foot + o + meter.

E. **pedrail**, device for facilitating progress of heavy vehicles over rough ground by attachment of broad foot - like supporting surfaces to wheel - rims, f. L. *pedis*, foot + rail.

E. ***peduncle***, stalk of flower, fruit or cluster, stalklike process in animal body, f. Mod. L. *pedunculus*, f.L. *pedis*. foot + uncle.

E. ***podagra***, gout, esp. in feet, f. L. f. Gk. *podos*, foot. *agra*, catching.

E. ***podium***, continuous projecting base or pedestal, raised platform around arena of amphitheatre, continuous bench round room., f. L. f. Gk, *podion* (*podos*, foot).

E. ***podophyllin***, yellow bitter resin of cathartic properties got from root of wild mandrake, f.L. *podophyllum* f. Gk. *podos*. foot. *phullon*, leaf.

Gk. *podos* - *pous*, foot; L. *pedis* - *pes*, foot., AF., OF. *pie*, foot.

E. ***path***, foot way esp. one merely beaten by feet, not specially constructed; track laid for foot or cycle racing; line along which person or thing moves. OE. *paeth*, OLG. *pad*, OHG. *pfad*, WG. *patha*.

இச் சொல் பாதை என்னும் தமிழ்ச்சொல்லை வடிவிலும் பொருளிலும் பொருட்காரணத்திலும் ஒத்திருப்பதும், வடமொழியி லின்மையும் கவனிக்கத்தக்கன.

E. ***quadruped***, four - footed animal., f. F. *quadrapede* f. L. *quadrupedis*, *quadri*, four. *pedis*, foot.

E. ***tripod***, stool, table, utensil, resting on three feet or legs. L. and Gk. *tri*, three. *podos*, foot.

E. ***tripos***, n. (Camb. univ.) (List of successful candidates in) honours examination. [as *tripod*. with ref., to steel on which B.A. sat to deliver satirical speech at commencement f. Gk. *tri*, three. *podos,* foot.

கடைக்கழகச் செய்யுள்களில் பாதம் என்னும் சொல் வர வேண்டிய இடத்தில் அடி (அல்லது தாள்) என்னுஞ் சொல்லே வந்திருத்தலால், சிலர் பாதம் என்னுஞ் சொல் வடசொல்லோ என ஐயுறக் கூடும். தொல்காப்பியமும் பதினெண் மேற்கணக்கும் திருக்குறளும் நூலும் பனுவலும் தனிப்பாடற்றிரட்டுமே யன்றி,அகர முதலிகளல்ல. ஆரியர் வருகைக்கு முற்பட்ட எழுநிலச் செய்யுள் இலக்கியமனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டன. சில பொருள்கட்கு, உலக வழக்குச் சொல்லும் இலக்கிய வழக்குச் சொல்லும் தொன்றுதொட்டு வேறுபட்டே வந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, காடை என்னும் உலக வழக்குச் சொல்லிற்குத் தலைமாறாகக் குறும்பூழ் என்னுஞ் சொல்லே கழகச் செய்யுள்களில் வழங்கியிருத்தல் காண்க.

பாதம் என்பது, நிலத்திற் பதிதற் கேற்றவாறு அகன்று தட்டையா யிருத்தல் வேண்டும். பாதம் வைத்த விளக்கு என்னும் வழக்கை நோக்குக. அடி என்பது, அடிப்பகுதி, அடியுறுப்பு, அடிப்பக்கம் என்னும் மூவகைப் பொருளை, எல்லாப் பொரு ளொடும் பொருந்தப் பொதுப்படக் குறிப்பதால், பாதம் என்னுஞ் சொல்லை ஒத்ததன்று. பெட்டிக்கு அடியில் என்பதைப் பெட்டியின் அல்லது பெட்டிக்குப் பாதத்தில் என்று சொல்லும் வழக்கின்மை காண்க.

பாதம் என்னும் சொல்லிற்கு மூலமான பதி என்னும் வேர்ச் சொல்லையும் அதன் தோற்ற வரலாற்றையும் வேறெம்மொழியிலும் காணமுடியாது. மக்கள் குமரிநாட்டினின்று வடக்கும் கிழக்கும் மேற்கும் சென்றவராதலால், தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமையை உணர்தல் வேண்டும்.

வரலாறும் மொழிநூலும், இவ் வுண்மையைக் கோபுர வுச்சியினின்று குமுறிச் சாற்றுகின்றன. எவ்வகை யெதிர்ப்பும் இன்னும் ஈராண்டிற்குள் இம்மியும் இல்லாதுபோம்.

18. புரி (வளை)

உல் - உல. உலத்தல் = வளைதல், திரள்தல்.

உல - உலம் = உருட்சி, திரட்சி.

உலக்கை = உருண்டு திரண்டு நீண்ட குத்துக்கருவி அல்லது ஆட்டுக்கருவி.

உல - உலவு. உலவுதல் = வளைதல், திரிதல், சுற்றுதல்.

உலவு - உலாவு. உல- உலா- உலாத்து.

உலவு - உலகு = சுற்றும்கோள். உலகு - உலகம்= பேருலகு. 'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டு.

உலகம் - வ. லோக - இந். லோக்.

உலவு - உரவு. உரவுதல் = உலாவுதல். உலாவு - உராவு.

உல்- உர் - உருள் - உருளி, உருளை, உருண்டை - உண்டை. உருளை - உருடை - ரோடை - ரோதை - L. *rota*.

உல் - புல் - புரி - புரள் - புரளி, புரண்டை - பிரண்டை.

புரள் - புரட்டு- புரட்டல் - புரட்டி, புரள் - பிறழ்.

புர் - புரி. புரு - புருள் - புருளை - புருடை - பிருடை.

புர் - புரு - புருவு - புருவம் = கண்மீ வளைவு.

வ. ப்ருவ (bhruva), ON. brun, OE. *bru*, E. brow.

புரிதல் = வளைதல், சூழ்தல், திரும்புதல், முறுகுதல்.

புரி = முறுக்கு, முறுக்கிய இழை, முறுக்கிய கயிறு, சுருள், சுரி, உள் திருகிய சங்கு, நகரைச் சூழ்ந்த மதில், மதில் சூழ்ந்த கோட்டை, கோட்டையுள்ள அல்லது மதில் சூழ்ந்த நகர் அல்லது நகரம்.

எ-டு. : மதுராபுரி, மயிலா புரி.

இடம்புரி = வலமிருந்து இடமாக உள்வளைந்த சங்கு.

கொடும்புரி = அறும் நிலையிலுள்ள கம்பியின் அல்லது முடிச்சுப்படும் நிலையிலுள்ள கயிற்றின் கொடுமுறுக்கு.

முப்புரி = மூன்று முறுக்கிழை.

வலம்புரி = இடமிருந்து வலமாக உள்வளைவுள்ள சங்கு.

வைக்கோற்புரி = முறுக்கிய வைக்கோற் பழுதை.

புரிகுழல் (புரிக்குழல்) = கடை குழன்று சுருண்ட கூந்தல்.

புரிக்கூடு = வைக்கோற் புரியாற் கட்டிய நெற்கூடு.

புரிகட்டியிழுத்தல் = தண்டனையாகக் காலில் வைக்கோற்புரி கட்டித் தெருத்தெருவா யிழுத்தல்.

புரிசடை = திரண்டு சுருண்ட சடை.

புரி திரித்தல் = புரி முறுக்குதல்.

புரி தெறித்தல் = கயிறு அறுகை.

புரி நூல் = மார்பிலணியும் முப்புரி நூல்.

புரி பாய்ச்சுதல் = சிறு கயிற்றை முறுக்க ஒழுங்குபடுத்துதல்.

புரியணை = மண்பாண்டம் வைக்கும் வைக்கோற் புரியணை.

புரிமுகம் = நகர் முகப்பிலுள்ள கோபுரம்.

புரிமுகம் = சங்கு (வலம்புரி அல்லது இடம்புரி.)

புரிமுறுக்கு = இழை முறுக்கு, மலராப் பேரரும்பு நிலை.

புரி வலித்தல் = கட்டுதல்.

புரிவளை = முறுக்கு வளையல்.

புரிவிடுதல் = கயிறு திரிக்கப் புரியை முறுக்குதல்.

புரி - புரிசை = நகரைச் சூழ்ந்த மதில்.

புரி - பரி. பரிதல் = முறிதல், அறுதல், பிரிதல், அழிதல், இரங்குதல்.

பரித்தல் = சூழ்தல். ''குருதி பரிப்ப'' (அகம். 31)

புரி - பரி - பரிசு = வட்டக் கூடை யோடம் (coracle).

பரிசு - பரிசல் = கூடையோடம்.

பரி - பரிசை = வட்டக்கேடகம்.

பரி - பரிதி = 1. வட்ட வடிவம். 2. கதிரவனை அல்லது நிலாவைச் சூழ்ந்திருக்கும் கோட்டை (பரிவேடம்). 3. தேருருளை.

4. சக்கரப்படை. 5. சக்கரவாகப்புள். 6. வட்டமான கதிரவன். 7. கதிரொளி. 8. ஒளி. பரிதி - பருதி.

ஆரிய வேள்வித் தீயைச் சுற்றிவைக்கப்படும் தருப்பைப் புல்லும், வடிவம்பற்றிப் பிற்காலத்திற் பரிதி யெனப்பட்டது.

பரிபுரம் = பெண்டிர் கணுக்காலைச் சுற்றியுள்ள சிலம்பணி.

பரியாள் - பரியாளம் = அரசனைச் சூழ்ந்து வரும் பரிவாரம். ''பரியாள மடைந்ததே'' (சீவக.949).

பரியாளன் = பரிவாரத்தைச் சேர்ந்தவன்.

பரிவட்டம் = 1. நிலாக்கோட்டை (ஊர்கோள்). 2. தொழ வரும் பெருமக்கட்குக் கோயில் மதிப்புறவாக (மரியாதையாக)த் தலையைச் சுற்றிக் கட்டும் தெய்வ ஆடை. 3. அதிகாரப் பதவிக்கு அடையாளமாக அரசன் அளிக்கும் நிலைக்குப்பாயம்.

பரிவட்டணை = யாழிசை யெழூஉம் எண்வகையுள் ஒன்று.

''பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல்
..
எண்வகையால் இசையெழீஇ'' *(சிலப். 7: 5- 8)*

வடமொழியில் வழங்கும் தமிழ்த்திரி சொற்கள்

புரி - pur, wall. rampart, fortress, city, town, R.V.

புரி - puri a town.

தமிழிற் புரம் என்பது கோபுரமுள்ள நகரையும், புரி என்பது கோட்டையுள்ள நகரையும் குறிக்கும். ஆயின். வடமொழியில் இவ் வேறுபாடின்மையால் புர, புரய என்னும் சொற்களும் கோட்டை அல்லது நகர் என்னும் பொதுப்பொருளே தரும்.

புரி என்பதன் திரிபான பரி என்னும் சொல், தமிழிற்போன்றே வடமொழியிலும் வட்டம் என்னும் அடிப்பொருளையும், முழுமை மிகுதி முதலிய வழிப்பொருள்களையும் உணர்த்தி, நூற்றுக் கணக்கான சொற்களின் முன்னொட்டாக வழங்கி வருகின்றது.

எ-டு:

பரி - பரீ - ***pari, parī***, ind. round, around, about round, about. fully, abundantly, richly.

parinsa (பரிம்ச), the best part of, R.V.

parikāsana, frequent coughing.

paritkup, to be very angry.

paricar, to move or walk about, go round.

paricārd, paricāraka, an assistant, attendant, or servant.

parijana, surrounding company of people. entourage.

parini, to lead about or round R.V. to lead a bride and bridegroom around a sacrificial fire, to marry.

parinaya, marriage.

paridã, to give, grant, bestow, surrender, R.V.

paridāna, giving oneself up to the favour or protection of another.

paripri (பரிப்ரூ), to fill (v.t.), to become completely full (v.i.). ***paripurana***, the act of filling, perfecting, rendering complete.

paribhãs,to speak to, address.

paribhãsã, speech, discourse.

paripac, to bring to maturity; Pass. to be cooked. *paripakva*, *completely* cooked or dressed.

parinirvã, to be completely extinguished or emancipated. *parinirvãna*, complete extinction of individuality, entire cessation of rebirths.

parimã, to measure round or about, R.V.

parimãna, measure of any kind.

parivrit (பரிவ்ருத்) to turn round, revole, move in a circle or to and ro, roll for wheel or wander about, circumambiate, RV.

parivarta, revolving, revolution.

parivartana, causing to turn round.

parisudh, to bewailed off, become clean or purified perfectly. ***parisuddha***, cleaned, purified perfectly.

parisad, to sit round, R.V., surrounding, an assembly, meeting, group, circle.

*வட்டக் கருத்தினின்று 'தொறும்' கருத்துக் தோன்றுவதற்கு, ''ஆட்டை வட்டம் காசு ஒன்றுக்கு ...பலிசை'' என்னும் கல்வெட்டுக் கூற்று எடுத்துக்காட்டாம். ''வ்ருக்ஷம் பரிஸிஞ்சதி'' (*parisincati*) (= மரந்தொறும் நீர் ஊற்றுகின்றான்) என்னும் வடமொழிச் சொற்றொடர் இதை யொத்திருத்தல் காண்க.*

பரிபுரம் என்னும் சொல்லில் சூழ்தற் பொருளும், ''பரிபுலம் பினர்'' (சிலப். 10 : 226) என்னுந் தொடரில் மிகுதிப் பொருளும்,

பரிமாறுதல் என்னும் சொல்லில் திருப்பல் அல்லது மாற்றுதல் பொருளும் வரிசைப் பொருளும், தோன்றுதல் காண்க.

வட்டறவு என்னுஞ் சொல் அறுதி முடிவைக் குறிக்கும்.

மேலையாரியச் சொற்கள்

கிரேக்கமும் ஆங்கிலமும்

Gk. pref. ***peri***, round, about.

perianth, floral envelope.

pericardium, membranous sac enclosing the heart.

pericarp, seed - vessel, wall of ripened ovary of plant.

perichondrium, membrane enveloping cartilages (except at joints).

periclinal (Geol.), sloping in all directions from central point.

perigynous (of stamen), situated around pistil or ovary.

periosteum, membrane enveloping the bones.

peripteral (of temple), surrounded by single row of pillars.

perisperm, mass of albumen outside embryo - sac in some seeds.

peristome (Bot.), fringe of small teeth around mouth of capsule in mosses, (Zool), parts around mouth in various invertebrates.

perity phlitis, inflammation of some part around the caceum, e.g. appendicitis.

pericranium, membrane enveloping skull.

periapt, thing worn about the person as charm, amulet.

perigee, that point in planet's (esp. moon's) orbit at which it is nearest to earth.

Perihelion, that point in planet's orbit at which it is nearest to sun.

perimeter, circumference, outline of closed figure.

period, round of time marked by recurrrence of astronomical coincidences, Gk. *peri*, round. *hodos*, way.

periodical, magazine published at regular intervals e.g. monthly.

peri, patetic, a. & n. Aristotelian, so called from Aristotle's custom of walking about in Lyecum while teaching.

periphery, bounding line, esp. of round surface, external boundary or surface. Gk. *periphercia*, circumference, *peri,* round. *phero*, bear.

periphrasis, roundabout way of speaking, roundabout phrase, circumlocution.

periscope, kinds of tube and mirror apparatus by which one in a trencn or in a submarine can see things above the parapet or water respectively. *periscopic*, enabling one to see distinctly for some distance round axis of vision.

perispomenon (Gk. gram.), word with circumflex accent on last syllable.

peristatic (Physiol.), applied to the automatic muscular movement consisting of wave - like contractions in successive circles, by which contents of alimentary canal etc., are propelled along it.

peristyle, row of columns surrounding temple, court, cloister etc., space so surrounded.

peritoneum (Anat.), double serous membrane lining cavity of abdomen.

திருந்திய வழக்கிலும் கொச்சை வழக்கிலும் அகரமுதல் எகர முதலாகத் திரிவது இயல்பே.

எ -டு : பரு - பெரு, அரங்கன் -ரங்கன் - ரெங்கன். இம் முறையில் பரி என்னும் தமிழ்ச்சொல் கிரேக்கத்தில் பெரி என்று திரிந்தது.

பரி என்னும் முன்னொட்டுப் பெற்ற சில சொற்களும் தமிழ்த் திரிசொற்களாயிருப்பது கவனிக்கத்தக்கது.

எ-டு : period = peri + hodos (பாதை).

periphery = peri + phero (பொறு.) பொறுத்தல், சுமத்தல்.

புரி என்னும் தூய தமிழ்ச்சொல்லின் தென்மையும் தொன்மையும் முன்மையும், உர (வு), குர (வு), சுரி, திரி, நெரி, முரி என்னும் பிற முதனிலை யெழுத்துகளைக் கொண்ட ஒருபோகு அடிகளாலும் உணரப்படும்.

19. பொறு

பொறுத்தல் = 1. சுமத்தல். ''சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை'' (குறள். 37), ''இசையிலா யாக்கை பொறுத்த நிலம்'' (ஷ 239). 2. தாங்குதல். ''ஆலத்து...... நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு'' (புறம். 58). 3. அணிதல். ''அம்மணி பொறுத்திரென் றறைந்தான்'' (உபதேசகா. உருத்திராக். 44). 4. நோவு தாங்குதல். 5. துன்பம் பொறுத்தல். 6. மனந்தாளுதல். ''பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்'' (திருவாச. 23 : 6). 7. ஒரு வினையைச் சற்று நிறுத்திவைத்தல். பொறு. அப்புறம் உண்ணலாம் (உ.வ.). 8. காலந்தாழ்த்தல். ஒரு மணிநேரம் பொறுத்து வந்தான். 9. நீண்ட காலந் துன்பப்பட்டு அமைதியாயிருத்தல். 10. ஒன்றிற்குப் பொறுப்பாதல். அது உன் பொறுப்பு. 11. மன்னித்தல். 12. இளக்காரங் கொடுத்தல். 13. மரக்கலம் நிலந்தட்டுதல். தோணி பொறுத்துப் போய்விட்டது. 14. செலவு தாக்குதல். வண்டி உடைந்துவிட்டால் ஆயிரம் உருபா உன்னைப் பொறுத்துவிடும். 15. உவமையாகத் தகுதல். ''உலம் பொறுக்கலாத தோளாய்'' (சீவக. 402).

பொறுக்க = நிரம்ப, மூக்குமுட்ட, அளவிற்கு மிஞ்சி. பொறுக்கப் பிடித்துவிட்டான் (கொச்சை வழக்கு).

பொறுதி = பிறர் குற்றம் பொறுத்தல்.

பொறுப்பு = ஒரு கடமை நிறைவேற்றத்தை அல்லது வினைத் தவற்றை ஏற்றுக்கொள்ளுதல்.

பொறுமை = நீண்டகாலம் ஒன்றிற்கு அமைதியாகக் காத்திருத்தல்.

பொறை = நீண்டகாலந் துன்பம் பொறுத்தல்.

பொறாமை = பிறராக்கங் கண்டு மனம் புழுங்குதல்.

பொறுத்தல் என்னுஞ் சொல்லிற்கு மேற்கூறிய பொருள்க ளெல்லாவற்றிற்கும் அடிப்படையானது சுமத்தல் என்பதே. அது உடம்பாற் சுமத்தலும் உளத்தாற் சுமத்தலும் என இருதிறப்படும். அவற்றுள் முந்தியதே முன்னது.

பொறு என்னும் தூய தென்சொல் கன்னடம், மலையாளம், துளு, குடகம், கோத்தம், துடவம் முதலிய திரவிட மொழிகளில் மட்டுமன்றி, ஆரிய மொழிகள் அனையவற்றிலும் சென்று வழங்குவது, கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்கத்தால் அறியப்படும்.

பொறு - E. *bear*S to carry, OE. *beran*, ON. *bera*, OFris. *bera*, Du. *baren*, OHG. *beran,* to bear, carry, Goth. *bairan*, to bear, carry, give birth to. OHG. *gi - beran*, MHG. *gebern*, G. *gebaren,* Arm , *beram*, I bear, carry, bring, *bern*, burden, Gk. *pher, pherein*, to bear, carry, L. *fer. ferre*, to bear, carry, Celt. ber, Alb. *mbar, bar*, I carry, drag, bir, son. Oslav. *bro, birati* (for earlier *birth*), to bring together, collect, take, *breme*, burden, Slavonic. *ber, brati.* Olr, *biru*, I carry, W. *cymeraf,* I take, Toc. *pãr* to bear, bring, fetch, Zend. *bar*, *ber*, Skt. *bhar,* to bear, carry.

ஆங்கிலச் சொற்கள்

bear, to carry.

bearer, *person* or thing that carries, personal servant, bringer of letters or message, possessor of shares. L. *ferter.*

bearing, outward behaviour, reletion, reference, part of machine that bears the friction.

bairn, child, that which is born.

barley, what the earth bears or brings forth, AS. *bere*, barley;

bier - *lic* - barley (Max Muller).

barrow, two - wheeled handcart for carrying things.

berth, adequate sea - room for ship, sleeping place in ship, train, etc., naut, use of birth.

bier, movable frame on which coffin or corpse is carried to the grave.

birth, the act of being born.

burden, what is borne or carried.

சமற்கிருதச் சொற்கள்

bhri, to bear, carry, convey, to hold (on or in), RV.

bhrit, bearing, carrying, bringing, supporting maintaining, etc.

bhrita, borne, carried, gained, etc.

bhritaka, brought, fetched, hired, etc.

bhriti, bearing, carrying, support, maintenance, etc.

bhritya, to be nourished, maintained, a dependent, servant of a king, minister.

bhara, bearing, conveying, supporting, maintaining, etc.

bharana, bearing, maintaining.

bharat, bearing, carrying, RV.

Bharata, son of Dushayanta and Sakuntala.

Bharata Varsha, country of Bharata, name of India.

Bharata Khanda, name of a part of B.V.

bhari, bearing, possessing, nourishing.

bhartri, a bearer, one who bears or carries, or maintains, a preserver, protector, maintainer, chief, lord, master.

bhartrika, a husband, **bhara**, weight, load.

Bharata, descended from Bharata.

Bharati, a female descendent of Bharata, N. of. a deity (in R.V. often invoked among the Apri deities and esp. together with *Ilã* and Sarasvati); accord to Nir. VIII, 18,a daughter of Aditya; later identified with Sarasvati, goddess of speech).

இலத்தீனில் மறுவடிவச் சொல்

L. ***portare***, to carry, F. *porter*. E. *port*, to carry.

L. ***portabilis***, F. *portable,* E. *portable*, that can be carried.

L. ***portatus***, F. *portaticum*, E. *portage*, the act of carrying.

E. ***portamento***, glide from one tone to another.

L. ***portatorem***, F. *porteur*, ME. *portour*, E. *porter*, carrier.

L. ***portare***, It. *portataglis*. lit. carrier of leaves., *porto folio*,

E. ***portfolia***.

F. ***porte - manteau***. lit. ''cloak bearer'. E. *portmanteau*, a large traveling bag consisting of two compartments,

portare என்னும் இலத்தீனச் சொல்லிற்கு வேறுவழியில் நலிந்தும் வலிந்தும் மூலங்காட்டியிருப்பது பொருந்தாது.

பொறு என்பதன் திரிசொல்லை வருஞ்சொல்லாகக் கொண்ட மேலையாரியக் கூட்டுச்சொற்கள்

fer : confer, defer, differ, infer, incifer, offer, prefer, proffer, refer, suffer, transfer.

ferate : vociferate.

ference : difference, circumference, conference.

phor : metaphor, phosphor.

phora : cataphora, anthyopophora.

phore : semaphore, ctenophore.

phoreo : Gk. *diaphoreo*, to carry through.

phoron : Gk. *adisphoron*.

phorous : phosphorous, adiophorous.

phery : periphery.

port : deport, disport, export, import, rapport, report, support, transport.

கால்டுவெலார் சொல்லாராய்ச்சி

Glossarial Affinities - west Indo - European Family, ***poru***, to sustain, to bear, to suffer pationtly, *poruppu*, responsibility, *porumei* patience. Comp. Sans. *bhri* (*bhar*), to bear; Gotheic *bairan*, *bãr*, *beram*, to bear; Oed High German *beram*, *peran*, English, *bear*, *bore*; Old English *bearn*. child; Greek *phero*; Latin *fer -o*. Tamil distinguishes between this word and *pira*; to be born.... Latin in like manner distinguishes between *par -io* and *fer - o*, whilst the Teutonic tongues make no difference between *bear*, to sustain, and *bear*, to bringforth. They constitute one word, from which is formed the past participle to be *born* or *borne* and also the noun *birth*.''

பிறந்தை என்னும் தமிழ்ச் சொல்லை 'birth' *என்னும் ஆங்கிலச் சொல் ஒத்திருத்தலால், பிறப்பு வினையைக் குறிக்க வேறொரு சொல்லும் தியூத்தானிய மொழிகளில் முதலில் வழங்கிப் பின்பு மறைந்திருக்கலாம்.*

கால்டுவெலார், பொறு என்னும் தென்சொற்கு இனமான ஆரியச் சொற்களை, தாமே கண்டிருப்பது இங்குப் பெரிதுங் கவனிக்கத்தக்கது.

மாக்கசு முல்லர் ஆராய்ச்சியுங் கூற்றும்

'No one can help seeing that even amongst the most ordinary words in English there are some which are very much alike in sound. If these words have also some similarity in meaning we are justified in supposing that they may have a common origin.''

"Take for instance, such words as, to *bear*, *burden*, *bier*, and *barrow*. They all have the same constituent element, namely, *br*; they all have a meaning connected with bearing or carrying. *Burden* is what is carried; *bier*, what a person is carried on; *barrow*, in wheel-barrow, an implement for carrying things.

'No doubt, this is only *prima facie* evidence. We must not forget that we are dealing with a modern language which has passed through many vicissitudes. In order to institute truly scientific comparisons, we should have in each case to trace these words to their Anglo - Saxon, or even to their corresponding Gothic forms.

'But though it is necessary, before we institute comparisons, always to go back to the oldest forms of words which are within our reach, still for practical purposes it suffices if we know that such words as *bear*, *burden*, *bier* and *barrow* have all been proved to come from one common source.

''And more than this. As to *bear* is used in many languages in the sense of bearing children, we may safely trace to the same source such English words as *birth*, and *bairn*, a child.

'Nay, as the same expression is also used of the earth - bearing fruit, we can hardly be wrong in explaining, for instance, *bar - ley*, as what the earth bears or brings forth. In German *Getrcide*, M.H.G. *Getregede*, literally, what is born, has become the name of every kind of corn. If we go back to Anglo - Saxon. we find *boer - lic* for barley, in which *lic* is derivative, while *bere* by itself meant barley. In Scotland more particularly *bear* continued to be used for barley and a coarse kind of barley is still called *bear - barley. Barn* also receives the explanation from the same quarter. For *barn* is contracted from *bere - oern*, which means barley - house, or, as also called, *bere - flor*.

'But now we shall be asked, What are those mysterious syllables? What is, for instance, that *bar*, which we discovered as the kernel of ever so many words?

'These syllables have been called roots, That is, of course, nothing but a, mataphorical expression....... In *burden*, den is formative; in *birth*, *th* is formative; in *bairn*, *n* is formative. In *barn* too, n is formative. but it is different from the *n* in *bairn*, because it is really a contraction of *oern*. *Bere - oern* meant a place for bar - ley, just as horsern meant a place for horses, a stable, *sleepern*, a sleeping place.

'There remains therefore *bar* with a variable vowel, and this we call a root, or an ultimate element, of speech, because it cannot be analysed any further.

'This root *bar*, however, is not an English root. It existed long before English existed, and we find it again in Latin, Greek, Celtic, Slavonic, Zend, and Sanskrit, that is, in all the languages which from what is called the Aryan family of speech. As this root bar exists in Latin as *fer*, in Greek as *pher*, in Celtic as *ber,* in Slavonic as *ber*, in Zend as *bar*, and in Sanskrit as *bhar*, it is clear that it must have existed before these languages separated, and that, as you may imagine, must have been a very, very long time ago.''

- Three Lectures on the Science of Language, pp. 20-3

புல் - பொல் - பொர் - பொரு - பொறு. பொருதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல்.

ஒ.நோ: முட்டுதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல். முட்டுக் கொடுத்தல் என்னும் வழக்கை நோக்குக.

பொரு - பொருப்பு = வான் முகட்டைத் தாங்குவதாகக் கருதப்பட்ட மலை. Atlas *என்னும் இலிபிய (*Libeya*) நாட்டுமலை வான்முகட்டைத் தாங்குவதாக, பழங்காலக் கிரேக்கரால் கருதப்பட்டமையை நோக்குக.*

இதினின்று, உலக முதன்மொழியும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான தமிழினின்றே, சுமத்தலைக் குறிக்கும் (மேற்காட்டிய) ஆரியச் சொற்களெல்லாம் திரிந்துள்ளனவென்று, தெற்றெனத் தெரிந்துகொள்க.

20. பகு

புல் = துளை, துளையுள்ளது, உட்டுளையுள்ள நிலைத்திணை. ''புறக்கா ழனவே புல்லென மொழிப'' (தொல். மரபு. 86).

புல் - பொல். பொல்லுதல் = துளைத்தல்.

பொல் - பொள். பொள்ளுதல் = துளைத்தல்.

பொள் - பொழு- போழ். போழ்தல் = துளைத்தல், பிளத்தல், பிரிவுபடுத்தல்.

பொழு - பொகு. பொகுதல் = துளைபடுதல்.

பொகுத்தல்= துளைத்தல், ஓட்டை செய்தல் (யாழ். அக.).

ஒ.நோ: தொழு - தொகு.

பொகு - பகு. பகுதல் = பிளவுபடுதல், பிரிவுபடுதல்.

பகுத்தல் = பிளத்தல், பிரிவுபடுத்துதல், பங்கிடுதல், வகைப் படுத்துதல்.

பகுசொல் = முதனிலை ஈறு முதலிய உறுப்புகளாகப் பகுக்கப்படுஞ் சொல்.

பகாச்சொல் = பல வுறுப்புகளாகப் பகுக்கப்படாச்சொல்.

பகுவாய் = 1. பிளந்த வாய். 2. அகன்ற வாய். 3. வாயகன்ற தாழி. 4. பிழா.

பகு - பகுதி = பகுப்பு, பிரிவு, அரசிறை, திறை.

பகுதி - பாதி = இரு சமப்பாகமாகப் பகுக்கப்பட்ட பொருட் பகுதி, அரை.

பாதித்தல் = இரு சமப்பங்காகப் பிரித்தல்.

பகு - வகு. வகுதல் = பிளத்தல், பிளவுபடுதல்.

வகுத்தல் = 1. பகுத்தல். 2. கூறுபடுத்துதல். 3. பகிர்தல். 4. இனம் பிரித்தல், வகைப்படுத்துதல். 5. ஏற்படுத்துதல். 6. படைத்தல்.

வகுத்தல் = பிரித்தற் கணக்கு.

வகுத்தான் = ஊழமைத்த இறைவன், ஊழ். ''வகுத்தான் வகுத்த வகையல்லால்'' (குறள். 377).

வகு - வகுதி = வகுப்பு. 'வகுதியின் வசத்தன' (கம்பரா. இரணியன். 69).

வகு - வகுந்து = வழி. ''வகுந்துசெல் வருத்தத்து'' (சிலப். 11 : 167). வழிவகுத்தல் = வழியமைத்தல்.

வகு - வகுப்பு = 1. கூறுபடுத்துகை. 2. வகிடு. 3. இனம் பிரிக்கை. 4. பிரிவு. 5. தடுக்கப்பட்ட அறை. 6. குலம்.

வகு - வகம் = வழி (யாழ். அக.).

வகு - வக்கு = 1. வகை. 2. வழி. வாங்கின கடனைக் கொடுக்க வக்கில்லை (உ.வ.).

வகு - வகிர். வகிர்தல் = 1. கீறுதல். 2. உச்சந்தலையிலிருந்து நெற்றி நடுவரை தலைமயிரை இரு கூறாகப் பிரித்தல். 3. பிளத்தல். 4. துண்டுபடுத்துதல். 5. பங்கு செய்தல்.

வகிர் - வகிடு = தலைமயிர் உச்சியொழுங்கு.

வகிர் = வழி (பிங்.).

வகு - வகை = 1. வகுப்பு. 2. கூறுபாடு. 3. குலம். 4. இனம். 5. முறை. 6. வழி.

ம., தெ. வக (g), க. வகெ (g).

வகைதல் = 1. வகிர்தல். 2. பிரிவுபடுத்துதல். 3. வகைப் படுத்துதல்.

வகைச்சல் - வகச்சல் = மாலைவகை. ''திருமாலை வகச்சல் வளையம்'' (கோயிலொ. 59).

வகையார் = இனத்தார்.

வகையுளி = செய்யுளை இசைநோக்கி அசையுஞ் சீருமாகப் பிரிக்கை (யாப். வி. 375).

பகு - பகல் = 1. பகுக்கை. 2. சமமாகப் பகுக்கும் நடு (திவா.). நடுநிலைமை. ''அகல்வையத்துப் பகலாற்றி'' (பதிற்றுப். 90 : 9). 3. நுகத்து நடுவாணி. ''நெடுநுகத்துப் பகல்போல'' (பட்டினப். 206). 4. நண்பகல். 5. நள்ளிரவு. ''அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்'' (சிலப். 4: 81). 6. நண்பகல் ஒளி (திவா.). 7. ஒளியுள்ள அரைநாள். ''பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே'' (புறம். 8). 8. இரவுஞ்

சேர்ந்த முழுநாள். ‘‘ஒல்வ கொடாஅ தொழிந்த பகலும்’’ (நாலடி. 169). 9. பகலைச் செய்யுங் கதிரவன். ‘‘பன்மலர்ப் பூம்பொழிற் பகன்முளைத் ததுபோல்’’ (மணிமே. 4 : 92).

ம. பகல், க. பகல் (g), தெ. பகலு. (g).

பகல் - பகலவன் = கதிரவன். ‘‘பகலவ னனையானும்’’ (கம்பரா. கங்கை. 61). பகல் - பகலோன் = கதிரவன்.

பகல் - பால் = 1. பகுத்தல், பகுத்துக் கொடுக்கை. ‘‘பாலுங் கொளாலும் வல்லோய்’’ (பதிற்றுப்.10 : 19). 2. பகுதி. கூறு. ‘‘இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே’’ (தொல். புறத். 16). 3. பொருட்கூறு. ‘‘பால்வரை கிளவி’’ (தொல். எழுத்து. 165). 4. வகை. ‘‘முப்பாற் புள்ளியும்’’ (தொல். எழுத்து. 2), ‘‘மடவா ரைம்பா லணையும்’’ (திவ். பெரியதி. 7 : 5: 3). 5. பாதி. ‘‘பானா ளிரவில்’’ (கலித்.90). 6. பக்கம். ‘‘பாஅனின்று கதிர்சோரும்’’ (புறம். 22). ‘‘ஒருபாற் கோடாமை சான்றோர்க் கணி’’ (குறள். 118). 7. குலம். ‘‘கீழ்ப்பா லொருவன் கற்பின்’’ (புறம். 183). 8. திசை (பிங்.). 9. இடம் (யாழ். அக.). அப்பாற் போ (உ.வ.). 10. வேளை. அப்பால் வா (உ.வ.). 11. இருதிணை ஐம்பாற் பிரிவு. ‘‘இருதிணை மருங்கின் ஐம்பா லறிய’’ (தொல். கிளவி. 10). 12. ஈரெண் பாகுபாடு. ‘‘பன்மைப் பாலாற் கூறுதல்’’ (தொல். சொல். 62. இளம்பூ.). 13. இன்பதுன்பக் கூறு. ‘‘பால்வரை தெய்வம்’’ (தொல். கிளவி. 58). 14. நூற் பெரும்பிரிவு. அறத்துப்பால் (திருக்குறட் பிரிவு).

பகு - பகவு = 1. பிளவு, வெடிப்பு, பகுப்பு (யாழ். அக.). 2. துண்டு. ‘‘எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்’’ (குறள். 889). 3. பங்கு (யாழ். அக.).

பகவு - பகவன் = உயிர்கட்கெல்லாம் உணவைப் பகுத்தளித்துக் காப்பவன், கடவுள். ‘‘பகவன் முதற்றே யுலகு’’ (குறள்.1).

பகு - பக்கு. பக்கெனல் = வெடித்தற் குறிப்பு.

பக்கிசைத்தல் = (செ.கு.வி.) விட்டிசைத்தல். - (செ. குன்றா வி.) வேறுபடுத்திக் கூறுதல். ‘‘அதுவும் இதுவும் எனப் பக்கிசைத் தோதப்பட்ட’’ (சி.போ. சிற். 12 : 4 உரை).

பக்கு = 1. பிளப்பு (W.). 2. கவர்படுகை ‘‘தங்கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து’’ (தேவா. 17 : 3). 3. பை. ‘‘பக்கழித்துக் கொண்டீ யெனத்தரலும்’’ (கலித். 65 : 14), ‘‘பகர்வர் பக்கிற் றோன்றும்’’ (ஐங்குறு. 271).

பக்கு விடுதல் = 1. பிளத்தல்.

''இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.'' (குறள். 1068)

2. பிரம்படி யுண்ட தோலறுதல் (W.).

பக்கடுத்தல் = நொறுங்குதல். ''பக்கடுத்தபின் பாடியுய்ந்தா னன்றே'' (தேவா. 785 ः 11)

பக்கு - பக்கம் = 1. பகுதி. 2. தொழிற்கூறு. ''அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்'' (தொல்.புறத். 20). 3. சாரி (side). ''பக்க நோக்கி நிற்கும்'' (திவ். திருவாய் 5 ः 5 ः 5). 4. விலாப் புறம். 5. சிறகு. ''இசைபடு பக்க மிருபாலுங் கோலி''(பரிபா. 21 ः 31). 6. திசை. தென்பக்கம் (உ.வ.). 7. இடம். ''ஊழையு முப்பக்கங் காண்பர்'' (குறள் .620). 8. தாட்புறம். அட்டையின் உட்பக்கம் (உ.வ). மறைமலையடிகள் வரலாறு, 50ஆம் பக்கம் (உ.வ.). 9. நூல். ''வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு'' (தொல். புறத். 41.). 10. அருகு. ''பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்'' (மணிமே. 16 ः 16). 11. சார்பு. அவர் தொடுத்த வழக்கு எதிரிபக்கம் தீர்ப்பாயிற்று, இரண்டாம் உலகப்போரில் சப்பான் செருமானியர் பக்கஞ் சேர்ந்திருந்தது. 12. உளச்சார்பு, நட்பு, அன்பு. 13. சுற்றம். ''பக்கஞ் சூழ வடமீன் காட்டி'' (கல்லா ः 18). 14. படை. ''தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன்'' (கம்பரா. இலங்கைக் கேள்வி . 40). 15. திங்களாற் கணிக்கப்படும் காலப்பகுதி. வெண்பக்கம் (வளர்பிறைக் காலம்), கரும்பக்கம் (தேய்பிறைக் காலம்). 16. திங்களின் கலைநிலை. எட்டாம் பக்கம். 17. ஏரணத்தில் உண்மை காண அல்லது மெய்ப்பிக்க எடுத்துக்கொள்ளப்படும் மேற்கோள். 18. பெயரெச்சத்தை யடுத்து 'இடத்து' என்னும் பொருளில் வரும் வினையெச்சவீறு. எ-டு. வரும்பக்கம் = வருமிடத்து.

அக்கம் பக்கம், பக்கக்கன்று, பக்கக்குடுமி, பக்கச்சுவர், பக்கச்சொல், பக்கச்சூலை, பக்கத்துணை, பக்கத்து வீடு, பக்கப் பலகை, பக்கப் பாட்டு, பக்கப்பாளை, பக்கமேளம், பக்கவடம், பக்கவழி, பக்கவளை, பக்கவாட்டு, பக்கவெட்டு, பக்கவேர் முதலிய கூட்டுச் சொற்கள் தொன்றுதொட்டு உலக வழக்கில் வழங்கி வருகின்றன.

பக்கம் - பக்கர் = இனத்தார்.

பக்கம் - பக்கல் = 1. பக்கம் ''என்பக்க லுண்டாகில்'' (பெரியபு, இயற்பகை. 7.) 2. இனம் (W.)

பக்கு - பக்கறை = 1.பை, 2. துணியுறை.

பக்கு - பங்கு = 1. உடற்பாகம். ''பங்குலவு கோதையுந் தானும்'' (திருவாச. 16 ः 9). 2. பாதி (சூடா.) 3. பாகப் பகுதி. ''பங்கிற்கு மூன்று பழந்தர வேண்டும் பனந் துண்டமே'' (தனிப்பா.). 4. பக்கம். என்

பங்கில் தெய்வம் இருக்கிறது (உ.வ). 5. இரண்டு அல்லது இரண்டரைச் செறு (ஏக்கர் - acre). நன்செயும் பதினாறு செறு புன்செயுங் கொண்ட நிலம்.(C.G.288).

பங்கன் = தன் பாகமாகக் கொண்டவன். ''வேயுறு தோளி பங்கன்'' (தேவா.), ''மங்கை பங்கனை'' (தேவா. 549 : 5).

பங்கு - பங்கம் = 1. உடற்பாகம். ''பங்கஞ் செய்த மடவாளொடு'' (தேவா. 855 : 5). 2. துண்டு (W.). 3. பிரிவு. ''பங்கம் படவிரண்டு கால்பரப்பி'' (திருவாலவா. 16 : 22, கீழ்க்குறிப்பு). 4. சிறுதுகில் (பிங்.).

பங்கு - பங்கி. பங்கித்தல் = 1. பகுத்தல், பங்கிடுதல். 2. வெட்டுதல், துணித்தல். ''அங்கத் தெவையு மழியச் சிலரைச் பங்கித் தடைவார்'' (சிவதரு, சுவர்க்கநரக.78).

பங்கி = 1. பாகமாகப் பெற்றுக்கொண்டவன். ''நஞ்சினைப் பங்கி யுண்டதோர் தெய்வ முண்டோ'' (தேவா. 302 : 6). 2. ஆறாண்டிற் கொருமுறை ஊர் நிலத்தை ஊரார்க்குப் பங்கிட்டடைக்கும் முறை. (W.G). 3. பங்கு கொண்டது. எ-டு: திரிபங்கி(சொல்லணி வகை)

பகு - பகிர். பகிர்தல் = பங்கிடுதல்.

பகு- பகை. பகைத்தல் = வெறுத்தல், மாறு கொள்ளுதல்.

பகை - ம., பக, க., தெ. பக (g).

பகை - பகைஞன், பகைவன்.

பகு - பாகு = 1. பகுதி (W.) (பாகிடுதல் = பங்கிடு தல்,பாகுபடுதல் = பிரிவுபடுதல்.). 2. பக்கமுள்ள கை. தோள்.

பாகு - பாகம் = 1. பகுக்கை (சூடா.). 2. கூறு. ''தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று'' (திருவாச. 5 : 37). 3. பாதி ''பாகம் பெண்ணோ டாயின பரிசும்'' (திருவாச. 2 : 78). 4. பாகை (degree).

பாகம் - பாகன் = 1. பெண்ணை யிடப்பாகமாகக் கொண்ட சிவன். ''நாரி பாகன்'' (தேவா. 1172 : 9). 2. கருமத் துணைவனான பாங்கன். 3. பாங்காயிருந்து யானையைப் பேணுபவன். ''யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்'' (நாலடி. 213). 4. தேரைச் செலுத்தும் தேர்ப்பாகன். ''தேரிற் பாகனா யூர்ந்த தேவதேவன்'' (திவ். பெரியதி. 7 : 5 : 2).

ம. பாவான், மராத். பாகா (g).

பாகு - பாகை (degree).

பாகு - பாகி. பாகித்தல் = பங்கிடுதல்.

பாகி1 = பாகமுள்ளது. எ-டு: திரிபாகி. (சொல்லணி வகை).

பாகி2 = தேரோட்டும் பெண் (திவ். பெரியாழ். 1 : 3 : 9).

பாகன் - பாகு = யானைப்பாகன். ''பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம் வேக யானை'' (சிலப். 15 : 46).

பாகு - வாகு = கை, தோள், அழகு.

வாகுவளையம் தோள்வளையம், தோள்வளைவி.

வ. பாகுவலய (g).

வாகு - வாக்கு = பக்கம். ''இரண்டு கைவாக்கு மியங்கலிப்ப'' (திருவிளை. தடாதகை. 26.), காயப்போட்ட துணி காற்றுவாக்கிற் பறந்துபோய் விட்டது (உ.வ.).

பாகு - பாங்கு = பக்கம், துணை, தோழமை, தன்மை, அழகு.

கண்ணோட்டம். பாங்கு - பாங்கர் = பக்கம்.

பாங்கு - பாங்கன் = தோழன். பாங்கி = தோழி.

பாகு - பாக்கு = 1. பகுதி. 2. ஒரு தொழிற்பெய ரீறு. ''எழுதேம் கரப்பாக் கறிந்து'' (குறள். 1127), ''அஞ்சுதும் வேபாக் கறிந்து'' (குறள். 1128). 3. ஓர் எதிர்கால வினையெச்ச ஈறு. ''வான்பான் பாக்கின வினையெச்சம்'' (நன். 343). எ-டு: உண்பாக்குச் சென்றான்.

பாக்கு - வாக்கு = ஓர் எதிர்கால வினையெச்ச ஈறு. கொள்வாக்கு வந்தான் (தொல். சொல். 231,உரை).

பாக்கு - பாக்கம் = 1. நெய்தல்நிலத்தூர், பட்டினப் பகுதி. எ-டு: மருவூர்ப்பாக்கம், கோடம்பாக்கம். ''கொழும்பல்குடிச் செழும் பாக்கத்து'' (பட்டினப். 27). 2. ஊர். ''கட்கொண்டிக் குடிப்பாக்கத்து'' (மதுரைக். 137). 3. அரசனிருப்பு (பதிற்றுப். 13 : 12, உரை). 4.நகர்.

க., தெ. பாக்க.

பாக்கம் - வாக்கம் = நெய்தல்நிலத்தூர். எ -டு : கத்திவாக்கம்.

பாக்கம் - பாக்கை = 1. நெய்தல்நிலத்தூர். 2. ஊர். ''நென்னலிப் பாக்கை வந்து'' (பதினொ. திருவே. திருவைந். 74). எ-டு : கொள்ளிப்பாக்கை.

பகு - பா. பாத்தல் = பகுத்தல். ''பாத்தூண் மரீஇ யவனை'' (குறள். 227).

பா - பாத்தி = 1. பகுதி. ''மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே.'' (தொல். எழுத்து. 172). 2. செய்ப்பகுதி. ''வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந் தற்று'' (குறள். 718). 3. பங்கு (W.). 4. வீடு (பிங்.).

*பாத்தி - பத்தி (*para*) = 1. எழுதப்பட்ட செய்தியின் தனிப் பகுதி. 2. பாத்தி. 3. வரிசை.*

பத்தி - பந்தி = கூடியுண்டார் பகுதி அல்லது வரிசை.

பா - பாத்து. பாத்துதல் = பகுத்தல். ''படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல். அகத். 2).

பாத்து = 1. பகுக்கை. 2. பங்கு. 3. பாதி. 4. இணை.

பாத்து - பாது = பங்கு. பாதிடுதல் = பங்கிடுதல்.

மேலையாரியச் சொற்கள்

பக்கு (பை) - ON. *baggi*, ME. *bagge*, E.*bag*.

பக்கம் - L. *pagina*. OF., F., E. *page*.

இதற்கு L. *pangere*, to fasten *என்று மூலங்காட்டுவது பொருந்தாது.* E. *paginate = பக்கமிடு.*

பாங்கு (இடம்), பாக்கம் (ஊர்), பாக்கை (ஊர்) - L. *pagus*, a place, village, district, province.

பாங்கன் - OF., ME., F. *page*, a boy or man, usu. in livery, employed as personal attendant of person of rank and to go on errands. *paidos (பைதல்) என்னும் கிரேக்கச் சொல்லினின்று திரிந்த paggio என்னும் இத்தாலியச் சொல்லை இதற்கு மூலமாகக் காட்டுவது பொருந்தாது.*

சமற்கிருதச் சொற்கள்

பக்கம் **-paksh,** to take a part or side (W.).

பக்கம் - **paksha,** a wing, RV; the shoulder, the flank or side or half of anything RV; the half of a lunar month (sukla or krishna paksha); a side, party, faction; place; one of two cases or one side of an argument, a thesils, the propostition to be proved in a syllogism; an army, favour, proximity, neighbourhood etc.

பந்தி - ***pankti***, a row or set or collection of five.

பாகு - ***bahu***, the arm,

பகு - ***bhaj***, to divide, distribute, allot or apportion to or share with. *ஒ.நோ: புகு (உண்)* - bhuj.

bhakta, distributed, assigned, allotted, R.V.

bhakti, distriburtion, partition, separation, R.V; a division, portion, share; the being a part of; that which belongs to anything else, attachment, fondness for, devotion, homage, piety, faith.

bhaktri, devotedly attached, an adorer, worshipper.

bhaga, dispensar, gracious lord, patron.

bhagavat, possessing fortune, prosperous, happy, RV; adorable, venerable, A.V.

bhagaval, or ***bhagavan***, in comp. e.g. Bhagavad - Gita.

Bhagavati, name of Lakshmi or Durga.

bhagin, prosperous, happy.

bhagini, a sister (the happy or fortunate one as having a brother).

bhajaka, distributour, apportioner.

bhaga, a part, portion, share, allotment, inheritance, lot, good fortune, luck, destiny.

Bhagavata, relating to or coming from Bhagvat, i,e. Vishnu or Krishna, a follower or worshipper of Bhagavat.

bhagya, **1.** to be shared or divided, divisible.

bhagya, **2.** entitled to a share, lucky, fortunate; good fortune, fate, destiny.

bhaj, sharing or participating in.

bhajaka, a divisor.

bhajana, shaving or participation in.

bhajita, shared, divided, distributed, portioned.

bhajya; to be shared or distributed., to be divided.

*மேற்காட்டிய தமிழ்ச்சொற்களெல்லாம், பகு என்னும் ஒரே மூலச் சொல்லினின்று தொடர்ச்சியாகத் தோன்றியவை யென்பது, கூர்ந்து நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும். ஆயின், வடமொழியில், அவை பக்ஷ், பஞ்ச்சன் (*pancan*), பஜ் (*bhaj*), பஹ் (*bah*) என்னும் தொடர்பற்ற நால்வேறு மூலத்தினின்று தோன்றி யவையாகக் காட்டப்பட்டுள்ளன. அம் மூலங்களுள்* bah *என்பதற்கு* banh *என்பதே அடிமூலம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதற்கு வளர்தல் அல்லது மிகுதல் என்பதே அடிப்பொருள். கை என்னும் சினைப்பெயருக்குப் பக்கத்திலிருப்பது என்பதே யன்றி வளர்வது என்னும் பொருள் பொருந்தாது. பந்தி என்னுஞ் சொல்லிற்கு (ஐந்து) பஞ்சன் என்னும் எண்ணுப் பெயரும் மூலமாகாது.*

பால் என்னுஞ் சொல்லிற்குப் பகுதி, ஊழ் என்னும் இரு பொருள் இருப்பதுபோன்றே, பாக்கு என்னும் சொல்லிற்கும் இருத்தல் வேண்டும். ''பலரறியார் பாக்கியத் தால்'' என்னும் குறளடிக்கு (1141), ''அந் நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே அறிவதல்லது கூறுகின்ற பலரும் அறியார்'' என்று பரிமேலழகர் உரைத்திருப்பதை நோக்குக. அவர் தெய்வம் என்றது பால்வரை தெய்வத்தை.

''கிளைவயி னீக்கிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனய வேன்தெய்வ மிக்கனவே' (6)

''பொன்னிவ் வுயர்பொழில்வாய்ச் சூழுடை யாயத்தை
நீக்கும் விதி துணையா.'' (7)

''சொற்பா லமுதிவள்.... நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று'' (8)

என்று திருக்கோவை கூறுதலையுங் காண்க.

பத்தி (பக்தி) என்னுஞ் சொல்லிற்கு ஒருவன்பாற்பட்ட தன்மை என்பதே மூலப்பொருள்.

21. பேசு

பொள்ளுதல் = துளைத்தல். பொள்ளல் = துளை.

பொள் = துளை, உட்டுளை (பிங்.)

பொள் - பொய். ஒ.நோ: தொள் - தொய்.

பொய் = 1. துளை. உட்டுளை. ''பொய்பொரு முடங்குகை'' (சிலப். 15 : 50). 2. மரப்பொந்து (பிங்.). 3. உள்ளீடற்றது. 4. விளைச்சலில்லாதது. பொய்ப்பிஞ்சு, பொய்ச்சீப்பு (உ.வ.). 5. உண்மையில்லாதது. ''பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ'' (குறள். 938). பொய்க்கதை. 6. மாயை. பொய்ந்நீர் (W.). 7. நிலையாமை. ''புற்புதமே யன்ன பொய்க்குடி வாழ்க்கையை'' (திருநூற்.3). 8. போலியானது. 9. செயற்கையானது. பொய்க்கால். 10. ஏமாற்றுவது, பொய்ம்மான், பொய்க்குழி.

பொய்தல் = (செ.கு.வி.) 1. துளைபடுதல். 2. துளைக்கப் படுதல். ''பொய்தக டொன்று பொருந்தி'' (கம்பரா. பஞ்ச. 49). 3. துளையினின்று ஒழுகுதல் - (செ. குன்றா வி.) 1. சொரிதல், ''இகலின் பொய்த'' (கம்பரா. கிங்கரர். 50). 2. வீழ்த்துதல். ''அவை பார்சோரப் பொய்தான்'' (கம்பரா. அட்ச. 33).

பொய் - பெய். பெய்தல் = (செ.கு.வி.) மேனின்று ஒழுகு தல்.''பெய்யெனப் பெய்யும் மழை'' (குறள். 53) - (செ. குன்றா வி.) 1. வார்த்தல். ''பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்'' (புறம். 115). 2. கல முதலியவற்றில் இடுதல். ''உலைப்பெய் தடுவது போலுந் துயர்'' (நாலடி.114). 3. சிறுநீர் கழித்தல். 4. தூவுதல்.

பெய் - பேய். பேய்தல் = பெய்தல் (உ.வ.). ''பேய்ந்துங் கெட்டது, ஓய்ந்துங் கெட்டது'' (பழ.). இப் பழமொழியிற் பேய்ந்தும் என்னும் சொல் ஓய்ந்தும் என்பதனொடு எதுகை நோக்கித் திரிந்ததை, ''பாட்டுரை நூலே'' என்னும் தொல்காப்பிய நூற்பா (செய்.78) நீட்டும் வழி நீட்டல் என்னும் செய்யுள் திரிபாக அமைக்க இடந்தருமேனும், கொச்சையென்று கருதப்படும் இரண்டோர் உலக வழக்குச் சொல் வடிவினின்றும் இலக்கியச் சொற்கள்

அமைந்திருப்பதால், பேய்தல் என்னும் சொல்லைத் திரிபின்பாற் பட்டதாகக் கொள்வதே தக்கதாம்.

எ -டு : கொண்டுவா - கொண்டா - கொணா - கொணர்.

இச் சொல் வடிவுகளுள், கொண்டா என்பது வழுநிலையாக வும், அதன்வழிப்பட்ட கொணா, கொணர் என்பன வழாநிலையாக வும் இருத்தலை நோக்குக.

பேய் - பேயு - பேசு. ஒ.நோ : தேய் - தேயு - தேசு.

பேசுதல் = வான், நீரை ஒழுகவிடுவது போன்று, வாய் சொல்லை ஒழுகவிடுதல்.

ஒழுகுதல் ஓட்டையினின்று விழுதல் அல்லது சிந்துதல், கலத்தினின்று நீர் வார்த்தல் என்பது, அதன் வாயாகிய ஓட்டை வழி ஒழுக விடுதல். வான் மழை பெய்வது கலத்தினின்று நீர் வார்த்தல் போன்றிருத்தலால், ''வானின் றமையா தொழுக்கு'' (குறள். 20) என்றார் திருவள்ளுவர்.

மழை தூறலுங் கொட்டுதலுமின்றி நடுத்திறமாகப் பெய்யின் பெய்தலென்றும், கொட்டுதலும் ஊற்றுதலும் போலக் கனத்துப் பெய்யின் பொழிதல் என்றும் சொல்லப்படும்.

பொழிதல் = திரளுதல். பொழித்தல் = திரட்டுதல். பொழிப்புரை = திரட்டுரை. பொழில் = திரண்ட சோலை.

ஒருவர் இயல்பாகச் சொல்லாடல் மழை பெய்தல் போன் றிருத்தலாற் பேசுதல் என்றும், விரைவாகச் சொல்லாடல் மழை பொழிதல் போன்றிருத்தலாற் பொழிதல் என்றும், சொல்லப்படுதல் தொன்றுதொட்ட வழக்கமாயிருந்து வருகின்றது. ''ஒரு மணிநேரம் பொழிந்து தள்ளிவிட்டார்'' என்னுங் கூற்று. கல்லா மக்கள் வாயினின்று வருவதையுங் காணலாம். இவ் வழக்கினின்றே, சொற்பொழிவு, சொற்பொழிவாளர் என்னுங் கூட்டுச் சொற்கள் இக் காலத்தில் தோன்றியுள்ளன. இதனால், பொழிதல் என்னும் சொற் போன்றே பேசுதல் என்னும் சொல்லும் மழை வினையொப்புமை பற்றித் தோன்றியதென உணரலாம்.

சமற்கிருதச் சொற்கள்

பேசு என்னுந் தென்சொல்லினின்றே, பாஷ் (bhãsh) என்னும் வடசொல்லும் திரிந்துள்ளது. இதை யுணர்ந்தே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியைத் (Tamil Lexicon) தொகுத்த வடமொழி வெறியரும், 'பேசு' என்னும் தலைச்சொல்லை யடுத்து ''cf. bhãs'' என்று குறித்திருக்கின்றனர் .

bhash, to speak, talk, say, tell.

bhashaka, speaking, talking about, kãv.

bhashana , the act of speaking, talking, speech, talk, Nir., Mn., MBh.

bhasha. Speech, language (esp. common or vernacular speech as opp. tovedic or in later time to Sanskrit) Nir; pãn; Mn; MBh; any Prãkrit dialect or a particular group of 5 of them. (Maharãshtri, Sauraseni, Mãgadhi, prãcya and Avant, also called Panca vidhã bhãshã.

bhashika, belonging to the common or vernacular speech, Nir.

bhashita, spoken, uttered, said, spoken to, addressed, Mn; MBh.

bhashitarya, to be spoken to or addressed, R.V.

bhashitri, a speaker, talker, MBh; Kãv.

bhashin. saying, speaking, loquacious MBK; Kãv.

bhashya, speaking, talking Susr; any work in the common or vernacular speech, V prat. GrS: Hariv; an explanatory work, exposition, explanation, commentary esp. on technical sutras, Name of Pantanjali's commentary on the sutras of Pãnini Mahā Bhāshya.

sam - bhash, to speak to gether. converse with, speak to, join in a conversation.

subhashana, name of a person.

subhashita, spoken well or eloquently.

subhashitam, good or eloquent speech. witty saying.

கிரேக்கச் சொற்கள்

Gk. ***phasis***, speech, utterance, expression.

aphasia, loss of speech, or of understanding of language, owing to brain damage; f. Mod. L. f. Gk. *aphatos*, speechless (*a*, not, *pha*, to speak).

A அல்லது a என்ற (கிரேக்க) எழுத்திற்குக் கிரேக்கத்தில் அ, ஆ என்ற ஒலிகளே உள. ஆதலால், பேசு என்ற சொல்லே, இந்திய ஆரியரின் முன்னோர் கிரேக்க நாட்டிற்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தபோது, அவர் மொழியில் பாஷ் (bhãsh) என்றும், கிரேக்க மொழியிற் பா (phã) என்றும், திரிந்திருத்தல் வேண்டும்.

கிளேன் (Klein) ஆங்கிலச் சொற்பிறப்பியல்
அகரமுதலிச் சொற்கள்

"***aphasia***, n. ioss of the faculty of speech (Med.) - Medical L., fr. priv. pref. a - and *phasis*, speech, from the base of *phanai*, to speak, which is rel. to *phame*, voice, report, rumour, and cog. with L. *fama*, talk, report, rumour" (p. 42).

"***aphemia***, n. a kind of aphasia (Med.) - Medical L. coined by the French surgeon and anthropologist paul Broca (1824 - 80) in 1860 fr. priv - pref. *a* - and Gk. *pheme*. Voice, which is rel. to *phanai*, to say, speak." (p. 42).

"***fama***, n., the personification of rumour in Roman mythology." (p. 273).

'***fame***, n. **F.** *fame*, fr. **L.** *fama*, talk, report, rumor, tradition, reputation, lit. 'saying', from the stem of *for*, *fāri*, pp. *fatus*, to speak, rel. to *fateri*, to confessm *fabula*, narrative, account, tale, story, *fas*, divine law (lit. utterance, fr, **I.E**. base, *bhã*, to speak, tell, say, whence also **OI.** *bhanati*, speaks, **Arm**. *bay* gen. *bayi*, word, them, *bey*, he said, *ban*, gen. *bani*, word, speech, judgement, **Gk**. *phemi*, I say; *pheme*, **Dor**. *phãmã*, voice, report, rumour, *phatis*, saying, speech, report, **OSlav.** *bajo*, *bajati*, to talk, tell, basni, fable, tale, charm, **OE**. *boian*,to boast, **ON**. *bõn*. **OE**. *ben*, prayer, request. Cp. *phone*, speech sound, Cp. also **abandon**, **affable**, **aphasia aphemia**, **apophasis**, **ban**, to prohibit, ban, edit, bandit, banish, bifarious, blame, blaspheme, boon, confabulate, confess, defamation, defame, euphemism, fabulous, famous, fascinate, fate, infamous, infamy, infant, infantry; multifarious, nefarious, -phasia. - phemia, poly - phemns, preface, prefatory, profess, prophet, trifarious." (p.273)

இங்ஙனம் பேசு என்னும் சொல் பே - phe - fe *என்றும், பாசு (*bhãsh*)* - *பா.* (bhã) - phã - fã *என்றும் பிறவாறும் திரிந்து பல்வேறு சொற்களை மேலையாரியத்தில் தோற்றுவித்துள்ளது.*

ஆயின், ban, ben, bon *முதலிய சொற்கள் பன் என்னும் தென்சொல்லினின்று திரிந்திருத்தல் வேண்டும். மேலையறிஞர் தம் மொழியின் தமிழ் மூலத்தையும் தமிழின் தொன்மையையும் இன்னும் அறியாமையால், இத்தகைய பற்பல தவறுகள் நேர்த்துள்ளன.*

பன்னுதல் = 1. சொல்லுதல். பேசுதல், "பன்னி யிரக்கும்" (கம்பரா. கைகேயி. 41). 2. ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் அல்லது எழுதுதல். 3. நின்று நின்று பேசுதல் அல்லது படித்தல். 4. வாசித்தல் அல்லது படித்தல். "ஓலை....... வாங்கிப் பன்னுவனோ"

(பிரமோத். 13 ፡ 50). 5. புகழ்தல். ''என்னாவினாற் பன்ன வெம்பிரான் வருக'' (திருவாச, 5 ፡ 99). 6. பாடுதல். ''பல்கீதமும் பன்னினார்'' (தேவா. 408 ፡ 3).

ச-ன (ந), ன - ம, ப- ph, ph - f, ph - bh *முதலிய திரிபுகள் இயல்பேயாதலால், பேசு என்னும் சொல்லிலுள்ள பகரமும் சகரமும் மேலையாரிய மொழிகளில் மேற்காட்டியுள்ளவாறு பல்வேறு எழுத்துக்களாகத் திரிந்துள்ளன.*

22. திரும்பு

உல் – உல – உலம் = உருட்சி, திரட்சி.

உலம்வருதல் – உலமருதல் = சுழலுதல்.

உலம் – உலக்கை = உருண்டு நீண்ட தடி.

உல – உலவு. உலவுதல் = திரிதல், சுற்றுதல். உலவு – உரவு.

உல – உலா = சுற்றித்திரிகை, நகர் சுற்றிவருகை.

உலவு – உலகு = சுற்றிவரும் அல்லது உருண்ட கோள்.

உலகு – உலகம் = பேருலகு. 'அம்' பெருமைப்பொருட் பின்னொட்டு. உலவு – உலாவு – உராவு.

உல் – உள் – உழி. உழிதல் = அலைதல்.

உள் – உழல், உழல்தல் = சுழல்தல்.

உழல் – உழலை = 1. செக்குலக்கை. 2. சுழலும் குறுக்குமரம்.

உழற்றி = சுழற்சி. உழன்றி = மாட்டின் கழுத்திற் கட்டும் சுழல்தடி.

உல் – துல் – துலம் – துளம் – துடம் – தடம் = வளைவு.

''தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்'' (தொல். உரி. 23).

துல் – துர் – துறு – (துறள்) – துறடு = பற்றுக்குறடு, வளைகோல்.

துறடு – துறட்டி = இடையன் அலகு (அலக்கு).

துறட்டி – தோட்டி = அங்குசம்.

துற – திற – திறம்பு. திறம்புதல் = மாறுபடுதல்.

துர் – திர் – திரி. திரிதல் = வேறுபடுதல், ஒன்று இன்னொன்றாக மாறுதல், சுற்றுதல், அலைதல்.

திரித்தல் = வேறுபடுத்தல், வேறுபடு சொல்லமைத்தல், முறுக்குதல், சுழற்றுதல்.

திரி = விளக்கெரிக்கத் திரிக்கப்படும் துணிக்கிழிசல் அல்லது முறுக்கு நூற்கயிறு.

திரிசொல் = வேறுபடுத்தியமைத்த சொல்.

திரிபன்றி = சுழலும் சக்கரப் பன்றியுரு.

திரிகல் = சுற்றி மாவரைக்குங் கல். திரி– திரிகை = திரிகல்.

திரி– திரிகு– திரிகி (யாழ். அக.) = குயவன் சக்கரம்.

திரிகி – திகிரி = வட்டவடிவு, சக்கரம், வண்டி, தேர், சக்கரப் படைக்கலம், உருளை, கதிரவன், அரசன் கட்டளை.

திரிசடை = முறுக்குண்ட சடை.

திரிதாடி = முறுக்குண்ட தாடி.

திரிதரவு = சாய்வு, அசைவு.

திரி– திரிபு = வேறுபாடு, சொற்புணர்ச்சி வேறுபாடு, முதலெழுத்து வேறுபடும் மடக்கு, வீடுபேற்றிற் கிடையூறான மாறுபாட்டுணர்வு.

திரிபுகாட்சி = மாறுபாட்டுணர்வு.

திரி– திரிய (நி.கா.வி.எ.) = திரும்ப.

திரியக்கோடல் = ஒன்றை மற்றொன்றாக மாறிக் கருதுகை.

திரியவிடுதல் = சொத்து முதலியவற்றைப் பிறர்பேரில் மாற்றுதல்.

திரியவும் = திரும்பவும்.

திரிசில் (?)– திரில் = குயவன் சக்கரம்.

தித்திரிப்பு = புனைசுருட்டு.

திர்– திரு– திருகு. திருகுதல் = (செ.கு.வி.). கோணுதல், முறுகுதல், பின்னுதல், மாறுபடுதல்.

(செ. குன்றாவி.) = கோணுவித்தல், முறுக்குதல், பின்னுதல், பறித்தல்.

திருகு = கோணல், முறுக்கு, திருகணி, சுரி, திருகு, மரை, மாறுபாடு, புரட்டு, ஏமாற்று.

திருகல் முறுகல் = திருகலும் முறுகலும்.

திருகணை = புரிமணை. திருகுமணி = திருகரிவாள்மணை.

திருகல்– திருகலி = நுனி வளைந்த பனை.

திருகாணி = அணியின் திருகுமரை, முறுக்காணி.

திருகுகம்மல், திருகுகள்ளி, திருகுகொம்பு, திருகுபூ, (கொண்டைத் திருகு), திருகுமரம், திருகுமரை, திருகுவட்டம் (நூல் சுற்றும் கருவி வகை), திருகுவில்லை, திருகுளி என்பன திருகிய நிலையை அல்லது திருகும் செயலைக் குறிக்கும் பொருட்பெயர்கள்.

திருகுசொல்லி = கரவாகப் பேசுபவள்.

திருகுதாளம் = புரட்டு. திருகுமுகம் = கோணிய முகம், சினமுகம், பாராமுகம்.

திருகு – திருகி. தேங்காய் திருகி = தேங்காய் திருகும் கருவி.

திருகு – திருக்கு (பெ.) கோணல், வளைவு முறுக்கு, அணித்திருகு, மாறுபாடு, வஞ்சனை, வலக்காரம்.

தித்திருக்கு = பெரும்புரட்டு.

திருக்குதல் = முறுக்குதல். திருக்கி = முறுக்கி.

திருகு, திருக்கு – L. *torquere*, to twist.

E. ***torque***, p. Necklace of twisted metal, esp. of ancient Gauls and Britons.

E. ***torquate***, a. with ring of peculiar colour or texture of hair or plumage round neck (of animals).

E. ***trick***, n. fraudulent device or stratagem, ME. f. of dial *trique*, OF. *triche*, *trichier*, decieve.

திர் – திரு – திரும் – திருமு. திருமுதல் = திரும்புதல்.

திரும் – திரும்பு. திரும்புதல் = சாய்தல், விலகுதல், வளைதல், மீளுதல், மாறுதல்,

திரும்புகால் = மீளுஞ்சமையம்.

திரும்ப (நி.கா.வி.எ.) = சாய, மீள, மறுபடி.

திரும்பத் திரும்ப = மேன்மேலும், திரும்பவும், மீண்டும்.

திரும்பி = சாய்வது, மீள்வது. ஞாயிறுதிரும்பி = கதிரவனை நோக்கிச் சாயும் பூ (சூரியகாந்தி).

திரும்பு – திருப்பு (பி.வி.). திருப்புதல் = சாய்த்தல், வளைத்தல், மறுபுறங் காட்டுதல், ஏட்டின் பக்கத்தைத் தள்ளுதல், புரட்டுதல், திரும்பக் கொடுத்தல், திரும்பி வரச் செய்தல், திரும்பிப் போகச் செய்தல், மறுமுறை படித்தல் அல்லது படிப்பித்தல், முறுக்குதல், மாற்றுதல், மொழிபெயர்த்தல்.

திருப்பு – திருப்பம் = திரும்புகை, திசை மாறுகை, நிலைமை மாறுகை.

திருப்பு – திருப்பி = புரட்டி, முறுக்காணி திருப்பி.

திரும் – E. ***turn***, move round from a centre or axis, change from one side to another, take new direction, more to other side of, cause to go, change in nature, translate.

OE. *tyrnan*, *turnian*, OF. *turner*, *torner*, f. L. *tornare* f. Gk. *tornos*.

E. ***attorney***, n. ME. f. OF. *atorne* p.p. of *atorner* (a) to, *torner* turn).

E. ***return***, ME. *retorner*, *returner* f. Rom. re (*tornare*, turn).

ம் – ன், போலி. ஒ.நோ. : கடம் – கடன். இரும் (இரும்பு) – iron.

E. ***tornado***, n. violent storm of small extent with whirling winds Sp. *tornada*, thunder. storm, *tornar*, to turn.

E. ***tourney***, ME. f. OF. *tornei*, *torneier* f. Rom. *tornidiare* f. L. *tornus*, a turn.

E. ***tournament***, ME. f. OF. *torneiement*, *torneier*, tourney.

E. ***tourniquet***, n. bandage etc. for stopping flow of blood through artery by compression effected with screw of twisted bar. (?).

திருப்பு – திருப்பி – E. *trope*, n. figurative use of a word. L.F. Gk. *tropos*, turn, way. *trope*, *trepo*, turn.

E. ***trophy***, 1. arms etc. of vanquished enemy set up on field of battle or elsewhere to commemorate victory. F. *trophee* f. L. *trop(h)aeum* f. Gk. *tropaion* (*trope*, root f. *trepo*, turn).

வெற்றியரசன் தோற்ற அரசனைப் போர்க்களத்தினின்று திருப்பியடித்தல் அல்லது துரத்துதல் என்னும் அடிப்படைக் கருத்துக் கொண்டதே trophy *என்னுஞ் சொல். இதே கருத்தை விளையாட்டுப் போருக்கும் ஏற்றிக் கூறுவனவே* tourney, tournament *என்னுஞ் சொற்களும் என அறிக.*

E. ***Trophy***. 2. Thing made or kept or awarded as memorial of victory in tournament.

E. ***tropic***, n. "Parallel of latitude 23 ⁰ 27 ¹ north (Tropic of Cancer) or south (Tropic of Capricorn) of the equator (the Tropics, region between these); each of the two corresponding circles on celestial sphere where sun appears to turn after reaching greatest destination" ME. f. L. f. Gk. *tropikos (trope*, turning f. *trepo*, turn)

E. ***tropical***, a. OF. peculiar to, suggestive of the tropics.

E. ***tropism***, n. (Biol.) Turning of (part of) organism in particular direction in response to external stimulus. (f. second element of heliotropism).

E. ***heliotrope,*** n. Herb or shrub of genus *Heliotropium* with fragrant purple flowers; f. L. f. Gk. *heliotropion*, plant turning flowers to the sun; *helios*, sun. *tropos* f. *trepo*, turn.

ஒ.நோ. : ஞாயிறு திரும்பி = சூரியகாந்தி.

E. ***tropology***, n. Figurative use of words; figurative interpretation esp. of the Scriptures; f. LL. f. Gk. *tropologia, tropos f. trepo*. turn. *logy*, suffix forming nouns denoting sciences.

அணியியலில், சொற்களின் பொருள்கள் பல்வேறு வகையில் திரிக்கவும் திருப்பவும் படுதல் காண்க.

E. ***tropopause,*** n. Interface between troposphere and atratosphere.

E. ***troposphere***, n. Layer of atmospheric air extending about seven miles upwards from earth's surface, in which temperature falls with increasing height. Gk. *tropos*, turning + sphere.

E. ***strophanthin*** n. White crystaline poisonous glucoside extracted from various species of the genus Strophanthus of tropical plants and used as a heart - tonic; f. Mod. L. *strophanthus* f. Gk. *strophos*, twisted cord + *anthos*, flower.

E. ***strophe***, n. (Lines recited during) turn made in dancing by ancient Greek chorus; Gk. *strophe*, lit. turning, *strepho*. turn.

E. ***antistrophe***, f. Gk. *antistropho*, turn against.

E. ***apostrophe***, n.f. Gk. *apo*, away from, *strepho*, to turn away.

E. ***catastrophe***, n. Sudden or widespread or noteworthy disaster; even subverting system of things; disastrous end, ruin; denouement of drama; f. L. *catastropha* f. Gk. *cata*, down, *strophe*, turning. *strepho*, turn.

tort (twist), tortus (crooked), tortum (wrong), tortor (twister) *முதலிய இலத்தீனச் சொற்களும், இலத்தீனத்தினின்று கொண்ட கடன் சொல்லாகக் கூறப்படும்* tort *என்னும் ஆங்கிலச் சொல்லும், அதினின்று திரிந்த* tortion, tortuous, torture, tortrix *முதலிய தனிச் சொற்களும்,* torticollis *என்னும் கூட்டுச் சொல்லும்,* contort, distort, extort, retort *முதலிய முன்னொட்டுப் பெற்ற திரிசொற்களும், திரித்தல் அல்லது திருகற் பொருளையே அடிப்படையாகக் கொண்டுள்ளமை யின், திரி என்னும் வேர்ச்சொல்லினின்று திரிந்தனவாகக் கொள்ளத் தக்கனவே.*

2

தொகுதிச் சொற்கள்

1. பூனைப்பெயர்கள்

1) பூசை

பூனை என்பது பூசை என்னும் சொல்லின் திரிபே. பூசுதல் = கழுவுதல், சிலைகழுவுதல். நெல்லை மாவட்டத்தின் ஒருபகுதியில், 'முகம் பூசுதல்' என்பது இன்றும் உலகவழக்கா யிருக்கின்றது. ''பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்'' (நான்மணி. 99).

பூனை அடிக்கடி தன் எச்சிலை முன்னங்காலால் தொட்டு முகத்தைப் பூசிக்கொள்வதால், அது பூசையெனப் பெயர் பெற்றது. ''வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்'' (தொல். மரபு. 69). வடமொழியிலுள்ள மார்ஜால என்னும் பூனைப் பெயரும் இக்காரணம் பற்றியதே. மெழுகு – வ. ம்ருஜ் (mrj) = பூசு, கழுவு. ம்ருஜ் – மார்ஜ் – மார்ஜார – மார்ஜால.

பூனையைப் பூசுபூசு என்றழைப்பது பெண்டிர் வழக்கம். பூசை – பூச்சை (நாஞ்சில்நாட்டு வழக்கு). பூச்சை – ம. பூச்ச. பூசை – பூனை. ச – ன, போலித்திரிபு. ஒ.நோ : பிசை – பினை.

பூனைக்கண் = பூனைக்கண்போன்ற நிறமுள்ள ஒளிக்கல் (வைடூரியம்). ஆங்கிலத்திலும் இது cat's eye என்று பெயர் பெற்றிருத்தலை நோக்குக. வைடூரியம் என்னும் வடசொல்லும் இக் காரணம் பற்றியதே.

பூனை – பூஞை ஒ.நோ : அன்னை – அஞ்ஞை. இனி, பூசை – பூஞை என்றலுமாம். ஒ.நோ : குடிசை – குடிஞை. ''சிலம்பி சிச்சிலி பூஞை கிருமி'' (தத்துவப். 19).

ஆங்கிலச்சொல்

(The Oxford English Dictionary and Klein's Comp. Ety. Dy. of the E. Language).

E. *puss, pus, pusse*. (A word common to several Teutonic languages, usually as a call-name for the cat). **Du**. *poes*, **LG**. *puus, puuskatte, puus-man*, **Sw**. dial. *pus, katte pus*, **Norw**. *puse, puus*, **Lith**. *puz, puiz*, **Ir**. and **Gael**. *fus*, **Alb.** *piso*, **Ruman** *pisica*.

'Puss in the corner,' a game of children; Pussy-wants-a-corner, an American name of the game.

E. ***pussy***, a pet name for a cat. Y dim. suffix.

pussy - cat, a nursery word for a cat.

pussyfoot, to tread stealthily like a cat.

pussy - willow, the American glaucous willow, in reference to its silky catkins.

Puss - Etymology unknown *என்பது* O.E.D.; Imitative of the spitting of a cat *என்பது* K.C.E.D.E.L.

2) பிள்ளை (பூனைப்பிள்ளை)

பிள்ளையில்லாதவர்கள், சில உயிரினங்களிற் சிலவற்றைப் பிள்ளைபோல் வீட்டில் வைத்து வளர்ப்பது பண்டை வழக்கம். அதனால், ''இருக்கும் பிள்ளை மூன்று, ஓடும் பிள்ளை மூன்று, பறக்கும் பிள்ளை மூன்று'' என்று ஒரு பழமொழி யெழுந்தது. ஓடும்பிள்ளை மூன்றனுள், அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை என்பன இரண்டு. மூன்றாம் பிள்ளை பூனைப்பிள்ளையா யிருக்கலாம்.

''பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே'' (தொல். மரபு. 24)

''நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை யென்ப.'' (ஷ ஷ 8)

''நரியும் அற்றே நாடினர் கொளினே.'' (ஷ ஷ 9)

''பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.'' (ஷ ஷ 11)

''கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப.'' (ஷ ஷ 13)

''மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான.'' (ஷ ஷ 14)

''பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை'' (ஷி ஷி 4)

என்று தொல்காப்பியங் கூறுவதால், பல்வேறு உயிரினங்களிலும் சிற்சில உயிரிகள் பிள்ளையென்னும் இளமைப் பெயர் பெற்றிருந்தமை அறியப்படும்.

வீட்டுப் பூனைக்குட்டி பாலூட்டி வளர்க்கப்படுவது பெரும் பான்மை. ஆதலால், பூனைப்பிள்ளை யென்பது, பெருவழக்குப் பற்றி, பிள்ளையென்னும் பொதுப் பெயராலேயே குறிக்கப்பட் டிருப்பது இயல்பு. பிள்ளைபோல் வளர்க்கப்படுவது, பெரிதான பின்பும் அப் பெயர் பெறும். அணிற்பிள்ளை கீரிப்பிள்ளை முதலிய பெயர்களை நோக்குக. (குட்டி என்பது ஆட்டுக்குட்டியையும், கன்றுக்குட்டி என்பது மாட்டுக்கன்றையும், சிறப்பாகக் குறித்தலை யும் நோக்குக.)

பிள்ளை யென்னுஞ்சொல் தெலுங்கிற் பில்லி யென்று திரியும். ஒ.நோ: தள்ளை (தாய்) – தல்லி. பில்லி– இந். பில்லீ(billi). பில்லி யென்பது இலத்தீனில் felis அல்லது feles என்று வழங்கும். உயர்திணையில் இருபாற்கும் பொதுவான பிள்ளை யென்னும் இளமைப்பெயர், இலத்தீனில் filius என்று மகனையும், filia என்று மகளையும் குறித்து வழங்குதல் காண்க. பிள்ளை என்பது, வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்தில் ஆண்பிள்ளையையும், பாண்டிநாட்டுப் பகுதியிற் பெண்பிள்ளையையும், சிறப்பாகக் குறிப்பது, வழக்கு வேறுபாடு பற்றியதே.

பூசை அல்லது பூனை யென்பது வீட்டுப் பூனையையே. காட்டுப் பூனை வெருகு எனப்படும். வெருவத்தக்க தோற்றமும் வலிமையும் உடையது வெருகு. வெருவுதல் – அஞ்சுதல். வெருகு வீட்டில் வளர்க்கப்பட்ட பின் பூசையெனப் பெயர் பெற்றது. ''வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்'' என்று தொல்காப்பியம் கூறுதல் காண்க. வீட்டுப்பூனை இலத்தீனில் Telis domestica எனப்படும்.

feline (adj.) = cat like. felid = one of the Felidoe or cat-tribe.

3) விடரகன்

விடுதல் = பிளத்தல், விடு – விடர் = பிளவு, பிளப்பு.

விடரவன் = (பகலிற் கண்பிளவுள்ள) பூனை (யாழ். அக.). விடரவன் – விடரகன் – விடரகம் – விடருகம் – விடரூகம் = பூனை (நாமதீப. 203).

விடரகம் – விடாரகம் – வ. விடாரக = பூனை.

விடாரகம் – விடாலகம் = பூனை (சூடா.).

விடாலகம் – வ. விடாலக = பூனை.

விடாலகம் – விடாலம் = பூனை (சங். அக.).

விடாலம் – வ. விடால – வைடால = பூனை.

விடாரகம் – விடாரம் – வ. விடார – வைடூர்ய = பூனைக்கண் போன்ற ஒளிக்கல்.

வைடூர்ய – த. வைடூரியம்.

தமிழிற் பூனைக்கண் என்றும் ஆங்கிலத்தில் cat's eye *என்றும் உறுப்பைத் தெளிவாகக் குறிப்பிட்ட உவமையாகுபெயர் தோன்றி யுள்ளது. சமற்கிருதச் சொல்லோ பூனைப்பெயரினின்றே திரிந்த திரிசொல்லாக வுள்ளது. வ. விடாரக – பிடாரக* (b), *வ. விடால – பிடால* (b). *வகரமுதல் வடமொழியிற் பகரமுதலாகத் திரிதல் இயல்பே. ஒ.நோ : வலம் – வ. பல* (bala).

4) க. கொத்தி *= பூனை.*

ம. கொற்றி, குறிஞ்ஞி (குறுஞ்ஞி) = பெண்பூனை.

தமிழில் இச் சொல் இறந்துபட்டது. பழஞ் சேரநாட்டுத் தமிழின் (வடசொற் செறிந்த) திரிபே மலையாளமாதலால், கொற்றியென்பதைத் தமிழாகக் கொள்ளலாம்.

குறு, குறுகுறு, கொறுகொறு (ம. குறுட்டுக – குருட்டுக, குறும்முக; க. கொர், கொர, கொரகொர) முதலிய ஒலிக்குறிப்புகளை யொத்த பூனை யடித்தொண்டையொலிக் (purr) *குறிப்பினின்று குறுஞ்ஞி (– குறிஞ்ஞி) என்னும் பூனைப்பெயர் தோன்றியிருக்கலாம். இதற்குக் கொற்றி யென்னுஞ் சொல்லொடு தொடர்பில்லை.*

தமிழிற் குருடனைக் குறிக்கக் கொத்தை என்றொரு சொல் உளது. ''கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்து'' (தேவா. 1040 : 2), ''இன்னான் என்பது, 'கண்ணாற் கொத்தை, காலான் முடவன்' என்பன. (தொல். வேற். 11, இளம். உரை), கொத்தியென்னுங் கன்னடச் சொல் கொத்தையென்னும் தமிழ்ச்சொல்லைப் பெரிதும் ஒத்துளது. பூனை பகலில் முழுக்கண்ணும் தெரியாமல் அரைக் குருடாயிருப்பதனால், அதற்குக் கொத்தையென்னும் பெயர் ஏற்பட் டிருக்கலாம். அப் பெயர் ஒரு திரவிட மொழியிற் கொத்தியென்று திரிந்திருப்பது, உத்திக்கும் இயற்கைக்கும் பொருத்தமானதே. கொற்றியென்பது கொத்தி யென்பதன் திரிபாயிருக்கலாம்.

பூனைக்கு மேலை மொழிகளெல்லாவற்றிலும் பெரு வழக்காய் வழங்கும் பெயர், பல்வேறு வகைகளில் திரிந்திருப்பினும் கொத்தி என்னும் சொல்லையே ஒத்துள்ளது.

Gk. *katta, kattos*; **Mod. Gk**. *gata*; **L**. *catus, catta, cātus, cattus*, **Late Latin**. *cattus, catta*.

It. *gatto*; **Sp., Pg**. *gato*; **Cat**. *gak*; **Pr**. *cat*; **ONF**. *cat*; **F**. *chat* (**fem**. *gatta, gata, cata, cate, chate, chatte*).

E. *cat*; **OE**., **ME**. *cat, catt, catte*, **ON**. *kott-r, kattus; keta*, fem; **Sw**. *katt, katta*; **Da**. *kat*; **MLG**. *katte*; **MDu**. *katte*, *kat*; **D**. *kat*; **OHG**. *kazza, chazza, chataro*; **MHG**., **Mod. G**. *katza*; **MHG**. *katero, kater*; **Mod. G**. and **Du**. *kater* = he cat.

Oir. *cat* (masc.); **Gael**. *cat* com. **W**. *kath*; **Welsh** and **Cornish**. *cath*; **Breton** *kaz*; **Vannes** *kac'h* m. **OCo**. *kat*.

Nubian *kadis*; **Arab** *qitt*, tomcat, *qitta*, cat.

Slavonic *kot*; **OSlav**. *kot'ka*; **Bulg**. *kotka*; **Slovenish** *kot* m; **Russ**. *kot* m. *kotchka*, *koshka*; **Pol**. *kot* (*koczur* m.); **Boh**. *kot* m. *kotta* f.; **Sorabian** *kotka*; **Lith**. *kate*; **Finnish** *katti*.

Derivatives

Chatoyant, of a changeable colour, shining like the eyes of a cat.

caterpillar fr. **LL**. *catta pilose* = hairy cat.

caterwaul fr. **LG**. *caterwanlen* = to cry like cats.

meerkat fr. **MDu**. *meer catte* = sea cat.

catteny = place where cats are bred.

kitten, catkin, cattish, catishly, catishness, catling, catty, cattily, catliness etc.

ஐரோப்பாவில் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை பூனையிருந்த தில்லையென்றும், அது எகிபது நாட்டிலிருந்து அங்குக் கொண்டு வரப்பட்டதென்றும், cat என்னும் அதன் பெயர் எகிபதியச் சொல்லென்றும், மாக்கசு முல்லர் கூறுகின்றார். பூனை நீண்ட காலமாக எகிபது நாட்டில் வளர்க்கப்பட்டு வந்ததனாலும், ஓர் எகிபதியப் பெண்தெய்வம் பூனைத்தலை கொண்டிருந்ததனாலும், ஐரோப்பாவிற்கு எகிபது அண்மையிலிருப்பதனாலும், அவர் கூற்றுப் பொருத்தமாகவே தோன்றுகின்றது. ஆயின், குமரிநாடே மாந்தன் பிறந்தகமாதலாலும், தமிழகத்திற்கு எகிபதினோடு நீண்டகாலமாக நீர்வாணிகமும் நிலவாணிகமும் இருந்து வந்ததனாலும், வெருகு தமிழகக் குறிஞ்சிநிலக் கருப்பொருளாதலாலும், பூனை தமிழகத்தி

னின்றே எகிபதுவிற்குச் சென்றிருத்தல் வேண்டும். அதனால் அதன் பெயரும் தமிழ்ச்சொல்லாயே யிருத்தல் வேண்டும்.

மாக்கசு முல்லர் பூனைப் பெயரையும் பூனைக் கண்ணையும் பற்றிக் கூறியிருப்பதின் (On the Name of the cat and the cat's eye) *சில பகுதிகள் வருமாறு :*

"Our domestic cat came to us from Egypt, where it had been tamed by a long process of kindness, or it may be, of worship. In no classical writer, Greek or Roman, do we find the cat as a domestic animal before the third century A.D. It is first mentioned by Caesarius, the physician, brother of Gregory, the theologian of Nzianzus, who died 369 A. D. He speaks of 'kattai endrumo'. About the same time Palladius.... writes "contra.... ponunt" .....it is clear that when Palladius wrote (fourth century A.D.) tame mustelae were still more common than cats, whether called *cati* or *catti*.

"Evagrius scholasticus (Hist. Eccl. 17, 23), about 600 A.D., speaks of *katta* as the common name of 'ailouros,' here meant therefore, for cat....

"And Isidorus, his contemporary, expresses himself in the same sense when saying (12, 2, 38), 'hune..... *catum*..... vocant.

"If we admit, in the absence of evidence to the contrary effect, that the tame cat came from Egypt to Greece and Italy in the fourth century A.D., and that the shrewd little animal was called by the Romans *catus*, everything else becomes intelligible.

"In the ruins of Pompeii, where the bones of horses, dogs and goats have been found, no bones of cats have hitherto been discovered....

"In the language of Romania no traces exist of the word *catus*, probably because at the time when that Romanic dialect became settled in Dacla, *catus* did not yet exist as a Latin name for cat.

The Romans did not transfer the name of Mustela to the cat, but by a kind of popular etymology, changed *cattus* into *catus*, and these two names, *katta* and *catus*, found their way afterwards into nearly all the languages of Europe."

"We now come to the question, whether cat was known at an early time in India. The two principal words in Sanskrit for cat are '*mārjāra*' and '*vidãla*.'

"*Mārjāra* means the cleaner, the cat being well known for its cleanliness..."

"The second name for cat in Sanskrit is *vidāla* or *bidāla*..."

"It is difficult to analyse this word. I thought at first that it might be connected with vid*ā*la (Bid*ā*la, in the *Ā*t, Ãr. III. 1, 2, 6) which means cut in half, split in the middle, which would be a very appropriate term for a cat's eye. But this would leave the lingual of unaccounted for. In the Unadi-Sutras (I. 117) it is derived from *vid*, to shout with the suffix *āla*. This suffix shows a certain analogy with *ãliga* in *mārjāliya*, another name for cat..."

"Vaidūrya and Vaidurya, the very form that would best correspond to the Greek *ailouros* means in Sanskrit the cat's eye. The cat is called maṇi vaidurya lokana, i.e. having eyes like the Vaiḍūrya jewel. It is true that so ancient a grammarian as Pāṇini (IV. 3, 84) derives vaiḍūrya from *vidura*, 'very distant,' and that accordingly it is often spelt with a dental d. But this seems an after-thought. The transition of vaiḍūrya into vaiḍūrya is not impossible, even in Sanskrit, if we remember such parallel forms as dura and daviyas, sthūla, sthaviyas, & c...."

"It was objected by Kātyayana that Pāṇini's rule (Pān. IV. 3, 84), according to which vaiḍūrya is formed from Vidūra, must be wrong, because the Vaidurya jewel does not come from Vidūra, but from Bālavāya, and is only cut or polished at Vidūra...."

- What Can India Teach Us? - pp. 261 - 8.

இதினின்று வைடூர்ய என்பது 'விதூர (மிகத் தொலைவான) என்னும் சொல்லினின்று வடமொழியில் பாணினியால் திரிக்கப் பட்டுள்ளது தவறு என்பது தெளிவாகும். வடமொழிச் சென்ற தென்சொற்களையெல்லாம், பொருந்தப் பொய்த்தலாக வேறு மூலங்காட்டி மறைப்பது, வடமொழியாளர் வழக்கமே.

விடாரக என்பது பிடாரக (b) *என்றும் விடால என்பது பிடால* (b) *என்றும், பகர முதற் சொல்லாகத் திரிக்கப்பட்டிருப்பதே வடசொல்லின் பின்மையைக் காட்டும்.*

பிடால (bidāla) *என்னும் சொல்லின்கீழ்,* "also written vidāla, of doubtful origin" *என்று மானியர் வில்லியம்சு தம் சமற்கிருத ஆங்கில அகரமுதலியிற் குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.*

2. நெருப்புப் பற்றிய 'சுள்' அடிச்சொற்கள்

உ – உல் – உல. உலத்தல் = எரிதல், காய்தல். உல – உலவை = காய்ந்த மரக்கிளை. ''இலைதீந்த வுலவையால்'' (கலித். 11).

உல – உலர். உலர்தல் = காய்தல்.

உலர் – உலறு. உலறுதல் = காய்தல், சினத்தல், வற்றுதல்.

உல – உலை = 1. நெருப்புள்ள அடுப்பு. 2. கொல்லன் அடுப்பு. 3. சோறு சமைக்கக் கொதிக்க வைக்கும் நீர்.

உல் – அல் – அன்று. அன்றுதல் = எரிதல், சினத்தல், பகைத்தல்.

அல் – அன் – அனல் = நெருப்பு. அனலுதல் = எரிதல்.

அனல் – அனலி = 1. நெருப்பு. 2. கதிரவன்.

அனல் – அனலம் = நெருப்பு. அனலம் – வ. அநல.

அனலம் – அனலன் = நெருப்புத் தெய்வம்.

உல் – உள் – ஒள் – ஒண்மை = 1. நெருப்பின் தன்மையான விளக்கம். 2. உள்ளொளி, நல்லறிவு. 3. இயற்கையழகு. 4. நன்மை.

ஒள் – ஒளி = 1. நெருப்பின் விளக்கம். 2. ஒளிபோல் விளங்கும் புகழ். 3. உள்ளொளி.

ஒளி – ஒளிர். ஒளிர்தல் = விளங்குதல்.

ஒளிர் – ஒளிறு. ஒளிறுதல் = விளங்குதல்.

ஒள் – ஒள்ளிய = ஒளியுள்ள, அறிவு மிக்க, நல்ல, அழகிய.

ஒள்ளியன் = அறிவுடையோன். ஒள்ளியோன் = விளக்கம் மிக்க வெள்ளிக்கோள்.

ஒளி = 1. ஒளியுள்ள. 2. அழகிய. ஒள் + தொடி = ஒண்டொடி = விளங்கும் வளைய லணிந்த பெண். ஒள் + நுதல் = ஒண்ணுதல் = விளங்கும் நெற்றியுடைய பெண்.

ஒள் + பு = ஒண்பு – ஒட்பு – ஒட்பம் = அறிவு. ''கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்'' (குறள். 404).

உள்– அள்– அழ – அழல் = 1. நெருப்பு. 2. வெப்பம். 3. எரிவு. 4. நரகம். 5. துளங்கொளி (கேட்டை). 6. செவ்வாய். 7. சினம்.

அழலவன் = 1. தீத்தெய்வம். 2. கதிரவன். 3. செவ்வாய்.

அழலுதல் = 1. எரிதல், 2. விளங்குதல், 3. காந்துதல், 4. சினத்தல்.

அழல் – அழற்று (பி.வி.), அழற்றுதல் = எரித்தல், வெம்மை செய்தல்.

அழல்– அழறு – அளறு = நரகம்.

''அண்ணாத்தல் செய்யாதளறு'' என்னுங் குறளடியில் (255) 'அளறு' என்னும் சொல் ஏட்டுப் பிழையாகவும் இருக்கலாம்.

''பூரியர்கள் ஆழும் அளறு'' என்னுங் குளறடி (919) சேற்று வடிவான நரக வகையென்று கொள்ள இடந்தரினும், நரகம் நெருப்புலக மென்றே பொதுவாகக் கொள்ளப்படுவதனாலும், அழல், எரி முதலிய பெயர்கள் அதற்குண்மையாலும், ஊற்றளவி லேயே நெருப்புத் துன்புறுத்துவதனாலும், அழறு என்னுஞ் சொல்லே அளறு என மருவிற்றென்றோ, ஏட்டுப் பிழையாக நேர்ந்ததென்றோ கொள்வது பொருத்தமானதே.

அழல்– அழலி = நெருப்பு. அழலித்தல் = எரிச்சல்.

அழல்– அழலை = தொண்டைக் கரகரப்பு.

அழல்– அழன்– அழனம் = 1. நெருப்பு. 2. வெம்மை.

''அழனம்மை நீக்குவிக்கும்'' என்னும் தேவார (1225 : 4) அடியிலுள்ள 'அழனம்மை' என்னுந் தொடரை, அழன் + நம்மை என்றும் பிரிக்கலாம்.

அழன்– அழனி. ஒ. நோ : அழல்– அழலி, களன்– கழனி.

அழ – அக – அகை. அகைதல் = எரிதல். ''அகையெரி யானாது'' (கலித். 139 : 26). ஒ.நோ : மழ– மக.

அழனி– அகனி– வ. அக்நி (agni) – L. *ignis*. இதற்கு யாசுகர் (Yaskar) தம் நிருத்தத்திற் (Nirukta) கூறியிருக்கும் வேர்ப்பொருட் காரணங்கள் முற்றும் பொருந்தாப் பொய்த்தல் என்பதை அங்கு நோக்கிக் காண்க. புதுச்சேரி அரவிந்தர் தவநிலைய இருக்குவேதப் பதிப்பு அகோ (ago) என்று மூலங்காட்டுவதும், முற்றும் தவறாம். இது சமற்கிருதத்தில் அஜ் என்றே நிற்கும்.

உள்– உண்– உண்ணம் = வெப்பம். ''உண்ண வண்ணத் தொளிநஞ்ச முண்டு'' (தேவா. 510 : 6).

உண்ணம்– வ. உஷ்ண. மராத். ஊன்.

உண் – உண. உணத்தல் = காய்தல். மிளகாய் உணந்துவிட்டது (உ.வ.). உணந்த மிளகாய் (உ.வ.) = மிளகாய் வற்றல்.

உண - உணத்து (பி.வி.). உணத்துதல் = 1. காயப்போடுதல், நெல்லை உணத்தினார் (உ.வ.). 2. உடம்பை மெலிவித்தல் அல்லது வற்றவைத்தல். ''மெய்யுணத்தலும்'' (தைலவ. தைல. 110).

உண – உணங்கு. உணங்குதல் = நெல் முதலியன காய்தல். ''உணங்குணாக் கவரும்'' (பட்டினப். 22). ''தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்'' (தமிழ்நா. 154). 2. மெலிதல். ''ஊட லுணங்க விடுவாரோடு'' (குறள். 1310). 3. வாடுதல். ''உணங்கிய சிந்தையீர்'' (கந்தபு. மோன. 21). 4. சுருங்குதல். ''உணங்கரும் புகழ்'' (காஞ்சிப்பு. நாட்டுப். 1).

உணங்கு – உணங்கல் = 1. உலர்த்திய கூலம். ''உணங்கல் கெடக் கழுதை யுதடாட்டங் கண்டென் பயன்'' (திவ். திருவாய்.) 4 ፡ 6 ፡ 7). 2. வற்றல். ''வெள்ளென் புணங்கலும்'' (மணிமே. 16 ፡ 67). 3. உலர்ந்த பூ (பிங்.).

உணங்கு – உணக்கு (பி.வி.). உணக்குதல் = உலர்த்துதல். ''தொடிப்புழுதி கஃசா வுணக்கின்'' (குறள். 1037).

உணக்கு – உணக்கம் = வாட்டம்.

ம. உணக்கம், க. ஒணகிலு (g), து. ஒணகெலு.

உணக்கு = வாட்டம். ''உணக்கி லாததோர் வித்து'' (திருவாச. 30 ፡ 1).

உல் – உர் – உரு. உருத்தல் = 1. அழலுதல். 'ஆக முருப்ப நூறி'' 'புறம். 25 ፡ 10). 2. பெருஞ்சினங் கொள்ளுதல். ''ஒரு பகலெல்லா முருத்தெழுந்து'' (கலித். 39 ፡ 23).

உரு – உருத்திரம் = பெருஞ்சினம். உருத்திரம் – வ. ருத்ர (d). 'திரம்' ஒரு தொழிற்பண்பீறு. ஒ.நோ ፡ மாத்தல் = அளத்தல்.

மா + திரம் = மாத்திரம் (அளவு). அவன் எனக்கு எம்மாத்திரம்? என்னும் வழக்கை நோக்குக. மானம் (மா + அனம்) என்னும் அளவுப் பொதுப்பெயரையும், மா, அரைமா, (ஒருமா), இருமா, மாகாணி முதலிய அளவுச் சிறப்புப் பெயர்களையும், மேலை வ.ஆ. மாவட்டத்தில் படி என்னும் முகத்தலளவைப் பெயர் மானம் என்று வழங்குதலையும் நோக்குக. மாத்தல் என்னும் வினைச்சொல் பண்டே வழக்கிறந்தது. திரம் – திரை. மா + திரை = மாத்திரை = அளவு, எழுத்தொலிக்குங் கால அளவு, உண்ணும் மருந்தளவு.

சினம் தீயொத்தலால், தீப் பற்றிய சொற்களெல்லாம் சினத்தையுங் குறிக்கும்.

உருத்திரம் – வ. ரௌத்ர (raudra) *= வெகுளி.*

ஒ. நோ : E. *wrath*, n. anger, O.E. *wrreththu*, AS. and ON. *wraedo*, ME. *wrathe.*

E. *wroth*, adj. angry. OE. *wrath*, OS. *wreth*, OHG. *reid*, ON. *reithr*.

கீற்றும் (Skeat) *கிளேனும்* (Klein) *இச் சொற்களை* reid (twristed) *என்னும் மூலத்தினின்று திரிக்கின்றனர். அது தென்சொல்லை அறியாமையாலும் இருக்கலாம்.*

உரு – உரும் – உருமம் = 1. வெப்பம். 2. வெப்பம் மிக்க நண்பகல்.

உரும் – உருமி. உருமித்தல் = வெப்பமாதல், புழுங்குதல்.

உரும் – உரும்பு = 1. கொதிப்பு. 2. வெகுளி. ''உரும்பில் கூற்றத் தன்னநின்'' (பதிற்றுப். 26 : 13).

உரும்பு – உருப்பு = 1. வெப்பம். ''கனமிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென'' (கலித். 16 : 7). 2. சினத்தீ. ''உருப்பற நிரப்பினை யாதலின்'' (பதிற்றுப். 50 : 16). 3. கொடுமை. ''உரும்பில் சுற்றமோடு'' (பெரும்பாண். 447).

உருப்பு – உருப்பம் = 1. வெப்பம். ''கனலும்.... உருப்பமெழ'' (அரிச். பு. விவா. 104). 2. சினம்.

உரு – உருகு. உருகுதல் = 1. வெப்பத்தால் இளகுதல், 2. மனம் நெகிழ்தல்.

உருகு – உருக்கம் = 1. இளக்கம். 2. மனநெகிழ்ச்சி. இரக்கம்.

உருகு – உருக்கு (பி.வி.). உருக்கு = உருக்கிய இரும்பு. உருக்குதல் = 1. இளக்குதல். 2. வாட்டுதல், மெலிவித்தல்.

உருக்கு – உருக்கன் = உடம்பை வாட்டும் நோய்.

உருக்கு – உருக்கி = 1. மாழை வகைகளை உருக்குபவன். 2. உடம்பை உருக்கும் நோய்.

உருக்காங்கல் = உருகிப் போன செங்கல்.

உல் – சுல் – சுல்லி = 1. அடுப்பு (திவா.). 2. மடைப்பள்ளி. (இலக். அக.). சுல்லி – வ. சுல்லீ (c).

சுல் – சுள். சுள்ளெனல் = வெயில் காய்தற் குறிப்பு, உறைத்தற் குறிப்பு. சுள் = கருவாடு (காய்ந்த மீன்). ''சுள்ளினைக் கறித்தனர்'' (கந்தபு. அசமுகி நகர். 18).

சுள்– சுள்ளம் = சினம் (W.).

சுள்ளம் – சுள்ளகம் - சுள்ளக்கம் = 1. சினம் (யாழ். அக.). 2. வேர்க்குரு (சங். அக.). சுள்ளக்கம் - வ. க்ஷுல்லக.

சுள்ளக்காய் = மிளகாய். உறைப்புச்சுவை சுடுதல் போன்றிருத்தலின், சுடுதற்கருத்தினின்று உறைப்புக் கருத்துத் தோன்றும்.

ஒ.நோ : E. hot = of high temperature, pungent.

சுள்– சுள்ளி = காய்ந்த குச்சு. சுள்– சுள்ளை = செங்கல் சுடுமிடம். சுள்ளை– சூளை.

சுள்– சுளுந்து = தீவட்டி, பந்தம் எரிக்கும் மரக்கழி.

சுள்– சுள்கு– சுட்கு– சுட்குதல் = காய்தல், வற்றுதல் (W.).

ஒ.நோ. : வெள்கு– வெட்கு– வெட்கம்.

சுட்கு– சுட்கம் = 1. வறட்சி. 2. வறண்டது. 3. உடம்பை வாட்டும் ஒரு நோய். 4. பணம் முதலிய பொருட்குறைவு. 5. கஞ்சத்தனம். சுட்கஞ் செய்யாதே (உ.வ.).

சுட்க தருக்கம் = வீண் சொற்போர்.

சுட்கு– சுக்கு. சுக்குதல் = உலர்தல் (நாஞ்.).

சுக்கு = காய்ந்த இஞ்சி. சுள்– வ. சுஷ் (to dry).

ஒ.நோ: உள் (ஒள்)– வ. உஷ் (to burn) – உஷா = ஒளி தோன்றும் விடியற்காலம்.

சுக்கு– வ. சுஷ்க.

சுக்கு– சுக்கான் = 1. சுண்ணாம்புக்கல். 2. உருக்குச் செங்கல்.

சுக்கு = காய்ந்தது, வறண்டது, பயனற்றது.

சுட்கம்– சுக்கம் = 1. வறட்சி, 2. கஞ்சத்தனம்.

சுக்கஞ்செட்டி– கடுஞ்செட்டுள்ளவன்.

சுள்– சுள்பு – சுட்பு – சுப்பு – சுப்பி = சுள்ளி. சுள்ளிசுப்பி என்பது மரபிணைச் சொல்.

சுப்பெனல் = ஈரமுள்ளது காய்தல் அல்லது வறண்ட நிலம் நீரை உள்ளிழுத்தற் குறிப்பு.

சுள்– சுண்– சுண்ணம் = 1. காளவாயிற் சுட்ட கல். 2. அக்கல்லை நீற்றின நீறு. 3. நீறு. 4. நறும்பொடி. 5. பூந்தாது.

சுண்ணம்– சுண்ணம்பு– சுண்ணாம்பு = 1. சுட்ட சுண்ணாம்புக்கல். 2. நீற்றின சுண்ணாம்பு.

சுண்ணக்கல் = சுக்கான்கல் (யாழ். அக.).

சுண்ணம் – சுண்ணகம் = விழா நாள்களில் மக்கள்மேல் தூவும் நறும்பொடி.

சுள்– சுண்டு. சுண்டுதல் = (செ.கு.வி.) 1. நீர் வற்றுதல் 2. வாடுதல், சுருங்குதல். அச் செய்தி கேட்டவுடன் அவன் முகஞ் சுண்டிப் போயிற்று (உ.வ.) – (செ. குன்றா வி.) நீர் வற்றக் காய்ச்சுதல் அல்லது அவித்தல். இன்றைக்குக் கடலை சுண்டினார்கள் (உ.வ.).

சுண்டு– சுண்டல் = 1. நீர் முற்றும் வற்ற அவித்த கடலைப் பயறு. 2. சுண்டற்கறி.

சுண்டு – சுண்டான் = சிறு பிள்ளைகள் விளையாட்டாகக் கொளுத்தும் கொள்ளிக்குச்சு.

சுண்டு– சுண்டி = 1. சுக்கு (காய்ந்த இஞ்சி). 2. தொட்டாற் சுருங்கி, தொட்டாற் சிணுங்கி, தொட்டால் வாடி என்னும் பூண்டு.

சுண்டி (சுக்கு)– வ. சுண்டி (th). இதுவடமொழியிற் 'சுண்ட்டி' என வலித்தொலிக்கும்.

சுண்டி – சுண்டில் = தொட்டாற்சுருங்கி. வாடினது சுருங்கும்.

சுள்– சுடு – சுடுவல் = வெதும்பும் அரத்தம் (திவா.).

சுடுவல்– சுடுவன் = வெதும்பும் அரத்தம் (பிங்.).

சுடுவான் = மரக்கலச் சமையலறை.

சுடு– சுடல்– சுடலை = சுடுகாடு.

சுடு– சுடர்– சுடரோன் (சுடரவன்) = கதிரவன்.

சுடு – சூடு.

சுல் – சுர் – சுரீர் எனல் = 1. நெருப்புச் சுடும் குறிப்பு. 2. தழலிற்படும் நீர் சுண்டும் குறிப்பு.

சுர் – சுரம் = 1. காய்ச்சல். 2. சுடும் பாலைநிலம். ''சுரமென மொழியினும்'' (தொல். பொருள். 216).

சுரம் (காய்ச்சல்)– வ. ஜ்வர.

சுர் – சூர் = 1. நெருப்பு. 2. கதிரவன். ''சூர்புக வரியது... ....தொன்மதில்'' (கம்பரா. கவந்த. 21).

சூர்– சூரன் = 1. நெருப்பு (பிங்.). 2. கதிரவன் (பிங்.). ''காதற் சூரனை யனைய சூரா'' (பாரத. பதினேழாம். 49).

சூரன்– வ. ஸூர (sūra) – ஸூர்ய (sūrya)

சூர் என்னும் சொல்லிற்கு, அச்சம், கொடுமை, உறைப்பு, மிளகு முதலிய பொருள்களிருப்பதும், அதைத் தென்சொல்லெனத் தெரிவிக்கும்.

சுள் (சுல்– சொல்) – L. *sol*, sun, Icel. *sol*, OE., ON. *sol,* Dan., Swed. *sol*, E. *sol*, Goth. *soule*, Lith. *soule*, Lett. *soule*, Ir. *sūl*, Russ, *solntse*, W. *haul* (for *saul*), Co. *heuul*, *hau*, Bret, *heol*, sun.

girasol, parasol, rosolio, turnsole என்னும் கூட்டுச் சொற்களின் இரண்டாம் உறுப்புகள், கதிரவனைக் குறிப்பனவே.

solar என்பது sol என்பதன் குறிப்புப் பெயரெச்ச(adj.) வடிவம்.

சகர (ஸகர) முதல் ஹகர முதலாகத் திரிதல் இயல்பே.

சிந்து – பார. ஹிந்து, L. *sex* (E. six) – Gk. *hex*.

(சுல் – சுன். சொன் – சன்). E. *sun*, ME. *sonne*, OE. *sunne*, ON., OS., OHG. *sunna*, MDu. *sonne*, Du. *zon,* MHG., G. *sonne*, Goth. *sunna* = sun.

இவற்றிற் கெல்லாம் ஸூ (sū) ஸெள (sau) என்பன உய்த்துணர்வு மூலமாகக் காட்டப்படுகின்றன. மேலையாரியர் தமிழின் தொன்மை முன்மை தென்மைத் தன்மைகளை அறியாமை யால் இங்ஙனங் கூறுகின்றனர். அல்லது கொள்கின்றனர். இவற்றிற் கெல்லாம் சுல் என்னும் தென்சொல்லே அடிமூலம்.

சுல் – சொல் = நெருப்புப் போல் அல்லது பொன்போல் விளங்கித் தோன்றும் நெல்.

''சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு'' என்று நளவெண்பா (சுயம்வர. 68) கூறுதலையும், பொன்விளைந்த களத்தூர் என்னும் வழக்கையும் நோக்குக. நெல் என்னும் பெயரும் இப் பொருட்காரணங் கொண்டதே.

நில் – நில – நிலா – நிலவு. நிலத்தல் = ஒளிர்தல், விளங்குதல். நில் – நெல்.

சொல் – சொலி – சொலித்தல் = 1. எரிதல். ''நாப்பண் அழல் சொலிப்பதாக வுன்னி'' (பிரபோத. 44 : 15,). 2. ஒளிர்தல். ''மானமென் றுரைப்ப தெழுந்துமேற் சொலித்து வருவது போன்றும்'' (ஷெ 11 : 1).

சொலி – ஜொலி – வ. ஜ்வலி என்று திரிந்துள்ளது. ஜ்வல் என்பதை மூலமாகக் காட்டுவர் வடமொழியாளர். இது செயற்கை மூலம்.

சொலித்தல் வினைச்சொல். ஆளப்பட்ட முன்னூல்கள் வழக்கிறந்தமையால், பின்னூலினின்று மேற்கோள் காட்டப்பட்டது.

சொல் – சொன் – சொன்னம் = விளங்கும் நிறப்பொன் (திவா.). ''சொன்னதானப் பயனெனச் சொல்லுவர்'' (கம்பரா. சிறப்பு.).

சொன்னம் – வ. ஸுவர்ண = நன்னிறமுள்ளது, தங்கம். இது பொருந்தப் பொய்த்தலான சொற்றிரிப்பு.

இனி, சூர் என்பதையே cur என்று திரித்து, சூர்ண (curna) என்னுஞ் சொல்லைத் தோற்றுவித்தனர்.

சூர் (cur) = எரி (to burn). சூர்ண – த. சூரணம் = நீறு, பொடி.

சூரணம் – சூரணி. சூரணித்தல் = நீற்றுதல், பொடி செய்தல்.

ஒ.நோ : சுள் – சுள்ளம் – சுண்ணம். சுள்ளல் = எரிதல் (வழக்கிறந்த வினைச்சொல்).

இனி, சுள் என்னும் அடிபோன்றே குள், துள், நுள், புள், முள் என்னும் வழியடிகளும் உள் என்னும் மூல அடியினின்று திரிந்து, நெருப்புப் பற்றிய பல்வேறு சொற்களைப் பிறப்பிக்கும். அவையெல்லாம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் மேலையரும் ஒப்புமாறு ஐயந்திரிபற விளக்கப்படும். 'முதற்றாய் மொழி'யையும் பார்க்க.

★★★★★